சங்கத்தமிழ்

Sangathamil

குரல் – 122 | சர்வதேச மின் செய்தித்தாள் | யூன் 01 2026

சிங்கள இனவாதிகளின் அழிப்பின் இலக்காகிய ஆசியாவின் மிகப் பெரிய யாழ். நூலகம் எரித்தழிக்கப்பட்ட 45ஆம் வருட நினைவழியா நாள் (01.06.1981)

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
Tie Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடு, வியாபாரம் வாங்க, விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்
ST
THINKING OF BUYING OR SELLING
Suresh Theivendram
Broker
416.890.7179
realtorsuresh@outlook.com

RIGHT AT HOME REALTY INC.
JEY RASATHURAI MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
MORTGAGE ALLIANCE
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
" NO PROMISES BUT SOLUTIONS"

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது https://Thuyarpakirvu.com இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு
437 345 4203
thuyarariviththal@gmail.com

Thuyarpakirvu.com

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

மக்களின் உறுதிப்பாடு, சர்வதேச ஆதரவு மற்றும் சூழ்நிலைகள்தான் ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுக்கின்றன.

சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபேசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)

www.sangathamil.com

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

விடுதலைக்காக பூத்த மலர்கள்

கடற்கரும்புலி கப்டன் மாலிகா

கடற்கரும்புலி கப்டன் விக்கியும் கடற்கரும்புலி கப்டன் மாலிகாவும் இணைபிரியாத தோழிகள். இருவரும் ஒன்றாகவே இயக்கத்தில் இணைந்து ஒன்றாகப் பயிற்சி எடுத்து, எப்போதும் இணைபிரியாமல் பாசறையில் உலா வந்தவர்கள்.

இருவரும் தோழிகள் என்றாலும், பயிற்சிப்பாசறையில் இருவருக்கும் போட்டி, நீந்துவது, படகு ஓட்டுவது, ஏனைய பயிற்சிகள் எல்லாவற்றிலும் ஒருவருக்கு மற்றவர் சளைத்தவர் இல்லை என்ற ரீதியில் வேகம் இருக்கும். கடற்கரும்புலி கப்டன் விக்கி கொழும்புத் துறைமுகத்தினுள் கரும்புலியாய் சென்று அவளை விட்டுப்பிரிந்ததில், மாலிகாவுக்கு மிகுந்த கவலை. “நீ முன்னால் போ, நான் வருகிறேன்” என்று தனக்குள் உறுதியெடுத்துக் கொண்டாளோ!



அதன்பின் அவளிடம் நீண்ட எதிர்பார்ப்பு. தனக்கு இலக்கு விரைவாகக் கிடைக்க வேண்டும் என்று அவளிடம் இருந்த துடிப்பு, அதுவே அவளது கனவும் நினைவுமாக இருந்தது.

மாலிகா, சிறந்த நீச்சற்காரியாக ஆரம்ப நீச்சற் பயிற்சியின் போதே இனங்காணப்பட்டவள். ஆரம்பப் பயிற்சியின் பின் சிறிது காலம் தொலைத்தொடர்பு வேலையில் நின்றபோது, தான் ஒரு கரும்புலியாக வேண்டும் என்ற நீண்ட கனவு அவளிடம் இருந்தது. சுலோஜன் நீரடி நீச்சற்பிரிவுக்குச் சென்றவள், அங்கு தனது திறமைகளாலும் பண்புகளாலும் எல்லோரையும் கவர்ந்தாள். வேகமாக நீந்துவாள். அதிகவலுவுள்ள எந்தப் படகையும் ஓட்டக்கூடிய திறமையை அவள் பெற்றிருந்தாள். மைல் கணக்காக நீந்தி, திறமையாகச் சுழியோடி, தன் குழுவிலுள்ள் அனைத்துப் போராளிகளுக்கும் நீச்சல் பழக்கி, படகு ஓட்டக் கற்றுக்கொடுத்து அவள் செய்தவைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

உயரக்கிளம்பும் இராட்சத அலைகளுக்குக் கீழால் நீந்துவது கடினம்தான். அந்த அலைகளை ஊடுருவி நீந்துவதற்குச் சிரமப்படும் பிள்ளைகளையும் நீந்திக்கொண்டே இழுத்து நீந்தப் பழக்கி... அலைகள் அவளிடம் பணிந்துவிடும். எல்லோருக்கும் எல்லாமும் தெரிந்திருக்க வேண்டும். அவளது குழு எல்லாவற்றுக்கும் முன் நிற்கும்.

எந்தக் கடுமையான பயிற்சியையும் இலகுவாக்கி சிரித்தபடி செய்து முடிப்பதில் மாலிகா கெட்டிக்காரி. பெரிய பழுவுள்ள இயந்திரங்களையும், வலுவுள்ள பொருட்களையும், தூக்கி தோளில் அடித்து, அவளது உடல் வலுவானதில் வியப்பில்லை. தசைகள் இறுகித் தெரியும். அவளது கம்பீரத் தோற்றத்தால் தோழிகள் அவளைச் செல்லமாகக் “கட்ஸ்” என்று அழைப்பதுண்டு.

அந்தச் சம்பவம் அவளது உறுதியை நினைக்கத் தோன்றும். அவள் பயிற்சி முடித்தவுடன் இருபது கடல்மைல் நீந்துவதற்காக அவளின் குழு கடலில் இறங்கியது. இரவு பன்னிரண்டு மணிக்கு ஆரம்பித்த பயிற்சி காலை எட்டு மணிக்கு மேலாகியும் முடிந்தபாடில்லை. மாலிகாவின் வாயிலிருந்து இரத்தம் வரத் தொடங்கியது. அவளை கரையேறுமாறு பணிக்கப்பட்டது. மாலிகா நான் நீந்தி முடிக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தாள். முழுவதும் நீந்தி முடித்த பின்னரே அவள் கரை ஏறினாள். எந்த நோய் வந்தாலும், தனக்குத் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்து முடித்த பின்னரே ஓய்வாள்.

அவளது கடற்சண்டைக் களங்களைக் கூறிக்கொண்டே போகலாம். கிளாலியில் மக்கள் பாதுகாப்புப் பணியிலும், இன்னும் பூநகரி மீதான தவளைத் தாக்குதலிலும் அவளது படகு கடலில் இறங்கியது. கரும்புலியாய் இருளில் அவள் இலக்குத் தேடி அலைந்த நாட்கள் மெய்சிலிர்க்க வைப்பன.

இறுதியாக அங்கயற்கண்ணி நீரடி நீச்சற் பிரிவிலிருந்துதான் திருமலைத் துரைமுகத்துக்குப் போனாள். அவள் தனது இலக்கை அண்மிப்பதற்கு நீண்ட தூரம் நடக்க வேண்டியிரந்தது. பாதை முழுவதும் சேறு. காலடிகளை ஒழுங்காக எடுத்து வைக்க முடியாதபடி முழங்காலளவு சேறு இருந்தது. அட்டைக் கடிக்குள்ளால் சிலிண்டரையும் தோளில் சுமந்தபடி செல்வது சாதாரணமாக நினைத்துப்பார்க்க முடியாதது. கரும்புலிக்கேயுரிய அசாத்திய துணிவும், தன்னம்பிக்கையும் தான் எல்லாவற்றையும் செய்யக்கூடிய வலுவை நிறையவே தந்தன. கூட வழியனுப்பச் சென்ற தோழிகள் அந்த அனுபவத்தை நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார்கள்.

“கடைசியா எங்களுக்கொல்லாம் சாப்பாடு குழைச்சுத் தந்தாள். அடிபட்டுச் சந்தோசமாய்ச் சாப்பிட்டம்.”

இறுதியாக வழியனுப்பிய அந்தத்தோழியின் கன்னத்தில் தட்டி, “நான் போய் வெடிக்கிறபோதுதான் இந்த நோ மாறும்” என்று கூறிவிட்டுச் சென்றாள்.

கூடவே வந்த வேவு எடுத்துக்கொடுத்த கடற்புலித் தோழர்களிடமும் இருநூறு மீற்றரிலேயே விடைபெற்றுப் போனாள். இலக்குப் பெரியது. சாதனையும் பெரியதுதான். நகர்ந்து கொண்டிருந்த கடற்படையினரின் டோரா அவளது இலக்கானது. 1996.12.08 அன்று அந்த இலக்கினோடு, திருகோணமலைத் துறைமுகத்தினுள் புகுந்து மாலிகாவும் இல்லாமற்போனாள். அவளுக்குப் பணிந்த அந்த அசுர அலைகள் அவளை அள்ளிச் சென்றிருக்கக் கூடும். நாங்கள் இக்கரையில் நின்றிருந்தோம். அலைகள் மட்டும் திரும்பி வந்தன.

மேஜர் கண்ணகி

அந்தச் சண்டை அவளது பொறுமையின் எல்லையைத் தொட்டுவிட்ட சண்டைதான். சண்டையின் வெற்றிக்காக, சண்டைக்குப் போக முடியாது உழைக்க வேண்டிய நாட்கள் அவை.

சண்டையிலிறங்கும் போராளிகள் பற்றிய கள அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கடல் கடந்த பயணத்தை மேற்கொண்டு மண்டைதீவை நோக்கி அணிகள் முன்னேறின. சண்டைக்கான அறிக்கை விபரத்தில், அடங்காத அவளின் பெயர், அவளது பிறந் மண்ணிலிருந்து எப்படி மறைந்து போக முடியும்? யாருக்கும் சொல்லாமல், தளபதிக்குத் தெரியாமல் அந்தச் சண்டைக்குச் சென்று, திறமையாக அடிபட்டு, காயமடைந்த போராளிகளின் எல்.எம்.ஜி யை எடுத்து அடித்து, இயக்க விதிகள், கட்டுப்பாடு, தண்டனை என்பதையும் மீறி தனது மண் உணர்வே அவளிடம் முன்நின்றது என்பதை ஆழமாக எம்மால் புரிந்து கொள்ள முடிந்தது. அந்தச் சண்டையோடு இதுவரை அவளை அறியாதவர்களுக்கும் கண்ணகி அறிமுகமானாள். “குட்டித் தம்பி” என கண்ணகியால் செல்லமாக அழைக்கப்படும் டொங்கான் துப்பாக்கி, இந்தச் சண்டையின்பின் அவளின் கைகளில்



மிளிர்ந்தது. உக்கிரமாக நடந்த “சூரியக்கதிர்” சண்டையில் அத்துப்பாக்கியால் எதிரியை இலக்கு வைத்து தேடித்திரிந்து அழித்த, அந்தத் துணிவு மிக்க பெண்ணை இந்த மண்ணுக்கு இனங்காட்டியது விடுதலைப் போராட்டமே.

கண்ணிகி!

இந்தப் பெயரைக் கேட்கும்போது, மதுரை மாநகரை ஆவெசத்துடன் தீப்பற்றி எரியவைத்த அந்தப் பெண்ணின் ஞாபகம் அனைவருக்கும் வந்திருக்கும். நீண்ட மூக்கும் எதையும் உன்னிப்பாக நோக்கும் கழுகுப் பார்வையுடன், எதையும் இலகுவில் செய்து முடிப்பேன் என்ற தன்னம்பிக்கையுடன் அதிகம் அலட்டிக் கொள்ளாத, வார்த்தைகளை அளந்து கதைக்கும் ஒரு நிதானமான பெண் போராளியே மேஜர் கண்ணகி. ஆத்திரம், ஆவேசம் இவற்றுக்கு இடமளிக்காத ஒரு செயற்திறனுள்ள இனிய போராளி இவள்.

தன் தாயைப் போலவே சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்ட கண்ணகியையும் சகோதரர்களையும் அன்போடு வளர்த்த தந்தையில் அவளுக்கு அளவற்ற அன்பு. “ஹலோ மிஸ்டர்” என்று தந்தையைப் பெயர் சொல்லி அழைத்து ஒரு நண்பரைப் போல உரையாடும் அவளது இயல்பான போக்கு யாரையும் கவர்ந்துவிடும். தீவகம்தான் அவளின் பிறப்பிடம். அங்கு புலரும் இனிய காலைகளில் ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பாய் இனிமையாய்க் கழிந்தது அவளின் இளமைக்காலம். படிப்பில் நல்ல கெட்டிக்காரி. பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் அதிக புள்ளிகளைப் பெறுவாள். பிள்ளையை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என்ற தந்தையின் விருப்புக்கேற்ப போட்டி போட்டுக்கொண்டு படிப்பாள். எல்லோரையும்போல தீவக மண்ணிலிருந்து அந்தக் குடும்பமும் இடம்பெயரும் நாள் வந்தது. பிறந்த மண், சொந்த மண் எதிரியின் உறைவிடமாய் மாறுவதை ஏற்க முடியாமல் இடம்பெயர்ந்தனர்.

படிப்பில் அவள் கொண்டிருந்த ஆர்வம், குடும்பத்தில் அவள் வைத்திருந்த பாசம் இவையே அவளது விடுதலைப் பயணத்துக்கான ஆதாரங்கள். இரண்டாம் ஈழப்போர் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு நாளில் அவள் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டாள். இயக்கத்தில் சேர்ந்தவுடன் பயிற்சி, பின் சண்டை, எதிரியை வெற்றி கொள்ளும் தாக்குதல்கள் என எண்ணியிருந்த அவளுக்கும் இன்னும் சில

போராளிகளுக்கும் பயிற்சி எடுக்கும் முன்பே அரசியல் வேலைத் திட்டம் காத்திருந்தது. பயிற்சி எடுக்காத போராளிகளாக, சைக்கிளில் அலைந்து அரசியல் வேலைத் திட்டங்களைச் செய்யும் அதேவேளையில், ஏனைய புதியவர்கள் பயிற்சி எடுத்து, சண்டைக்குப் போய்வந்தனர். எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஒரு வருடத்தக்கு மேலாக சண்டைக் கனவுகளைத் தூரவைத்து, இயக்கத்தின் கட்டளைப்படி வேலை செய்த போராளிகளுள் அவளும் ஒருத்தி.

விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் இருபத்து மூன்றாவது பயிற்சி முகாம் அவளை ஒரு சிறந்த போராளியாக இனங்காட்டியது. சின்னத் தவறு செய்தாலும் கவலைப்பட்டு, அத்தவற்றை அடுத்தமுறை விடக் கூடாது என்பதில் உறுதியாக நடந்துகொள்வாள். பயிற்சியைத் தொடர்ந்து பல பாசறைகளில் புடம்போட்டு வெளிவந்தபோது அவள் RPD-LMG கனரக ஆயுதப் பயிற்சி ஆசிரியர். பயிற்சி ஆசிரியர்களுக்குரிய கடின பயிற்சிகளை திறமையாக எடுத்ததோடு, குறிபார்த்துச் சுடுவதிலும் அவள் கைதேர்ந்தவள். படையணிகளுக்குப் பயிற்சி அளித்து புதியவர்களை கனரக ஆயுதக்காரர்களாக்க தானும் அவர்களோடு இணைந்து பயிற்சி எடுத்தாள். அப்போதெல்லாம் சண்டைக்களங்கள் அவளது கனவுகளில் மட்டும்தான்.

முல்லைத்தீவுச் சண்டை அணிகளின் தலைவியாக, பதற்றமற்ற நிதானமான துணிவோடு களத்தில் அவளும் நின்றாள். அந்தத் தாக்குதலை வெற்றியுடையதாக்கி எமக்குத் தந்துவிட்டு அணியிலிருந்து அன்று அவள் காணாமல் போனாள். ஆரம்பத்திலிருந்தே தான் கரும்புலியாகச் செல்லவேண்டும் என்ற பிடிவாதத்துடன் இருந்த அவளை, படையணிக்கும் பயிற்சி முகாமுக்கும் தேவை என்ற காரணத்தால் சிறப்புத் தளபதி மறித்து வைத்திருந்தார். அதிகம் அலட்டிக் கொள்ளாத, நிதானமான, செயல்திறண்மிக்க கண்ணகி இப்போது எம்முடன் இல்லை என்பதை மீறி இந்த மண்ணுக்கும், விடுதலைப் போராட்டத்துக்கும் இன்னும் அவளது தேவை இருந்தது என்பதே உண்மை.

மேஜர் கஜாளினி

மெல்ல எங்கள் மனங்களைத் தொட்டு? எங்களுக்கு மகிழ்வை யூட்டி எங்களுக்குள் ஆழமாகப் பதிந்துவிட்ட போராளி அவள். நீண்ட பயணங்களிலெல்லாம் களைத்து, சோர்ந்துபோன நேரங்களில் உறுதியூட்டி, சிரிப்பை வரவழைத்து எல்லாவற் றையும் இலகுவாக்கி செய்து முடிக்க வேண்டும் என்று ஊக்க மளித்தவள். அவள் எங்களோடு பழகிய நாட்களில் எங்கள் மனக்கூட்டுக்குள் நிறைந்துபோன நினைவுகள் இவை.

மேஜர் கஜாளினி ஒருவித்தியாசமான போராளி. போராளிக ளுடனும் பொதுமக்களுடனும் பழகுவதில் கஜாளினி தனித்துவ மானவள். 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதி. அவளின் பயிற்சிக் காலம் அவளின் போராட்ட வாழ்வின் ஆரம்ப நாட்கள். அந்த நாட்கள் உற்சாகமாக இருந்தன. கஜாளினி ஒரு திறமையான போராளியாக தன்னை மாற்றிக்கொண்ட காலப்பகுதி அதுதான். பயிற்சி முகாமில் அவளை எல்லோரும் மணி என்றுதான் அழைப்போம். அவளின் கட்டையான உருவமும், அவளின் நடையையும் வைத்து தோழிகள் மணி என்று அழைத்தால் அவளின் முகத்தில் புன்னகை மட்டும் வரும்.

பலாலி இராணுவத்தளத்தைச் சுற்றி 1990ஆம் ஆண்டின் இறுதியில் காவல்நிலைகள் போடப்பட்டபோது கஜாளினியும் அங்குதான் நின்றாள். இதன்போது எதிரியின் "சினைப்பர்" தாக் குதலால் தொண்டையில் காயம். இந்தக் காயத்தினால் பின்னர் அவள் சில வேளைகளில் திக்கித்திக்கிக் கதைப்ப துண்டு.

தான் கடற்புலிக்குப் போகப்போறேன் என்று கூறி தலைவருக் குக் கடிதம் எழுதிவிட்டு, அவரின் பதிலுக்காக எதிர்பார்த்திருந்த நேரம் நாம் அவளைக் கேலி செய்ததுண்டு.
"நீ. தொண்டையில காயப்பட்டு சும்மா கதைக்கேக்கையே திக்

கித் திக்கிக் கதைப்பாய். அங்கை கடலுக்கை நீந்திப்போய் "பொக் கான்" மாதிரித்தான் கிடப்பாய்" என்றால், அவள் சிரித்தபடி சண் டைபிடிப்பாள்.

அவள் அரசியல் வேலை செய்யும்போது மக்கள் மத்தியில் பிரபல்யமானாள்.

மிதிவண்டிகளில் அவள் வெய்யிலும் மழையும் பாராது அவள் அரசியல் வேலை செய்த நாட்கள் மறக்க முடியாதவை. முல்லை மாவட்ட மகளிர் அமைப்பின் பதில் பொறுப்பாளராகக் கடமை யாற்றிய காலங்களில் பிள்ளைகளுக்கும் அவளுக்கும் இடையே மிகுந்த நெருக்கம் இருக்கும். அவளது கதைகளும் அறிவுரைகளும் கூட எம்மை இதமாகத் தடவிவிடும். முகாம் கலகலத்தபடி இருக்கும்.

இவ்வாறுதான், ஒரு முறை பாடசாலையின் கண்காட்சியில் கலந்து கொள்ள இவளுக்கு அழைப்புக் கிடைத்தது. அப்போது அவள் அரசியல் வேலைகளுக்குப் புதிது. மேடைப் பேச்சுக்கும் புதிது. மேடைப்பேச்சு என்றாலே, அச்சமும் நடுக்கமும் கொண்ட அவளைப்பார்க்க ஒரு புறம் சிரிப்பாகவும் பாவமாகவும் இருக்கும்.

இவளை மேடையில் பேசுவதற்குக் கூப்பிட்டார்கள். ஒரு நிமிடம் "நீ பேசு, நான் பேசேன்" என்று மாறிமாறி விவாதம். ஒருவாறு கஜாளினி மேடையேற வேண்டியதாயிற்று.

மைக்கைப்பிடித்த கைகள் நடுங்கின. பதற்றத்துடன் கொத்தணி அதிபரை வாய்தவறி "குத்துணி அதிபர் அவர்களே" என. நாங்கள் வந்த சிரிப்பை அடக்கப் பெரும்பாடுபட்டோம்.

இதன்பிறகு நாங்கள் எல்லோரும் அவளைக் "குத்துணி, குத்துணி" என்றே கிண்டல் செய்வோம். அந்த நேரங்களில்.

"பொறுங்கோ நான் எப்பிடிப் பேச்சாளர் என்று சொல்லக்கூடிய வகையில் செய்து காட்டுறன்" என்ற சவால் அவளிடமிருந்து வரும்.

1993ஆம் ஆண்டு பூநகரிச் சண்டை யிலும், புலிப்பாய்ச்சல் சண்டையிலும் வழமையான உற்சாகத்துடனேயே நின்று சண்டைபிடித்தாள்.

இதன் பிறகு அவள் தொடர்ச்சியாக சண்டைக்களங்களிலேயே நின்றாள். சூரியக்கதிர் என்ற பெயரில் இராணுவம் யாழ் குடாவைக் கைப்பற்ற எடுத்த நடவடிக்கையை எதிர்த்த சண்டை களிலெல்லாம் அவளும் நின்றாள். ஓயாத எறிகணை மழைக் குள் தப்பி நின்று, சண்டைபிடித்த கணப்பொழுதுகள் மறக்க முடியாதவை.

முல்லைச் சமருக்கும் ஓயாத பயிற்சியின்பின் சென்றாள். வெற்றி யோடு மீண்டும் வந்து இன்னொரு களத்துக்குச் செல்லுவேன் என்று அவள் கூறியபடியே, அடுத்த சண்டைக்களமும் உட னேயே அமைந்தது.

முல்லை முகாம்வீழ்ந்த கையோடு தனது இராணுவ மேலாதிக் கத்தை நிலைநாட்ட வேண்டி ஆனையிறவு இராணு வத்தளத்தி லிருந்து கிளிநொச்சி நகரைக்கைப்பற்ற சிறீலங்கா இராணுவம் முன்னேறிக்கொண்டிருக்க, அங்கு அணிகள் நகர்ந்தன. கஜாளினி தன்னுடைய அணியுடன் புறப்பட்டாள். தாக்குதல்கள் ஆரம்பமாகின. அந்தச் சண்டை அவளின் இறுதிச் சண்டை. வெட்டைவெளி, இராணுவத்தின் இலக்குகளை நோக்கியதாய் நகர்வு. அன்று எமது அணிகள் இறங்கித் தொடுத்த தாக்குதலில், கஜாளினி. அணியின் பதில் பொறுப்பாளராக முன்னின்று வழி நடத்திச் சென்றாள். பொறுப்பாளர் காயப்பட்டவுடன் அந்தக் கட மையை ஏற்று முன்னுக்குச் சென்றாள்.

டாங்கிகள் சகிதம் எதிரி பெரும்படையாய் முன்னேறி தலை நிமிரமுடியாத எறிகணைகளை ஏவ, இறுதிவரை சண்டை பிடித்தாள். இவளுக்கு அடுத்த பொறுப்பாளர் "உதவி தேவையா" என்று அடிக்கடி வோக்கியில் கேட்க,

"நான் கவனிக்கிறன், சமாளிக்க முடிகிறது" என்ற கடைசிச் சொல்லுக்குப் பிறகு அவளது குரலை நாங்கள் கேட்கவே யில்லை. நெற்றியில் காயப்பட்டு ரவை பின்பக்கத்தால் வந்து இரத்தம் ஆறாய் ஒழுகி 1996.09.26 அன்று கஜாளினி வரவே யில்லை. அதன் பின் நாங்கள் "குத்துணி" என்று அழைக்கின்ற அவளது குரலைக் கேட்கவேயில்லை.

- களத்தில் 04.06.1997

ஓயாத புயலாக வீசிய ஒடுக்குமுறையின் கோரத்தாண்டவம் விடுதலைப் பாதையில் எம்மைத் தள்ளிவிட்டது. இன அழிப்பின் தாங்கமுடியாத நெருக்குவாரங்களின் விளைவாக நாம் ஒரு விதி செய்துகொண்டோம். எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கத் தீர்மானித்தோம். விடுதலை பெற்ற மனிதர்களாக வாழ்வதற்கு நாம் முடிவு செய்து கொண்டோம்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

தமிழீழச் செய்திகள்



வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு நாள்

15.05.2026

தந்தை செல்வாவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் 50 வது ஆண்டு நிறைவு நாள் (14.05.2026), பொன்விழா நாள் இன்றாகும், இதனையொட்டி இன்று வட்டுக்கோட்டை பண்ணாகம் பாடசாலை முன்பாக வழக்கம்பரை அம்மன் ஆலய மோகன் கலையரங்கில் இடம்பெற்றது. கடும் மழைக்கும் மத்தியிலும் நிகழ்வு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

குமுதினிப் படுகொலையின் 41ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ். நெடுந்தீவில் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது

15.05.2026

குமதினி படுகொலையின் 41 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை (15) யாழ். நெடுந்தீவில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

நெடுந்தீவு மாவிலித்துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி வளாகத்தில் காலை 09 மணிக்கு நினை வேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

முதன்மை நினைவுச் சுடரினை 06 மாத பச்சிளம் குழந்தையை பறிகொடுத்து, தானும் படுகாயம் அடைந்து இன்றும் படுகொலையின் சாட்சியாக இருக்கும் விசுவலிங்கம் அன்ன லட்சுமி ஏற்றி வைத்தார்

தொடர்ந்து நினைவுச்சுடர்களை நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், நெடுந்தீவு பங்குத்தந்தை பி.கமல்ராஜ் அடிகளார், இந்தமத குரு கா.புவனேந்திரசர்மா மற்றும் உறவுகளை பறிகொடுத்த உறவுகள், உணர்வாளர்கள் என பலர் நினைவுச் சுடர்களை ஏற்றிவைத்தனர்.

நினைவுத் தூபிக்கான மலர் மாலையினை நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் மற்றம் நெடுந்தீவு பங்குத் தந்தை பி.கமல்ராஜ் அடிகளார் ஆகியோரும், குமுதினி நினை வேந்தல் குழு தலைவர் வி.ருத்திரன் மற்றும் வேலணை பிரதேச சபை உறுப்பினர் க.நாவலன் ஆகியோரும் இணைந்து அணிவித்ததைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்டோர் நினைவுத் தூபிக்கான மலர் வணக்கம் செலுத்தினர்.

அதனை தொடர்ந்து, முள்ளிவாய்க்கால் அவலங்கள் நினைவாக தீவக நினைவேந்தல் குழுவினரால் முள்ளி வாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

இதேவேளை படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்மா சாந்திக்கான வழிபாடுகள் காலை 8.15 மணிக்கு மாவிலித் துறை வீரபத்திரப்பிள்ளையார் ஆலயம், மாவிலித்துறை சவேரியார் ஆலயம் என்பவற்றில் சம நேரத்தில் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.com

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

1987களின் இறுதிப்பகுதியில் இந்திய அமைதிகாக்கும் படைகளினால் 10,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர்!

ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா

15.05.2026

ஊடக அறிக்கை: ***1987களின் இறுதிப்பகுதியில் 10,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர்***

https://lkdd.itjpsl.com

14 மே 2026

ஜொகானெஸ்பெர்க்: 1987களின் இறுதிப்பகுதியில் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையில் இருந்த காலத்தில் கொல்லப்பட்ட அல்லது காணாமல்போன பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்களது பெயர் விபரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது வெறும் எண்ணிக்கையல்ல; இல்லாமலாக்கப்பட்ட மனித உயிர்களின் பதிவாகும். இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் ஆண்களாவர்.

"இந்த வன்முறை டிஜிற்றல் காலத்திற்கு முன்பு இடம்பெற்றது – இதில் பாதிக்கப்பட்டவர்களது முழுமையான விபரங்கள் ஒரு போதும் கணக்கிடப்படவில்லை, அதிகாரபூர்வமாகப் பதிவு செய்யப்படவுமில்லை, வரலாற்றிலிருந்து முற்றிலிலுமாக அழிக்கப்பட்டனர்" என ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்தார். "திட்டமிட்டு அழிக்கப்பட்ட அடையாளங்களை மனித கண்ணியத்துடன் மீட்டெடுப்பதே நாம் இப்போது செய்துகொண்டிருக்கும் பணியாகும்."

இந்திய அமைதி காக்கும்படை, இலங்கை அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட இருதரப்பு உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழ் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்காக 1987ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இலங்கைக்கு அனுப்பப்பட்டு, 1990 மார்ச் வரை அங்கே இருந்தது. இக்காலப்பகுதியில், இலங்கை இராணுவம் முகாம்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில், இந்தியப் படையினரும் அவர்களுடன் ,ணைந்து செயற்பட்டவர்களும் பல கூட்டுப்படுகொலைகள், கொலைகள், சட்டத்திற்கு முரணான படுகொலைகள், வலிந்த காணாமல் ஆக்கப்படுதல்

போன்ற உட்பட பரவலானதும் திட்டமிட்டதுமான துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டதாக நம்பகரமான குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இங்கே பட்டியலிடப்பட்டவர்கள் அனைவருமே இந்தியப் படைகளாலும் அவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்களாலும் மட்டும் பாதிக்கப்பட்டவர்களல்ல என்றபோதிலும், இந்தத் தரவுகளின் தொகுப்பானது, இந்தியப்படைகள், அவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்கள், மற்றும் இலங்கையின் தமிழ் ஆயுதக்குழுக்கள் உட்பட பல தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான வன்முறைகளின் ஒரு அமைப்பு சார் வடிவத்தினை வெளிப்படுத்துகின்றது. பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களும், அதற்குப் பொறுப்புக்கூறல் இன்மையும் மறுக்கப்படமுடியாத ஒன்றாகும்.

இந்தத் தரவுத்தளம் அன்றைய காலப்பகுதியில் பெறப்பட்ட சத்தியப்பிரமாணங்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் அறிக்கைகள், குடும்ப உறுப்பினர்களிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்ட தகவல்கள், சரிபார்க்கப்பட்ட ஊடக அறிக்கைகள் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் – சர்வ

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

தேச மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நியமங்களை நிவர்த்தி செய்யத்தக்க வகையிலும், அவற்றிற்கு அமைவாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. பிரதேசம், பாலினம், காலப்பகுதி, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பெயர்களை தேடும் வகையிலும் இத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

"இது ஒரு உயிருள்ள ஆவணக் களஞ்சியம். குடும்பங்களே இச்செயற்பட்டின் மையமாக உள்ளனர் – சாட்சிகளாக மட்டுமன்றி, உண்மையின் பாதுகாவலர்களகவும் அவர்கள் உள்ளார்கள்" இவ்வாறு இச்செயற்றிட்டத்திற்கு ஆலோசகராகச் செயற்பட்ட மனித உரிமைகள் தரவு ஆய்வுக்குழுவைச் (Human Rights Data Analysis Group) சேர்ந்த மிசேல் டுகிச் தெரிவித்தார்.

"முப்பது வருடங்கள் கடந்துவிட்டன, இனி கேள்வி என்ன நடந்தது என்பதல்ல. மாறாக எதற்காக யாரையும் பொறுப்புக் கூறலுக்கு உள்ளாக்கவில்லை –இன்னும் எத்தனை காலம் தான் தண்டனையின்மை நீடிக்க அனுமதிக்கப்படும் என்பதே கேள்வி" என யஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

முறையியல் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணைப்பினை அழுத்திப் பார்வையிடவும்.
https://lkdd.itjpsl.com/public/about

–முற்றும் –

திருகோணமலை கருமலையூற்று வீதித் தடை முழுமையாக அகற்றப்பட வேண்டும்: இம்ரான் மகரூப் எம்.பி. வலியுறுத்தல்!

15.05.2026

திருகோணமலை, கருமலையூற்று கடற்கரைப் பகுதியில் சிறீலங்கா விமானப்படையினரால் ஏற்படுத்தப்பட்ட வீதித் தடை மற்றும் அங்கு நிலவும் பதற்றமான சூழல் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் நேற்று (14) வியாழக்கிழமை அப்பகுதிக்கு நேரடி கள விஜயம் மேற்கொண்டு மீனவர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த மே மாதம் 5ஆம் திகதி காலை, கருமலையூற்று கடற்கரைப் பகுதியில் பல தசாப்தங்களாக பொதுமக்கள், மீனவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தி வந்த பிரதான வீதியில், விமானப்படையினரால் எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென வீதி தடை (Road Barrier) ஒன்று அமைக்கப்பட்டது. எவ்வித அனுமதியுமின்றி மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், மீனவர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலை முன்னெடுக்க முடியாத நிலையும் உருவானது.

இந்த விவகாரம் தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியபோது, குறித்த வீதித் தடை அகற்றப்படும் என பிரதி அமைச்சர் அன்றைய தினமே உறுதியளித்திருந்தார். இருப்பினும், வீதித் தடை முழுமையாக அகற்றப்பட்டுவிட்டதாகக் கூறப்படும் செய்திகள் கள நிலவரத்திற்கு முரணாக உள்ளன.

நேற்றையதினம் நான் மேற்கொண்ட கள விஜயத்தின் போது, அகற்றப்பட்டதாகக் கூறப்பட்ட கடவை இன்னும் வீதிக்கு அருகிலேயே காணப்படுவதையும், அப்பகுதியில் தொடர்ச்சியாக விமானப்படை அதிகாரிகள் நிலைகொண்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது. இது மக்களிடையே பெரும் சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், பொதுமக்கள் பயன்படுத்தும் பொது வீதியை மூடுவதற்கு யாருடைய உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது?

முறையான முன்னறிவித்தல் இன்றி இவ்வாறான ஒரு தன்னிச்சையான நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான காரணம் என்ன?

பிரச்சினை தீர்க்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், அகற்றப்பட்ட கடவை ஏன் இன்னும் அந்த இடத்திலேயே வைக்கப்பட்டுள்ளது?

கடவை அகற்றப்பட்டதாகக் கூறப்பட்டு 9 நாட்கள் கடந்தும், ஏன் இன்னும் விமானப்படை அதிகாரிகள் அங்கிருந்து வெளியேறாமல் தங்கியுள்ளனர்?

உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் எழுகின்றன.

அத்துடன், மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பொது மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தையும் பாதிக்கும் இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் தெளிவான விளக்கத்தை வழங்க வேண்டும். வெறுமனே கண்துடைப்பு நடவடிக்கைகளைச் செய்யாமல், குறித்த வீதித் தடையை அவ்விடத்திலிருந்து முழுமையாக அகற்றி, மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் அவ்வறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

மக்களின் உறுதிப்பாடு, சர்வதேச ஆதரவு, மற்றும்சூழ்நிலைகள்தான் ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுக்கின்றன.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

தமிழ் மக்கள் படுகொலைகளுக்கு நீதிவேண்டும்: சர்வதேசமும், அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சிறிநாத்

15.05.2026

தமிழ் மக்கள் மீதான படுகொலைகளுக்கு நீதி நியாயம் கிடைக்க வேண்டும் என்பதை சர்வதேச சமூகத்திடமும் இந்த அரசிடமும் கேட்டுக்கொள்கின்றேன் என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா இ.சிறிநாத் தெரிவித்தார்.

தமிழின படுகொலை வாரமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் நான்காவது நாளான வியாழக்கிழமை (14) கொட்டும் மழையிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடி, உப்போடை சிவானந்தாதேசிய பாடசாலைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் கஞ்சி வழங்கலும் நடைபெற்றது.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ கணேச லோகநாதன் குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.சிறிநாத் மற்றும் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது முள்ளிவாய்க்காலில் படுகொலைசெய்யப்பட்ட உறவுகளுக்காக ஈகச்சுடர் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டதுடன் விசேட வழிபாடும் முன்னெடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் அவலத்தினை குறிக்கும் வகையிலான கஞ்சி வழங்கப்பட்டது. கொட்டும் மழையிலும் மக்கள் இந்த கஞ்சி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்,

எங்களுடைய தமிழ் இனம் இன அழிப்பு செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட அந்த நாளை நினைவு கூறுகின்ற முகமாகவும், கொல்லப்பட்ட உறவுகள் ஆன்ம விடுதலைக்காகவும், எங்களுடைய எதிர்கால சந்ததிக்கு எவ்வாறு தமிழ் மக்களுக்கான இனப்படுகொலை திட்டமிட்ட வகையிலே கொத்தணி குண்டுகளால் கொத்து கொத்தாக மக்கள் கொல்லப்பட்ட நாளை அடுத்த சந்ததிக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் இந்த நிகழ்வு அமைகின்றது.

அதற்கு அப்பால் கொல்லப்பட்ட மக்களுக்காகவும், காணாமல்

ஆக்கப்பட்ட மக்களுக்காகவும் நீதி வேண்டி இந்த சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசுக்கும் இந்த விடயம் காலங்காலமாக ஞாபகப்படுத்தப்பட்டு, தமிழர் உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக தங்கள் உயிர்களை ஆகுதியாக்கிச் செய்த மக்களை நினைவு கூறுகின்றோம். அந்த நெருக்கடியான சூழ்நிலையிலே தங்களுடைய விடுதலை போராட்டத்திற்கும் தமிழ் தேசியத்திற்கும் உயிர்களை அர்ப்பணித்த மக்களை நினைவு கூர்ந்து, அடுத்த சந்ததிக்கு எங்க

ளுடைய இனம் எவ்வாறு கடந்த காலங்களிலே கொல்லப்பட்டது என்ற செய்தியையும், இனப்படுகொலை செய்தியையும் சொல்லுகின்ற இந்த நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களிலே உணர்வுபூர்வமாக நடைபெற்று வருகின்றது.

அந்த அடிப்படையிலே உண்மையிலே நான் இந்த கிழக்கு இலங்கை இந்து குருமார் ஒன்றியத்திற்கும், அக்கரைப்பற்று பிரதேசத்திற்குரிய இந்து குருமார் ஒன்றியத்திற்கும் நன்றிகளை கூறிக்கொள்கின்றேன். உணர்வுபூர்வமாக தங்களுடைய சமய பணிகளுக்கு அப்பால் தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காக அவர்களுடைய சேவையை பாராட்டுவதோடு, உண்மையாக அவர்களுடைய தன்னார்வ செயல்களுக்கு என்னுடைய அனுசரணையையும் ஒத்துழைப்பையும் வழங்கி அவர்களோடு பயணிப்பேன் என்ற உறுதிமொழியை கூறிக்கொண்டு, தமிழ் மக்களுக்கான நீதி நியாயம் கிடைக்க வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடமும் இந்த அரசிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

போரதீவுப்பற்று பிரதேச சபை முன்பாக நடைபெற்ற முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு!

16.05.2026

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள் வடகிழக்கு ரீதியாக இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுபற்று பிரதேச சபைக்கு முன்பாக வெள்ளிக்கிழமை(15.05.2026) முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி, சிரட்டைகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

அப்பகுதி பொதுமக்களால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது அங்கிருந்த மக்கள் விருப்புடன் கலந்து கொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்தினர்.

மட்டு. பட்டிருப்பு பாலத்தருகில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்வு

16.05.2026

கடந்த யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் உயிருக்குப் போராடிய மக்கள் உப்புக்கூட இல்லாமல் தங்களிடமிருந்த அசிரியை வைத்துக் கொண்டு கஞ்சி காய்ச்சி அவர்களது பசியைப் போக்கியிருந்தனர்.

இந்நிலையில் அப்போதைய சூழ்ந்நிலையில் அங்கிருந்த மக்கள் கஞ்சி காய்ச்சி அருந்தியதை நினைவு கூர்ந்து வருடந்தோறும் இக்காலப்பகுமியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கும் நிகழ்வுகள் வடகிழக்கில் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு பாலத்தருக்கில் இன்று (15) வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி, சிரட்டைகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

அப்பகுதி பொதுமக்களால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது அங்கிருந்த மக்கள் விருப்புடன் கலந்து கொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்தினர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் 'நினைவாயுதம்' புகைப்பட, ஓவிய மற்றும் ஆவணக் கண்காட்சிப்படுத்தல்!

16.05.2026

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலையை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'நினைவாயுதம்" எனும் ஓவிய, புகைப்பட மற்றும் ஆவணக் கண்காட்சி இன்றைய நாள் (16)சனிக்கிழமை ஆரம்பமானது.



யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இது தொடர்பாக விளக்கமளித்திருந்தனர்

"முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு நாம் பல்வேறு வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகிறோம். அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழினப் படுகொலையை வெளிப்படுத்தும் வகையில் மே 16ஆம் திகதி முதல் மே 18ஆம் திகதி வரை "நினைவாயுதம்" ஓவிய, புகைப்பட மற்றும் ஆவணக் கண்காட்சி நடைபெறுகிறது" என்று அவர்கள் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடையே "கந்தகபூமி உயிர் வலியின் மொழி" கவிதைப் போட்டியை நடத்தியதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

"முள்ளிவாய்க்காலில் எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட இனப் படுகொலை தொடர்பான ஆதாரபூர்வமான தரவுகள், ஒளிப் படங்கள் மற்றும் ஆவணங்களை இளையோர் மத்தியில் கொண்டு சேர்க்கும் ஒரு வரலாற்றுப் பதிவாக நாங்கள் கண் காட்சியை நடத்தவுள்ளோம்" யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

தமிழினப் படுகொலையை வெளிப்படுத்தும் வகையில் ஆரம்ப மான குறித்த கண்காட்சி மே 16-18, திங்கட்கிழமை வரையில் நடைபெறவுள்ளது.

யாழ். வலி. வடக்கில் சிறீலங்கா இராணுவத்தின் சொகுசு பங்களாவினால் கடற்தொழிலுக்கு தடை!

17.05.2026

மண் மீட்பு போராட்டத்தின் போது சிறீலங்கா இராணுவ அதிகாரிகளின் சொகுசு தங்குமிட வேலியில் மழைக்கு தரப்பாள் கட்டியவர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க போவதாக பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மிரட்டியுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

வலி. வடக்கு பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படும் பகுதிக்குள் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு காணி உரிமையாளர்கள் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மயிலிட்டியில் உள்ள இராணுவ அதிகாரிகளின் சொகுசு தங்குமிடத்திற்கு (கொமாண்டோ பங்களா) முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை போராட்டத்தை முன்னெடுத்த வேளை திடீரென மழை பெய்தமையால், மழைக்கு ஒதுங்கி நிற்க பங்களாவின் எல்லை வேலியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தரப்பாள் கட்டியுள்ளனர் .

அதனை அடுத்து கொட்டும் மழைக்குள்ளும் அவ்விடத்திற்கு வந்த பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தரப்பாளை உடனே கழட்டுமாறும், இல்லை எனில் இதில் உள்ளவர்களை கைது செய்வேன் என மிரட்டியுள்ளார்.

அதனை அடுத்து அங்குள்ளவர்கள் அதனை காணொளி எடுக்க முற்பட்ட வேளை அவர்களுடன் தர்க்கம் புரிந்து விட்டு, அவ் விடத்தில் இருந்து திரும்பி சென்றார் என தெரிவிக்கப்படுகிறது.

அது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

கீரிமலை - பருத்தித்துறை வீதியில் கடற்கரை பக்கமாக உள்ள காணிகள் உயர் பாதுகாப்பு வலயமாகவோ , இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியாகவோ காணப்படவில்லை. ஆனாலும் அந்த காணிகளை மக்களிடம் இராணுவத்தினர் கையளிக்க வில்லை.

குறித்த பகுதியிலையே இராணுவ தளபதிகளுக்கான சொகுசு தங்குமிடமும், பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் பயன் பாட்டிற்கு என சுமார் ஒரு கிலோ மீற்றர் நீள கடற்கரை பகுதியை தம் வசம் வைத்துள்ளனர்.

அத்துடன் பலாலி பகுதியில், சந்தை கட்டட தொகுதி பொது மக்கள் பாவனைக்காக விடப்பட்டு இருந்தாலும், அப்பகுதியில் இராணுவத்தினரின் வீதியோர உணவகங்களே காணப் படுகிறது, அப்பகுதியில் தனியார் வியாபாரம் செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது.

அதேபோன்றே குறித்த கடற்கரை பகுதியில் இருந்து முன்னர் மீன் பிடி நடவடிக்கைக்கு சென்றவர்கள், தற்போது அப்பகுதியில் மீன் பிடி நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இராணுவத் தினர் அனுமதி வழங்கவில்லை.

குறித்த பகுதியில் உள்ள காணிகளை இன்னமும் மக்களிடம் மீள கையளிக்காது, இராணுவத்தினர் தமது பயன்பாட்டிற்காக வைத்துள்ளார்கள்

பாதுகாப்பு காரணங்கள் இன்றி ,தமது உல்லாச வாழ்வுக்காக தனியார் காணிகளை அடாத்தாக பிடித்து வாழும் இராணுவத் தினர் அங்கிருந்து வெளியேறி எமது காணிகளை மீள ஒப் படைக்க வேண்டும். எமது வாழ்வாதாரங்களை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என தெரிவித்தனர்.

அதேவேளை, கீரிமலை - பருத்தித்துறை வீதியில் கடற்கரை பக்கமான காணிகளை ஓரிரு மாதங்களில் காணி உரிமை யாளர்களிடம் மீள கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக, கடந்த 03ஆம் திகதி யாழில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.com

இனப்படுகொலைக்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்களுக்கே மக்கள் வாக்களித்து பதவியிலும் அமர்த்தும் நிலை!

சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

17.05.2026

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்களுக்கே மக்கள் வாக்களித்து பதவியிலும் அமர்த்தும் நிலைக்கு தள்ளியுள்ளனர் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று (17) ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான இறுதி ஆயத்தங்கள் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு இடங்களில் முள்ளிவாய்கால் கஞ்சியும் வழங்கப்படுவதை நாம் அறிவோம். இது வெறும் நிகழ்வு அல்ல என்பதும் எமக்கு தெரியும். இது எமது வலிகளுக்கான அரசியல் திசை காட்டி. மக்களின் அரசியல் வலிமையையும் அதற்கான மக்கள் திரட்சியையும் உலகிற்கு காட்டி நிற்கும் மக்கள் தளம்.

ஆனால் அரசியல் வலி சுமந்து 17வது ஆண்டினை தொட்டு நிற்கின்ற வேளையில் நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் என்ன? எந்த அரசியல் திசையை நோக்கி பயணிக்கின்றோம்? அரசியல் வலி சுமக்கும் ஓர் இனமாக மக்கள் அரசியலை பலமடைய செய்வதற்கும், எம் அரசியல் எதிரிகளுக்கு எதிராக எம் மக்கள் பலத்தை எந்த அளவிற்கு காட்டி உள்ளோம்? என்பதற்கான விடை தேடுகின்ற போதுதான் இவருடத்தில் நாம் ஏற்றுகின்ற சுடர் உயிர் தியாகிகளுக்கு கௌரமாகவும், எம் அரசியல் எதிரிகளுக்கு அரசியல் விழிப்பையும் ஏற்படுத்தும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை எமது விடயத்திலும் தோல்வி கண்ட அமைப்பாகவே தெரிந்த போதிலும் எம்மவர்கள் அங்கு செல்வதை புனித யாத்திரையாக்கி ஒவ்வொரு வருடமும் பயணிக்கின்றனர். அதிலும் கூட்டு தன்மை கிடையாது. தனித்தனியாக சொர்க்கம் போக நினைப்தாகவே தெரிகிறது. ஐ.நா மனித உரிமை பேரவைக்கு கடிதம் எழுதுவதிலும் இதே நிலையே தொடர்கின்றது.

கடந்த 2024 ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதில் தொடங்கி அண்மையில் வடக்கு கிழக்கு ஆயர்களின் முயற்சி, தமிழ் சட்டத்தரணிகளின் முயற்சி எல்லாமே தோல்வியாகவே நாம் காண்கின்றோம்.

எமது அரசியல் விடயத்திலும் சர்வேச இராஜதந்திரிகளை கையாள்வதிலும் நாம் இருளில் நடப்பதாகவே தெரிகிறது. அவர்கள் எமக்கு பாடம் சொல்லும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள், மாவீரர் தின நிகழ்வுகள் எல்லாம் கோயில் திருவிழாக்களாகியுள்ளதாகவே பலர் கருதுகின்றனர். திருவிழாக்கள் உபயக்காரர்களைப் போல ஒழுங்கமைப்பாளர்கள் அவற்றை தத்தமது அடையாளத்திற்கான காட்சிகளாக்கி மக்களின் உணர்வுகளை தூண்டி அவர்களை போதை நிலைக்கு தள்ளுவதை என்னவென்று கூறுவது?

கடந்த 17 ஆண்டுகளாக தமிழர் தாயக அரசியலை மக்கள் மையப்படுத்தி பலமடையச் செய்வதில் பெரும்பாலான அரசியல் தலைமைகள் அரசியல் தடம் புரண்டு, அரசியல் அறம் விலகி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்களுக்கே மக்கள் வாக்களித்து பதவியிலும் அமர்த்தும் நிலைக்கு தள்ளியுள்ளனர் எனலாம். அவர்களை தமிழர்களின் குருதி தோய்ந்த நிலத்திற்கு அழைத்து வந்து செங்கம்பலம் விரித்து மேள தாள ரகத்தோடு மேடைக்கு அழைத்துச் செல்வதோடு நின்றுவிடாது செல்ஃபி எடுத்து மகிழும் தலைமுறையினரும் உருவாகியுள்ளமைக்கு நாமே காரணம் என சிந்திக்காதும் உள்ளனர். இதுவே எமது அரசியல் அவலம்.

இது இவ்வாறிருக்க முள்வாய்க்கால் நினைவேந்தல் தினத்தில் பகிரப்படும் கஞ்சியில் சுவை தேடும் கூட்டமும் உருவாகியுள்ளதோடு, சுவையூட்டுவோரும் உள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் தின நிகழ்வுகள், தியாகிகள் தினம் தொடர்பில் வடக்கு கிழக்கு தழுவிய பொது கட்டமைப்பு உருவாக்கப்படுதலும் அதன் அரசியல் வழிதடமும் வரையப்படல் வேண்டும். அத்தோடு மேற்கூறிய நிகழ்வுகளுக்கான பொது விதிகளும் மக்கள் மயப்படுத்தலும் வேண்டும். அதுவே எம் அரசியலை சரியான திசையில் பயணிக்க வழி சமைப்பதோடு மக்களை திரட்சி கொள்ளவும் செய்யும். எமது அரசியல் வழி பயணம் உயிர் தியாகத்தால் கட்டி எழுப்பப்பட்டது. அது தொடர்பான ஆழமான அரசியல் சிந்தனை மக்கள் பயப்படுத்துவதன் மூலமே எமது அரசியல் இலக்கை நோக்கி பயணிக்க முடியும். அதற்காக இவ் வருடம் தியாக சுடர் ஏற்றுவோம். ஒன்றான மக்களாக எழுவோம்.

மட்டக்களப்பில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக நீதி கோரிப் போராடிய தாய் நீதி கிடைக்காமலேயே சாவு!

17.05.2026

மட்டக்களப்பு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்துடன் இணைந்து, வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக நீதி கோரி பல ஆண்டுகளாக போராடி வந்த மேலும் ஒரு தாய் நீதி கிடைக்காமலேயே உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்மணி நேற்று சனிக்கிழமை (16) காலமானார்.

அவர் 05.09.1951 அன்று பிறந்தவர். தனது குடும்ப உறவுக்காக மட்டுமன்றி, வடக்கு கிழக்கெங்கும் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர் உறவுகளுக்காக நீதியை கோரி நடைபெற்ற பல்வேறு போராட்டங்கள், கவனயீர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் ஊடக சந்திப்புகளில் தொடர்ந்து பங்கேற்று வந்தவர் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் முயற்சியாக மட்டும் அல்லாது, இனி எவரும் இத்தகைய நிலைக்கு ஆளாகாதவாறு “மீள நிகழாமையை” உறுதி செய்யும் மனித உரிமைப் போராட்டமாகவும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

“இன்று வாழும் அனைத்து தமிழர்களும் வலிந்து காணாமலாக்கப்படுதல் போன்ற அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே எங்கள் போராட்டம் தொடர்கிறது. ஆனால் சமூகம் அதனை போதுமான அளவில் கவனிக்காமல் கடந்து செல்கிறது” என அவர் போராட்டங்களில் பங்கேற்றபோது அடிக்கடி வலியுறுத்தி வந்ததாக உறவினர்கள் நினைவுகூருகின்றனர்.

வேலுப்பிள்ளை பொன்மணி அவர்களின் மறைவு, நீதி தேடி பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடையே பெரும் சோகத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கல்வி எனும் மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து, தமிழீழத்தின் கல்வித்துறையைச் சிதைத்துவிட்டு சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகவே முயன்று வருகின்றது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை 22 நாடுகள் சேர்ந்து மௌனிக்கச் செய்திருந்தன!

மட்டு. போரதீவுப் பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் விமலநாதன் மதிமேனன்

17.05.2026

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை 22 நாடுகள் சேர்ந்து எமது மௌனிக்கச் செய்திருந்தன. மீண்டும் நாம் அகிம்சை ரீதியான போராட்டத்திலேயே தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம். நாட்டிலே சம அந்தஸ்துடன் வாழ்வதற்காக இவ்வாறான போராட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகினறோம். என மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் விமலநாதன் மதிமேனன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (17) மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைத் தொகுதியில் நடைபெற்றது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது உரிமைக்காகவும் தமிழ் மக்களின் இருப்புக்காகவும் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களை நினைவு கூரும் முகமாக அந்த மக்கள் இறுதி யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் உப்பில்லா கஞ்சியை அருந்தி இறந்தவர்கள்போக ஏனையர்வர்கள் அவர்களது உயிர்களை காப்பாற்றி இருந்தார்கள். அவ்வாறான மக்களை நாங்கள் வருடம் தோறும் அந்த மக்கள் எவ்வாறு வேதனைகளை அனுபவித்தார்களோ எவ்வாறு கஞ்சி அருந்தி அவர்களது உயிர்களை காப்பாற்றினார்களோ, அந்த நினைவு நாளை வருடம் தோறும் நாம் மக்களுக்கும்ம், எமது இளம் சமுதாயத்தினருக்கும் எடுத்தியம்பி கஞ்சிக வழங்கி நினைவுகூர்ந்து வருகின்றோம்.

2009 மே 18 திகதி முள்ளிவாய்க்காலில் பேரவலத்தின் மத்தியில் இலட்சக்கணக்கான மக்கள் உயிர்களை இழந்து இருந்தனர். இந்த நிலையிலே வடகிழக்கிலே தமிழர்களாகிய

நாங்கள் இலங்கையிலே ஒரு சிறுபான்மை இனமாக இருந்தாலும் எங்களுக்கும் இலங்கையிலே சமமான உரிமைகளும், சமமாக மதிக்கப்படுகின்ற தன்மையும், ஏனைய சமூகத்தின் மத்தியில் சமமாக நாங்களும் இந்த நாட்டிலே வாழுகின்ற பிரஜைகள் என்ற அடிப்படையில்தான் 2009இல் எமது மக்கள் இன்னுயிர்களை தியாகம் செய்திருந்தனர். உரிமைக்காக போராடி இருந்தார்கள்.

ஆரம்பத்தில் அஹிம்மை ரீதியாக எமது உரிமைக்காக இலங்கை தமிழரசி கட்சி போராடி இருந்தது. அதற்காகத் தமிழ் மக்களுக்கு எதுவித தீர்வுகளும் கிடைக்கப்பெறாத நிலையில் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தி போராடிய இனம் தமிழினம்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை 22 நாடுகள் சேர்ந்து எமது மௌனிக்கச் செய்திருந்தன. மீண்டும் நாம் அகிம்சை ரீதியான போராட்டத்திலேயே தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம். நாட்டிலே சம அந்தஸ்துடன் வாழ்வதற்காக இவ்வாறான போராட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கு கிழக்கிலே நில அக்கிரமிப்பு, தொல்பொருள் என பல்வேறு வடிவங்களில் தமிழ் மக்களில் நிலங்களும், மத ஸ்தலங்களும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகின்றன. முள்ளிவாய்க்காலிலே இவ்வாறானவற்றுக்கு எதிராகத்தான் எமது மக்கள் போராடி முள்ளிவாய்க்காலிலும் மரணித்திருக்கின்றார்கள். அவர்கள் மரணித்து 17 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. அந்த மக்களின் உயிர் தியாகங்களை நாம் என்றும் மறக்க முடியாது.

வருங்கால இளைஞர்களுக்கும் இந்த விடயங்களை எத்தி வைக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

எனவே தொடர்ந்தும் உரிமைக்காக இலங்கை தமிழரசு கட்சி குரல் கொடுத்துக் கொண்டே இருக்கும். இவ்வாறான நிகழ்வுகளை எமது அடுத்த தலைமுறைக்கும் ஏத்தி வைக்கும் பணியினையும் நாங்கள் செய்ய செய்து கொண்டிருக்கின்றோம். என அவர் இதன்போது தெரிவித்தார்.

இதன்போது முன்னிவாய்க்காலில் உயிரிழந்தவர்களின் நினைவாக ஈகைச் சுடர் ஏற்றப்பட்ட அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடத்திலேயே கஞ்சி காய்ச்சி மக்ளுக்கு வினியோகிக்கப்பட்டன. இதன்போது மண்முனை தென் எருவில் பற்று, போரதீவுப் பற்ற ஆகிய பிரதேச சபைகளின் உப தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவாக நினைவேந்தல் நிகழ்வு!

19.05.2026

2009 மே மாதத்தில் முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய இனப்படுகொலையில் கொல்லப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோரை நினைவேந்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை சிவன் கோயிலடியில் இன்று (17) நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுகளில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்த உறவுகளுக்கு அகவணக்கமும் மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது.

இதில் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உணர்வுபூர்மாக உயிழந்தவர்களுக்கு வணக்கம் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து இறுதி யுத்தத்தில் சிக்குண்டு பரிதவித்தோரின் உயிர் காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும் நாளை (18) மாலை வரை திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இந்நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளதுடன் 18 ஆம் திகதி முள்ளிவாய்கால் முற்றத்தில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வில் திருகோணமலையிலிருந்து செல்வோருக்கான விசேட பேருந்து சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இனம் அழிக்கப்பட்டமை மற்றும் படுகொலைகளுக்கெதிரான நீதி வேண்டி நடைபெறும் இந் நிகழ்வுகளில் அனைவரும் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திப்போம்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயரிய நோக்குகளையும் இலக்குகளையும் மாணவசமூகம் புரிந்துகொள்ளவேண்டும். இந்தப் புரிந்துணர்வை வளர்த்து, மாணவரிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆசிரிய சமூகம் முயற்சிக்கவேண்டும்.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

மடு பெரிய முறிப்புப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்வு!

17.05.2026

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி எனப்படும் இறுதி யுத்தத்தின் போது மக்களின் அவலங்களை வெளிப்படுத்தும் கஞ்சி வழங்கும் செயற்பாடு வடக்கு கிழக்கு உள்ளிட்ட தமிழர்கள் வாழும் பகுதிகளில் உணர்வுபூர்வமாக இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் மன்னார் மாவட்ட போராளிகள் நலன்புரி சங்கத்தின் அனுசரணையுடன், பொது மக்களின் ஏற்பாட்டில், மன்னார் மடு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெரியமுறிப்பு பகுதியில் இன்றைய தினம் (17) காலை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள், பொதுமக்கள், என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தவிர நேற்று முன்தினம் மடு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் கிழக்கு பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

வல்வெட்டித்துறை அம்மன்கோவிலடியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்வு!

17.05.2026

நினைவேந்தல் வாரத்தின் நினைவேந்தல் நிகழ்வும், வலி சுமந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் இன்று 17.05.2026 ஞாயிறு காலை 10.00அளவில் வல்வெட்டித் துறை அம்மன்கோவிலடியில்

யாழ். பொன்னாலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

17.05.2026

தேசியத் தலைவர் என்று தமிழ் மக்களால் போற்றப்படும் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த வட்டுக்கோட்டை - பொன்னாலையில் இன்றைய நாள் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இனப்படுகொலை நிரைவுச் சின்னத்துக்கு முன்பாக ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, மலர்தூவி அக் வணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியானது சமைக் கப்பட்டு, உணர்வு ரீதியாக வழங்கப்பட்டது.

பி.பொன்ராசா தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந் தலில் முன்னாள் போராளிகள், தமிழ் தேசிய உணர்வார்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் பொன்னாலை கிருஷ்ணன் ஆலயத்திற்கு முன்பாக வைத்து முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் ஆல்பிரட் துரையப்பாவின் மரண

தண்டனையிலிருந்து ஆயுதப் போராட்டமானது ஆரம்பிக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மறவன்புலவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 17.05.2026!

www.thuyarpakirvu.com

கல்முனைப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்வு

17.05.2026

தமிழர்களின் வலி நிறைந்த மே மாத நினைவுகளை உணர்வுடன் நினைவுகூரும் வகையில், கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையினரால் இன்று (17) கல்முனை பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் நோக்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுமக்களுக்கு கஞ்சி வழங்கப்பட்டதுடன், உயிர்நீத்தோருக்கான நினைவு வணக்கமும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ் இளைஞர் சேனையின் உறுப்பினர்கள் மற்றும் பல பொதுமக்கள் கலந்துகொண்டனர்

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மலர் வணக்கம்

18.05.2026

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.

அந்தவகையில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள் 18.05.2026இன்று நந்திக்கடலில் மலர்தூவி வணக்கம் செலுத்தியுள்ளார்.

குறிப்பாக நந்திக்கடலில் மலர்தூவி, சுடரேற்றி உணர்வுபூர்வமாக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல் ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதாக அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி பிராத்தனையும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான மகாதேவா குணசிங்கராசா, இரத்தினம் ஜெகதீசன் ஆகியோரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

18.05.2026

தமிழின அழிப்பை எடுத்துக்காட்டும் 17ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு நாள் இன்று (மே 18) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

இறுதிப்போரில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்து, பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட, ஏனைய சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டு, அக வணக்கம் செலுத்தப்பட்டு, மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

பின்னர் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், முன்னாள் போராளிகள், தமிழ் தேசிய உணர்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

தென் தமிழீழம் வாகரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

ஈகையர் பொன். சிவகுமாரின் நினைவு ஆலயத்தின் முன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

18.05.2026

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான இன்று (18) திங்கட் கிழமை உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள முதல் தமிழீழ விடுதலை போராளி ஈகையர் பொன்.சிவகுமாரனின் சிலை அருகில் முள்ளிவாய்க்கால் நினைவு வணக்க நிகழ் வுகள்

முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஈகையர் பொன். சிவகுமாரனின் சிலைக்கு மாலை அணி வித்து முள்ளிவாய்க்கால் நினைவாக பொதுச் சுடர் ஏற்றி மலர் தூவி வணக்கம் செலுத் தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்-கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் பொதுமக்களில் 100 பேருக்கு அரிசிப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் முன் னாள் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் வலி.கிழக்கு பிரதேச சபை உறுப் பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து

கொண்டனர்.

தமிழர் தேசத்தை மீள வடிவமைக்கும் நாளாக முள்ளிவாய்க்கால் நினைவு நாள் மாறவேண்டும்

மூத்த ஊடகவியலாளரும் ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினருமான செ. நிலாந்தன்

18.05.2026

முள்ளிவாய்க்கால் நினைவு என்பது கடந்த கால வரலாற்று நினைவு தினம் மட்டுமல்ல, அது தமிழர்களின் எதிர்கால குறித்த பொறுப்பை தமிழர்களுக்கு உணர்த்தும் நாள் என மூத்த ஊடகவியலாளரும் ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப் பினருமான செ.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் மே 18 நினைவு தினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினம் என்பது தமிழ் மக்கள் வெறுமனே ஒன்று கூடி நினை வஞ்சலி செலுத்தும் நாளாக மட்டும் கருதப்பட முடியாது.

அது, இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் அரசியல் உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தின் இறுதி நாள் மட்டுமல்ல அதுவே போராட்டத்தின் தொடர்ச்சியாகும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் என்பது வடக்கு கிழக்கில் அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கானது மட்டுமல்ல அந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தையும் உறுதிப்படுத்துவதற்கான போராட்ட மாகவே அமைந்தது.

எனவே தமிழர்கள் மிகப்பெரிய வரலாற்றுப் பொறுப்பை தோளில் சுமக்க வேண்டிய நாளாக இந்த நாள் உள்ளது.

முள்ளிவாய்க்கால் தமிழர் வரலாற்றில் அழியாத வலியையும், வெளிவராத உண்மைகளையும் தாங்கி நிற்கிறது. ஆயுதப் போராட்டம் எவ்வாறு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது? உலக நாடுகள் மற்றும் சர்வதேச அரசியல் சக்திகள் எந்த வகையில் அந்த போரின் முடிவை வடிவமைத்தனர்?

போரின் இறுதிக்கட்டத்தில் அப்பாவி பொதுமக்கள் எவ்வாறு உயிரிழந்தனர்? போராளிகள் எவ்வாறு அழிக்கப்பட்டனர்? மக்கள் எத்தகைய மனிதாபிமான பேரழிவுகளை எதிர்கொண் டனர்? போன்ற பல்வேறு கேள்விகளுடன் இன்னமும் நீதிக் கான போராட்டங்கள் தொடர்கின்றன.

தமிழ் மக்களின் அழிவுக்கு இது வரை யாரும் பொறுப்பு கூற முடியாத நிலையே காணப்படுகின்றது.

தமிழினம் தனது அரசியல் உரிமைகளையும் தேசிய அங்கீ காரத்தையும் பெற்றுக்கொள்வதற்காக சுமார் 75 ஆண்டுகளுக் கும் மேலாக பல்வேறு வடிவங்களில் போராடி வந்துள்ளது.

அந்தப் போராட்டம் வெறும் ஆயுதப் போராட்டமாக மட்டுப்படுத் தப்படவில்லை. கல்வி, சமூக முன்னேற்றம், விவசாயம், பொரு ளாதாரம், கலை, கலாசாரம் மற்றும் நிர்வாக கட்டமைப்புகள் உள்ளிட்ட பல துறைகளில் தமிழர் சமூகத்தின் தன்னிறைவு நோக்கிய செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஆனால் இன்று, யுத்தம் நிறைவடைந்து 17 ஆண்டுகள் கடந் துள்ள நிலையிலும், வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசங்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாகவே உள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட பல கிராமங்கள் இன்னமும் முழுமை யான மறுசீரமைப்பைப் பெறவில்லை. வேலைவாய்ப்பின்மை, வறுமை, கல்வியில் பின்னடைவு, போதைப்பொருள் பரவல், இளைஞர்களின் வெளிநாட்டு இடம்பெயர்வு, விவசாயம் மற்றும் கடற்றொழில் சமூகங்களின் வாழ்வாதார சீரழிவு, பெண்கள் தலைமையிலான குடும்பங்களின் பொருளாதார சிக்கல்கள், மனநல பாதிப்புகள், காணிப் பிரச்சினைகள் மற்றும் அரசியல் பாதுகாப்பின்மை போன்ற பல்வேறு சவால்கள் தொடர்ந்து அதி கரித்துக் கொண்டே வருகின்றன.

ஒரு காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தங்களது வருமானத்தையும் உழைப்பையும் அர்ப்பணித்த மக்கள் இன்று வாழ்வாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் நினைத்திருந்தால் கடந்த 17 ஆண்டுகளில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகள் உட் கட்டமைப்பு, கல்வி, தொழில்நுட்பம், தொழில் முயற்சி, விவ சாயம் மற்றும் சமூக முன்னேற்றத்தில் மிகப்பெரிய மாற்றத் தைக் கண்டிருக்க முடியும்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் மீளெழுச்சிக்காக ஒருங் கிணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உலக தமிழர்களின் திட்டமிட்ட பொருளாதார மற்றும் அறிவுசார் பங்களிப்பு என்பவற்றில் புலம்பெயர் தமிழர்கள் தங்களது பங்

களிப்பை செய்ய முன்வர வேண்டும். அதற்காக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்.

முள்ளிவாய்க்கால் தமிழ் மக்களுக்கு பல வரலாற்று பாடங்-களை கற்பித்து சென்றுள்ளது. கால துயரத்தை மட்டும் நினைவு கூர்வதற்கான நாளாக இருக்கக்கூடாது.

அது, தமிழர் சமூகத்தின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக எதிர்காலத்தை மீள வடிவமைக்கும் பொறுப்பை உலகத் தமிழர்கள் ஏற்கும் நாளாக மாற வேண்டும்.

அதனை தமிழர் தேசம் சர்வதேச வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக மாற்ற வேண்டும். முள்ளிவாய்க்கால் நினைவு தினம் என்பது உலக அரங்கில் தமிழ் மக்களின் வர லாற்று உரிமைகளை, அரசியல் அதிகாரத்தை கோரி நிற்கும் நாளாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இந்த மே 18 நினைவு நாளில், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த அனைத்து பொதுமக்களையும் ஆழ்ந்த மரியாதையுடன் நினைவுகூருவதோடு, பாதிக்கப்பட்ட மக்களின் மீளெழுச்சி, நீதி, மனித நேயம் மற்றும் தமிழர் சமூகத்தின் எதிர்கால முன் னேற்றத்திற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய அவசியத்தையும் இந்த நாளில் வலியுறுத்தி நிற்கின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். வேலணையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 18.05.2026

தென் தமிழீழம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

18.05.2026

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 17வது நினைவேந்தல் தென் தமிழீழம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இன்று திங்கட் கிழமை (18) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் இன அழிப்பின்போது உயிர் நீத்தவர்களுக்கு சுடர் ஏற்றி மலர் தூவி உணர்வுபூர்வமாக வணக்கம் செலுத்தினர்.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நினைவேந்தலில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு முள்ளிவாய்க்காலில் காலை 10.10க்கு சுடர் ஏற்றி வணக்கம் செலுத்திய அதேவேளை பொதுச் சுடர் ஏற்றி மலர் தூவி உயிர் நீத்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தினர். அதனை தொடர்ந்து, கஞ்சி பரிமாறப்பட்டது.

இனப்படுகொலை இடம்பெற்றபோது ஏற்பட்ட கொடூரங்களை நேரடியாக பார்த்து, அங்கிருந்து தப்பி ஓடியவர்கள், அந்த நாட்களில் நடந்த படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான அனுபவங்களை நினைவேந்தல் வேளையில் பகிர்ந்துகொண்டனர்.

அத்துடன் தமிழ் தேசியத்துக்காக இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களை நினைவுகூரும் விதமாக தமிழ் மக்கள் ஒன்றுகூடி தமிழர்களுக்கு நடந்த துயரத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்து ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் இந்த நினைவேந்தலின் போது கேட்டுக்கொண்டனர்.

வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் போராட்டமும்

18.05.2026

வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினால் 17வது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு நாள் வணக்க நிகழ்வு இன்றைய நாள் (18) நடைபெற்றது.

வவுனியா ஏ9 அஞ்சல் திணைக்களத்தின் முன்பாக 3375வது நாளாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் பந்தல் அமைத்து போராட்டம் நடத்தப்பட்டது. அந்தப் பந்தலுக்கு முன்பாகவே குறித்த வணக்க நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது தீபமேற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டதுடன், முள்ளிவாய்க்காலில் 2009ஆம் ஆண்டு கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டமும் நடத்தப்பட்டது.

யாழ். பருத்தித்துறையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

18.05.2026

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பருத்தித்துறை நகரில் இன்று (18) உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த நினைவேந்தல் பருத்தித்துறை நகர் பேருந்து நிலைய பகுதியில் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் போர்க்களத்தின் இறுதி நாட்கள் வரை அங்கிருந்து இனப்படுகொலையின் உயிர் வாழும் சாட்சியமாக வாழும் வர்த்தகர் க.யோகநாதன் பொதுச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து அகவணக்கமும் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

போரும் – கல்வியும் இணைந்த வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

மூதூர் கடற்கரைச்சேனையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

18.05.2026

தமிழினப் படுகொலையில் உயிர்நீத்தவர்களை நினைவு கூரும் விதமாக 17ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வு மூதூர் கிழக்கு கடற்கரைச்சேனை பிரதேசத் தில் இன்று (18) நடைபெற்றது.

இந்நிகழ்வை கடற்கரைச்சேனை கிராம மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் உயிரிழந்தவர் களுக்காக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி அக வணக்கம் செலுத்தப்பட்டது.

மூதூர் பிரதேச சபை தவிசாளர் உட்பட பலர் கலந்துகொண்ட இந்த நினைவேந்தல் வேளையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

உலகம் அநீதியாளர்களின் நண்பராகிவிட்டது

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன்

18.05.2026

மக்களின் கண்ணீர் வற்றிப் போய்விட்டதே தவிர, நீதியின் கதவுகள் ஒருபோதும் திறக்கப்பட மாட்டாது என்பதே பட்டறிவு அனுபவமாக காணப்படுகிறது. உலகம் அநீதியாளர்களின் நண்பராகவே காணப்படுகிறது தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் தெரிவித்துள்ளது.

மன்னாரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று திங்கட் கிழமை (18) நினைவுகூரப்பட்டது. அதனை முன்னிட்டு, மன் னாரில் இயங்கி வரும் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தின் தலைவர் வி.எஸ். சிவகரன் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்படுவதாவது,

கடந்த 70 ஆண்டுகளாக தன்மானம், சுயமரியாதை சமூக சம நீதி மறுக்கப்பட்ட சமூகமாக பல்வேறு காலகட்டங்களில் பலவித மான போராட்ட வடிவங்களுடன் கால நீட்சி கரைந்து ஓடி எழுபது ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் கூட வாழ்வியல் சமத் துவ உரிமை மறுக்கப்பட்ட சமூகமாகவே தொடர்ந்து, சிங்கள ஏகாதிபத்திய பௌத்த தேசியவாத மேட்டிமைவாதிகளால் நசுக் கப்படுகிறோம் என்பதே மிகுந்த வேதனைக்குரிய விடயம்.

இப்படி சகல விடயங்களிலும் தோற்றுப் போகும் ஒரு இனமாக உலகளாவிய ரீதியிலே மனித உரிமைகள் உச்சம் தொட்டிருக் கும்போது பௌத்த பஞ்ச சீலத்தை முன்னிறுத்தி ஆட்சி செய்கின் றோம் எனும் மாய விம்பத்தை காட்டும் சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்து தமிழர்களை அடிமைகளாக நசுக்குகின்ற நாசகார வேலையிலே ஈடுபடுகிறார்கள்.

காலத்துக்கு காலம் கட்சிகள் மாறி ஆட்சிகள் மாறுகின்றபோதும் கூட பௌத்த தேசியவாதத்தின் மனோநிலை என்பது மாறவே இல்லை.

பல நாடுகளின் கூட்டுச்சதியால் முள்ளிவாய்க்காலில் நடந்த இனப்படுகொலை 17 ஆண்டுகளைக் கடந்துவிட்டபோதும் கூட காணாமல் ஆக்கப்பட்ட அல்லது கொலை செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 ஆகும். இவை அரசின் புள்ளிவிபரங்களில் காட்டுகின்ற எண்ணிக்கையாகும்.

இவர்கள் எங்கே என்கிற கேள்விக்கு இதுவரை சர்வதேச சமூகமும் பதிலளிக்கவில்லை. ஏனெனில், அவர்களும் இந்த இனப்படுகொலையின் பங்குதாரர்களே.

கால நீட்சி சாட்சியங்களையும் ஆதாரங்களையும் காலாவதி யாக்கிக்கொண்டே போகிறது. நீதி மறுக்கப்பட்டு சுயமரியாதை இழந்த சமூகக் கட்டமைப்பின் இரண்டாம் தர பிரஜைகளாக இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் விரும்புகிறதா? என்கின்ற கேள்வி பாதிக்கப்பட்ட மக்களுக்கு எழுகிறது.

கொலைகாரர்களிடமும் கொலைகாரர்களின் பங்குதாரர்களிட மும் நீதியின் நிழலைக் கூட பெற முடியாது. இந்த உலகம் கசாப்புக் கடை முதலாளிகளின் கூடாரமாக காணப்படுகிறது.

தமிழ்க் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புகளும் உள்ளூரில் சில அமைப்புகளும் இனப்படுகொலையை மூலதனம் ஆக்கிக் கொண்டார்களே தவிர கட்டமைக்கப்பட்ட ஒழுங்கு முறையில் எந்த முன்னெடுப்புகளும் இதுவரை முன்னெடுக்கப்பட வில்லை. இனப்படுகொலைக்கு சாட்சியமாக ஒழுங்கு முறை யாக ஒரு நினைவேந்தல் தூபி கூட நிறுவப்படவில்லை. அதை நிறுவுவதற்கு நினைவேந்தல் குழு கூட ஒழுங்காக அமைக்கப் படவில்லை.

தமிழினம் கடந்த 17 ஆண்டுகளாக தோல்வி மனநிலையில் இருந்துகொண்டும் இயலாமையில் இருந்துகொண்டும் மற்ற வர்களை எதிர்பார்த்து தங்கி வாழும் மனோ நிலையில் இருப் பதுதான் தமிழினத்தின் சாபக்கேடாக அமைந்திருக்கிறது.

நீதி என்பது பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் இருக்க வேண்டும். ஆனால் இன்றைய சமூக நீதி அதிகாரத்தின் பக்கம்தான் தலை சாய்கிறது என்பது பாதிக்கப்பட்ட சமூகத்தின் விசனமாக இருக் கிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் யாரை நம்புவது என்று தெரியாமல் யார் யாரையோ எல்லாம் நம்புகிற காலச் சூழல் ஏற்பட்டிருக்கிறது.

அரசியல் ரீதியான இனப் படுகொலையை அரசியல் கட்சிகள் வாக்குக்காக நோக்குவதே இனப் படுகொலைக்கான நீதி இன் னும் நீர்க்குமிழியாகவே தொக்கி நிற்கிறது.

மீட்பருக்காக காத்திருக்கிறது இந்த தேசம். பாதிக்கப்பட்ட மக்க ளுடைய உணர்வை இதுவரை எவரும் புரிந்துகொண்டதாக தெரியவில்லை.

அந்த மக்களின் கண்ணீரும் வற்றிப் போய்விட்டதே தவிர நீதி யின் கதவுகள் ஒருபோதும் திறக்கப்பட மாட்டாது என்பதே பட் டறிவு அனுபவமாக காணப்படுகிறது. உலகம் அநீதியாளர் களின் நண்பராகவே காணப்படுகிறது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் தமிழீழம் மட்டு. வந்தாறுமூலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

18.05.2026

2009 இறுதியுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் படுகொலைசெய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூரும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பு வந்தாறுமூலை அம்பலத்தடிச்சந்தியில் வந்தாறுமூலை இளைஞர் அணியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன் போது பொதுச்சுடர், விளக்குகள் ஏற்றப்பட்டும் அக வணக்கம் செலுத்தியும் இறுதியுத்தத்தில் உயிரிழந்தவர்கள் உணர்வுபூர்வமாக மலர்தூவி நினைவுகூரப்பட்டனர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிறிநாத், ஏறாவூர் பற்று பிரதேச சபை கௌரவ தவிசாளர் முரளிதரன், பிரதேச சபை உறுப்பினர்கள், நீர்முகபிள்ளையார் ஆலய பிரதமகுரு, இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

மே 18 – முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் உணர்வெழுச்சியுடன் திரண்ட தமிழ் மக்கள்

18.05.2026

முள்ளிவாய்க்கால் தமிழ் இன அழிப்பின் 17ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று மே 18 - 202 , முல்லைத் தீவு மாவட்டம், முள்ளிவாய்க்காலில் உள்ள தமிழ் இன அழிப்பு நினைவுத்தூபியின் முன்பாக நினைவுகூரப்பட்டது .

முள்ளிவாய்க்கால் தமிழ் இன அழிப்பு நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு , அதிகாரபூர்வமாக நினைவேந்தலை ஏற்பாடுசெய் திருந்தது.

தாயக நேரம் காலை 10.15 மணி - பிரகடனம் வெளியிப்பட்டது. காலை 10.29 மணிக்கு - மணி ஒலித்തதைத்தொடர்ந்து காலை 10.30 மணிக்கு - அகவணக்கம் செலுத்தப்பட்டது. காலை 10.31 மணிக்கு - பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.காலை 10.35 மணிக்கு - மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

தமிழர் தாயகப் பகுதிகளின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் அலையெனத் திரண்டுவந்து கண்ணீர்மல்கத் தமது அக வணக்கத்தை தெரிவித்தனர்.

உணர்வுபொங்க முள்ளிவாய்க்கால் நினைவு சுமந்த கானங் களும் கண்களை மேலும் நனைத்தன.

தமிழீழ தாயகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வந்த முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் வலிகளைச் சுமந்த ஊர்தியும் நேற்று மாலை முதல் அங்கு மக்களின் மலர் வணக்கத்திற்கு நிறுத்தப்பட்டிருந்தது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இளையோர்களும்

அங்கு பணிகளில் முன்னின்று ஈடுபட்டு வருகின்றனர்.

www.sangathamil.com

தமிழீழத்தின் இதயபூமியான கொக்குத்தொடுவாய் மண்ணில் பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் 18 ஆம் ஆண்டு வீரவணக்க நாளில் உதைப்பந்தாட்டப்போட்டி

20.05.2026

தமிழீழத்தின் இதயபூமியான கொக்குத்தொடுவாய் மண்ணில் பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் 18ஆவது ஆண்டு வீரவணக்க

நாளில் உதைப்பந்தாட்டப்போட்டி இடம்பெற்றது.

பீனிக்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் இதயபூமி மக்கள் கட்சியும் இணைந்து, கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் கொக்குத்தொடுவாய் மண்ணை பிறப்பிடமாகக் கொண்ட பிரிகேடியர் பால்ராஜ் (பாலசேகரம் கந்தையா) அவர்களின் நினைவாக இந்த மாபெரும் உதைப்பந்தாட்டச் சமரை நேற்று நடத்தியிருந்தனர்.

இந்த உதைப்பந்தாட்டச் சமரில் கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த பல்வேறு கழகங்கள் பங்கேற்று, நிகழ்வை சிறப்பாக நிறைவு செய்தனர்.

இனியும் மக்களின் காணிகளை இராணுவம் வைத்திருப்பதில் எந்த நியாயமும் கிடையாது!

யாழ். வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

22.05.2026

மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தமானது என்பதை ஏற்றுக்கொண்டு உடனடியாக மக்களின் நிலங்களை விடுவிக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும் இனியும் மக்களின் காணிகளை இராணுவம் வைத்திருப்பதில் எந்த நியாயமும் கிடையாது என்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலி. வடக்கு மீள்குடியேற்ற அபிவிருத்திக் குழுவின் காணி விடுவிப்புக்கான போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

37 ஆண்டுகளாக துப்பாக்கிமுனையில் அரசானது மக்களின் நிலங்களை அபகரித்து வைத்துள்ளது. இந்த அபகரிப்புக்கு எதிராக யுத்தத்தின் பின்னரான 17 ஆண்டுகளாக, தொடர்ச்சியாக எமது மக்கள் போராடி வருகின்றனர்.

மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தமானது எனக் கூறியே அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

இந்நிலையில் தற்போது நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் தமது நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும் எனக் கோரி போராடிக்கொண்டிருக்கின்றனர். இன்றும் வளமான மக்களுக்குச் சொந்தமான 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இராணுவத்தினர் வசமுள்ளன.

இந்நிலங்களில் படையினர் தொழிற்சாலைகளை நடத்தியும் விவசாயம் மேற்கொண்டும் பிழைக்கின்றனர். மக்கள் வாழ முடியாதவர்களாக, குடியிருக்க நிலமற்றவர்களாக அலைகின்றனர். அரசாங்கம் தீர்வினை முன்வைக்காது வேடிக்கை பார்க்கின்றது.

மக்களின் அடிப்படை உரிமைகளையும் மனித உரிமைகளையும் பாதுகாக்க நாட்டில் பொறிமுறை இல்லை. சட்டப்பூர்வமான காணிகளைக் கொண்ட மக்கள் தமிழர்கள் என்ற காரணத்துக்காக இலங்கையில் எவ்வாறும் நடத்தப்படலாம் என்ற சூழ்நிலை நிலவுகின்றது.

ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது இந்தப் பாதையில் தனியாக நடந்து சென்றார். ஆகவே இங்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை. யதார்த்தம் அப்படி காணப்படும்போது பொய்யாக படைத்தளங்களை நிறுவி அதற்கு பொது மக்களின் காணிகளை கபளிகரம் செய்து ஓர் இனவாத முன்னெடுப்பே இங்கு நடக்கின்றது என்பதை வெளியுலகம் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே, உடனடியாக மக்களின் காணிகளை அரசாங்கம் மக்களிடத்தில் கையளிக்கவேண்டும். அத்துடன், அந்த காணிகளை இதுவரை காலமும் இராணுவத்துக்குப் பயன்படுத்தியமைக்கான நஷ்ட ஈட்டையும் மக்களுக்கு வழங்கவேண்டும் என யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்

வலி. வடக்கில் காணிகளை விடுவிக்கக் கோரி காணி உரிமையாளர்கள் போராட்டம்!

22.05.2026

யாழ். வலி. வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி, காணி உரிமையாளர்களால் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வரும் போராட்டம், இன்றும் (22) இராணுவத்தினரின் "கொமாண்டோ" பங்களா முன்பாக ஐந்தாவது நாளாக நடத்தப்பட்டது.

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும் , அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில் , அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய தினமும் போராட்டத்தை முன்னடுத்தனர்.

எதிர்வரும் வெசாக் தினத்தில் அப்பகுதி முழுவதும் கறுப்பு கொடிகள் பறக்க விடப்பட்டு பாரிய அளவில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கு அனைத்து அரசியல்வாதிகள் அரச நிர்வாக உத்தியோகத்தர்கள் அனைவரையும் வருகை தருமாறு போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

www.thuyarpakirvu.com

கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் கைதி தாக்கப்பட்டு உயிரிழந்தார் (?)

24.05.2026

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலிலிருந்த கைதியொருவர் உயிரிழந்துள்ளார்.

கரடியனாறு கித்துள் பிரதேசத்தைச் சேர்ந்த சுப்பையா வசந்த குமார் (வயது 50) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மதுபானம் அருந்திவிட்டு அடிக்கடி வீட்டில் தகராறில் ஈடுபட்டு வந்த நிலையில் குறித்த நபரின் மனைவி கரடியானாறு பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டினையடுத்து பொலிசார் வீட்டிற்குச் சென்று அவரைக் கைது செய்தனர்.

இது தொடர்பிலான விசாரணைக்காக கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு சற்று நேரத்தில் மயக்க நிலையடைந்ததாகவும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவேளை மரணமடைந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

எனினும் குறித்த நபர் பொலிசாரினால் தாக்கப்பட்டே உயிரிழந்துள்ளதாக உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவரது சடலம் கரடியனாறு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

கிளிநொச்சி ஊடகவியலாளர் சங்கத்தின் காணியையும், கட்டடத்தையும் விடுவிக்குமாறு சிறீலங்கா ஜனாதிபதிக்கு கடிதம்!

கிளிநொச்சி ஊடக அமையம்

25.05.2026

கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி ஊடகவியலாளர் சங்கத்தின் காணியையும் கட்டடத்தையும் (Kilinochchi Press Club) இராணுவத்திடமிருந்து விடுவித்துத் தருமாறு கோரி, சிறீலங்கா ஜனாதிபதிக்கு கிளிநொச்சி ஊடக அமையம் கடிதம் எழுதியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் முழுநேர, பகுதிநேர ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய இந்த அமைப்பினால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாத மீள்குடியேற்றத்தைத் தொடர்ந்து, எமது நிர்வாகக் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு இன்று வரை நாம் ஒரு சிவில் அமைப்பாக இயங்கி வருகின்றோம்.

முன்னதாக, 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது ஊடகவியலாளர் அமைப்பு இயங்கி வந்த காலத்தில், கிளிநொச்சி ஏ-9 வீதியில் 'காக்கா கடை' சந்திக்கு அருகில் எமக்குச் சொந்தமாக சுமார் கால் ஏக்கர் காணியும், அலுவலகக் கட்டடமும் காணப்பட்டன. எமது அனைத்து ஊடகப் பணிகளும் அந்த வளாகத்திலிருந்தே முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இருப்பினும், இப்பகுதி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததிலிருந்து, எமக்குச் சொந்தமான காணியும் கட்டடமும் படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. எமது காணியைச் சூழவுள்ள யோகர் சுவாமிகள் நிலையம் மற்றும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு காணிகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளபோதிலும், கிளிநொச்சி ஊடகவியலாளர் அமையத்துக்குச் சொந்தமான காணி இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இக்காணியை விடுவிக்குமாறு கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த அடுத்தடுத்த அரசாங்கங்களுக்கு நாம் எழுத்துப்பூர்வமாக பல கோரிக்கைகளை விடுத்திருந்தபோதிலும், இதுவரை எந்தவொரு சாதகமான முடிவும் எட்டப்படவில்லை.

எனவே, தற்போது நாட்டில் பல்வேறு நேர்மறையான சீர்திருத்தங்களை முற்போக்கான முறையில் நடைமுறைப்படுத்தி வரும் தங்களின் மீது நாம் மிகுந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டுள்ளோம்.

எனவே, எமது தொழில்சார் ஊடகப் பணிகளை மிகவும் வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு ஏதுவாக, பாதுகாப்புப் படையினரின் வசமுள்ள எமது காணியையும் அலுவலகக் கட்டடத்தையும் விடுவித்துத் தருவதற்கு ஆவன செய்யுமாறு ஜனாதிபதியிடம் மிகவும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் ஊடக அமைச்சர் வடக்கு மாகாண ஆளுநர், கடற்தொழில் அமைச்சரான கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறிதரன், துரைராஜா ரவிகரன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கரைச்சி பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தையிட்டி விகாரைக்கு சார்பாக பொலிசார் சதி!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன்

26.05.2026

சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக இடம்பெற்ற போராட்டம் குறித்து பொலிசார் தாக்கல் செய்த பொய் வழக்கிற்கான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த வாக்குமூலமானது நேற்று முன்தினம்(24.05.2026) பதிவுசெய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று(25.05.2026) தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பான வாக்குமூலம் பலாலி பொலிசாரால் பெறப்பட்டதனை அடுத்து கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 2025 டிசம்பர் 4ஆம் திகதி தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக இடம்பெற்ற போராட்டம் குறித்து நேற்றையதினம் (14) பலாலி பொலிசார் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

அன்றையதினம் இடம்பெற்ற போராட்டத்தை குழப்பும் வகையில் பொலிசார் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

அதற்குப் பிறகு மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிசார் ஒரு பொய்யான வழக்கினை பதிவு செய்தனர்.

போக்குவரத்துக்கும், பொலிசாரின் கடமைகளுக்கும் இடையூறு விளைத்துவித்ததாக தெரிவித்தே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கிற்காக நாங்கள் நீதிமன்றத்துக்கு சமூகம் அளித்த நிலையில், அது தொடர்பான வாக்குமூலத்தினை பொலிஸ் நிலையத்திற்கு சென்று வழங்குமாறு நீதிமன்றம் எமக்கு அறிவுறுத்தியது. அதன் பிரகாரம் நேற்றையதினம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

நாங்கள் இந்த போராட்டங்களை ஜனநாயக முறையில், நீதிமன்ற கட்டளைகளுக்கு மதிப்பளித்து, பொலிசாரது அறிவுறுத்தல்களுக்கு மதிப்பளித்து நாடத்தி வருகின்றோம்.

அந்தப் போராட்டத்தை நிறுத்தி சட்டவிரோத விகாரைக்கு காணியை வழங்கி விட வேண்டும் என்பதற்காக இனவாத பொலிசாரால் எங்களுக்கு எதிராக அவ்வப்போது இவ்வாறு வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

அதன் தொடர்ச்சியாகவே நேற்றையதினமும் இவ்வாறு வாக்குமூம் மூலம் பதிவு செய்யப்பட்டது என சுட்டிக்காட்டியுள்ளார்.

காலங்காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள், சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக் கண்ணீர் இவையெல்லாம் பௌத்த தேசத்தின் காருண்யத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

யாழ். வழுக்கையாற்றை மீள உயிர்ப்பிக்கும் நோக்கில் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் களப் பயணம்!

26.05.2026

வழுக்கையாற்றை மீள உயிர்ப்பிக்கும் நோக்கில் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளுடனான களப்பயணம் முன்னெடுப்பு யாழ்ப் பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் வழுக்கையாற்றின் வழித்தடங்களிலுள்ள குளங்களை, நீர்த்தேக்கங்களைப் பாது காப்பதும், பொறுப்பாக மக்கள் மயப்படுத்தப்பட்ட நீர்வள ஆளு கையை நோக்கிச் செல்வதும் தொடர்பில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களையும் சேர்ந்த வட்டார உறுப்பினர்களையும் ஒருங் கிணைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் WASPAR செயற்திட்டத்தின் நான்காவது கட்டமான களப்பயணமும் உரை யாடலும் ஞாயிற்றுக்கிழமை (24.05.2026) இடம்பெற்றது.

வலிகாமம் வடக்குப் பிரதே சபைக்குட்பட்ட வறுத்தலைவிளான் குளத்தடியில் காலை-09 மணியளவில் பேராசிரியர் சிறிஸ்கந் தராஜா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலி-காமம் மேற்கு ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளும், கிராம மக்களும் ஆர்வத்துடன் இணைந்து கொண்டனர்.

வலி. வடக்கு காணி விடுவிப்பு தொடர்பில் கடற்தொழில் அமைச்சர் கூறிய அனைத்தும் அப்பட்டமான பொய்

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

27.05.2026

யாழ்ப்பாணத்தில் காணி விடுவிப்பு தொடர்பில் இராணுவத் தினர் எந்த விதமான சாதகமான பதிலையும் தெரிவிக்காத நிலையில், கடற்தொழில் அமைச்சர் மக்களை ஏமாற்றும் வித மாக கருத்துக்களை தெரிவித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்றைய நாள் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

காணி விடுவிப்பு தொடர்பில் ஆளுநர் செயலகத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு பிரதி அமைச்சரின் பங் கேற்புடன் உயர்மட்ட கூட்டம் நடைபெற்றது

அதில் இராணுவ தரப்பினர் காணி விடுவிப்பு தொடர்பில் எந்த வொரு சாதகமான பதிலையும் தெரிவிக்காமையே கூட்டம் நிறைவடைந்துள்ளது.

மக்கள் எதிர்பார்க்கும் எந்தவொரு முடிவினையும் சாதகமாக எடுக்காமல், காணி விடுவிப்பு தொடர்பில் இராணுவத்தினர் பல சமயங்களில் திட்டவட்டமாக நிராகரித்தும், சில விடயங்களில் பரிசீலிப்போம் என தட்டிக்கழிக்கும் பதிலையும் கூறியுள்ளனர். மக்கள் எதிர்பார்க்கும் எந்தவொரு விடயமும் சாதகமாக முடி-வெடுக்கப்படவில்லை.

ஆனால் மூடிய அறைக்குள் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பில், கடற்தொழில் அமைச்சர் வெளியே வந்து ஊடகங் களுக்கு முன்னால், சாதகமான பல விடயங்கள் நடைபெற்றுள் ளதாகவும், விரைவில் தீர்வுகள் காணப்படும் என அப்பட்டமான பொய்யை கூறியுள்ளார்.

இந்த பொய்யை மக்கள் மட்டத்தில் விதைக்க தான் தமது கட்சி சாராத மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்க வில்லை. அதேபோல வலி. வடக்கு பகுதி தொடர்பில் வலி.வடக்கு பிரதேச சபை யினரை அழைத்து இருக்க வேண்டும். அவர்களையும்

அழைக்கவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை அழைக்காது மூடிய அறைக்குள் மக்கள் பக்கம் இருந்து பேச கூடிய விட யங்களை பேசாது வெளியே வந்து மக்கள் மத்தியில் நம்பிக் கையை விதைக்கும் வகையில் பொய்யை சொன்னது கண்டிக் கப்பட கூடிய விடயம் என மேலும் தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் பௌத்த பிக்குவால் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்: மட்டக்களப்பில் பெண்கள் சிறுமிக்கு நீதி வழங்குமாறு போராட்டம் முன்னெடுப்பு

27.05.2026

அனுராதபுரத்தில் பௌத்த பிக்குவால் பாலியல் துஷ்பிரயோகத் துக்குட்படுத்தப்பட்ட சிறுமிக்கு நீதி வழங்குமாறு கோரி மட்டக் களப்பு காந்தி பூங்காவில் இன்று (27) காலை பெண்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பின் ஏற்பாட்டில் நடத் தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் 300க்கு மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர்.

அனுராதபுரத்தில் பௌத்த பிக்கு ஒருவரால் பாலியல் வன் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் சிறுமிக்கு உட னடியாக நீதி வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி, "வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு" அமைப்பினர் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஒன்றுகூடிய பெண்கள் ஊர்வலமாக சென்று படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபிக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பெண்கள் "பிக்குவினால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான அனுராதபுரம் சிறுமிக்கு நீதி வழங்குக...", "பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதியை நிலைநாட் டுங்கள்", "மதத்தின் பெயரால் பாலியல் குற்றவாளிகளை பாது காக்கவேண்டாம்", "சட்டத்தினால் மறுக்கப்பட்ட பாலியல் வன் கொடுமைக்கு பிணை கிடையாது" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பெரிய பதாதைகளை ஏந்தியவாறு தங்களது பலத்த எதிர்ப்பை வெளியிட்டனர்.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு விரைவாக நீதி கிடைக்கவேண்டும் என்பதுடன், குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள பிக்குவுக்கு எதி ராக சட்டம் பாகுபாடின்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பெண்களுக்கு எதிரான, குறிப்பாக சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் நாட்டில் அதிகரித்துவரும் நிலையில், அவர்களுக்கான பாதுகாப்பை அரசு பலப்படுத்தவேண்டும்.

இச்சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர், மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவர்கள், உரிய அதி காரிகள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்ட வேளையில் மகஜர் வாசிக்கப்பட்டதுடன் அந்த மகஜர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்திலும் கையளிக்கப்பட்டது.

அனுராதபுரத்தில் பௌத்த பிக்குவால் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோத்திற்கு நீதி கோரி யாழில் வடக்கு கிழக்கு பெண்கள் அமைப்பு போராட்டம்

27.05.2026

அனுராதபுரத்தில் பௌத்த துறவியால் சிறுமி பாலியல் வன புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்திற்கு நீதி கோரி நல்லூர் ஆலய பின்புறத்தில் வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டமைப் பினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அனுராதபுரத்தில் சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான பௌத்த துறவி பிணை யில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த சிறுமிக்கு நீதி கோரி போராட்டத்தில் ஈடு பட்ட வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டமைப்பினர், ஜனாதிபதி, நீதி அமைச்சர், சட்டமா அதிபர், மகளிர் விவகார அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு எழுத்து மூலமாக மகஜரை கையளிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

பூநகரி – கிராஞ்சி, பொன்னாவெளி மற்றும் வலைப்பாடு பிரதேச மக்கள் கனிம மணல் அகழ்வு மற்றும் காற்றாலை திட்டங்களுக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம்

28.05.2026

முன்னைய ரணில் அரசினை தொடர்ந்து பூநகரி - கிராஞ்சி பகுதியில் கனிய வளங்களை சூறையாட தேசிய மக்கள் சக்தியும் களமிறங்கியுள்ளது.

இந்நிலையில் மக்களுடைய வாழ்வாதாரத்தை அழித்து முன்னெடுக்கப்படுகின்ற கனிம மணல் அகழ்வு மற்றும் காற்றாலை திட்டங்களுக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பூநகரி – கிராஞ்சி மற்றும் பொன்னாவெளி,வலைப்பாடு பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புக்களால் இன்று (28.05.2026) போராட்டம் முன்னெடுக்கப்படடுள்ளது.

இலங்கையில் காற்றாலை, கனிம மணல் அகழ்வு போன்ற திட்டங்களினால் மக்களுடைய வாழ்வாதாரம் மற்றும் மண்வளம் அபகரிக்கப்பட்டு வருகின்றது. இச்செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

கடந்த கால அரசாங்கங்கள் செய்ததையே அனுர அரசாங்கமும் செய்கின்றது, கடந்த கால அரசாங்கங்கள் இனங்கண்ட இடங்களில் தான் கனிம மண் அகழ்வு, காற்றாலைத் திட்டம் போன்றவற்றை தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் முன்னெடுத்துச் செல்கின்றது.

அவ்வாறான திட்டங்களினால் மக்கள் வெகுவாக பாதிப்படைகின்றனர். அவ்வாறான அபிவிருத்தி திட்டங்கள் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், குடியேற்றத்தையும் பாதிக்காத வகையில் அமைய வேண்டும். ஆனால் இங்கு அவ்வாறு இல்லை.

கிட்டத்தட்ட கிராஞ்சிப் பகுதியில் 8,000 தென்னைகளை அழித்து ஒரு அபிவிருத்தி நடக்கின்றது. அவ்வாறான ஒரு அபிவிருத்தி எமக்கு தேவையில்லை.

மக்களினுடைய வளம், நிலம் சுரண்டப்படுவதை அனுமதிக்கப்படுகின்றது.

கிராமத்தினுடைய வளத்தையும், வாழ்வாதாரத்தையும் பேணிப் பாதுகாக்கும் முகமாகவே கவனயீர்ப்பு போராட்டம்

முன்னெடுக்கப்பட்டதாக போராட்டகாரர்கள் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் அரசியல் வாதிகள், மதத் தலைவர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதுகு தெளிவுபடுத்தியிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

யாழ். மயிலிட்டியில் இருந்து இராணுவத்தை வெளியேறக் கோரி கறுப்புக் கொடிப் போராட்டம்!

29.05.2026

இலங்கையின் தெற்கில் வெசாக் கொண்டாட்ட கொடிகள் பறக்கப்படவிடப்பட்டுள்ள நிலையில், மயிலிட்டிப் பகுதியில் தமது காணிகளில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என கோரி கறுப்புக்கொடிகளை பறக்க விட்டு காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். வலி. வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி , காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமாண்டோ" பங்களா முன்பாக இன் றைய நாள் ஆறாவது வெள்ளிக்கிழமை போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

யாழ். வலி. வடக்கில் கடந்த 1990ஆம் ஆண்டு யூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய நாள் வெள்ளிக்கிழமையும் போராட்டத்தை முன்னடுத்தனர்.

அனுராதபுரத்தில் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்; நீதி கோரி முல்லைத்தீவில் போராட்டம்

29.05.2026

அனுராதபுரத்தில் பௌத்த பிக்கு ஒருவரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் சிறுமிக்கு நீதி வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினரால் வெள்ளிக்கிழமை (29) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அத்தோடு இந்த கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் “சிறுமியின் கண்ணீர் மௌனமாகாது”, “மத ஆடையின் பின்னால் மறையும் குற்றங்களுக்கு நீதி வேண்டும்”, “குற்றவாளி யாராக இருந்தாலும் தண்டனை வேண்டும்”, “சிறார்களைக் காப்போம் குற்றங்களை நிறுத்துவோம்”, “சிறார்களின் பாதுகாப்பு எங்கள் உரிமை” உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறு அமைதிவழியில் கவனயீர்ப்பு நடவடிக்கையினை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.com

காலத்தை இழுத்தடிக்காது காணிகளை விடுவியுங்கள்!

நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

29.05.2026

காணி விடுவிப்பு தொடர்பில் காலங்களை இழுத்தடிக்காது, மக்களின் நியாமான கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி செவி சாய்த்து உடனடியாக காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கோரியுள்ளார்.

மயிலிட்டி பகுதியில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை காணி விடுவிப்பு கோரி நடைபெற்ற கறுப்புக்கொடி ஏந்திய போராட்டத் தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக 36 வருடங்களுக்கு முன்னர் வலி. வடக் கில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், யுத்தம் முடிவடைந்து, 17 வருடங்கள் கடந்த நிலையிலும் சொந்த மண்ணில் மீள் குடியேற அனுமதிக்கவில்லை.

தற்போதும் அந்த மக்கள், தமது உறவினர்கள் நண்பர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தங்கி வாழ்கின்றனர்

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் மக்களின் காணிகளை விடுவிப் போம் என கூறி ஆட்சிக்கு அனுர அரசாங்கம் வந்து இரண்டு வருடங்கள் கடந்தும் இன்னமும் காணிகள் விடுவிக்கப்படவில்லை

மக்களின் காணிகளில் இராணுவத்தினர் விவசாய பண்ணை-களை நடாத்தி வருகின்றனர். தோட்டங்களில் விவசாயம் செய்து மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த காணிகள் பாதுகாப்பு காரணங்களுக்காக கையகப்படுத்தப்பட வில்லை.

17 வருடங்களாக யுத்தங்கள் இல்லாத போதிலும் மக்கள் இன் னமும் தெருக்களில் வாழ்கின்றார். இந்த அரசாங்கமும், முன் னைய அராஜக அரசாங்கம் போன்றே செயற்படுகின்றனர்.

மக்களின் கோரிக்கைகள் நியாயமானது. சர்வதேச அமைப் புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என இங்கே நேரில் வந்து இந்த காணிகளை பார்வையிட்டால் தெரியும். இங்கு இரா ணுவ முகாம்களுக்காக காணிகளை கையகப்படுத்தவில்லை என இந்த மக்கள் தமது சொந்த காணிகளில் விவசாயம் செய்து அவர்கள் தமது வாழ்வாதாரத்தை தேடிக்கொள்ள வேண்டும். ஆனால் இங்கு தனியார் காணிகளில் இராணுவ வைத்திய சாலையை கட்டி , தனியார் காணிகளில் இராணுவம் விவசாயம் செய்கிறது. இந்த காணிகளை உடனடியாக விடுவியுங்கள்

எதிர்வரும் யூன் மாதம் 19ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், விடுவிக் கப்பட வேண்டிய காணிகளையும், இன்னமும் மீள் குடியேற்றப் படவுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்பில் விபரங்களை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளோம். அதன் அடிப்படையில் மக் களின் காணிகளை விடுவிக்க வேண்டிய தொடர் அழுத் தங்களை கொடுக்கவுள்ளோம்.

மக்களின் நியாமான கோரிக்கைக்கு ஜனாதிபதி செவிமடுத்து, மக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் காலங்களை இழுத்தடிக்கும் வார்த்தைகளை தவிர்த்து, மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண் டும் என தெரிவித்தார்.

மன்னாரில் பெண்கள், சிறுவர்ளுக்கு எதிரான பாலியல் அநீதிக்கு எதிராக கண்டனப் பேரணி

29.05.2026

நாடளாவிய ரீதியில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக அதிகாரம் மிக்க சமயத் தலைவர்களால் இழைக்கப்படும் பாலி யல் ரீதியான அநீதிகள் அதிகரித்து வரும் நிலையில், அதற்கு எதிராக கண்டனத்தையும் நீதிக்கான கோரிக்கையையும் வெளிப்படுத்தும் வகையில் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன் றியம் ஏற்பாடு செய்த கண்டனப் பேரணி வெள்ளிக்கிழமை (29) மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நடத்தப்பட்டது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் இணைப்பாளர் கே. மகாலட்சுமி தலைமையில் பெற்ற குறித்த கண்டனப் பேரணி யில் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மெசிடோ நிறுவன பிரதிநிதிகள், சமூக செய ற பாட்டாளர்கள் கலந்துகொண்டதோடு, புத்தளம் மாவட்ட முஸ் லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் யுகைதியா முகைதீனும் கலந்துகொண்டிருந்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப் பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஈடுபட்டனர்.

“சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் அநீதிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்”, “பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்”, “குற்றவாளிகள் யாராக இருந்தாலும் பக்கசார்பற்ற சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்”, “பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு உறு திப்படுத்தப்பட வேண்டும்”, “சட்டமும் நீதி முறையும் சமமாகவும் வெளிப்படையாகவும் செயல்பட வேண்டும்” என்ற வாசகங்கள் குறித்த பதாதைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மாவட்டச் செயலகத்துக்கு முன் ஆரம்பமான ஊர்வலம் மன் னார் பஜார் பகுதியூடாக சென்று மீண்டும் மன்னார் மாவட்டச் செயலக பகுதியை சென்றடைந்தது.

இதன்போது அவர்கள் பகிரங்க கோரிக்கையை முன்வைத்து அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜரை பொதுவெளி யில் வாசித்தனர்.

2018 முதல் 2022 வரை சுமர் 488 சிறுவர்கள் தேரர்கள் மூலம் பாதிப்பு: சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் வழக்குகள் பதிவு

புத்தளம் மாவட்ட முஸ்லிம் பெண்கள் நம்பிக்கை நிதியப் பணிப்பாளர் ஜுவைரியா முகைதீன்

29.05.2026

2018 முதல் 2022 வரை சுமார் 488 சிறுவர்கள் தேரர்களால் பாதிக்கப்பட்ட வழக்கு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் இது வரை பதிவு செய்யப்பட்டிருப்பதாக புத்தளம் மாவட்ட முஸ்லிம் பெண்கள் நம்பிக்கை நிதிய பணிப்பாளர் ஜுவைரியா முகைதீன் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக அதிகாரம் மிக்க சமய தலைவர்களால் நடைபெறும் பாலியல் ரீதியான அநீதிகள் அதிகரித்து வரும் நிலையில் அதற்கு எதிராக கண்டனத்தையும் நீதிக்கான கோரிக்கையையும் வெளிப்படுத் தும் வகையில் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்த கண்டனப் பேரணி இன்றைய தினம் வெள்ளிக்கிழமை (29) காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத் துக்கு முன்பாக நடைபெற்றது.

இதன்போது கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்தப் போராட்டமானது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந் ததும், மிகவும் வேதனையானதும், வலியானதுமாக நாங்கள் கருதுகிறோம்.

அனுராதபுரத்தில் 13 வயது சிறுமிக்கு ஏற்பட்ட இந்த அநீதிக்கு, பாலியல் வல்லுறவுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டியது இலங்கையில் இருக்கும் அத்தனை ஆண், பெண்களுடைய கடமையுமாகும். இருந்தபோதிலும், ஒரு குறிப்பிட்ட சாரார் தான் நாங்கள் இதில் பங்கேற்கவேண்டிய ஒரு துரதிர்ஷ்ட நிலை இருக்கிறது.

போராட்டத்தில் முழுமையாக பங்குபெறும்போது தான் எங்க ளுக்கான மாற்றத்தையும், வெற்றியையும் அடைய முடியும் என்று நான் நம்புகிறேன். அனுராதபுரத்தில் நடைபெற்ற இந்த வல்லுறவு, அதாவது பௌத்த பிக்கு ஒருவரால் நடத்தப்பட்ட இந்த வல்லுறவானது, உடனடியாக அவருக்குத் தண்டனை வழங்கவேண்டிய ஒரு செயற்பாடாகும்.

இருந்தபோதிலும், அவருக்கான தண்டனையில் இருந்து அவ ருக்கு பிணை கிடைத்தமை மிகவும் மனவேதனையும், வருத் தமாகவும் உள்ளது.

அதே நேரத்தில், நான் நினைக்கிறேன் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் 2018இல் இருந்து 2022 வரைக்கும் 488 சிறுவர்கள், தேரர்கள் மூலம் பாதிக்கப்பட்ட அல்லது பாலியல் ரீதியான சேட்டைகளுக்கு உட்பட்ட 488 பிள்ளைகளுக்கு எதி ரான வழக்கு இதுவரை பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஏழை சிறுவர்கள் தான் இதில் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் அந்த வழக்குகள் பதியாமல் இருக்கலாம்.

இன்னொரு வேதனையான விஷயம் என்னவென்றால், இவ் வாறான ஆட்களுக்கு நீதிமன்றத்தில் வழக்கு பேசப் போகி றார்கள். அவர்களுக்கு எதிராகத்தான் நாங்கள் முதலில் குரல் கொடுக்கவேண்டும். ஏனென்றால், அவர்களுக்கு பிள்ளைகள் இல்லையா? அவர்களுக்கு பெண்கள் இல்லையா? இந்த வேதனை, வலி அவர்களுக்கு வராதா?

மன்னாராக இருந்தாலும் சரி, புத்தளமாக இருந்தாலும் சரி, இலங்கையில் எந்த நீதிமன்றத்திலும் இவ்வாறான வல்லுறவு அல்லது பாலியல் கொடுமை ஏற்படும்போது, சட்டத்தரணிகள் நிச்சயமாக சமுகமளிக்க கூடாது என்பதையும், வாதிட கூடாது என்பதையும் இந்த தருணத்தில் மிகவும் வேதனையோடும் வலியோடும் தெரிவித்துக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

www.thuyarpakirvu.com

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து யாழில் போராட்டம்

29.05.2026

சிறுவர்களுக்கு மீதான வன்முறைகளை எதிர்த்து குரல் கொடுக்கும் விதமாக யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை (29) போராட்டம் நடத்தப்பட்டது.

இதில் பெண்கள் அமைப்பை சேர்ந்தவர்கள், அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள் பலர் கலந்துகொண்டு குரல் கொடுத்தனர்.

யாழ் நகரில் இன்று வெள்ளிக்கிழமை உயர் அதிகாரத்தில் உள்ள பௌத்த பிக்கு ஒருவரால் சிறுமி ஒருவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டமையை கண்டித்தும் அரச தலையீடுகள் இன்றி சிறுமிக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் என வலியுறுத்தி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், நாங்கள் உண்மையான பௌத்தர்களையும் சிங்கள மக்களையும் மதிக்கின்றோம். ஆனால் இலங்கையில் பௌத்த உயர் பீடங்கள் பேரினவாதத்திற்குள் சிக்கிக் காணப்படுகின்றன. தேசிய இனப்பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் இனவாதமிக்க பௌத்த பேரினவாத சக்திகளே. அனுராதபுரத்தில் சிறுவி ஒருவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு குரலற்றவராக நீதியை கோரி நிற்கின்றார்.

நிலைமை இவ்வாறிருக்க ஜனாதிபதி எவ்வாறு பௌத்த மத குருக்களை நீதிமன்றங்களில் நிறுத்துவது என ஜனாதிபதி வேதனைப்படுகின்றார். சட்டத்தின் முன் சகலரும் சமன் என்ற அடிப்படையில் நாட்டை அரசாங்கம் வழிநடத்த முன்வர வேண்டும்.

உள்நாட்டுச் சட்டங்களின் பிரகாரமும் ஐ.நா. உள்ளிட்ட சர்வ தேச சமவாயங்களின் பிரகாரமும் சிறுவர்களை பாதுகாக்க அரசு கடமைப்பட்டுள்ளது. அப்படியிருக்க ஜனாதிபதி கூறும் பௌத்த துறவியர்களின் குற்றங்களுக்கு தனியான நீதிமன்றங்கள் என்பது நாட்டை மேலும் கீழ்நிலைக்குக் கொண்டு செல்லும் பிற்போக்கான முயற்சியாகும்.

நாம் மதச்சார்பற்ற அரசியலமைப்பினை கோரும் நிலையில், பௌத்தத்திற்கு ஏற்கனவே அரசியலமைப்பில் காணப்படும் முன்னுரிமைகளில் இருந்து மேலும் ஒருபடி முன்சென்று குற்றங்களில் இருந்தும் விடுபாட்டினை அளிக்கும் முயற்சிளை திரைமறைவில் அரசாங்கம் மேற்கொள்ள முயற்சிக்கின்றது. இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அனுராதபுர சிறுமிக்கு நீதி கோரி மட்டக்களப்பில் போராட்டம்

29.05.2026

மதத்தின் பெயரால் பாலியல் குற்றவாளிகளைப் பாதுகாக்க வேண்டாம் பிக்குவினால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்

பட்ட அநுராதபுர சிறுமிக்கு நீதி வழங்க வேண்டும் என என்ற வாசகம் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்திற்கு

அருகாமையில் கண்டனப் போராட்டம் முன்னெடுப்பு.

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு முன்பாக காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்

30.05.2026

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள, தமது காணிகளை மீளக் கையளிக்குமாறு கோரி நேற்றும் (29) இன்றும் (30) காணி உரிமையாளர்கள் போராட்டம் நடத்தினர்.

குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள ஏனைய காணிகளான தனியார் காணிகளை, காணி உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்க வேண்டும் எனக் கோரி, ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டத்தில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும், உறுதியையும் அழித்து விட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும், உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்கு உண்டு.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

முல்லை. கேப்பாப்பிலவு மக்களின் பூர்வீக வாழ்விடத்தை விடுவிக்கவேண்டுமென்ற ரவிகரன் எம்.பியின் கோரிக்கையை அரசு ஏற்க மறுப்பு; மீளவும் போராடத் தயாராகும் கேப்பாப்பிலவு மக்கள்

29.05.2026

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப் படுத்தப்பட்டுள்ள 55 பொதுமக்களின் காணிகளை விடுவிக் குமாறு ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடிதமொன்றினை அனுப்பிவைத்திருந்தார்.

குறிப்பாக கேப்பாப்பிலவு காணிவிடுவிப்புத் தொடர்பில் நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் ஜனாதிபதிக்கு அனுப் பப்பட்ட 2026.01.14 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக, கடந்த 11.03.2026 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கான பிரதியுடன் பாது காப்பு அமைச்சின் செயலாளருக்கு PS/DA/SAD/06/41-Vol.01 இலக்கமுடைய கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் அவ்வாறு ஜனாதிபதி செயலகத்தினால் பாது காப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட அக் கடிதத்தின் மூலம், கேப்பாப்புலவு காணிவிடுவிப்புத்தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதி பதியின் சிரேஷ்ட்ட உதவிச் செயலாளரால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு 19.05.2026 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை விடுவிப்பதுதொடர்பில் சாதகமான பதில்கள் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ற அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

முல்லைத்தீவு, கேப்பாபிலவு பிரதேசத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை விடுவித்தல் தொடர்பில், அந்த பிரதேசத்தில் காணி உரிமையுடைய 55 பேரில் 44 பேர் மாற்று காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இணங்கியுள்ளதாகவும், அவர்களுக்கு கேப்பாபிலவு மாதிரி கிராமத்தில் 40 பேர்ச்சஸ் வீதமான காணிகள், வீடுகள் மற்றும் பாடசாலை வசதிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள் ளதாகவும், மீதமுள்ள 11 பேர் மாற்று காணிகள், வீடுகள் அல்லது அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை இணக்கம் தெரி விக்காத காரணத்தினால், முகாமிற்கு சொந்தமான காணியின் இறுதி பகுதியிலிருந்து 6.75 ஏக்கர் ஒதுக்கப்பட்டு, இராணுவத் தின் தொழிலாளர் பங்களிப்புடன் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

மேலும், இந்த நிலப்பரப்பில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் பெறுமதி 538 மில்லியன் ரூபாவுக்கும் அதிக மாக இருப்பதால், முகாமை இடமாற்றம் செய்வது அதிக செலவை ஏற்படுத்தும் என்றும், குறித்த காணியானது நந்திக் கடல் களப்பு சார்ந்த பிரதேசத்தில் பாதுகாப்பை உறுதி செய்வ தற்கும், இராணுவத் தொடர்பாடல் முறைமைகளைப் பேணிச் செல்வதற்கும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்தது என் பதால், அதனைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வது அத் தியாவசியமானது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள் ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி மாற்று காணிகள், வீடுகள் அல்லது அரசாங்க மதிப் பீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை இணக்கம் தெரிவிக்காத எஞ்சிய 11 பேருக்கு முகாமிற்கு சொந்தமான காணியின் இறுதி பகுதியிலிருந்து 6.75 ஏக்கர் ஒதுக்கப்பட்டு, இராணுவத்தின் தொழிலாளர் பங்களிப்புடன் வீடுகளை அமைத்துக் கொடுக்கக் கூடிய சாத்தியக்கூறு தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செய லாளரின் ஊடாக வினவுதலை மேற்கொண்டு. இது தொடர்பாக பொருத்தமானவாறு அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெ டுக்க தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் அறிவுறுத் தல்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நட வடிக்கை எடுக்கப்படும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் 28.05.2026 நேற்று கேப்பாப்புலவு மக்கள் பிரதிநிகள் சிலரை முல்லைத்தீவு - கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள தனது மக்கள் தொடர்பகத்திற்கு அழைத்து இந்தவிடயங்கள் தொடர் பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பிவைக்கப் பட்டுள்ள குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைப்போல 44பேர் மாற்றுக்காணிகளைப் பெறுவதற்கு இணக்கம் தெரி விக்கவில்லை என கேப்பாப்பிலவு மக்கள் பிரதிநிதிகள் இதன் போது தெரிவித்ததுடன், கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள 55பேருடைய காணிகளும் விடு விக்கப்பட வேண்டுமென்ற தமது நிலைப்பாட்டினையும் தெரி வித்தனர்.

அதேவேளை கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப் படுத்தப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில், தமது கோரிக்கைகளையும், நிலைப்பாட்டையும் வெளிப்படுத் துவதற்கு எதிர்வரும் 03ஆம் திகதி இடம்பெறவுள்ள முல்லைத் தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தனர்.

அத்தோடு இந்த கேப்பாப்பிலவு காணிவிடுவிப்புத்தொடர்பில் தொடர்ந்து பாராளுமன்றில் குரல்கொடுக்குமாறும் இதன்போது கேப்பாப்பிலவு மக்கள் பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக் கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசன் அவர்களின் 22 ஆவது ஆண்டு நினைவேந்தல்

31.05.2026

படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசன் அவர்களின் 22 ஆவது ஆண்டு நினைவேந்தல் மட்டு ஊடக மையம் மற்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் இணைந்து இன்று 31.05.2026, ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு காந்தி சதுக்கம் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவு தூபி முற்றத்தில் இடம்பெற்றது.

நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் நினைவுருவப் படத்திற்கு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, 22 நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டதுடன் நினைவுரைகளும் நகிழ்த்தப்பட்டன.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

கனடியச் செய்திகள்

கனடாவின் பணவீக்கம் உயரும் என பொருளாதார வல்லுநர் கணிப்பு!

17.05.2026

ஈரான் போர் காரணமாக ஏற்பட்டுள்ள உலகளாவிய எரிசக்தி அதிர்ச்சியின் முழு தாக்கத்தினால், கனடாவில் கடந்த ஏப்ரல் மாதத்திற்கான ஆண்டு பணவீக்க விகிதம் 2023-ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முறையாக 3 சதவீதத்தைத் தாண்டும் என்று பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

கனடா புள்ளிவிபரவியல் திணைக்களம் ஏப்ரல் மாதத்திற்கான புதிய நுகர்வோர் விலை குறியீட்டு (CPI) தரவை வரும் வெளியிட உள்ளது. ராய்ட்டர்ஸ் நடத்திய பொருளாதார வல்லுநர்களின் கருத்துக்கணிப்பின்படி, மார்ச் மாதத்தில் 2.4 சதவீதமாக இருந்த முதன்மை பணவீக்க விகிதம், ஏப்ரலில் 3.1 சதவீதமாக கடுமையாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கத்தின் இந்த திடீர் உயர்வுக்கு முக்கிய காரணம் பெட்ரோல் விலை அதிகரிப்பே என்று ராயல் வங்கி (RBC) பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மார்ச் மாதத்தில் 21 சதவீதம் உயர்ந்த பெட்ரோல் விலை, ஏப்ரல் மாதத்தில் மேலும் 8 சதவீதம் அதிகரித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களுக்குப் பதிலடியாக, கடந்த பெப்ரவரி மாத இறுதியில் ஈரான் ஹார்முஸ் நீரிணையை (Strait of Hormuz) மூடியது.

இதனால் வளைகுடா பிராந்தியத்திலிருந்து உலகளாவிய கச்சா எண்ணெய் விநியோகம் முடங்கி, உலக சந்தையில் எரிசக்தி விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன.

ஏப்ரல் 2025-டன் நுகர்வோர் கார்பன் விலை குறைப்பு சலுகை முடிவுக்கு வந்ததும் இந்த பணவீக்க உயர்வுக்கு மற்றொரு காரணமாகும். கடந்த ஆண்டு வழக்கமான பெட்ரோல் விலையிலிருந்து சுமார் 18 காசுகள் குறைக்கப்பட்டிருந்ததால் பணவீக்கம் கட்டுக்குள் இருந்தது.

ஆனால், தற்போது அந்த நிவாரணம் ஒப்பிடப்படாது என்பதால்

ஆண்டு பணவீக்க எண் உயர்ந்து காட்டும். கனடா வங்கி (Bank of Canada) தனது இலக்கான 1 முதல் 3 சதவீதத்திற்குள்ளேயே கடந்த இரண்டு ஆண்டுகளாக பணவீக்கத்தை வைத்திருந்தது. கடைசியாக டிசம்பர் 2023இல் தான் பணவீக்கம் 3 சதவீதத்தைத் தாண்டியது.

தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளை முன்னிட்டுப் கனடாப் பிரதமர் மார்க் கார்ணி வெளியிட்ட அறிக்கை!

Office of the Prime Minister | Cabinet du Premier ministre

Ottawa, Canada K1A 0A2

Statement

For immediate release

Statement by Prime Minister Carney on Tamil Genocide Remembrance Day

May 18, 2026 Ottawa, Ontario Prime Minister's Office

"Today, we join Tamil communities in Canada and around the world in commemorating Tamil Genocide Remembrance Day.

The Sri Lankan civil war claimed tens of thousands of civilian lives over more than a quarter century. We honour the memory of those who lost their lives and stand with the survivors, families, and communities who endured profound suffering.

Canada is home to one of the largest Tamil diasporas in the world, including many who came here seeking refuge from violence and persecution. In 2022, Canada's Parliament unanimously voted to recognise May 18 as Tamil Genocide Remembrance Day and recognise the atrocities committed against Tamils in Sri Lanka as genocide – reflecting an important step in acknowledging this painful history.

Canada will continue to support international efforts to advance accountability, uphold human rights, and promote lasting peace for people of the Island.

We reaffirm our commitment to human dignity and justice, and to ensuring that such grave violations of human rights are never ignored or forgotten."

– 30 –

PMO Media Relations: media@pmo-cpm.gc.ca
This document is also available at https://pm.gc.ca

Canada

Office of the Prime Minister | Cabinet du Premier ministre

Ottawa, Canada K1A 0A2

Déclaration

For immediate release

Déclaration du premier ministre Carney pour souligner le Jour commémoratif du génocide des Tamouls

May 18, 2026 Ottawa, Ontario Prime Minister's Office

« Aujourd'hui, nous nous joignons aux communautés tamoules du Canada et du monde entier pour souligner le Jour commémoratif du génocide des Tamouls.

La guerre civile au Sri Lanka, qui a duré plus d'un quart de siècle, a coûté la vie à des dizaines de milliers de civils. Nous honorons la mémoire de celles et ceux qui ont perdu la vie et nous nous tenons aux côtés des survivants, des familles et des communautés qui ont enduré d'énormes souffrances.

Le Canada accueille l'une des plus importantes diasporas tamoules au monde, dont bon nombre de ses membres sont venus ici pour trouver refuge face à la violence et aux persécutions. En 2022, le Parlement du Canada a voté à l'unanimité pour faire du 18 mai le Jour commémoratif du génocide des Tamouls et pour qualifier de génocide les atrocités commises contre les Tamouls au Sri Lanka, marquant ainsi une étape importante dans la reconnaissance de ce chapitre douloureux de l'histoire.

Le Canada continuera de soutenir les efforts déployés par la communauté internationale en vue de promouvoir la reddition de comptes, de défendre les droits de la personne et d'instaurer une paix durable pour les habitants de l'île.

Nous réitérons notre engagement envers la dignité humaine et la justice ainsi que notre volonté de veiller à ce que de telles violations graves des droits de la personne ne soient jamais ignorées ou oubliées.

– 30 –

PMO Media Relations: media@pmo-cpm.gc.ca

Canada

அறிக்கை

உடனடி வெளியீட்டுக்கு

தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளை முன்னிட்டுப் பிரதம மந்திரி கார்ணி வெளியிட்ட அறிக்கை

மே 18, 2026. ஒட்டாவா, ஒன்றாரியோ பிரதம மந்திரியின் அலுவலகம்

"கனடாவிலும், உலகெங்கிலும் உள்ள தமிழ்ச் சமூகங்களுடன் இணைந்து நாம் இன்று தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளைக் கடைப்பிடிக்கிறோம்.

கால் நூற்றாண்டுக்கும் அதிகமாக நீடித்த இலங்கை உள்நாட்டுப் போர், ஆயிரக்கணக்கான பொதுமக்களின் உயிர்களைப் பறித்தது. நாம் உயிரிழந்தவர்களின் நினைவைப் போற்றி, அளவிடற்கரிய துன்பமடைந்த தப்பிப் பிழைத்தோருக்கும், குடும்பத்தினருக்கும், சமூகங்களுக்கும் துணையாயிருப்போம்.

உலகிலுள்ள மிகப் பெரும் புலம்பெயர் தமிழ்ச் சமூகங்களில் ஒன்று கனடாவிலுள்ளது. வன்முறை, துன்புறுத்தல் ஆகியவற்றில் இருந்து தப்புவதற்குப் புகலிடம் நாடிவந்த பலரும் இதில் அடங்குகிறார்கள். 2022 ஆம் ஆண்டில் கனேடிய நாடாளுமன்றம் மே 18 ஆந் திகதியைத் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக ஒருமனதாக அங்கீகரித்து, இலங்கையில் தமிழர்கள் மீது புரியப்பட்ட அட்டூழியங்களை இனப்படுகொலையென அங்கீகரித்தமை, துயர்படிந்த வரலாற்றை ஏற்றுக்கொள்வதன் ஒரு முக்கிய படியைப் பிரதிபலிக்கிறது.

பொறுப்புக்கூறலை முன்னகர்த்தவும், மனித உரிமைகளை நிலைநிறுத்தவும், இலங்கைத்தீவின் மக்களுக்கு நீடித்திருக்கும் அமைதியை ஊக்குவிக்கவும் எடுக்கப்படும் சர்வதேச முயற்சிகளுக்குக் கனடா தொடர்ந்து ஆதரவளிக்கும்.

மனித கௌரவம், நீதி ஆகியவற்றுக்கும், இத்தகைய பாரதூரமான மனித உரிமை மீறல்கள் புறக்கணிக்கப்படாமலும், மறக்கப்படாமலும் இருப்பதற்குமான எமது உறுதிப்பாட்டை நாம் மீள உறுதிசெய்கிறோம்."

-30-

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

கனடாவிலிருந்து பிரிய விரும்பும் ஆல்பர்ட்டா மாகாணம்: கனடியப் பிரதமர் மார்க் கார்ணி எச்சரிக்கை!

26.05.2026

ஆல்பர்ட்டா மாகாணம் கனடாவிலிருந்து பிரிவது தொடர்பான வாக்கெடுப்பை, பிரெக்சிட்டுடன் ஒப்பிட்டு எச்சரித்துள்ளார் கனடா பிரதமர்.

கனடாவிலிருந்து பிரிவது தொடர்பில் நடைபெறவிருக்கும் ஆல்பர்ட்டா பொது வாக்கெடுப்பை, பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறிய பிரெக்ஸிட் வாக்கெடுப்புடன் ஒப்பிட்டு, அது ஒரு ஆபத்தான விடயம் என விமர்சித்துள்ளார் கனடா பிரதமரான மார்க் கார்ணி.

பிரெக்சிட் சமயத்தில் இங்கிலாந்து வங்கியை வழிநடத்தியவரான கார்ணி, 'பிரெக்சிட் வாக்கெடுப்பு நடந்து 10 ஆண்டுகள் ஆன நிலையில், மக்கள் எதற்கோ வாக்களிக்க, ஆனால், எதுவோ கிடைக்க, இப்போது அதை மாற்ற பிரித்தானியா முயற்சித்துக் கொண்டிருக்கிறது' என்று கூறினார்.

ஃபெடரல் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் ஆல்பர்ட்டாவின் நிலையை வலுப்படுத்தும் ஒரு வழிமுறையாக பிரிவினை வாக்கெடுப்புக்கு ஆதரவாக வாக்களிப்பது, எதிர்பாராத பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

ஆல்பர்ட்டா மக்கள், தாங்கள் கனடாவின் ஒரு பகுதியாகத் தொடர விரும்புகிறார்களா அல்லது பிரிவினை குறித்த கட்டாய வாக்கெடுப்பைப் பிற்காலத்தில் நடத்த விரும்புகிறார்களா என்பதை அக்டோபர் மாதம் 19ஆம் திகதி முடிவு செய்ய இருக்கிறார்கள்.

திங்களன்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் கார்ணி, வரும் மாதங்களில் கனடாவின் ஒற்றுமைக்காக தான் பிரச்சாரம் செய்ய இருப்பதாகத் தெரிவித்தார்.

கனேடிய மாகாணங்களில் ஒன்றான ஆல்பர்ட்டா மாகாணம், இயற்கை வளங்கள் நிறைந்த ஒரு மாகாணமாகும்.

ஆனால், கனடாவுக்கு தாங்கள் தங்கள் வளம் மூலம் பெரிய அளவில் பங்களிப்பைச் செய்தும், பதிலுக்கு ஃபெடரல் அரசு தங்களை சரியாக கவனிப்பதில்லை, தங்கள் கருத்துக்கள் நாடாளுமன்றத்தில் எடுபடவில்லை என்னும் கருத்து ஆல்பர்ட்டா மக்களிடையே நிலவிவருகிறது.

ஆகவே, Stay Free Alberta என்னும் அமைப்பின் தலைவரான மிச் சில்வெஸ்டர் என்பவர், முறைப்படி அரசின் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற்று, ஆல்பர்ட்டா மாகாணம் பிரிவது தொடர்பில் புகார் மனு ஒன்றை உருவாக்கினார்.

அந்த மனு வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டுமானால், அது சுமார் 178,000 கையெழுத்துக்களைப் பெறவேண்டும்.

ஆனால், அந்த மனு 300,000 கையெழுத்துக்களைப் பெற்றுவிட்டதைத் தொடந்து, மனு முறைப்படி தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. மனு அங்கீகரிக்கப்படும் நிலையில், அக்டோபர் மாதம் 19ஆம் திகதி அது வாக்கெடுப்புக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.



முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

தமிழ் நாட்டுச் செய்திகள்

மறைந்த நம் உறுவுகளுக்காக
ஆசிவகக் கடவுளரிடம்
வேண்டுதல் வைப்போம்
ஐந்தாம் தமிழ் சங்கம்

முள்ளிவாய்க்கால் நினைவை இதயத்தில் ஏந்துவோம்

தமிழ் நாட்டு முதல்வர் ஜோசப் விஜய்

10.05.2026

முள்ளிவாய்க்கால் நினைவை இதயத்தில் ஏந்துவோம் எனவும், கடல் கடந்து வாழும் தமிழ்ச் சொந்தங்களின் உரிமைகளுக்காக எப்போதும் துணை நிற்போம் எனவும் தமிழக வெற்றிக் கழக தலைவர், முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், ஈழத் தமிழர்கள் எதிர்கொண்ட துய ரங்கள் மறக்க முடியாதவை என்றும், உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் உணர்வுகளுடன் தாம் இணைந்திருப் பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் எம் இனத்தின் இரத்தத்தை பாய்ச்சி உயிர் பறித்தார்கள்!

திரைப்பட இயக்குனர் இராஜேந்திர்

17.05.2026

முள்ளிவாய்க்கால் வரப்பு வழியே நீர்பாய்ச்சி பயிர் வளர்ப் பார்கள். ஆனால் முள்ளிவாய்க்காலில் எம் இனத்தின் இரத்தத் தையும் செந்நீரையும் பாய்ச்சி உயிரை பறித்தார்கள் என தென் னிந்திய பிரபல இயக்குனர் ரி.ராஜேந்தர் உருக்கமாக தெரி வித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து கருத்து தெரிவிக்கை யில் அவர் இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது ஒரு துக்க தினம். இது ஒரு கறுப்பு தினம். எமது இதயத்தை ரணமாக்கிய ஒரு தினம். அன்று எமது இனம் எப்படி துடிதுடித் திருக்கும். எப்படி வேதனைப்பட்டிருக்கும்.

அந்த உறவுகளின் ஆத்மாக்கள் சாந்தியடைய வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கிறேன். ஈழம் என்று மலரும் என்று எனது மனம் தினம் தினம் ஏங்குகிறது.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நண்பர் விஜய் ஒரு இக் கட்டான கட்டத்தில் இருக்கிறார் என்றவுடன் காங்கிரஸ் கரம் நீட் டுகிறது என்றவுடன் இன்று திமுக கவலைப்படுகிறதே, இதே காங்கிரஸ் தானே அன்று எமது ஈழத் தமிழர்களுக்கு துரோகம் செய்தார்கள்.

அப்பாவி தமிழர்களை கொன்று குவித்து சிங்கள இராணுவத் துக்கு துணை போனார்களே எப்படி? என்னுடைய தொப்புள் கொடி பந்தங்களுக்கு அந்த துன்பத்தை அள்ளிக் கொடுத் தார்களே எப்படி? முள்ளிவாய்க்காலில் அன்று இரத்த ஆறினை ஓடவிட்டார்களே எப்படி?

அப்பாவி தமிழர்கள் அன்று தங்களை இழந்தபோது எனக்கு எப்படி வலித்திருக்கும்? அன்று எனக்கு எப்படி துடித்திருக்கும்? என் ஈழத் தமிழ் இனத்தின் மீது அன்றைக்கு அவன் போட்டான் வேட்டு, சிங்களவர்களோடு இந்த காங்கிரஸ் வைத்தது கூட்டு,

இன்றைக்கு திமுகவோடு வைத்தது கூட்டு. நேரம் பார்த்து வைத்தது வேட்டு. இப்போது உங்களுக்கு வலிக்குதே. ஈழத் தமிழர்கள் காங்கிரஸால் படாத பாடுபட்ட போது எனக்கு எப்படி வலித்திருக்கும் என ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

ஒரு பிரச்சினையை ஆராய்வதற்கும் தீர்ப்பு வழங்குவதற்கும் பிரத்தியேகமான மனப்பக்குவம் அவசியம். சுயநலமற்ற, சொந்த விருப்பு – வெறுப்புக்களற்ற, உணர்வுகளுக்கும் பந்த பாசங்களுக்கும் இடமளிக்காத, ஒரு நேர்மையான பார்வை அவசியம்.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.com

17 வருடங்கள் கடந்தும் போர் குற்றங்களுக்கு நீதி கிடைக்கவில்லை!

நடிகர் நிழல்கள் ரவி

17.05.2026

யுத்தம் முடிவடைந்து 17 ஆண்டுகள் ஆகியும் முள்ளிவாய்க்கால் மண்ணில் இனப்படுகொலை செய்யப்பட்ட எமது ஈழத்து தமிழ் உறவுகளுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என தென்னிந்திய பிரபல திரைப்பட நடிகர் நிழல்கள் ரவி கவலை வெளியிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள அரசின் அடக்குமுறையை எதிர்த்து தமிழ் இனம் 30 ஆண்டுகள் உரிமைக்காக ஆயுதம் தூக்கி போராடியது.

கடந்த 2009 மே 18 அன்று சர்வதேச நாடுகளின் பங்களிப்புடன் அந்த யுத்தமானது மௌனிக்கப்பட்டது. இந்த யுத்தத்தில் இலட்சக்கணக்கான உயிர்கள் பலியாகின. இந்த யுத்தத்தில் பல போர் குற்றங்கள் இடம்பெற்றன. ஆனால் 17 வருடங்கள் கடந்தும் இதுவரை அதற்கான நீதி கிடைக்கவில்லை.

பாதிக்கப்பட்ட இனம் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட வண்ணமே உள்ளது. இவை அனைத்தும் முடிவுக்கு வந்தால்தான் முள்ளிவாய்க்கால் மண்ணில் பலியாகிய இலட்சக்கணக்கான உயிர்களின் ஆன்மாக்கள் சாந்தியடையும். தயவுசெய்து தமிழ் இனத்தை வாழ விடுங்கள்.

எனது தொப்புள்கொடி உறவுகள் உயிர்களை, உடைமைகளை இழந்து நாதியற்று நடுத்தெருவில் நிற்கின்றார்கள். முள்ளிவாய்க்கால் மண்ணில் விதைக்கப்பட்ட உறவுகளுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

ஈழத்தமிழ் உறவுகளுக்காக எனது குரல் தொடர்ந்து ஒலிக்கும் என்பதை அந்த உறவுகளுக்கும் சர்வதேச சக்திகளுக்கும் எடுத்துக்கூற விரும்புகிறேன். என்றும் ஈழத்தமிழர்களின் நிழலாக இந்த நிழல்கள் ரவி இருப்பார் என உருக்கமாக தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மே 18: செங்கல்பட்டு, மறைமலை நகர்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மே 18: செங்கல்பட்டு – மதுராந்தகம்

தமிழர் தேசிய துக்க நாள்

ஈழத் தமிழ் இன அழிப்பு நாள்

Genocide Day

National Mourning Day of Thamileelam

மே May 18

In 2009 Over 146, 6797 Eelam Thamils Murdered, 70,000 Thamils unaccounted

Thamil Genocide Education Week (12May to 18 May)

முள்ளிவாய்க்கால் நினைவு நாள் Mullivaikkal Remembrance Day

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

கொங்கோவில் மீண்டும் எபோலா வைரஸ் பரவல்: 65 பேர் உயிரிழந்துள்ளனர்!

15.05.2026

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்கு இட்டூரி மாகாணத்தில் எபோலா வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ளதாக ஆபிரிக்க நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதுவரை 246 பேருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளதுடன், அவர்களில் 65 பேர் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக, தங்கம் அகழ்வு செய்யப்படும் நகரங்களான மொங்வாலுமற்றும் ரம்பாரா ஆகிய பகுதிகளிலேயே அதிகளவான பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

தலைநகர் கின்ஷாசாவிலுள்ள ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், பகுப்பாய்வு செய்யப்பட்ட 20 மாதிரிகளில் 13 பேருக்கு எபோலா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எபோலா பரவலைத் தடுப்பதற்கும், எல்லை தாண்டிய கண்காணிப்புகளை பலப்படுத்துவதற்கும் கொங்கோ, உகாண்டா, தெற்கு சூடான் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் அவசர ஆலோசனைக் கூட்டத்தை நடத்த ஆபிரிக்க சிடிசி நடவடிக்கை எடுத்துள்ளது.

1976ஆம் ஆண்டு முதன்முதலில் கொங்கோவிலேயே இந்த வைரஸ் கண்டறியப்பட்டது. வௌவால்கள் மூலம் இது பரவுவதாக நம்பப்படுகிறது.

காய்ச்சல், தசை வலி, சோர்வு, தலைவலி மற்றும் தொண்டை புண் போன்றவை ஆரம்ப கால அறிகுறிகளாகும். இது உடல் திரவங்கள் மூலம் பரவக்கூடியதுடன், கடுமையான உட்புற இரத்தப்போக்கு மற்றும் உடல் உறுப்பு செயலிழப்பை ஏற்படுத்தும்.

எபோலா வைரஸிற்கு தற்போது நேரடி மருந்து எதுவும் இல்லை.

இட்டூரி மாகாணம் தற்போது இராணுவ ஆட்சியின் கீழ் உள்ளது. அங்கு நிலவும் ஆயுதக் குழுக்களின் மோதல்களினால் சுகாதாரப் பணியாளர்கள் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கடும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கொங்கோவில் இதற்கு முன்னதாக 2018-2020 காலப் பகுதியில் ஏற்பட்ட எபோலா பரவலின் போது சுமார் 2,300 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது ஏற்பட்டுள்ளது அந்நாட்டின் 17ஆவது எபோலா பரவலாகும்.

அவுஸ்திரேலியாவில் 'முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி' திறப்பு

16.052026

சிறீலங்கா சிங்கள அரசால் இனப்படுகொலைக்கு உள்ளான ஈழத்தமிழர்கள் நினைவாக 'முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி" அவுஸ்திரேலியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் Cumberland நகர சபை முதல்வர் பங்கேற்று, நினைவுத் தூபியை திறந்துவைத்தார்.

சிட்னியில் உள்ள Pendle Hill Civic Park பொது இடத்தில், Cumberland நகர சபையின் ஆதரவுடன் இந்த நினைவுத் தூபி நிறுவப்பட்டுள்ளது.

'தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - சிட்னி' அமைப்பின் ஏற்பாட்டில் சிட்னியில் உள்ள அனைத்துத் தமிழர் அமைப்புகளின் ஒத் துழைப்போடும் இந்நினைவுத் தூபி நிறுவப்பட்டுள்ளது.

சிறீலங்காவின் தலைநகரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும்: குழப்பமும்!

18.05.2026

சிறீலங்கா தலைநகர் கொழும்பு, வெள்ளவத்தை கடற்கரைப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு திங்கட்கிழமை (18) மாலை 5 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிலரது தகாத செயற்பாடுகளால் குழப்பகரமான சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள மற்றும் தமிழ் மக்கள் கலந்துகொண்டனர். கடற்கரை வீதியில் பெருமளவிலான சிறீலங்காப் பொலிசார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த நிலையிலும், சிங்கள அமைப்புகளைச் சேர்ந்த சிலர் அங்கு குழப்பம் விளைவிக்க முயன்றனர்.

அவர்கள் கடற்கரையில் கூடி, நிகழ்வில் பங்கேற்ற மக்களை நோக்கித் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், நினைவேந்தல் நடைபெறும் இடத்துக்குள் நுழைய முயன்ற நபர்களை பொலிசார் தடுத்து நிறுத்தியதாக குறிப்பிடப்படுகிறது.

கடற்கரை பகுதியில் இடம்பெற்ற நினைவேந்தலின்போது ஏற்பட்ட குழப்பம் காரணமாக வெள்ளவத்தை கடற்கரை வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனக்குள்ள பொறுப்பை நான் ஆழமாக உணர்கிறேன்; உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுக்க எனது குரலையும் எனது பதவியின் அதிகாரத்தையும் தொடர்ந்து பயன்படுத்துவேன்

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமாரன்

18.05.2026

2009-ல் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பெரும் அட்டூழியங்கள் நடந்து 17 ஆண்டுகள் ஆனதை நினைவுகூரும் தமிழ் இனப்படுகொலை தினத்தில், உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமாரன் அழைப்பு விடுத்துள்ளார்.

மே 18 அன்று வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், ஸ்ட்ராட்ஃபோர்ட் மற்றும் போ தொகுதியின் தொழிலாளர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அவர், "இலங்கையில் இராணுவத் தாக்குதலின் இறுதிக் கட்டங்களில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்" என்றும், முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை "நீதி கிடைக்காத ஒரு பேரழிவுகரமான அட்டூழியம்" என்றும் விவரித்தார்.

"இன்று, மே 18, முள்ளிவாய்க்கால், தமிழ் இனப்படுகொலை நினைவு தினத்தை நாம் அனுசரிக்கிறோம்," என்று அவர் குறிப்பிட்டார்.

"உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அனுபவிக்கும் துன்பம், உலகெங்கிலும் உள்ள தமிழ் புலம்பெயர் சமூகத்தில் தொடர்ந்து ஆழமாக எதிரொலிக்கிறது," என்று குமாரன் கூறினார்.

"குடும்பங்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் வலியும் துன்பமும் நீடிக்கின்றன் அது உலகளாவிய தமிழ் புலம்பெயர் சமூகத்தின் நினைவில் ஆழமாகப் பதிந்துள்ளது," என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணிப் புதைகுழியில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சிகளைக் குறிப்பிட்டு, குழந்தைகள் மற்றும் சிசுக்களின் எலும்புக்கூடுகள் உட்பட சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள், பொறுப்புக்கூறலின் தொடர்ச்சியான தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன என்று குமரன் கூறினார்.

"குழந்தைகள் மற்றும் சிசுக்களின் எலும்புக்கூடுகள் உட்பட எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ள செம்மணி-சித்துப்பட்டி கூட்டுப் புதைகுழியில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சியானது, தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மானுடத்திற்கு எதிரான குற்றங்களின் ஒரு கடுமையான நினைவூட்டலாகும்," என்று அவர் கூறினார்.

நூற்றுக்கணக்கான எலும்புக்கூடுகளை வெளிக்கொணர்ந்த செம்மணி அகழ்வாராய்ச்சிகள், ஆயுத மோதலின் போதும் அதற்குப் பின்னரும் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், கட்டாயக் காணாமல்போதல்கள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் குறித்த குற்றச்சாட்டுகளின் மீது சர்வதேச கவனத்தை மீண்டும் ஈர்த்துள்ளன.

பொறுப்பேற்புக்கான கோரிக்கைகள் "மேலும் மேலும் வலுப்பெற்று, மேலும் மேலும் உரக்க ஒலித்து வருகின்றன" என்றும், நீடித்த அமைதிக்கும் நல்லிணக்கத்திற்கும் நீதி இன்றியமையாதது என்றும் குமரன் மேலும் கூறினார்.

"நீடித்த அமைதியையும் நல்லிணக்கத்தையும் வளர்ப்பதற்கு உண்மையும் நீதியும் இன்றியமையாதவை," என்று அவர் கூறினார்.

"ஆயினும், மௌனமும் தண்டனையின்மையும் ஆழமாக வேரூன்றியுள்ளன் நீதிக்கான வாய்ப்பு மேலும் மேலும் தொலைவாவதை நாம் அனுமதிக்கக் கூடாது."

கொல்லப்பட்டவர்களைக் கௌரவிக்கும் அதே வேளையில், பொறுப்புக்கூறலைத் தொடர்ந்து கோருவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் புதுப்பித்து வருவதாகவும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார்.

"நாம் நினைவுகூர்ந்து துக்கம் அனுசரிக்கும் இவ்வேளையில்,

Uma Kumaran MP
Member of Parliament for Stratford and Bow
House of Commons, London SW1A 0AA
Tel: 020 7219 7777

STATEMENT – MULLIVAIKKAL, TAMIL GENOCIDE REMEMBRANCE DAY

Today, 18th May, we mark Mullivaikkal, Tamil Genocide Remembrance Day.

17 years on, we honour the memory of the tens of thousands of Tamils massacred in the final stages of the military offensive in Sri Lanka – a devastating atrocity for which there has been no justice.

The pain and suffering of families and survivors live on, it is seared in the memory of the global diaspora. With every year that passes there are fresh reminders of our suffering and loss. The ongoing excavation at the Chemmani-Siththupaththi mass grave site where skeletal remains, including those of children and infants, have been recovered is a stark reminder of the crimes against humanity that have been committed against the Tamil people.

With each year that passes, our calls for accountability grow ever stronger, ever louder. Truth and justice are essential to fostering lasting peace and reconciliation. Yet silence and impunity remain entrenched, we must not let the prospect of justice grow ever more distant.

As we remember and mourn, Tamils globally renew our commitment to call for justice and accountability. We must build a peaceful future where such atrocities can never again be repeated.

Today and always, we honour the past and ensure that the stories of survivors are not silenced.

I feel deeply the responsibility I have and will keep using my voice and the power of my office to call for truth and for justice.

Together, our Tamil community in every corner of the world have a collective call for justice. It will never be silenced.

"The dead cannot cry out for justice; it is a duty of the living to do so for them".

Uma Kumaran

Uma Kumaran MP
Member of Parliament for Stratford and Bow

நீதி மற்றும் பொறுப்புக்கூறலைக் கோருவதற்கான நமது உறுதிப்பாட்டை உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் புதுப்பிக்கின்றனர். இதுபோன்ற அட்டூழியங்கள் மீண்டும் ஒருபோதும் நிகழாத ஒரு அமைதியான எதிர்காலத்தை நாம் உருவாக்க வேண்டும்."

நாடாளுமன்றத்தில் தனது பங்கின் மூலம் நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பதாக குமரன் உறுதியளித்தார்.

"எனக்குள்ள பொறுப்பை நான் ஆழமாக உணர்கிறேன் உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுக்க எனது குரலையும் எனது பதவியின் அதிகாரத்தையும் தொடர்ந்து பயன்படுத்துவேன்," என்று அவர் குறிப்பிட்டார்.

"உலகெங்கிலும் உள்ள நமது தமிழ் சமூகம் ஒன்றிணைந்து நீதிக்கான ஒருமித்த குரலை எழுப்புகிறது. அது ஒருபோதும் அடக்கப்படாது.

இனப்படுகொலை... அப்படித்தான் சொல்லப்பட வேண்டும்!

அவுஸ்திரேலிய பாராளுமன்ற எம்பி ஹியூ மெக்டெர்மாட்

18.05.2026

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் உலகெங்கும் உள்ள தமிழ் மக்களால் "முள்ளிவாய்க்கால் நினைவு நாளாகக்" கண்ணீருடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில், ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹியூ மெக்டெர்மாட், ஈழத் தமிழர் இனப்படுகொலையை ஆஸ்திரேலியா அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் என்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் மிக வலுவாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் எம்பி ஹியூ மெக்டெர்மாட் ஆற்றிய அதிரடி உரை தற்போது பன்னாட்டு அரங்கில் மாபெரும் கவனத்தைப் பெற்றுள்ளது.

நாடாளுமன்றத்தில் உணர்ச்சிப்பூர்வமாகப் பேசிய ஹியூ மெக்டெர்மாட், "கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டு இன்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. ஆனால், இவ்வளவு காலம் கடந்தும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. இலங்கையில் நிகழ்ந்த கொடூரங்களுக்கு இன்னும் யாரும் பொறுப்பேற்கவில்லை" என்று சாடினார்.

மேலும் பேசிய அவர், "போரின் போது 3 இலட்சம் தமிழ் மக்கள் தங்களுக்கே உரிய அனைத்தையும் விட்டுவிட்டு, பாதுகாப்பான மண்டலம் என இலங்கை அரசால் உறுதியளிக்கப்பட்ட இடங்களை நோக்கி உயிரைக் காக்கத் தப்பி ஓடினர். ஆனால், அந்த பகுதிகளுக்குள் சிக்கிய அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக இலங்கை இராணுவம் திட்டமிட்ட பீரங்கித் தாக்குதல்களையும், கொடூரமான துப்பாக்கிச் சூடுகளையும் நடத்தியது" என்றார்.

இலங்கை அரசின் போர்க்குற்றங்களை வெளிப்படையாக உடைத்த அவர், "முள்ளிவாய்க்காலில் நடந்தது அப்பட்டமான ஒரு இனப்படுகொலை. அதனை அவ்வாறு மட்டுமே உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும். இதற்குக் காரணமான இலங்கை அரசு மற்றும் இராணுவத்தில் உள்ள குற்றவாளிகள் பன்னாட்டு அளவில் பொறுப்பேற்க வைக்கப்பட வேண்டும்" என முழங்கினார்.

"கனடா நாடாளுமன்றம் ஏற்கனவே ஈழத் தமிழர் இனப்படுகொலையைத் தனித் தீர்மானம் மூலம் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது. அதே நேர்மையான பாதையை ஆஸ்திரேலிய நாடாளுமன்றமும் உடனடியாகப் பின்பற்ற வேண்டும். ஆஸ்திரேலியாவின் நாடாளுமன்றம் ஈழத் தமிழர் இனப்படுகொலையை முறைப்படி அங்கீகரிக்க வேண்டும்" என ஹியூ மெக்டெர்மாட் வலியுறுத்தினார்.

மேலும், போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கை அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்கள் மீது பன்னாட்டு சட்டங்களின்படி சுதந்திரமான விசாரணை நடத்த ஆஸ்திரேலிய அரசு உலக அரங்கில் அழுத்தமளிக்க வேண்டும் என்றும், ஈழத் தமிழர்

களின் தாயகம், தேசியம் மற்றும் அவர்களின் அடிப்படை உரிமையை ஆஸ்திரேலியா ஆதரிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழர்களின் வரலாற்றுத் துயரங்களைச் சுட்டிக்காட்டிய அவர், கடந்த 1951இல் கொண்டு வரப்பட்ட "சிங்களா மட்டும்" சட்டம், 1981இல் உலகப் புகழ்பெற்ற யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்ட கொடூரம் உள்ளிட்டவற்றை நாடாளுமன்றத்தில் பட்டியலிட்டார். தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்ட ஒரு அழிப்புப் பிரச்சாரம் இலங்கையில் உருவாக்கப்பட்டதாக அவர் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் வலியை ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் ஆழமாகப் பதிவு செய்து, உலக அரங்கில் நீதி கோரிய எம்பி ஹியூ மெக்டெர்மாட்டிற்கு உலகெங்கும் வாழும் தமிழ் மக்களும், குறிப்பாக ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழ் சமூகத்தினரும் தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து வருகின்றனர். இவரின் இந்த உரை பன்னாட்டு அரசியலில் புதிய விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

ஹேர்முஸ் நீரிணை மூடப்பட்டால் உலகளாவிய உணவு விலை நெருக்கடி ஏற்படும்!

ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

21.05.2026

ஹேர்முஸ் நீரிணை மூடப்பட்டிருப்பது உலகளாவிய வேளாண் - உணவு அமைப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும் இது அடுத்த 6 முதல் 12 மாதங்களுக்குள் உலகளவில் கடுமையான உணவு விலை நெருக்கடிக்கு வழிவகுக்கும் என்று ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) எச்சரித்துள்ளது.

இத்தகைய பேரழிவுச் சூழ்நிலையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நேரம் வேகமாக குறைந்து வருகிறது என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

ஹேர்முஸ் நீரிணை, உலகளாவிய எரிசக்தி மற்றும் வர்த்தக விநியோகச் சங்கிலியில் ஒரு முக்கியமான கடல்வழிப் பாதையாகும்.

இதன் விளைவாக, வரும் மாதங்களில் உலகச் சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள், சாதாரண மக்கள் தாங்க முடியாத அளவிற்கு உயரும் என்று கூறப்படுகிறது.

இதனால் ஏற்படக்கூடிய கடுமையான பொருளாதார மற்றும் சமூகச் சரிவைத் தடுக்க, உலக வல்லரசுகளும் சர்வதேச அமைப்புகளும் உடனடியாகத் தலையிட்டு முன்னெச்சரிக்கை

நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று குழுமம் மேலும் வலியுறுத்துகிறது.

இஸ்ரேலிய அமைச்சர் இதாமர் பென் க்வீர் பிரான்சுக்குள் நுழையத் தடை!

24.05.2026

காஸவுக்கான சர்வதேச உதவிப் படகில் பயணித்துக் கைது செய்யப்பட்ட பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாட்டுச் செயற்பாட்டாளர்களைக் கொடூரமான முறையில் அவமதித்த குற்றச்சாட்டின் கீழ், இஸ்ரேலின் தீவிர வலதுசாரி தேசிய பாதுகாப்பு அமைச்சர் இதாமர் பென் க்வீர் பிரான்சுக்குள் நுழைவதற்கு அந்நாட்டு அரசு அதிரடித் தடை விதித்துள்ளது.

இந்த இராஜதந்திரத் தடை உத்தரவை பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் ஜீன் நோல் பரோட் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் அறிவித்துள்ளார். சர்வதேச அளவில் கொந்தளிப்பை ஏற்படுத்திய வீடியோகடந்த வாரம் சர்வதேச கடற்பரப்பில் வைத்து காஸா நோக்கிச் சென்ற சுமார் 50 உதவிப் படகுகளைக் கொண்ட 'குளோபல் சுமூத் புளோட்டிலா' குழுவை இஸ்ரேலிய கடற்படையினர் வழிமறித்து, அதில் பயணித்த சுமார் 430 சர்வதேசச் செயற்பாட்டாளர்களைக் கைது செய்தனர்.

இத்தாலி, பிரான்ஸ், நெதர்லாந்து, கனடா மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட பல நாடுகள், இந்த ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை மற்றும் மனித கண்ணிய மீறல்கள் குறித்து அடையாளப் படுத்தியிருந்தனர்.

மேலும் பென் க்விர் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது குறித்து பரிசீலிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்தையும் பாரோட் வலியுறுத்தியுள்ளார்.

எபோலா நோய்ப் பரவலை சர்வதேச பொது சுகாதார அவசரகால நிலையாக அறிவிப்பு!

உலக சுகாதார அமைப்பு

25.05.2026

ஆபிரிக்க நாடுகளான காங்கோ மற்றும் உகாண்டாவில் பரவியுள்ள எபோலா நோயானது, சர்வதேச பொது சுகாதார அவசர நிலையாகும் என உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. தற்போது எபோலா தடுப்பு நடவடிக்கைகளில் கண்காணிப்பை காங்கோ தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த நோய்ப் பரவலின் மையமாக விளங்கும் இடுரி மாகாணத்தில், கிட்டத்தட்ட 5 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் எபோலா அச்சுறுத்தலை மட்டுமல்லாமல் பல்வேறு வகையான நோய்களையும் எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக, இவர்களில் 20% மக்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ளனர் என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் தனது ஓ தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுவரை 101 வழக்குகள் உறுதிசெய்யப்பட்டன. மேலும் 900 இற்கும் மேற்பட்ட சந்தேகத்திற்கிடமான வழக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்நிலையில் 131 பேர் பலியாகி உள்ளதாக அந்நாட்டின் பொதுச் சுகாதார மந்திரி சாமுவேல் ரோஜர் கம்பா தெரிவித்துள்ளார்.

இந்நோயின் அச்சுறுத்தலால் காரணமாக மக்கள் யாரும் தாமாக முன் வந்து சிகிச்சையோ பரிசோதனையோ ஏற்பதில்லை.

ஆதலால் எபோலா தொற்றுடன் தொடர்பில் இருந்தவர்களைக் கண்டறியும் முயற்சிகளைத் தீவிரப்படுத்தவும், ஆதரவுப் பராமரிப்பை வழங்குவதற்காக நோய்த்தொற்றுகளை முன்கூட்டியே கண்டறிவதும் கடிணமாக உள்ளது என்றும் உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் கூறியுள்ளார்.

www.sangathamil.com

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசியக்கடமைப்பாடாகும்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –

கல்வி பெறும் உரிமை மனித சுதந்திரங்களில் அடிப்படையானது. அறியாமையிலிருந்து விழிப்புற்று, தனது வாழ்க்கை பற்றியும் தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்கு ஒவ்வொரு தனி மனிதப்பிறவிக்கும் உரிமையுண்டு. தனது ஆற்றல்களை வளர்த்து, தனது ஆளுமையை மேம்படுத்தி, சுதந்திரமாகச் சிந்தித்துச் செயற்படும் உரிமை ஒவ்வொரு வருக்கும் உரித்தானது.

இந்த மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து தமிழீழத்தின் கல்வித்துறையைச் சிதைத்துவிட சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே முயன்று வருகின்றது. இதன் விளைவால் எமது சமூகத்தின் கல்வி வாழ்வு பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப் பட்டிருக்கிறது.

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள். இந்தத் தூண்களைத் தகர்த்துவிட எதிரி முனைகின்றான். இனத் தனித்துவத்தை அழிப்பது அவனது நோக்கம்.

நாம் எமக்கு உரித்தான உரிமைகளை வென்றெடுக்கப் போராடுகிறோம். அதேவேளை, சமூக வாழ்விற்கு ஆதாரமான அமைப்புக்கள் அழிந்து போகாது பாதுகாக்கவும் நாம் போராட வேண்டியிருக்கிறது. ஆகவே இரு முனைகளில், ஒரே வேளையில் போராட வேண்டியவர்களாக நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தம்.

தமிழீழ மக்களின் விடுதலை இயக்கம் என்ற ரீதியில் இந்த இரு முனைப்போராட்டத்தை முன்னெடுப்பதில் நாம் தெளிவோடு, உறுதியோடு, தீர்க்கமாக உழைத்து வருகின்றோம். இந்த இரு முனைகளுக்கும் இடையில் வெடிக்கும் முரண்பாடுகளைக் களைந்து விடுவதிலும் நாம் நிதானமாகச் செயற்படுகிறோம்.

உரிமைகளுக்காக நாம் தொடுத்த போராட்டம் இன்று உயிர் வாழ்வதற்கான போராட்டமாக விரிவாக்கம் பெற்றிருக்கின்றது. அன்றொரு காலம் நாம் அமைதி வழியில் உரிமை கேட்டோம். இன்று நாம் இரத்தம் சிந்திப் போராட வேண்டியிருக்கின்றது. உயிர்ப்பலி கொடுத்து உயிர் வாழ வேண்டியிருக்கின்றது.

இன அழிவைத் தடுத்து எமது மண்ணையும், மக்களையும் பாதுகாப்பது இன்று எமது விடுதலை இயக்கத்தின் முதன்மையான கடனாக உள்ளது. இதற்குப் போராடியே ஆகவேண்டும். போராடி வாழ்வதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

போராடுவதற்கு போராளிகள் வேண்டும். எதிரியுடன் போர் நடத்த ஒரு படை வேண்டும். இந்த விடுதலைப் படை இல்லாது போனால் எமது இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த முடியாது. இந்தப் போராளிகளை, இந்த இளம் புலி வீரர்களை, நாம் எமது மக்கள் சமுதாயத் திலிருந்தே அணிதிரட்ட வேண்டியுள்ளது. நாம் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில்லை. இது ஒரு தேசிய விடுதலைப் போர் என்பதால் சுயவிருப்பிலேயே இளம் போராளிகள் எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். தமது சுயத்தைத் துறந்து, தமது சொந்த வாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, தமது மண்ணையும், மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றாளர்கள் எம்முடன் இணைகின்றார்கள். இந்தப் போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்ற வேண்டும். கௌரவிக்க வேண்டும்.

தாயக விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும், கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசியக்கடமைப் பாடாகும்.

(13.02.1993ஆம் திகதி தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தி எய்திய மாணவர்களைப் பாராட்டி வெளியிட்ட அறிக்கையிலிருந்து)

Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிளிரும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6

TRANSITIONAL GOVERNMENT OF TAMILEELAM
தியாக தீபம்
லெப். கேணல் திலீபன்
அவர்களின் நினைவாக
நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின்
ஏற்பாட்டில்
11 வது ஆண்டு
கோடை கால
விளையாட்டு விழா
2026
இம் முறை:
02.08.2026
SPORTS CATEGORIES
FOOTBALL
VOLLEYBALL
SOFTBALL CRICKET
NETBALL
KIDS GAMES
CARROM
TRADITIONAL GAMES
SAVE THE DATE!
Let's compete, unite, and achieve!
07577996966 / 07950499567 / 07578086782 / 07771648257

திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்தநாள்
பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal
Non- Bridal
Saree Pleating & Draping
Hair Flowers & Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

எப்படித்தான் மறப்பது எதை எதைத்தான் மறப்பது

எப்படித்தான் மறப்பது
எதை எதைத்தான் மறப்பது
எரிகுண்டு தணலாய் உடல்கள்
எரிந்து சாம்பல் ஆனது

எப்படித்தான் மறப்பது நாங்கள்
எதை எதைத்தான் மறப்பது
எரிகுண்டு தணலாய் உடல்கள்
எரிந்து சாம்பல் ஆனது

மூச்சடங்கி போன உயிர்கள்
நெஞ்சை விட்டு மறையுமா
முள்ளிவாய்க்கால் மண்ணுக்குள்ளே
நடந்த கதை கொஞ்சமா

எப்படித்தான் மறப்பது நாங்கள்
எதை எதைத்தான் மறப்பது
எரிகுண்டு தணலாய் உடல்கள்

எரிந்து சாம்பல் ஆனது

காலம் கடந்து போனாலும்
கண்ணீர்தான் வற்றிடுமா
கதிகலங்கி நிற்பவர்க்கு
நீதி வந்து சேர்த்திடுமா
மாறாத காயங்கள் மாற்றிவிட யார்வருவார்
மனதிலுள்ள சோகங்கள் விடுதலையின் தாகங்கள்
விடுதலையின் தாகங்கள்

எப்படித்தான் மறப்பது நாங்கள்
எதை எதைத்தான் மறப்பது
எரிகுண்டு தணலாய் உடல்கள்

எரிந்து சாம்பல் ஆனது

நாங்கள் வாழ்ந்த பூமியிலே
மரணத்தின் ஓலங்கள்
தீராத வலியுடனே ஓடிப்போகும் காலங்கள்
தாய் மண்ணே உன்மடியில்
எத்தனையோ தியாகங்கள்
தாயே உன் விடுதலைக்கு
நாங்கள் தந்த செல்வங்கள்
நாங்கள் தந்த செல்வங்கள்

எப்படித்தான் மறப்பது நாங்கள்
எதை எதைத்தான் மறப்பது
எரிகுண்டு தணலாய் உடல்கள்

எரிந்து சாம்பல் ஆனது

நீதீ கேட்டு இனமிங்கே
சாட்சியோடு நிக்குதய்யா
வலி சுமந்த படியே இங்கு
விடுதலைக்கு ஏங்குதய்யா
உண்மைகளை உலக மறிந்தும் மௌனமாக இருகுதையா
சர்வதேச நீதி மான்கள் நீதி சொல்ல வாருமையா
நீதி சொல்ல வாருமையா

எப்படித்தான் மறப்பது நாங்கள்
எதை எதைத்தான் மறப்பது
எரிகுண்டு தணலாய் உடல்கள்

எரிந்து சாம்பல் ஆனது
எரிந்து சாம்பல் ஆனது

மூச்சடங்கி போன உயிர்கள்
நெஞ்சை விட்டு மறையுமா
முள்ளிவாய்க்கால் மண்ணுக்குள்ளே
நடந்த கதை கொஞ்சமா

எப்படித்தான் மறப்பது நாங்கள்
எதை எதைத்தான் மறப்பது
எரிகுண்டு தணலாய் உடல்கள்
எரிந்து சாம்பல் ஆனது



நன்றி: பாடல் மயிலங்காடு இந்திரன்

ஆனையிறவு பரந்தன் ஊடறுப்புச் சமர்

09.01.1997

விடுதலைப் புலிகளின் போரியற் சாதனைப் பட்டியலிற் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த சமராக ஆனையிறவு - பரந்தன் படைத்தளங்கள் மீதான ஊடறுப்புச் சமர் அமைகிறது. தளத்தின் மையப்பகுதிவரை ஊடுருவி, அதன் உயிர்நாடியான ஆட்லறித் தளங்களையும் பிரிகேட் தலைமையகத்தையும் கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்து, எதிரியின் ஆட்லறி நிலைகளிலிருந்தே அவற்றைப் பயன்படுத்தி அவனுக்கெதிரான தாக்குதலை நடத்தி, இறுதியிற் பெரும் ஆயுதக் களஞ்சியங்களையும் ஒன்பது ஆட்லறிகளையும் அழித்து, நூற்றுக்கணக்கில் இராணுவத்தினரைக் கொன்று எதிரியின் இதயத்துள்ளேயே எமது படையணிகள் புரிந்த வீரச்சமர் நிகழ்வுகளை இவ்வூடறுப்புச் சமர் தன்னகத்தே அடங்கியுள்ளது.



சிங்கள இனத்தின் வீரச்செயல்களில் ஒன்றாக கருதப்பட்ட, சந்திரிகா அரசின் யாழ்ப்பாணப் பறிப்பைத் தொடர்ந்தும் தக்கவைத்திருப்பதற்கு அனையிறவு இராணுவ வலயத்தை பாதுகாப்பது இன்றியமையாதது. அது சிறீலங்காவின் போர் மூலோபாயத்தின் உயிர்மையம். யாழ்ப்பாணத்தைப் பெருநிலப்பரப்புடன் இணைக்கின்ற ஒரே தரைப்பாதையைக் கொண்டிருக்கும் அதன் கழுத்துப் போன்ற ஆனையிறவு புலிகளிடம் வீழ்ச்சியடைவது சிங்களத்தின் யாழ்ப்பாண வெற்றியை மட்டுமன்றி அதன் போர் மூலோபாயத்தை சிதறடித்துவிடும். எனவேதான், ஆரம்பத்திற் சிறிய தடைமுகாமாக இருந்த ஆனையிறவை ஓர் இராணுவக் கூட்டுத்தளமாக மாற்றியிருந்த சிங்களம், யாழ் ஆக்கிரமிப்பின் பின் அதையொரு பாரிய இராணுவ வலயமாக மாற்றியது. கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவென அகன்று விரிந்து பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரை உள்ளடக்கிய அந்த இராணுவ வலயம், 30.000இற்கு மேற்பட்ட இராணுவத்தைக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தைத் தன் பின்பலமாகக் கொண்டிருந்தது.

அதன் முக்கியத்திற்கேற்ப அதிநவீன போராயுதங்களையும் கொண்டிருந்தது.

இத்தகைய பலம்வாய்ந்த ஆனையிறவு இராணுவ வலயம் 1997இல் மேலும் முக்கியத்துவம் பெற்றது. 'சத்ஜய' நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளோடு, இராணுவ வலயத்தை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடனும் யாழ்க் குடாநாட்டிற்கான தரைவழிப்பாதையைத் திறக்கும் முயற்சியில் மேலும் முன்னேறும் பொருட்டும் ஆனையிறவை இயங்கு தளமாகக் கொண்ட பாரிய படையெடுப்பு ஒன்றிற்கு சிங்களப்படை தயாராகியது. மேலும் முன்னணிப் படையணிகள் குவிக்கப்பட்டும் முன்னகர்வுக்குத் தேவையான அதிசக்தி வாய்ந்த மரபுப்போர்க் கருவிகள், தளபாடங்கள் பெருமளவிற் குவிக்கப்பட்டும் படைத் தலைமையின் இறுதிக் கட்டளைக்காகக் காத்திருந்தது ஆனையிறவு.



இந்நிலையிற் போரியலிற் களயதார்த்தத்திற்கேற்ப அனைவரையும் ஆச்சரியப்படவைக்கும் முடிவுகளை நடைமுறைப்படுத்தும் எமது தலைவர், ஆனையிறவு - பரந்தன் கூட்டுத்தளம் மீது வியப்பூட்டும் ஓர் ஊடறுப்புச் சமரைச் செய்வதென முடிவு செய்தார். சிங்களப்படைகளின் போர் ஏற்பாடுகளைச் சின்னாபின்னப்படுத்துவதுடன், களநிலைமைக்கேற்பத் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அம்சங்களை உள்ளடக்கிய தாக்குதல் திட்டத்தை வரைந்திருந்தார்.

ஆனையிறவு - பரந்தன் ஊடறுப்புச் சமரிற்கான திட்டத்திற் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கு எப்போதும் போலவே கடினமானதும் சிக்கல் நிறைந்ததுமான பணிகள் தலைவரால் ஒப்படைக்கப்பட்டன. ஆனையிறவுத் தளத்தின் முன்னரண்களை உடைத்தெறிந்து கொண்டு பிரதான தளத்துள் நுழையும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி அங்கிருக்கும் முதல்தர ஆட்லறி நிலைகளையும் புளியடியில் அமைந்திருக்கும் மோட்டர் தொகுதிகளை உள்ளடக்கிய பிரிகேட் தலைமையகத்தையும் கட்டுப்பாட்டிற்குட் கொண்டு வர வேண்டும். அதேவேளை சின்ன உப்பள முகாமின் முன்னணிக் காவலரண் வரிசையைக் கைப்பற்றும் பணியும் எமது படையணியுடன் ஒப்படைக்கப்பட்டது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் செயற்பாடே ஆனையிறவு - பரந்தன் ஊடறுப்புச் சமரின் திட்டத்திற்கு உயிரூட்டும்.



09.01.1997 அன்று கடல்நீரேரியாற் சூழப்பட்டதும், பெரும் வெட்டவெளிப் பிரதேசத்தை உள்ளடக்கியதுமான தமது இலக்கை நோக்கி எமது படையணி போராளிகள் நகர்ந்து கொண்டிருந்தனர். அது எமது போரியல் வரலாற்றிலேயே சிக்கல் வாய்ந்த நீண்ட நகர்வு. எல்லோராலும் விரும்பப்பட்டது போலவே எதுவித சிக்கல்களுமின்றித் தமது நகர்வுகளை முடித்துக் கொண்டு இறுதிக் கட்டளைக்காகக் காத்திருந்தார்கள் போராளிகள். நள்ளிரவைத் தாண்டிய நேரம், சமரை வழிநடத்திய தளபதி பால்ராஜிடமிருந்து சண்டையை ஆரம்பிப்பதற்கான கட்டளை தொலைத்தொடர்புச் சாதனத்திற் பறந்தது.

புயல்வேகத்திற் சண்டையைத் தொடக்கிய எமது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் அணிகள் எதிரியின் முதல்தரப் பாதுகாப்பு அரண்களை உடைத்தெறிந்தன. ஆட்லறித் தளத்தினுள் நுழைந்தவர்கள் அவற்றை எதிரி எதுவும் செய்துவிடாதபடி பறித்தெடுக்கும் நோக்கில் தமது உயர் செயற்றிறனை வெளிப்படுத்தினர். வேகமான தாக்குதலால் நிலைகுனிந்த எதிரி தன் ஆட்லறிகளையும் ஆயுதக்களஞ்சியங்களையும் அப்படியே விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தான். பெரும் பயன்பாடு ஒன்றிற்கு ஏற்றவகையில் நிலைப்படுத்தப்பட்டு, துப்பரவு செய்யப்பட்டு, துணிகளாற் போர்த்தப்பட்ட நிலையில் எட்டு ஆட்லறிகள் பத்திரமாய் நின்றன. ஆட்லறி நிலைக்குள் நுழைந்த மேஜர் கார்முகிலனின் தலைமையிலான எமது அணியினர் அவற்றை எதிரிக்கு எதிராகப் பயன்படுத்தத் தொடங்கினர். அதற்காகவே எமது படையணியின் ஓர் அணியினருக்கு ஆட்லறிகளை இயக்குவதற்கான சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

அதேவேளை புளியடி பிரிகேட் தலைமையகம் மற்றும் மோட்டர் நிலைகளை உள்ளடக்கிய தளத்தைக் கைப்பற்றுவதற்காக நுழைந்த லெப்.கேணல் ராகவனின் தலைமையிலான எமது மற்றைய அணியினரும் வேகமான முறையில் அதைச் செய்து முடித்தனர். சின்ன உப்பள முன்னணி நிலைகளைக் கைப்பற்ற வேண்டிய எமது மற்றைய அணி எதிர்பார்த்த வெற்றியிலக்கை எட்டமுடியாமற் சிரமங்களைச் சந்தித்துக்கொண்டிருந்தது.

ஆனையிறவு - பரந்தன் படைத்தளங்கள் அதிர்ந்துகொண்டிருந்தன. அடுத்த சிலநாட்களில் தமது பெரும் படையெடுப்பிற்கான கட்டளைகளை வழங்கத் தயாராயிருந்த படைக் கட்டளைப்பீடம் தனது படைத்தளங்களின் தொடர்பை இழந்து அங்கு என்ன நடக்கிறது என அறிய முடியாது தவியாய்த் தவித்தது. சிறீலங்காவின் அரசியல் இராணுவத் தலைமைகள் புலிகளின் இந்த அதிர்ச்சி வைத்தியத்தால் திகைத்துப்போயின. அடுத்து என்ன நடக்கப்போகிறதோ என்ற ஏக்கம் அவர்களைத் தாக்கியது.

திட்டமிட்டதுபோலவே சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியிடம் ஒப்படைக்கப்பட்ட பிரதான வெற்றிகள் யாவும் எட்டப்பட்டிருந்தன. சமரின் முதலாவதும் பிரதானதுமான நோக்கம் நிறைவு செய்யப்பட்டது. நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாதபடி களத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் எதிரிக்கு அதிஸ்டத்தைக் கொடுத்தன. அப்படியான சமயங்களிற் சமரைத் தொடர்வதில்லையென்பது ஏற்கனவே எமது திட்டமாக இருந்தது. எமது அணியினராற் கைப்பற்றப்பட்டிருந்த ஆட்லறிகள், வெடிபொருள், களஞ்சியங்கள் எல்லாந் தகர்த்தெறிக்கப்பட்டன.

ஆனையிறவுத்தளம் பெரும் வெடியோசைகளால் அதிர்ந்தது. வெடிபொருள் குதங்களின் தகர்ப்பு, தளத்தை ஒளிவெள்ளத்தால் நிறைத்தது. எதிரிக்கெதிரான ஏற்பாட்டுக் குலைப்பு நடவடிக்கையொன்றை வெற்றிகரமாகச் செய்துமுடித்த புலியணிகள் தளம் திரும்பின. சமரில் எதிரியின் பீரங்கிநிலை ஒன்றைக் கைப்பற்றியிருந்த எமது படையணியின் லெப்.கேணல் ராகவனின் தலைமையிலான நியூட்டனின் அணி அங்கிருந்து இரண்டு 120மி.மீ பீரங்கிகளை மீட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

சுமரின் முடிவில், போர்த்தயாரிப்புகளுடன் ஆரவாரித்திருந்த பகைவனின் படைத்தளம் அமைதியாக உறைந்துபோனது. ஆனையிறவிலிருந்தான தனது படையெடுப்புத் திட்டத்தை எதிரி கைவிட்டான். எமது போராட்ட வரலாற்றில், இச்சமரில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நிலைநாட்டிய பெறுமதிவாய்ந்த சாதனைகள் என்றும் எவராலும் பேசப்பட்டுக் கொண்டிருக்கும்.

www.sangathamil.com

தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

05 யூன் 1956 இக்கினியாகலை படுகொலை

1940களில் அக்காலகட்டத்தில் விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ்.சேனநாயக்கா அம்பாறை மாவட்டத்தில் அரச நிதியுதவியுடன் பல சிங்கள குடியேற்றத் திட்டங்களை நிறுவினார். இதன் பின்னர் அரச உதவியோடு அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா அபிவிருத்தித் திட்டம், திருகோணமலையில் கந்தளாய் குடியேற்றத் திட்டம், அல்லைக் குடியேற்றத் திட்டம் போன்ற குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு சிங்கள மக்கள் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டு வந்து குடியேற்றப்பட்டார்கள். அவர்களுக்குச் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுக் காவல்துறை - இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. அத்துடன் விகாரைகளும் கட்டிக் கொடுக்கப்பட்டது. பௌத்த விகாரைகளில் பெரிய கண்டாமணி பொருத்தப்பட்டு மணியோசை கேட்கும் தூரம் மட்டும் சிங்கள பௌத்தர்களுக்குரிய பிரதேசமாக உத்தியோகப்பற்றற்ற முறையில் கணிக்கப்பட்டது. இந்த வகையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் சூறையாடப்பட்டன.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காலஞ் சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமரானார். அவரது தேர்தல் வாக்குறுதிகளிலொன்றான சிங்களம் மட்டும் சட்டத்தை 1956 ஆம் ஆண்டு யூன் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதற்கு எதிராக அக்காலகட்டத்தில் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது எதிர்ப்பைத் தெரிவித்து நேரடி நடவடிக்கையில் ஈடுபட முடிவு செய்தது. இதன் விளைவாக அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி 1956ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பிலுள்ள பழைய நடாளுமன்றக் கட்டிடத்திற்கு முன்னால் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியது. இதில் தமிழ்த் தலைவர்கள் கட்சி பேதங்களுக்கு அப்பால் கலந்து கொண்டார்கள். அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த தமிழ் கல்விமான் வணபிதா தனிநாயகம் அடிகளும் இந்தச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார். அன்றைய தினம் சத்தியாக்கிரகிகள் சிங்கள காடையர்களால் தாக்கப்பட்டதுடன், சிங்களவர்களால் தமிழர்கள் மீதான இனக்கொலை தூண்டிவிடப்பட்டது. தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். பல தமிழ் மக்கள் மோசமான வகையிலும் கோரமாகவும் கொல்லப்பட்டதுடன், கொழும்பிலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் கொள்ளையடிக்கப்பட்ட பின் தீவைத்துக் கொழுத்தப்பட்டன. இலங்கைத்தீவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான பகையுணர்வு மேலோங்கிக் காணப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்களவர்க் காடையர்கள் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டார்கள். இதில் இக்கியாகலை என்ற இடத்திலிருந்த கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கரும்புத் தொழிற்சாலையில் வேலை செய்து வந்த நூற்றி ஐம்பது தமிழ்த் தொழிலாளர்கள் அதே தொழிற்சாலையில் வேலை செய்த சிங்களத் தொழிலாளர்களால் தாக்கப்பட்டனர். பலர் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். அரைகுறை உயிருடன் இருந்தவர்களும் இறந்தவர்களும் எரியும் தீயில் தூக்கி வீசப்பட்டார்கள். இங்கு நடைபெற்ற இனப்படுகொலையே இக்கினியாகலை இனப்படுகொலையென வர்ணிக்கப் படுகின்றது. இதுவே இலங்கை வரலாற்றில் முதல் முதலில் பெருந் தொகையாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும். இப்படுகொலைகளில் ஏறக்குறைய நூற்றி ஐம்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதாக "எமேர்ஜேன்ஸி 58" என்ற நூல் தகவல் வெளியிட்டுள்ளது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

1958 ஆம் ஆண்டு தமிழினப்படுகொலை (மே 22 - யூன் 02)

1958ஆம் ஆண்டு இனப்படுகொலை என்பது திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. இதற்குப் பலமான பின்புலம் ஒன்று இருக்கிறது. 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட முப்பத்துமூன்றாம் இலக்கச் சிங்களம் மட்டும் சட்டம் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாகத் தமிழர் தரப்பினர் 1956 ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார்கள். இந்தப் போராட்டம் சிங்களக் காடையர்களால் வன்முறை பிரயோகிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 1957ஆம் ஆண்டு தமிழர் தரப்பினர் திருமலைக்குப் பாதயாத்திரை சென்று அங்கே ஒரு மாநாடு நடாத்தினார்கள். பண்டாரநாயக்கா அரசிற்கு ஒரு வருட காலக்கெடு கொடுத்து அதற்குள் தமிழ் மொழிக்குச் சமவுரிமை கொடுக்கவேண்டும் என்றும் தமிழ்ப் பிரதேச அபிவிருத்திகளுக்காக பிராந்திய சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் திருமலை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த வேண்டுகோளுக்கு அமைய பண்டாரநாயக்கா அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில் தான் அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்கா தந்தை செல்வநாயகத்தோடு ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தார். இதன் விளைவாக 26.07.1957 அன்று தந்தை செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியோடு பண்டாரநாயக்கா ஒரு உடன்படிக்கை செய்தார். இதுவே புகழ்பெற்ற 1957 பண்டா-செல்வா உடன்படிக்கையாகும்.

இந்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி சாப்பில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா கண்டிக்குப் பாதயாத்திரை போனார். அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியானது முதல் காலடி என்ற வெளியீட்டையும் வெளியிட்டு இனவாதப் பரப்புரையில் ஈடுபட்டது. ஐக்கிய தேசியக்கட்சியின் பரப்புரை நாளேடான "சியரட்ட" மிக மோசமான இனவாதப் பரப்புரையைத் தமிழருக்கு எதிராக மேற்கொண்டது. கண்டிக்குப் பாதயாத்திரை போகப் புறப்பட்ட ஜே.ஆர் இன் பாதயாத்திரை இம்புள்கொட என்ற இடத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பண்டாரநாயக்கா தலைமையில் வந்த இன்னொரு குழுவால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதற் கிடையில் பண்டாரநாயக்காவைப் பதவிக்குக் கொண்டுவந்த பிக்கு பெரமுனவைச் சேர்ந்த பௌத்த பிக்குமாரும், ஜாதிக விமுக்தி பெரமுனவைச் சேர்ந்த வெலிமடை எம்.பி கே.எம்.பி இராஜரட்னாவும் கொழுமப்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் மெத்தானந்த போன்றவர்களும் சிங்கள தேசிய முன்னணியைச் சேர்ந்த ஆர்.ஜி. சேனநாயக்கா போன்றவர்களும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு பண்டாரநாயக்காவுக்கு அழுத்தம் கொடுத்ததுடன், பிரதமர் பண்டாரநாயக்காவின் கொழும்பு ஏழு, றொஸ்மீட் பிளேசிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்னால் பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறியுமாறு முழக்கமெழுப்பினார்கள். அவர்களது முழக்கத்திற்கும், வேண்டுகைகளுக்கும் அடிபணிந்த பண்டாரநாயக்கா, தந்தை செல்வநாயகத்துடன் செய்துகொண்ட பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறிந்தார்.

இதனைத் தொடர்ந்து 1958ஆம் ஆண்டு மே மாதம் இருபத்து நான்கு, இருபத்தைந்து, இருபத்தாறு ஆகிய திகதிகளில் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வவுனியா மாநாட்டிற்கு வருகைதந்து கொண்டிருந்த மட்டு-அம்பாறையைச் சேர்ந்த தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் பயணம் செய்த தொடருந்து பொலநறுவை மாவட்டத்தில் கிங்குராகொட என்னும் தொடருந்து நிலையத்தில் வழிமறிக்கப்பட்டுச் அதிலிருந்த தொண்டர்கள் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டார்கள். இதே காலப்பகுதியில் நுவரெலியா மாநகரசபையின் மேயர் செனிவிரட்ண மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்தபோது மட்டக்களப்பில் வைத்து தனிப்பட்ட காரணங்களுக்காகக் கொல்லப்பட்டார். பிரதமராக இருந்த பண்டாரநாயக்கா இதைப் பெரிதுபடுதத்தி இலங்கை வானொலியில் பரப்புரை செய்தார். இதைத் தொடர்ந்து தீவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான இனக்கொலை வெடித்தது. தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல பெண்கள் பாலியல் வல்லுறவிற் குட்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பாணந்துறையில் சிறீ கதிர் வேலாயுதசுவாமி கோயிற் குருக்கள் ஆலயத்திற்குள் வைத்து உயிரோடு கொழுத்தப்பட்டார். பொலநறுவை அரசினர் வைத்தியசாலையில் சிங்கள மக்களுக்குச் சிகிச்சை அளித்த தமிழ்த் தாதியான பாலிப்போடி என்பவரின் மனைவி பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார்.

இவ்வளவும் நடந்தும் பண்டாரநாயக்காவினுடைய அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ அல்லது ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ இல்லை. தமிழர்கள் தாக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டபோதும் பண்டாரநாயக்கா தமிழர்கள் பட்டு அனுபவிக்கட்டும் என்று கூறினார். இந்த

1958 ஆம் ஆண்டு தமிழினப்படுகொலை (மே 22 - யூன் 02)

இனக்கொலையின் போது தமிழ் மக்களின் பல வீடுகள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. பல தமிழ்க் குழந்தையர் கொதிக்கும் தாரில் போடப்பட்டார்கள். மேலும் இக்கட்டத்தில் இலங்கையில் தங்கியிருந்த பிரபல ஆங்கில நாளேட்டாளரான டாசி வித்தாச்சி அவர்கள், பண்டாரநாயக்கா அரசினால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பின் தனது தாய் நாட்டிற்குச் சென்று “அவசரகாலச் சட்டம் ஐம்பத்தெட்டு” என்ற நூலை எழுதி வெளியிட்டார். இன்று இந்நூல் உலகப் புகழ் பெற்ற நூலாகக் கருதப்படுகின்றது.

இக்காலத்தில் எல்லாமாக முன்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அக்காலகட்டத்தில் வெளியான நாளேடுகள் வாயிலாக அறியமுடிகின்றது. பல நூற்றுக் கணக்கான மக்கள் வெட்டி அங்கவீனப்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன, அவர்களது உடைமைகள் தீவைத்து எரிக்கப்பட்டன. இக் காலகட்டம் பற்றி எத்தகைய விசாரணைகளும் மேற்கொள்ளப் படவில்லை. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு எத்தகைய நிவாரணமோ நட்டஈடோ வழங்கப்படவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

யாழ் நூலகம் எரித்து அழிப்பு - 01 யூன் 1981

தெற்காசியாவிலேயே மிகப்பெரியதும், அருமைமிக்க பழைமை வாய்ந்த நூல்களை கொண்டதுமாக யாழ் பொது நூலகம் விழங்கியது. தீவின் வடக்கில் வாழ்ந்து வந்த மக்களின் கல்விசார் பொக்கிஷமாக இந் நூலகம் இருந்தது. யாழ்நகரத்தின் தெற்கே புகழ்பெற்ற விழையாட்டு மைதானத்தின் கிழக்கு தொங்கலில் இதன் கட்டிடம் அமைந் திருந்தது. பிரிட்டிசார் காலத்தில் கட்டப்பட்ட யாழ் சென்றல் கலலூரி, மணிக்கூட்டுக் கோபுரம் என்பன இதற்கருகே அமைந் திருந்தன.

இந்நூலகம் 97,000 மேலான மிக பழைய நூல்களைக்கொண்டு, இத்தீவிலே இது தனித்துவமுடையதாக இருந்தது. அக்காலத் தில் மாணவர்கள், ஆராச்சியாளர்கள், மற்றும் வெளிநாட்டு பிரமுகர்கள் இந்நூலகத்தை தேடி வருவார்கள்.

01.06.1981 அன்று, சிறீலங்காவின் முப் படைகளும் சேர்ந்து இந்நூலக வழாகத்துள் இறங்கினர். அங்கிருந்த பாதுகாப்பு ஊழியரை துரத்திவிட்டு நூலகத்துக்குள் உடைத்துக் கொண்டு நுழைந்தனர். சில நிமிடங்களில் 97,000 அருமைவாய்ந்த புத்தகங்களையும் எரித்துச் சாம்பலாக்கினர். நூலகக் கட்டிடமும் தீமூட்டப்பட்டது.

தெற்காசியாவிலேயே மிக அருமை வாய்ந்த தொகையான புத்தகங்களை எரித்த இச் சம்பவம், மானிட சரித்திரத்திலேயே ஒரு துயரச் சம்பவமாக செதுக்கப்பட வேண்டியது எனலாம்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



யாழ். நூலகம் – அழிக்கப்பட்ட தமிழர் அறிவுச் சுரங்கம்



ஆனந்தபுரம் செல்வீச்சு 04.யூன் 1986

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஆனந்தபுரம் அமைந்துள்ளது. இக்கிராமம் கிளிநொச்சி நகரத்தின் தெற்கே ஒரு மைல் தூரத்திலுள்ளது. இச்சிறிய கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது.

1986களில் அரச படைகள் பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் பரவலாக இராணுவ முகாம்களை விரிவாக்கத் தொடங்கியதுடன், பொதுமக்கள் வாழும் பிரதேசங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டார்கள்.

1986.06.04ஆம் நாள் அதிகாலை 5 மணிக்கு கிளிநொச்சி நகரில் முகாமிட்டிருந்த அரச படையினர் ஆனந்தபுரத்தை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இவ்வாறு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைகளில் சில ஆனந்தபுரம் செல்வா வீதியிலுள்ள இராமையா பெரியான்பிள்ளை என்பவரின் வீட்டின் மேல் வீழ்ந்து வெடித்தது. வீட்டினுள் தாயின் அரவணைப்பில் ஐந்து பிள்ளைகளும் உறங்கிக்கொண்டிருந்தனர். வீட்டின் மீது வீழ்ந்த எறிகணையினால் இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் படுக்கையில் உடல் சிதறி உயிரிழந்தார்கள். மற்றைய மகன் தலையிலும், உடல் முழுவதும் காயங்களுக் குள்ளாகிய நிலையில் அக்கராயன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் அங்கு மரணமானார். தாய் தலையிலும் உடல் முழுவதும் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாண வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் பொதுமக்கள் ஆனந்தபுரக் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்தார்கள். எறிகணைத் தாக்குதல்கள் முடிவடைந்த பின்னர் கிராமத்திற்கு மீண்டும் திரும்பிய பொதுமக்களால் உயிரிழந்த நான்கு மாணவர்களினதும் உடல்கள் வீட்டு வளவினிலேயே அடக்கம் செய்யப்பட்டன. பிள்ளைகளின் நினைவாக அவர்களை அடக்கம் செய்த இடத்தில் கல்லறையும், இரத்தினபுரம் கண்டி வீதியில் மீனாட்சி அம்மன் வித்தியாலயத்தில் ஐந்து பிள்ளைகளின் நினைவுச்சின்னம் என்ற மணிக்கூட்டு கோபுரம் கட்டப்பட்டது. இவை இரண்டும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சத் ஜெய இராணுவ நடவடிக்கையில் சேதத்திற்குள்ளாகி காணப்படுகிறது. உயிரிழந்த நான்கு பிள்ளைகளும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களாவர்.

ஐந்து பிள்ளைகளை இழந்த்த தாய் பெரியதம்பி கனகமணி தெரிவிக்கையில், “ஆனந்தபுரம்: 1986 நாங்கள் வசித்த வீட்டின் மேல் கிளிநொச்சி நகரில் இருந்த சிறீலங்கா இராணுவத்திரால் ஏவப்பட்ட எறிகணை வீழ்ந்து வெடித்ததில், எனது ஐந்து பிள்ளைகள் அவ்விடத்திலேயே உடல்சிதறிப் பலியாகினர். நானும் ஒரு பிள்ளையும் படுகாயத்துடன் யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டோம். இச்சம்பவத்தில் எனது கணவர் மன நிலை பாதிக்கப்பட்டு தற்போது சுகமடைந் துள்ளார்.”

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. பெரியான்பிள்ளை புஸ்பகாந்தன் சிறுவன் -15
02. பெரியான்பிள்ளை செந்தில்குமார் மாணவன் -18
03. பெரியான்பிள்ளை கமலநாதன் மாணவன் -20
04. பெரியான்பிள்ளை கிருபாணி சிறுமி -11
05. பெரியான்பிள்ளை வாமதேவி சிறுமி -1

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-

கந்தளாய் படுகொலை - 04,05 யூன் 1986

1986ம் ஆண்டு யூன் மாதம் நான்காம், ஐந்தாம் திகதிகளில் கந்தளாய் நான்காம் கட்டை என்னும் இடத்தில் காவல் நின்ற விமானப்படையினரும், ஊர்காவற் படையினரும் இணைந்து பிரயாணிகள் பேருந்தினை வழிமறித்துத் தமிழர்களை அடையாளங்கண்டு தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் பல பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காணாமற் போனார்கள். சிலர் காயத்துடன் உயிர்தப்பினார்கள்.

1986.06.05 ஆம் திகதி வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்ற பேருந்தைக் கந்தளாய் நான்காம் கட்டைப் பகுதியில் வைத்து விமானப்படையினரும் ஊர்காவல் படையினரும் இணைந்து தாக்கியதுடன், பேருந்தினைத் தீயிட்டும் எரித்தார்கள். எரிந்த நிலையில் பேருந்திலிருந்து ஒரு சிறுமி, ஒரு கைக்குழந்தை உட்பட பத்திற்கும் மேற்பட்டவர்களது கருகிய உடல்கள் மீட்கப்பட்டன. இரண்டு தினங்களிலும் விமானப் படையினர், ஊர்காவற் படையினரின் தாக்குலில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்ததுடன், முப்பத்தைந்திற்கும் மேற்பட்டவர்களுக்கு என்ன நடந்ததென்று இன்றுவரை தெரியவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.
நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்
உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு
தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.

மண்டைதீவுக்கடல் படுகொலை – 10 யூன் 1986

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நகர மையத்தி லிருந்து தெற்குக் கரையோரக் கிராமங் களாகக் குருநகர், பாசையூர், மண்டைதீவு ஆகியன அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்தின் தென்மேற்காக வேலணைப் பிரதேசசபை எல்லையினுள் மண்டைதீவு அமைந்துள்ளது. மூன்று பக்கமும் கடலாற் சூழப்பட்டதும், மறு புறம் நிலப்பரப்பையும் கொண்ட ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக் கும் கிராமமாக மண்டைதீவு காணப்படுகிறது. யாழ். நகரத்தின் இக்கரையோரக் கிராம மக்கள் தமது சீவனோபாயத் தொழிலாகக் கடற்தொழிலையே நம்பி வாழ்கின்றனர்.

10.06.1986 அன்று கடற்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி விசைப் படகினில் வந்த கறுப்புச்சீருடை அணிந்த கடற்படையினரைக் கண்டு மீனவர்கள் தமது கைகளை உயர்த்தியவாறு தாம் பொதுமக்கள் என்பதை அடையாளம் காட்டினார்கள். ஆனால் கடற்படையினர் மீனவர்களைக் கடலில் வைத்து கண்களைத் தோண்டியும், வயிற்றினை வெட்டியும் இறுதியில் துப்பாக்கி யால் சுட்டும் கைக்குண்டுகளை வீசியும் கொன்றனர். இச்சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த முப்பத்திரண்டு பேரும் மண்டை தீவைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் முப் பத்து மூன்று மீனவர்கள் உயிரிந்தார்கள் மீனவர்களின் இபடகுகள், வலைகள், கருவிகள் என்பன சேதமாக்கப்பட்டன.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கந்தையா முத்துசாமி - 55
02. கிறிஸ்தோப்பர் ஸ்நாச்சி - 54
03. பங்கிராஸ் தார்சியஸ் - 30
04. பங்கிராஸ் அன்ரன் விமலதாசன் தவம் - 23
05. பங்கிராஸ் அன்ரனி யூலியஸ் - 33
06. பற்றிக் அலோசியஸ் டோனாஸ் - 58
07. தமியன் எருமின் றூபேட் உதயகுமாரன் - 26
08. முடியப்பு அன்ரனிதாஸ் இராஜகுமார் - 32
09. மனுவல் பயஸ் - 56
10. மனுவல் பற்றிக் - 60
11. மனுவல் மரியநாயகம் - 38
12. முத்தையா சுவாமிநாதன் செபமாலை யோசெப் - 57
13. அன்ரன் செல்ரொன் வீன் - 21
14. அலோசியஸ் டியூஸ் டோறோஸ்டியூக் - 24
15. அலோசியஸ் லிகோரி டோனாஸ் மெளன்ட் - 34
16. ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை - 68
17. அருளானந்தம் பெனடிக்ற் - 32
18. அருளானந்தம் பொனிபஸ் - 60
19. யோன் யோஜ் - 56
20. யோசப்பர்ணாந்து அந்தோனிப்பிள்ளை பர்ணாந்து - 62
21. பெனடிக்ற் கியூபேட் றேசன் றமேஸ் - 19
22. பெனடிக்ற் மாசில்லா மகேந்திரன் - 25
23. பெனடிக்ற் அலிஸ்ரன் - 30
24. பெனடிக்ற் லிகோரி - 27
25. செபதேயு சேவியர் - 62
26. சோமசுந்தரம் சோதிநாதன் - 62
27. ஞானப்பிரகாசம் எட்வேட் கெலின்சன் ஜெயகாந்தன் - 17
28. சுப்பிரமணியம் கோபால கிருஸ்ணன் - 20
29. சவிரியான் யேசுதாசன் நிக்சன் - 13
30. விசுவநாதன் விமலநாதன் - 23
31. எமிலியானுஸ் மக்சிமஸ் ஈஸ்வரன் - 21

சேருவில் படுகொலை – 12 யூன் 1986

1986.06.12 அன்று ஈச்சிலம்பற்றையிலிருந்து அகதிகளுக்கான உணவுப்பொருட்களை எடுத்துச் செல்லும் போது, மகிந்தபுரவில் ஊர்காவற் படையினரால் இரண்டு கிராமத் தலைவர்கள், மூன்று அரச ஊழியர்கள் மற்றும் இருபது தொழிலாளர்கள் தாக்கப் பட்டார்கள். இத்தாக்குதலில் இருபத் தொரு பேர் உயிரிழந்தார்கள். இரண்டு பேர் காயமடைந்தார்கள்.

இவர்கள் ஈச்சிலம்பற்றில் இனக்கொலை களினால் இடம்பெயர்ந்து அகதிகளாகத் தங்கியிருந்தவர்களுக்கான உணவுப் பொருட்களை எடுத்துச் சென்றவர்களாவர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

சம்மாந்துறைப் படுகொலை – 10 யூன் 1990

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பிரதேசெயலர் பிரிவில் சம்மாந்துறைக் கிரா மம் அமைந்துள்ளது. இக்கிராமம் வயல் களைக் கொண்ட விவசாயக் கிராமம் ஆகும். இப்பிரதேசத்தில் கண்ணகி அம்மன் கோயில் காளிகோயில் போன்ற பல ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்துக்களின் வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ளன.

1990.06.10 இல் முசுலிம் குழுக்கள் இராணுவத்தினருடன் இணைந்து பொது மக்கள் மீது இங்கு தாக்குதல் நடத்தினார்கள். இவர்களின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக ஓடிய பொதுமக்கள் மீது இராணுவத்தினர் சுட்டதில் பலர் உயிரிழந்தனர். அன்று இராணு வத்தினரும் முசுலிம் குழுக்களும் நடாத்திய தாக்குதலில் முப்பத்தேழு பொதுமக்கள் உயி ரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்ளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசரட்ணம் இராமச்சந்திரன், கூலி - 19
02. க.வடிவேல் - -
03. த.தாசன் - -
04. தம்பிராசா உருத்திரன், மாணவன் -16
05. மா.கணபதிப்பிள்ளை - -
06. சு.கணேசன் - -
07. சின்னத்தம்பி மார்க்கண்டு - -

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

வந்தாறுமூலை படுகொலை 09 யூன் 1991

09.06.1991 அன்று மாவடிவேம்பு, வந்தாறு மூலை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் வந்தாறுமூலைப் பிரதேசத் தினைச் சுற்றி வளைத்து வந்தாறுமூலை முதலாம் குறுக்கு வீதியில் நின்ற நான்கு

பொதுமக்களை வாள்களினால் வெட்டிப் படு கொலை செய்தார்கள். அதனைத் தொடர்ந்து கருவங்கேணியில் ஆறு பொதுமக்களை சுட்டுப் படுகொலை செய்தார்கள். மொத்தமாகப் பத்துப் பொதுமக்கள் அன்றைய தினம் இராணுவத்தினரின் தாக்குதலில் உயிரிழந் தார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

கொக்கட்டிச்சோலை படுகொலை – 12 யூன் 1991

28.01.1987 அன்று இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் பாதிப்படைந்த கொக்கட்டிச்சோலைப் பிரதேசம் மீண்டும் செழிப்புற்று மக்கள் ஓரளவு சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

12.06.1991 அன்று அம்பிலாந்துறை, கல்லடி போன்ற இராணுவ முகாங்களிலிருந்த இராணுவத்தினர் கனரக வாகனங்களுடன் கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு மற்றும் மகி ழடித்தீவு ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்து அங்கிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டார்கள். இராணுவத்தினரின் இத்தாக்குதலில் 166இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள். 400இற்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன. அரிசி ஆலை ஒன்றினுள் நுழைந்த இராணுவத்தினர் அங்கு பணிபுரியும் பதினேழு பொது மக்களையும் அரிசி ஆலையுடன் சேர்த்து எரித்தார்கள்.

12.06.1991 அன்று இராணுவத்தினரின் தாக்குதலில் மொத்தமாக 220இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். இவர்களின் உடல்கள் அனைத்தும் இராணுவத்தினரால் ரயர் போட்டு அரைகுறையாக எரிக்கப்பட்டன.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

மாங்குளம் செல்வீச்சு – 08 யூன் 1997

எழில் கொஞ்சும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வளம் நிறைந்த நகரமாகவும், முல்லை மாவட்டத்தில் தொடருந்துத் தரிப்பிடத்தைக் கொண்ட ஒரே ஒரு நகரமாகவும் ஏ-09 பாதையில் மாங்குளம் அமைந்துள்ளது. இங்கு ஆரம்பத்தில் மக்கள் தொகை ஓரளவு குறைவாகக் காணப்பட்டபோதிலும் 1996, 1997 காலப்பகுதியில் பொதுமக்கள் மீதான இராணுவத்தினரின் கண்மூடித்தனமாக தாக்குதல்களால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெடுங்கேணி போன்ற பல்வேறு பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களால் இந் நகரம் ஒரு மக்கள் தொகை நிறைந்த நகரமாக மாறியது. அன்றைய காலகட்டத்தில் புளியங் குளச் சந்தியில் நிலைகொண்டிருந்த இரா ணுவத்தினர் நாளாந்தம் மக்கள் குடியிருப்புக்கள் மீது எறிகணைத் தாக்குதலை நடாத்தி மக்களுக்குப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் புளியங்குளப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் 08.06.1997 அன்று பி.ப. 1.40 மணி தொடக்கம் 02.05 மணிவரை மாங்குளம் சந்திப்பகுதியை இலக்குவைத்து சரமாரியான எறிகணைத் தாக்குதலை நடத்தினர். இவ் எறிகணைத் தாக்குதலில் அப்பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் உட்பட ஏழு பொதுமக்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். பிள்ளைகளை யிழந்த மாங்குளத்தைச் சேர்ந்த இந்த் திராணி தெரிவிக்கையில்,

“கணவரும் நானும் கூலி வேலைக்குப் போவோம். கஞ்சி குடிக்கக் கூட வழியில்லாத நிலையில் இருக்கும்போது ஒரு நாள் கணவர் வேலைக்குச் சென்ற நிலையில் பிள்ளைகள் பாடசாலைக்குப் பணம் கட்டவேண்டும் என்றார்கள். பணம் இல்லாத நிலையில் அன்றை நாள் கூலிச் சம்பளத்தை வைத்து அடுத்த நாள் பாடசாலைக்கு அனுப்பலாம் என்ற எண்ணத்தில் அவர்களை வீட்டில் மறித்து விட்டு நானும் கூலி வேலைக்குப் போய்விட்டேன். அவ்வேளையிற்தான் சிறீ லங்கா விமானப்படையின் கிபீர் விமானங் கள் எங்கள் வீட்டிற்கு அயலிற் குண்டுகளைப் போட்டது. நான் வீட்டிற்கு ஓடி வருவதற்கு முன் கணவர் வந்து பிள்ளைகளைப் பார்த்தபோது ஒரு பிள்ளை உடனேயே இறந்துவிட்ட நிலையில் மற்றைய பிள்ளை தண்ணீர் தண்ணீர் என்று அழுதுகொண்டும் இருந்தது. அந்த நேரந்தான் நானும் வந்தேன். அந்த நிலைமையை எவ்வாறு சொல்வதென்றே தெரியவில்லை. அழுது புலம்பி வைத்திய சாலைக்குக் கொண்டு போவதற்கிடையில் மற்றைய பிள்ளையும் இறந்து விட்டது. அந்தச் சம்பவத்தில் எனது பிள்ளைகளைப் பறி கொடுத்த நிலையில் மிகவும் மனவருத்தத் துடன் வாழ்ந்து வருகின்றேன். சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் கரிப்பட்டமுறிப்பு பகுதி அனைத்தும் எறிகணைத் தாக்குதல்கள் நடந்தவண்ணமிருந்தது. அதனாற் பயந்து போய் இன்றைக்கும் எறிகணை வீசுவானோ என்ற பயத்தில் இருக்கும் போதுதான் இச்சம் பவம் இடம்பெற்றது. எனது பிள்ளைகள் மரத் திற்குக் கீழ் விளையாடிக் கொண்டிருந் திருக் கிறார்கள். அந்த நேரந்தான் கிபீர் குண்டு களைப் போட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் என்னுடைய இரு பிள்ளைகள் உட்பட ஏழு பேர் இறந்தார்கள் ஐம்பதிற்கும் மேற்பட் டவர்கள் காயமடைந்தனர்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின்

கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. க.ஜயாசாமிப்பிள்ளை - 33
02. கந்தசாமி - -
03. ஜெ.சாமிப்பிள்ளை - -
04. அ.பாலசந்திரன் - 40
05. ஜெயபாலசிங்கம் ஜெயராஜ் கடற்தொழில் 20
06. மல்லிகா - -
07. கணேசமூர்த்தி தயாநிதி - 32

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக் கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. கந்தசாமி செல்வராசா - 36
02. சுகுமார் வினோதீபன் மாணவன் 14
03. குகராசா ஜசிதா மாணவன் 13
04. கந்தசாமி செல்லர் - 32
05. நல்லதம்பி செபமாலை - 66
06. மாணிக்கம் சரவணமுத்து - 34
07. சரசு பத்மலிங்கம் - 21
08. பாலசுப்பிரமணியம் ஜெயக்குமார் - 21
09. திருஞானம் மனோகரன் - 24
10. முருகு இராசதுரை - 63
11. ஐயாத்துரை பரமேஸ்வரன். - 56
12. சேவியர் மனோரஞ்சிதம் - 36
13. சேவியர் வத்சலா மாணவன் 05
14. செபமாலை றெஜீனா – 66

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

சுதந்திரபுரம் படுகொலை – 10 யூன் 1998

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலலர் பிரிவிலுள்ள சுதந்திரபுரம் கிராமம், உடையார்கட்டுச் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி அண்ணளவாக இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரம் விவசாயம் ஆகும். இக்கிராமத்தில் ஆரம்பகாலங்களில் குடித்தொகை குறைவாகக் காணப்பட்ட போதும் ஏனைய பிரதேசங்களிருந்து காலத்துக்குக் காலம் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் 1996ஆம் ஆண்டினைத் தொடர்ந்து கூடுதலாக இப்பிரதேசத்தில் வசித்துவந்தனர்.

10.06.1998 அன்று காலை 9.15 மணி தொடக்கம் 11.30 மணிவரை ஆனையிறவு, அம்பகாமம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரும் விமானப் படையினரும் இணைந்து இப் பகுதியில் மக்கள் வாழ்விடங்கள் மீது எறிகணைத் தாக்குதலையும், விமானத் தாக்குதலையும் நடத்தினார்கள். மக்கள் எதிர்பார்த்திராத சந்தர்ப்பத்தில் இத்தாக்குதல் இடம்பெற்றதனால் மக்களால் பாதுகாப்புத் தேடிக்கொள்ள முடியவில்லை. தாக்குதலுக்கு உட்பட்ட பகுதியானது புகைமண்டலமாக மாறியதுடன், எங்கும் ஒரே அழுகுரல்கள் கேட்டவண்ணமிருந்தன. இறந்தவர்களின் உடல்கள் ஆங்காங்கே காணப்பட்டன. காயமடைந்தவர்களையும் விட்டுவிட்டு ஏனையவர்கள் தமது உயிர்களைக் காப்பாற்றும் நோக்குடன் ஓடி ஒளித்துக் கொண்டார்கள். பின்னர் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் இங்குள்ள மக்கள் ஈடுபட்டனர்.

நடைபெற்ற தாக்குதலில் முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மக்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் அழிந்தன. பத்து வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. நூறு வீடுகள் சேதமடைந்தன. பயன்தரு தென்னை மரங்கள் அழிந்ததால் கிராமத்தின் அழகும், அமைப்பும் சீர்குலைந்து போயிற்று.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராஜகோபாலன் ரவிச்சந்திரன், விவசாயம் - 28
02. இராமு இரட்ணலிங்கம், தொழிலாளி - 26
03. இராசலிங்கம் உதயகுமார், தொழிலாளி - 39
04. இரத்தினசிங்கம் இராணிமலர் - 28
05. நவக்குமார் கோகிலா - 30
06. நவராசா கிருஸ்ணமூர்த்தி, தொழிலாளி - 25
07. கந்தையா குணசேகரம் - 24
08. புஸ்பநாதன் சதீஸ், மாணவன் - 10
09. புஸ்பநாதன் கலைச்செல்வி, குழந்தை - 5
10. புஸ்பநாதன் தேவநந்தினி, குழந்தை - 2
11. புஸ்பநாதன் சத்தியசீலன், மாணவன் - 8
12. புஸ்பநாதன் ரமேஸ்குமார், மாணவன் - 13
13. பழனிவேல் திருச்செல்வி, மாணவி - 18
14. மனுவல் தேவதாஸ் - 45
15. முத்துத்தம்பி வசந்தகுமாரி - 19
16. முத்துவேல் ஞானசேகரம் - 59
17. அமிர்தலிங்கம் சுதா - -
18. ஆசிர்வாதம் பாத்திமா மாணவி 17
19. அற்புதம் ஜெகன் - 23
20. ஜேபன் - -
21. பொன்னன் சுரேஸ்குமார் - -
22. செபஸ்தியாம்பிள்ளை ஜெயரட்ணம், மாணவன் - 21
23. செல்வராசா சிறிதரன், வீட்டுப்பணி - 21
24. வெள்ளையப்பன் சுப்பையா, விவசாயம் - 57
25. சாட்செறோன் கொண்செட்டா, வீட்டுப்பணி - 26
26. சாணக்குட்டி யோகபாலசிங்கம், தனியார்தொழில் - 27
27. சின்னத்துரை - -
28. சின்னத்துரை சுதாகரன், தனியார்தொழில் - 20
29. சிதம்பரப்பிள்ளை குமாரவேல் - 48
30. விநாயகமூர்த்தி தேவகரன், தனியார் தொழில் - 22
31. விக்கினேஸ்வரன் நேசராணி - 40
32. வல்லிபரம் ராணிமலர், வீட்டுப்பணி - 27
33. றிச்சாட் செறோன்கொன்சென்றர் - 26

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இராமலிங்கம் சர்மா - 48
02. நயினாமுகமது முகமதுநவும் - 31
03. நாதன் - 38
04. நாராயணன் சத்தியசீலன், தொழிலாளி - 18
05. நிசாம் - 30
06. க.ஜீவநந்தினி - 21
07. க.மாலினி - -
08. கந்தையா சுப்பிரமணியம், விவசாயம் - 22
09. கதிர்வேலு நாகதேவன், விவசாயம் - 34
10. கதிரேசு ஜெபனேஸ்வரன் - 18
11. குமாரநாயகம் மேகநாதன், சுயதொழில் - 24
12. குமரேசன் - 30
13. கணேஸ் மாலினி - 34
14. கணேஸ் றேகன் - 24
15. கி.வக்சலா - 28
16. கிருஸ்ணன் ரவிக்குமார், கூலித்தொழில் - 26
17. கிறிஸ்ரி வட்சலா - 28
18. ப.ஜெயரட்ணம் - 21
19. ப.சீலன் - 17

20. புஸ்பராசா சுதன் - 20
21. பாலு மாணிக்கம் - 64
22. பத்மராசா - 21
23. பிரசாந்தினி மாணவன் 15
24. ஐ.செல்வம் - 27
25. ஐயம்பிள்ளை செல்வன் - 26
26. வை.லட்சுமி - 63
27. வையாபுரி இலட்சுமி - 63
28. தியாகராசா சந்திரலிங்கம் - 42
29. மாணிக்கம் - 64
30. முத்துக்கறுப்பன் கதிர்காமத்தம்பி - 65
31. முத்துலிங்கம் பத்மராசா - 22
32. அ.விஜயகுமார் மாணவன் 14
33. அந்தோணிப்பிள்ளை சிவகுமார், மாணவன் - 7
34. அப்புப்பிள்ளை கறுப்பையா, விவசாயம் - 65
35. அப்புப்பிள்ளை சின்னக்கறுப்பன், விவசாயம் - 65
36. ஆறுமுகம் மீனாம்பிகை - 28
37. ஜெயகாந்தன் - 20
38. ஜெயச்சந்திரன், மாணவன் - 15
39. ஜேசுநாயகம் சில்வஸ்டர், கூலித்தொழில் - 26
40. கே.தாரணி - 21
41. கோமலட்சுமி - 18
42. கோவிந்தன் - 56
43. பொன்னன் பழனியாண்டி, சுயதொழில் - 60
44. பொன்னுத்துரை ரவிச்சந்திரன் - 29
45. சொக்கலிங்கம் சுப்பம்மா, வீட்டுப்பணி - 60
46. சொர்ணலட்சுமி - 18
47. சோளநாதன் இந்திரகுமார் - 23
48. சௌந்தராஜன் சசிகரன், மாணவர் - 16
49. செல்வநாயகம் சாந்தகுமாரி, சுயதொழில் - 20
50. செல்லத்துரை சற்குணநாதன் - 41
51. செல்லத்தம்பி குமரேசன் - 30
52. ச.சகுந்தலா - 26
53. சந்திரலிங்கம் - 42
54. சுதர்சன் - 25
55. சின்னக்கறுப்பையா - 62
56. சிவநாதன் ருக்குமணிதேவி, வீட்டுப்பணி - 23
57. சிவனேசன் - 18
58. சிவஞானம் ஜெயச்சந்திரன், மாணவன் - 15
59. சிவராசா ஞானசேகரலிங்கம் - 40
60. சிறிகுமார் மதிவதனா, மாணவி - 14
61. சுவிந்திரன் - 21
62. விஜயகுமார் டெய்சிராணி - 33
63. ரஞ்சன் மலர்விழி - -
64. ரஞ்சன் வின்சன், குழந்தை 5

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

வடமுனை நெடுங்கல் படுகொலை – 07 யூன் 2006

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள கிராமங்களில் வடமுனையும் ஒன்றாகும். இது வெலிக்கந்தையிலிருந்து 07கிலோமீற்றர் தூரத்திலும் வாழைச்சேனையிலிருந்து 35கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் குறைவடைந்திருந்தாலும் மகிந்த ராஜபக்ச சனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான தாக்கதல்களும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. நாளுக்கு நாள் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் கொல்லப்படடுக் கொண்டு வந்தனர். இதன் தொடர்ச்சியாகவே மட்டக்களப்பு வடமுனைப் படுகொலையும் அமைந்துள்ளது.

07.06.2006 அன்று காலை 10மணியளவில் வடமுனையிலிருந்து பொருட்கள் வாங்குவதற்காக உழவு இயந்திரத்தில் 20 பொதுமக்கள் வரை பயணித்துக் கொண்டிருந்தனர். நெடுங்கல் எனும் இடத்தில் இவர்களை இலக்கு வைத்து சிறீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினரால் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் ஆறு மாதக் குழந்தை உட்பட 10பேர் உயிரிழந்ததுடன் 03 குழந்தைகள் உட்பட 09 பேர் படுகாயமடைந்தனர். இப்படுகொலையானது, ஒரு திட்டமிட்டஇன அழிப்பு நடவடிக்கையாகவே கருதப்படுகின்றது. எல்லைப்புறக் கிராமங்களிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றி சிங்கள மக்களை குடியேற்றும் ஒரு செயற்பாட்டிற்கான ஆரம்பமாகவே நோக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் இவ் வடமுனைப்பகுதி மக்கள் இலங்கை இராணுவத்தால் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வந்தனர். 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் இப்பகுதி மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். 1995ஆம் ஆண்டின் பின்னர் மக்கள் இங்கு மீளக் குடியமரத் தொடங்கினர். 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மக்கள் இங்கு பெருமளவில் குடியேறத் தொடங்கினர். ஆனால் மீண்டும் தமக்கு அந்நிலை ஏற்படுமோ என்ற ஏக்கத்தில் அப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சரவணமுத்து சந்திரகுமார், 10
02. சரவணமுத்து தினேஸ்குமார், 11
03. சரவணமுத்து மதியழகன், 22
04. மதியழகன் கவிதா, 20
05. சிவநேசன் மதிமலர், 24
06. ஐயாத்துரை சிறிமா, 33

07. காசிப்பிள்ளை கோமதி, 40
08. தளையசிங்கம் தனலட்சுமி, 48
09. பத்தினியன் சின்னத்தம்பி, 56
10. சிவநேசன் சிந்துஜன், 06மாதம்

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர்)

01. சரவணமுத்து சந்திரன், 16
02. கவிதா, 02
03. பிரதீபன், 01
04.சிறிதரன் அனோ, 06
05. கனகன் இராசரத்திம், 40
06. தங்கவடிவேல், 46
07. மயில்வாகனம் ஜெயரத்தினம், 46
08.வீரக்குட்டி சின்னத்தம்பி, 50
09. பதினியன் சின்னத்தங்கை, 56

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

வங்காலை படுகொலை – 08 யூன் 2006

வங்காலைக் கிராமமானது மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசெயலர் பிரிவில் கடற் கரையோரமாக அமைந்துள்ளது. இக் கிராம மக்கள் மீன்பிடித் தொழிலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு சுகந்தபுரி, தோமஸ்புரி, பஸ்புரி போன்ற சிறு கிராமங்கள் காணப்படுகின்றன. தோமஸ்புரியில் வசித்துவந்த மார்ட்டின் என்பவரும் அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளும் இலங்கை இராணுவத்தினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

மேற்படி சம்பவமானது 08.06.2006 அன்று இரவு தோமஸ்புரியிலுள்ள அவர்களின் வீட்டில் இடம் பெற்றுள்ளது. தச்சுத் தொழிலாளியான மார்ட்டின் என்பவர் தச்சுத் தொழிலுக்கு பயன்படுத்தும் கருவிகளாலேயே படுகொலை செய்யப்பட்டார். அவரது மனைவி

பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பின்னர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். மேலும் பிள்ளைகள் இருவரும் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்ட பின்னர் தந்தையும் பிள்ளைகளும் தூக்கில் தொங்கவிடப் பட்டிருந்தனர். இச்சம்பவத்திற்கு நேரடியான சாட்சியங்கள் இல்லாவிடினும் இராணுவச்

சப்பாத்துத் தடயங்கள் அதிகளவு காணப் படுகின்றமையும் அப்பகுதியில் சம்பவ தினம் இரவு இராணுவ நடமாட்டம் காணப் பட்டதையும் அப்பகுதி மக்கள் உறுதிப் படுத்துகின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. மூர்த்தி மார்ட்டின், 35
02. மார்ட்டின் மேரி மெடலின் (சித்திரா), 27
03. மார்ட்டின் ஆன் லூக்சியா 09,
04. மார்ட்டின் ஆன் நிலக்சன் 07

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

கைதடி மனிதப் புதைகுழி – 06,07,08 யூன் 2006

இலங்கையின் வடபகுதியில் காணப்படும் மாவட்டங்களில் அதிகளவு மக்கள் செறிவைக் கொண்ட மாவட்டமாக யாழ்.மாவட்டம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஏ-9 நெடுஞ்சாலையில் யாழ் நகரில் இருந்து

10கிலோ மீற்றர் தூரத்தில் கைதடிப் பிரதேசம் அமைந்தள்ளது. 1996ஆம் ஆண்டு யாழ்குடா நாட்டினை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்ததன் பின்னர் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் காணாமற்போயிருந்தனர். அப்போது அவர்களில் சிலர் கைதடியை அண்மித்த செம்மணிப் பகுதியிலிருந்து எலுப்புக்கூடுகளாக மீட்கப்பட்டனர். அதே போல 2006 யூன் மாதத்தில் கைதடித் தரவை

வெளியில் மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாக வெளிப்பட்ட செய்திகள் மக்கள் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது.

06.06.2006 அன்று கைதடித் தரவைப் பகுதிக்கு மண் அகழ்விற்காகச் சென்றவர்கள்

அப்பகுதிக்குள் புதைக்கப்பட்டிருந்த சடல மொன்றைக் கண்டு அது தொடர்பாக தெரிவித்ததையடுத்து அப்பகுதியில் தேடுதல் பணியை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி மாவட்ட நீதவானால் பொலிசாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் பொலிசாரும் பொதுமக்களுமாக அப்பகுதியில் தோண்டும் பணியில் ஈடுபட்டனர். மூன்று நாட்களாக இப்பணி இடம்பெற்றது. இதில் நான்கு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. மேலும் யாழ்.குடா

நாட்டில் பரவலாக காணாமற்போனோர் இவ்வாறு புதைக்கப்பட்டிருக்கலாம் என மக்கள் ஐயம் தெரிவித்தனர்.

இப்புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. வைதீஸ்வரசர்மா வெங்கடகிருஸ்ண சர்மா, 50
02. விசுவலிங்கம் பரணீதரன், 29
03. இரு ஆண்களின் சடலங்கள்

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

நாகதம்பிரானாலய அடியவர் மீது கிளைமோர்த் தாக்குதல் – 02 யூன் 2008

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்துக்களின் ஆலயங்களில் ஒன்றான புதூர்நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்திற்காக வருடந்தோறும் பல் வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து பெருமளவான மக்கள் ஆலயத்திற்குச் சென்று தமது நேர்த்திக் கடன்களை பல ஆண்டுகளுக்கும் மேலாக நிவர்த்தி செய்து வருகின்றனர். எனினும் அக்காலத்தில் வன்னிப் பகுதிகளில் இடம்பெற்று வந்த கிளை மோர்த்தாக்குதல்கள், விமானத்தாக்குதல்கள் காரணமாக ஆலய விழாக்கள், பொதுநிகழ்வுகள் என்பவற்றில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கைகள் பெருமளவில் குறைந்தன.

அந்தவகையில் 2008 யூன் இரண்டாம் நாள் புதூர் நாகதம்பிரான் ஆலயத்திற்குச் சென்ற பக்தர்களின் எண்ணிக்கை வழமையை விடக் குறைவாகவே இருந்தது. அங்கு வருகை தந்தவர்கள் நீண்ட பயணங்களை மேற் கொண்டே வருகைதந்தனர்.

அதில் குறிப்பாக முல்லைத்தீவு அம்பலவண் பொக்கணையைச் சோந்த நால்வரும் முள்ளி வாய்க்கால் மேற்கு பகுதியைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள் என 06 பேருமாக மொத்தம் 10 பொதுமக்கள் கார் ஒன்றில் ஒட்டு சுட்டான் மாங்குளம் வீதியூடாக ஆலயத்திற்குச் சென்று தமது வழிபாட்டினை முடித்துவிட்டு தமது வீடு நோக்கி அதே பாதையால் சென்று கொண்டிருந்தர். இரவு 8மணியளவில் கார் மாங்குளத்திலிருந்து சுமார் 08கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கரிப்பட்டமுறிப்பு பகுதியில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் மேற் கொண்ட கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளானது. தந்தை மற்றும் மகன் அடங்கலாக 06 பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கணபதிப்பிள்ளை முருகதாஸ், 36
02. முருகதாஸ் நிலவன், 04
03. காத்தாப்பிள்ளை நாகராசா, 57
04. ஐயாத்துரை வசந்தராசா, 28
05. தர்மலிங்கம் யோகேஸ்வரி, 48
06. கணேசலிங்கம் கனிஸ்டா, 09

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

கந்தரோடை நாகரிகத்தின் தோற்றமும் படிமுறை வளர்ச்சியும் பகுதி – 1

பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்



கந்தரோடை, மற்றும் அதன் ஆதிக்கத்திற்குட்பட்ட யாழ்ப்பாண மையங்களின் தொல்லியல் கண்டுபிடிப்புகளையும், பென்சில் வேனிய பல்கலைக்கழக கதிரியக்கக் கரிமத் திகதிகளையும் ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கால அட்டவணை (Thiagarajah, S. 2016:64 – 82).

ஆற்றங்கரையில் வாழ்ந்த ஆதிகால மக்கள்

கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து பல்லவர்கள், பாண்டியர்கள், கலிங்க மாகன், சாவக சந்திரபானு, சோழர்கள் ஆகியோரது படையெடுப்புகள் யாழ்ப்பாணம் வழியாகவே நடைபெற்றன. பல தடவைகள் இந்த நாடு அவர்களின் ஆட்சியதிகாரத்தின் கீழே இருந்தது. 13ஆம் நூற்றாண்டிலிருந்தே ஒரு சுதந்திர தனியரசு மீண்டும் உருவானது. 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களின் வருகையோடு அந்தச் சுதந்திரமும் இழந்து போனது.

ஆதிகால யாழ்ப்பாணத்தின் பெருங்கற் பண்பாட்டு மையங்கள்

நாக நாட்டின் ஆதிக் குடியிருப்புகள்

ஆதிகால நாகநாடு அல்லது நாகதீபம் இரு நிலப்பகுதிகளைக் கொண்டிருந்தது: (1) இன்றைய யாழ்ப்பாணத் தீபகற்பமும் அதற்கு மேற்கிலுள்ள தீவகங்களும் (2) வரலாற்றுக் காலத்தில் முதலில் உத்தரதேசம் எனவும், பின்னர் வன்னி என்றும் அழைக்கப்பட்ட இலங்கையின் வடபகுதிப் பெருநிலமும். இந் நிலப்பகுதி இன்றைய திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, புத்தளம் ஆகிய மாவட்டங்களை தன்னுள் அடக்கியிருந்தது. நாகநாட்டின் ஆதிக் குடியேற்றங்கள் இந்த இரு நிலப்பகுதிகளிலும் வெவ்வேறு காலகட்டங்களிலே நிகழ்ந்திருக்கின்றன.

வன்னிப் பகுதியின் கடற்கரையோரங்களில் ஆபிரிக்காவிலிருந்து ஆதிமனிதர்கள் இடம்பெயர்ந்து வந்த காலத்திலேயே குடியேற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதை ஏற்கனவே பார்த்தோம். அவர்களின் வம்சாவளியினர் உள்நாடு சென்று இந்த வன்னிப் பிரதேசத்தை தங்களது இயற்கையான வாழ்நிலமாகக் கொண்டார்கள். அன்றைய ஆதிகால மக்கள் வேட்டையாடியும், இயற்கை உணவுகளைச் சேகரித்தும், கரையோரங்களில் வாழ்ந்த மக்கள் மீன் பிடித்தும் தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டார்கள்.

யாழ்ப்பாண தீபகற்பத்தின் ஆதி இரும்புக்கால பெருங்கற் பண்பாட்டுக் குடியேற்ற மையங்கள்
Image Source - Siva Thiagarajah 2016

அதேசமயம், யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் இயற்கை வளம் அன்றைய வேட்டையாடி வாழும் மனிதர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்றதாக அமையவில்லை. யாழ்ப்பாண நிலத்தில் இயற்கையான ஆறுகளோ, விலங்குகள் வாழும் காடுகளோ கிடையாது. அப்பிரதேசம் ஆதிகால வேட்டை மக்களின் வாழ்வியலுக்கு ஏற்றதாக அமையவில்லை. தென்னிந்தியாவில் இரும்புக்காலத்தில் ஆரம்பமான விவசாயத்தோடு கூடிய பெருங்கற் பண்பாட்டின் பரவலுடனேயே மனிதக் குடியேற்றங்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாயின. இப்பண்பாட்டின் பரவலுடனேயே இலங்கைத் தீவெங்கும் விவசாயம் பரவியது. நாக நாட்டின் வன்னிப் பகுதியில் வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்ந்த மக்கள் சிறிது சிறிதாக காடுகளை விட்டு வெளிவந்து, நாட்டில் குடிசைகள் அமைத்து வாழ்ந்து கொண்டு, இயற்கையான குளங்களிலிருந்தும் ஆறுகளிலிருந்தும் நீரைப் பாய்ச்சி, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

வேட்டையாடி - உணவு சேகரித்து வாழ்ந்த மக்கள் விவசாயத்தை மேற்கொண்டு 'நாகரிகமடைந்த' வரலாற்றுக் காலப் பகுதியில், கந்தரோடை நாகநாட்டின் தலைநகரமாக வளர்ச்சி பெற்றது. அதன் படிநிலை (பரிணாம) வளர்ச்சியை இந்த இயலில் பார்வையிடுவோம்.

உத்தரதேசத்தின் ஆதி மனிதர்கள்

இற்றைக்கு ஒன்றரை மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரிருந்தே இந்தியாவின் பல பகுதிகளில் மனித இனங்கள் வாழ்ந்து வந்திருக்கின்றன. இந்தியாவும் இலங்கையும் பனியுகக் காலங்களில் ஒரே நிலமாக இணைந்திருந்தபடியினால், இந்த மனிதர்கள் அக்காலத்திலேயே இலங்கையையும் வந்தடைந்திருப்பார்கள். எனவே, இலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தை இந்தியாவைத் தள்ளிவைத்து உரைக்க முடியாது (Deraniyagala, S.U. 1996).

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஹோமோ இரக்டஸ் எனப்படும் ஆதிமனிதர்களின் இடப்பெயர்வு இற்றைக்கு ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே இடம்பெற்றிருக்கலாம். இலங்கை அதன் வடபகுதியூடாகவே இந்தியாவுடன் இணைந்திருந்தபடியினால், அம்மனிதர்களின் இடப்பெயர்வு இலங்கையின் வடபகுதியூடாகவே நிகழ்ந்திருக்க முடியும். அக்கால யாழ்ப்பாணப் பகுதி ஆறுகளற்ற, காடுகளற்ற நிலமாக இருந்தமையால், வேட்டையாடி வாழ்வாதாரம் மேற்கொண்ட அவர்கள் யாழ்ப்பாணத்தினூடாகச் சென்று வன்னிப் பகுதிகளில் வாழ்ந்திருக்கக் கூடும். ஆனால், ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மனிதர்கள் இலங்கையில் இருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. வன்னிப் பகுதிகளில் - முக்கியமாக இரணைமடு தேரிகளில் கிடைத்த இம்மனிதர்கள் பயன்படுத்திய கற்கருவிகளில் பழமையானவை கி.மு. 125,000 ஆண்டுகளுக்கு உரியன எனத் தேதிக்கணிப்புச் செய்யப்பட்டிருக்கிறது (Abeyaratne, M. 1996; Deraniyagala, S.U. 1992: 686-688).

இந்த முதல் மனிதர்களோடு, கி.மு. 60,000 ஆண்டுக் காலப் பகுதியில் ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் நவீன மனிதர்களும் வந்து சேர்ந்தார்கள். இலங்கையில் இவர்களின் படிமுறை மானிட வளர்ச்சியின் நிரலொழுங்கு இது:

முதலாம் நிலை: மத்திய பழங்கற்காலம்
இரண்டாம் நிலை: மேலைப் பழங்கற்காலம்
மூன்றாம் நிலை: இடைக்கற்காலம் – நுண்கற்காலம்
நான்காம் நிலை: ஆதி இரும்புக்கால பெருங்கற் பண்பாடு

இவ்விவரங்கள் ஏற்கனவே பத்தாவது இயலில் கூறப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண தீபகற்பத்தின் ஆதிக் குடியேற்றங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தொல்லியல் ஆய்வுகளில் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி வெளியிட்ட யாழ்ப்பாணத்து ஆதிக்குடியிருப்புகள் (1987) என்னும் நூல், 1. கந்தரோடை, 2. ஆனைக்கோட்டை, 3. காரைநகர் – சந்திராந்தை, 4. வேலணை – சாட்டி, 5. மண்ணித்தலை - கல்முனை ஆகிய இடங்களை யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால ஆதிக்குடியேற்றங்கள் ஏற்பட்ட இடங்களாகக் காட்டியது. இவற்றோடு 2011-12, 2017-18 ஆம் ஆண்டுகளில் தொல்லியல் பேராசிரியர்கள் ரொபின் கொனிங்ஹாம், பரமு புஷ்பரட்ணம் ஆகியோர் மேற்கொண்ட அகழ்வாய்வுகளில், யாழ்ப்பாணம் கோட்டை அமைந்துள்ள இடம் கி.மு. 1000 ஆண்டுகாலப் பகுதியிலேயே மக்களின் குடியிருப்புப் பகுதியாக இருந்தது தெரிய வந்தது (இயல் - 6 ஐப் பார்க்கவும்).


பெருங்கற் பண்பாட்டுக் காலத்தில் கந்தரோடையின் துணைக் கிராமங்கள் அனைத்தும் கடற்கரையை அண்டிய குடியேற்றங்கள் ஆகும்
Image Source - பொ. இரகுபதி

இந்த ஆறு முதலாம் கட்டக் குடியிருப்புகளைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டக் குடியிருப்புகளாக நெடுந்தீவு - வெடியரசன் கோட்டை, திகழி, வேரப்பிட்டி, சந்திராந்தை, வேலணை, சாட்டி, மண்ணித்தலை, திருவடிநிலை, கலையோடை, ஆனைக்கோட்டை, முள்ளி, கந்தரோடை, அரியாலை கிழக்கு, துலுக்கன் கோட்டை, வல்லிபுரம், நாகர்கோயில், தாளையடி - செம்பியன் பற்று, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்கள் இனங்காணப்படுகின்றன (Ragupathy, P. 1987: 172).

இந்த ஆதிகாலக் குடியேற்ற மையங்கள் அனைத்தும் - கந்தரோடை ஒன்றைத் தவிர - கடற்கரைகளுக்குச் சமீபமாக, யாழ்ப்பாணப் பரவைக்கடல் அல்லது வடகடலுக்கு அண்மையாக

RADIOCARBON DATES FROM KANTARODAI, SRI LANKA (CEYLON) 1977

P. No.	Sample No.	Trench	Stratum	Pretreatment	5568 Half-life B.P. 1950	A.D/B.C.	5730 Half-life A.D./B.C.	MASCA Corr¹ A.D./B.C.
P-2521	4	A	IV	–	2020 ± 50	70 B.C.	140 ± 50 B.C.	10- 100 ± 50 B.C.
P-2518	5	A	IV	NaOH	2290 ± 50	340 B.C.	410 ± 50 B.C.	420 ± 50 B.C.
P-2520	8	A	V	–	2180 ± 60	230 B.C.	290 ± 60 B.C.	270- 390 ± 60 B.C.
P-2524	9	A	VI	–	2340 ± 50	390 B.C.	460 ± 30 B.C.	440 ± 50 B.C.
P-2514	1	B	V	–	2250 ± 60	300 B.C.	370 ± 60 B.C.	410 ± 60 B.C.
P-2515	2	B	VI	–	2990 ± 60	1040 B.C.	1130 ± 60 B.C.	1290 ± 60 B.C.
P-2516	3	B	VI	NaOH	2070 ± 60	120 B.C.	180 ± 60 B.C.	130 ± 60 B.C.
P-2522	7	B	VII	–	2110 ± 60	150 B.C.	220 ± 60 B.C.	170- 200 ± 60 B.C.
P-2523	15	B	VIII	–	2060 ± 50	110 B.C.	170 ± 60 B.C.	120- 140 ± 60 B.C.
P-2525	16	B	VIII	–	2730 ± 220*	780 B.C.	870 ± 220 B.C.	940- 980 ± 220 B.C.
P-2519	17	B	IX	NaOH	2290 ± 60	340 B.C.	410 ± 60 B.C.	420 ± 60 B.C.
P-2528	19	B	XI	–	2370 ± 60	420 B.C.	500 ± 60 B.C.	480 ± 60 B.C.
P-2526	18	B	X	–	2090 ± 50	140 B.C.	200 ± 60 B.C.	140- 190 ± 50 B.C.
P-2529	6	X	III	–	2350 ± 200*	400 B.C.	470 ± 210 B.C.	440- 460 ± 210 B.C.
P-2517	12	X	IV or V	NaOH	2250 ± 50	300 B.C.	370 ± 50 B.C.	410 ± 50 B.C.
P-2527	11	X	IV or V	Too Small				

* Large tolerance due to small sample size necessitating counting in small counter.
1 For explanation of MASCA corrections see MASCA Newsletter, 1973, Vol.9, No.1, p.1-20.

கந்தரோடையின் கதிரியக்கக் கரிம திகதிகள். P-2515, P-2525 இலக்கமிட்ட மட்கல ஓடுகள் கி.மு. 1350 ஆம் ஆண்டு கி.மு. 1200 ஆம் ஆண்டு காலங்களைக் காட்டுகிறது

Image Source - Bennet Bronson & Siran Deraniyagala

அமைந்த மையங்களாகும். உள்நாட்டிலுள்ள கந்தரோடை வழுக்கையாற்றங்கரையில் அமைந்திருக்கிறது. இக்காலத்தில் அது மழை வெள்ளம் பாயும் வாய்க்காலாகச் செயல்பட்ட போதிலும், ஆதிகாலத்தில் அது கந்தரோடையைக் கடலுடன் இணைத்த ஒரு கடற்கால்வாயாக விளங்கியதாக சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த ஆதி மையங்களின் கடலை அண்டிய இருப்பிடம், அது கடல்வழியாக வந்த ஒரு பண்பாட்டின் உறைவிடம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இங்கு ஏற்கனவே கூறியது போல, தென்னாசிய சூழமைவில் பெருங்கற் பண்பாடு ஒரு தென்னிந்தியப் புலப்பாடு (South Indian Phenomenon) ஆகும். இதை உறுதிப்படுத்தும் ஈம அடக்க நினைவுச் சின்னங்கள் தென்னிந்தியா முழுவதும் பரவிக் கிடக்கின்றன.

இப்பண்பாட்டின் ஆரம்பகாலம் கர்நாடகத்தில் ஹல்லூர், குமரனஹள்ளி, தடகனஹள்ளி, மாஸ்கி ஆகிய மையங்களின் கி.மு. 1900-1500 ஆண்டுகளுக்குரியது என கதிரியக்கக் கரிம ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Moorti, U.S. 1994: 123; Possehl, G. 1994; Bauer, A.M. 2015). இங்கே ஆரம்பித்த இப்பண்பாடு தமிழகமெங்கும் பரவி, அங்கிருந்து கடல்வழியாக யாழ்ப்பாண மையங்களை வந்தடைந்திருக்கிறது.

இப்பண்பாட்டோடு தொடர்புடைய அம்சங்களாக இரும்பின் பயன்பாடு, குளங்கள் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்பட்ட விவசாயம் (வேளாண்மைச் செயற்பாடுகள்), விருத்தியடைந்த நிரந்தரக் குடியிருப்புகள், உட்பக்கம் கறுப்பாகவும் வெளிப்பக்கம் சிவப்பாகவும் இருக்கும் மட்பாண்டங்களை உருவாக்கிய வனைத்தொழில் தொழில்நுட்பம், அம்மட்பாண்டங்களில் பதித்த கீறல் எழுத்துகள் ஆகியவை இடம்பெறுகின்றன. தென்னிந்திய மையங்களின் நகரமயமாக்கம், ஆரம்பகால தமிழக மூவேந்தர்களின் மற்றும் குறுநில மன்னர்களின் தோற்றம், தமிழ் எழுத்தின் ஆக்கம், தமிழ்மொழியினைச் செம்மைப்படுத்தி சங்க இலக்கியங்களைத் தோற்றுவித்தமை யாவும் பெருங்கற் பண்பாட்டின் உச்சக்கட்டச் சாதனைகள் ஆகும் (Ragupathy, P. 1987: 180; Sitrampalam, S.K. 1980; Gururaja Rao, B.K. 1972).

1970 ஆம் ஆண்டில் தொல்லியல் துறைசார் நெறிமுறைகளின் அடிப்படையில் அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தினர் கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வின் போது, அடிமட்ட மண்படைகளில் கிடைத்த கலவோடுகளும் வேறு பொருட்களும் தென்னிந்தியாவிலிருந்து பரவிய பெருங்கற்காலச் சின்னங்கள் என அடையாளம் காணப்பட்டன. அச்சின்னங்களில் பழைமையானவை (P-2515, P-2525) கதிரியக்கக் கரிமத் திகதிக்கணிப்பில் (Radiocarbon Dating) கி.மு. 1350, கி.மு. 1200 ஆகிய ஆண்டுக் காலங்களைக் காட்டின. கந்தரோடையில் வாழ்ந்தவர்கள், ஒன்று தென்னிந்தியாவிலிருந்து இங்கே வந்து குடியேறியவர்களாக இருக்க வேண்டும் அல்லது தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டைக் கடைப்பிடித்த கந்தரோடை மக்களாக இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது (Begley, V. 1973). இந்த அகழ்வாராய்ச்சிக் குழுவிற்குத் தலைமை தாங்கிய விமலா பெக்லி அம்மையார் ஒரு விவரமான அறிக்கையை எழுதி வழங்கியிருந்தார். அந்த அறிக்கையை இலங்கைத் தொல்பொருள் திணைக்களம் இதுவரை வெளியிடவில்லை.

கந்தரோடையிலும் அதையடுத்த யாழ்ப்பாண மையங்களிலும் ஆதி காலப் பெருங்கற்காலக் குடியேற்றங்கள்

கற்காலங்களில் இலங்கைக்கு இடம்பெயர்ந்து வந்த மக்கள் யாழ்ப்பாணத்தைத் தவிர்த்து, காடுகளும் வனவிலங்குகளும் கொண்ட வன்னிப் பிரதேசங்களில் குடிகொண்டபோது, பெருங்கற்கால மக்கள் ஏன் யாழ்ப்பாணத்தில் குடியேறினார்கள்? அவர்கள் சுமந்து வந்த பண்பாட்டிற்கும் தொழில்நுட்பத்திற்கும் இத்தீபகற்பத்தின் இயற்கையமைப்பு சாதகமாக இருந்ததே காரணமெனலாம். வறண்ட காலநிலை, ஆரம்பகாலத்து எளிமையான இரும்புக் கருவிகளினால் இலகுவாக அழிக்கக்கூடிய பற்றைக் காடுகள், சுண்ணாம்புத் தரையில் இயற்கையாகத் தோன்றிய சிறுகுளங்கள், மழைக்காலத்தில் பெருகிவரும் வெள்ள வாய்க்கால்கள், மந்தை மேய்க்கத் தரவை வெளிகள், கடலுணவை ஆபத்தின்றிப் பெற ஆழமற்ற பரவைக்கடல் - இவைகளே பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மனிதனை ஈர்த்த யாழ்ப்பாணத்தின் கவர்ச்சிகள் ஆகம்.

யாழ்ப்பாணத்தின் அறியப்பட்டுள்ள பெருங்கற்காலக் குடியிருப்புகள் யாவும் இத்தகைய சூழலை அண்டியே காணப்படுகின்றன. குறைவான ஆழத்தில் வற்றாத குடிநீர் கிடைப்பதையும் அவர்கள் கருத்திற்கொண்டுள்ளனர். இக்குடியிருப்புகள் தனித்தனி அலகுகளாக இயங்கும் கிராமங்களாக ஆரம்பத்தில் தோன்றியிருக்கலாம். முகிழ்நிலை விவசாயம், பரவைக்கடலில் மீன்பிடித்தல், மந்தை வளர்ப்பு முதலான பன்முகப்பட்ட சீவன முயற்சிகளை உடையவர்களாக இவர்கள் வாழ்ந்துள்ளனர். அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன (இரகுபதி, பொ. 1983: 11).

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பெரிய அளவிலான (40 ஏக்கர்) கந்தரோடைக் குளம்

யாழ்ப்பாணத்தில் பெருங்கற்கால மனிதனை வெகுவாக ஈர்த்த பெரும் மையம் நன்னீர் கொண்ட கந்தரோடைக் குளம் ஆகும். யாழ்ப்பாணத் தீபகற்பம் முழுவதிலும் இயற்கையாக அமைந்த இரு பெரிய குளங்களுள் கந்தரோடைக் குளமும் ஒன்று. பொதுவாக மக்களால் வெட்டப்படும் குளங்கள் வட்ட வடிவமாகவோ, நீள்வட்ட வடிவமாகவோ, சதுரமாகவோ அல்லது நீள்சதுர வடிவிலோ இருக்கும். கந்தரோடைக் குளமோ வயல் காணிகளுக்கு நடுவே இரு நீள்சதுர அலகுகளைக் கொண்டு ‘ட’ வடிவில் அமைந்திருக்கிறது. பின்னால் குடிவந்த மக்கள் இதைப் பெருப்பித்து செம்மைப்படுத்தியிருந்தாலும், அதன் அடிப்படை வடிவம் அது ஆதியில் இயற்கையாக அமைந்த ஒரு நன்னீர்க்குளம் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இக்குளத்தைச் சுற்றி ஆதிகால மக்கள் பெருந்தொகையாகக் குடியேறியிருப்பார்கள்.



யாழ்ப்பாணக் குடியேற்ற மையங்கள்

Image Source - பொ. இரகுபதி

பெருங்கற்கால யாழ்ப்பாண மையங்களின் அகழ்வாய்வுகளில் பெருந்தொகையான கடலுணவு எச்சங்களும், கால்நடை எலும்புகளும், ஈமப் படையல்களில் காணப்பட்டன. சுறா மற்றும் பிற மீன்களின் முள்ளந்தண்டு எலும்புகள் நண்டு, கடலாமை போன்றவற்றின் ஓடுகள் உள்ளிருக்கும் இறைச்சியை எடுப்பதற்காக உடைக்கப்பட்ட சங்குகள் கூரிய ஆயுதத்தினால் வெட்டப்பட்ட அடையாளமுள்ள கால்நடை எலும்புகள் விலங்குகளின் பற்கள் மற்றும் வேறு பல உயிரின எச்சங்கள் ஆகியவை மீன்பிடித்தலும் மந்தை வளர்ப்பும் இந்த ஆதிக் குடிகளின் வாழ்க்கையில் வகித்திருந்த முக்கிய பங்கினை விளக்குகின்றன.

இந்த மையங்கள் பயிர்நிலங்களை ஒட்டி அமைந்திருப்பது, பயிர்ச்செய்கை இவர்களது வாழ்வியலில் முக்கிய பங்காக இருந்தமையைக் குறிக்கிறதெனலாம் (இரகுபதி, பொ. 1983: 11).

யாழ்ப்பாண மையங்களின் குடியேற்றப் படிநிலைகள்

(Phases of Settlements in Jaffna Sites)

கந்தரோடையில் பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தினர் மேற்கொண்ட அகழ்வாய்வுகளின் பெறுபேறுகளையும், யாழ்ப்பாண மையங்களில் கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகளையும் கொண்டு, யாழ்ப்பாண மையங்களின் குடியேற்றக் காலவரிசை முறையை ஆரம்பகாலப் பெருங்கற் பண்பாட்டுக் கட்டம் - வரலாற்று உதய கால கட்டம் - வரலாற்றுக் கால கட்டம் ஆகிய வரன்முறைகளுள் பதிவு செய்ய முடிகிறது. இப்பதிவுகள் கடந்த மூவாயிரம் ஆண்டு காலமாக யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் அதனை அண்டிய தீவகங்களிலும் மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்தமையையும், நாட்டின் உட்பகுதியில் புதிய குடியிருப்புகள் ஏற்பட்டதையும் காட்டி நிற்கின்றன. இக்குடியேற்றக் கட்டங்களின் வகைப்படுத்தலும் அவற்றின் வாழ்வாதார முறைகள் பற்றிய விளக்கங்களும், மேற்கூறப்பட்ட பென்சில்வேனிய பல்கலைக்கழக அகழ்வாய்வுகளின் முடிவுகளையும் கலாநிதி இரகுபதியின் ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டவை (Begley, V. 1973; Ragupathy, P. 1987: 171-176).

குடியேற்றப் படிநிலை 1 – கி.மு. 1200 – கி.மு. 500 ஆரம்பகாலப் பெருங்கற் பண்பாட்டுக் குடியேற்றங்கள்

இந்த ஆரம்பகாலப் பெருங்கற் பண்பாட்டுக் குடியேற்ற மையங்களாக கந்தரோடை, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணக் கோட்டை, காரைநகர், வேலணை, மண்ணித்தலை ஆகிய ஆறு மையங்கள் இடம்பெறுகின்றன. கிறிஸ்துவிற்கு முற்பட்ட முதலாம் ஆயிரத்தாண்டின் ஆரம்பத்திலேயே கந்தரோடை கணிசமான மக்கள் தொகை கொண்ட குடியேற்றப் பகுதியாகி விட்டது என்பது கவனிக்கத்தக்கது.

கி.மு. 800 ஆம் ஆண்டிற்கும் கி.மு. 300 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மேலும் பல புதிய குடியிருப்புகள் இணைந்துகொள்கின்றன. கி.மு. 500 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கந்தரோடை நகரமயமாக ஆன சமயம், பெருங்கற் பண்பாட்டு வாழ்வியலைக் கடைப்பிடித்த துணைக் கிராம மையங்களாக (Satellite Village Centres) பதினேழு இடங்களும், நகரமாகப் பரிணாம வளர்ச்சி பெற்ற இன்றைய யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ள சிங்கை நகரமும் காணப்பட்டன.

மேற்குறிப்பிட்ட மையங்களில் யாழ்ப்பாணக்கோட்டைத் துறைநகர் சர்வதேச வர்த்தக வலைப்பின்னலில் ஒரு கேந்திர மையமாக உருவானது. பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள், இக்காலப்பகுதியில் அதுவும் பெருங்கற் பண்பாட்டைப் பேணிய ஒரு குடியேற்ற மையமாக ஆகிவிட்டதை எடுத்துக்காட்டுகின்றன (மேலதிக விவரங்களுக்கு இயல் 5, இயல் 8 ஐப் பார்க்கவும்).

கி.மு. 500ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் யாழ்ப்பாணக் கோட்டைத்துறை சர்வதேச வர்த்தக வலைப்பின்னலில் ஒரு கேந்திர மையமாக உருவாகிவிட்டிருந்ததை உலகப் புகழ்பெற்ற பிரித்தானிய தொல்லியலாளர் றொபின் கொனிங்ஹாம் தனது 2017 ஆம் ஆண்டின் அகழ்வாய்வுகளில் எடுத்துக்காட்டியிருந்தார் (Davis, C.E. et al. 2018) (6ஆவது இயலில் பார்க்கவும்).

இந்தக் காலகட்டத்தின் ஒரு முக்கியமான அம்சம், இக்குடியேற்றங்கள் பன்முக வாழ்வாதார முறைகளைக் கடைப்பிடித்த தன்னிறைவான அலகுகளாக இருந்தமையாகும். இவை விவசாயம், கால்நடை வளர்ப்பு, பரவைக்கடல் மீன்பிடிப்பு ஆகியன இணைந்த வாழ்வாதார முறைகளைக் கொண்டிருந்தன எனலாம். இவ்வாறு உணவு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி மக்கள் வாழ்விலும் செழிப்பை உண்டாக்கியது. இத்தகைய செழிப்பை இக்காலக் குடியிருப்புகளில் கிடைத்துள்ள பல்வகை உலோகங்களினாலான பொருட்கள், மணிகள், சங்குப் பொருட்கள் என்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

பன எடுத்துக்காட்டுகின்றன.

பண்பாட்டைப் பொறுத்தவரை, ஆதி இரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டு அம்சங்களை இம்மக்கள் கடைப்பிடித்தார்கள். இவ் விடங்களில் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்களில் பெருங் கற்கால முறிவளைவு கொண்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் (கி.மு. 1200 - கி.மு. 300), மற்ற வகை கறுப்பு-சிவப்பு மட் பாண்டங்கள் (கி.மு. 700 - கி.பி. 300), ஆரம்பகால சிவப்பு மட் கலன்கள் (கி.மு. 1200 - கி.மு. 300) ஆகியவை காணப்பட்டன (மேலதிக விவரங்களுக்கு இயல் 4, இயல் 10 ஐப் பார்க்கவும்).

குடியேற்றப் படிநிலை
2 – கி.மு. 500 – கி.பி. 600
கந்தரோடையின் நகரமயமாக்கம் – நாகரிகம்
(Urbanisation and Civilization of Kantharodai)

நாகரிகம் என்ற சமூகக் கோட்பாடு நகர உருவாக்கத்தை அடிப் படையாகக் கொண்டது. சிற்றூர்களிலிருந்து மக்கள் நகர்ந்து சென்று சேர்ந்து வாழும் பேரூர் என்பதால் 'நகரம்' எனப்பட்டது. 'இகம்' என்றால் வாழுமிடம் என்று அர்த்தம். நகர் + இகம் ஸ்ரீ நாகரிகம் ஆனது. ஆங்கிலத்திலும் 'Civilization' என்ற சொல் லின் மூலமான 'Civis' என்னும் லத்தின் மொழிச் சொல் 'நகர வாசி' என்னும் பொருள் கொண்டது.

இருபதாம் நூற்றாண்டில் பிரித்தானிய தொல்லியல்துறையின் இயக்குநராகப் பணிபுரிந்த பிரபல அவுஸ்திரேலியத் தொல்லிய லாளரான பேராசிரியர் கோர்டன் சைல்ட் (Prof. Gordon Childe), அவர் எழுதிய 'The Urban Revolution' என்ற நூலில், ஒரு வர லாற்று ஆரம்பகாலக் குடியேற்றம் 'நகரம்' என்ற அந்தஸ்தை அடைவதற்கு கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவேற்றி யிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார் (Childe, G. 1950: 15–16).

1. நிரந்தரமான குடியிருப்புகள்
2. பொருளாதார தக்கவைப்பு நிலை - விவசாய சுழற்சியை ஒழுங்குபடுத்துதல்
3. உபரி உற்பத்தியை மையப்படுத்துதல்
4. மக்களை ஆளும் வர்க்கத்தின் உருவாக்கம்
5. தொடர்பு வலைப்பின்னல்
6. தொலைதூர வர்த்தகம்
7. வசிப்பிடத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு

இந்த நிபந்தனைகள் பொதுப்படையாக இல்லாமல் குறிப்பிட்ட அம்சங்களை மட்டும் கொண்டிருக்கின்றன என ஐரோப்பிய, தென்னாசிய தொல்லியலாளர்களாலும், மானிடவியலாளர்களா லும் விமர்சிக்கப்பட்டது (Joshi 1973; Keesing 1981: Connah 1987). பிரித்தானியத் தொல்லியலாளரான ரேமண்ட் ஆல்சின் (Raymond Allchin) மேற்கூறிய நிபந்தனைகளை மறு பரி சீலனை செய்து 'நகரமயமாக்கல் – நாகரிகமடைதல்' என்பதற்கு கீழ்க்காணும் அளவுகோல்களை முன்வைத்தார் (Allchin, F.R. 1990: 163-173; Allchin, F.R. 1995: 57).

1. நிரந்தரமான பெரிய குடியேற்றம்
2. திட்டமிட்ட நகர அமைப்பு
3. பொது கட்டடக் கலை
4. சமூகப் படிநிலை அமைப்பு
5. குடியிருப்பைச் சுற்றிவர அமைக்கப்பட்ட பாதுகாப்புகள்
6. மக்கள் உபயோகிக்கக்கூடிய எழுத்து
7. கைவினைச் சிறப்புத் தேர்ச்சி
8. தொலைதூர வர்த்தகம்
9. அதிகரித்து வரும் மக்கள் தொகையை ஆதரிக்கக்கூடிய வாழ்வாதார உத்தி

ஆல்சின் கூறும் அளவுகோல்கள், கந்தரோடை ஒரு நகர மைய மாகப் பரிணாமம் பெறுவதற்கான நிபந்தனைகளை – நகரைச் சுற்றி அமைக்கப்பட்ட பாதுகாப்புகள் என்ற ஒரேயொரு அம்சத் தைத் தவிர – முழுமையாக நிறைவேற்றுகின்றன. இந்த அம்சங்களை அடுத்துவரும் பகுதியில் விவரமாகப் பார்ப்போம்.

நாகரிகத்தின் அடிப்படையாக அமைந்தவை நகரங்களாகும். அக்காலகட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்ந்த இடங்க ளாக இவை அமைந்தன. கி.மு. 500 ஆம் ஆண்டுக் காலத்தில் கந்தரோடையும், அதன் துணை நகரமாகவும் சர்வதேசத் துறையாகவும் அமைந்த யாழ்ப்பாணக் கோட்டை மையமும் (சிங்கை நகர்) நகரங்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தன. கி.மு. 300 ஆம் ஆண்டுக் காலத்தில் வல்லிபுரமும் பூநகரியும் தலைநகரமான கந்தரோடையின் துணை நகரங்களாக வளர்ச்சி பெற்றிருந்தன. சம்புக் கோவளமும் நாவாந்துறையும் துறைமுகங்களாக ஆகிவிட்டிருந்தன.

கந்தரோடையும் அதைச் சூழ்ந்த நகரங்களும் கிராமங்களும் – அவை யாவும் இணைந்து 'ஒரு நாகரிகம்' என்ற கோட்பாட்டை நிறைவு செய்திருக்கும் அம்சங்கள் இவை: (Thiagarajah, S. 2016: 268–325).

1. நிரந்தரக் குடியிருப்புகள்
2. திட்டமிட்ட நகர அமைப்பு
3. வாழ்வாதாரப் பொருளாதாரம்: நெல், சிறு தானியங்கள், மீன் பிடித்தல், மந்தை வளர்ப்பு
4. பட்டினமயமாக்கம்: யம்புத்துறை, நாவாந்துறை, யாழ்ப் பாணத் துறை
5. போக்குவரத்துத் தொடர்புப் பாதைகளும் உள்நாட்டு வர்த் தகமும்
6. இந்து சமுத்திரப் பெருங்கடல் வர்த்தகம்
7. கட்டடக் கலையும் சிற்பங்களும்
8. கைவினை - தொழில்நுட்பம் - வனைதல் - சாயம் - மணிகள் - சங்குத் தொழில் - வளையல்கள், மணிமாலைகள் - கோலகுச்சிகள்
9. உலோகத் தொழில் - இரும்பு - செம்பு - வெண்கலம்
10. தொடர்பு மொழியும் தமிழ் மற்றும் பிராகிருத எழுத்து வடி வங்களும்
11. சமூகத் தலையாரி, வேள், அரசன்: கோவேதன், சடராசன், வளைவாணன்
12. பரந்த நோக்குடைய மத நடவடிக்கைகள் (Cosmopolitan Religious Activity)

யாழ்ப்பாணத்திலிருந்த ஆதிக்குடியிருப்புகள் அனைத்திலும் கந்தரோடையே பரப்பளவிலும் மக்கள் குடியேற்றத் தொகையி லும் பெரியதாகும். இதற்கு அங்கே இயற்கையாக அமைந்தி ருந்த நன்னீர்க் குளமும் ஒரு காரணமாகும். அம்மக்கள் பேணிய பெருங்கற் பண்பாட்டு வாழ்வியலுக்கேற்ற பொருத்த மான நிலைமைகள் அவ்விடத்தில் காணப்பட்டன. கி.மு. 1200 ஆண்டுக்காலப் பகுதியிலிருந்து படிப்படியாக முன்னேற்றம் கண்ட பெருங்கற்காலக் கிராமமான கந்தரோடை, கி.மு. 500 ஆம் ஆண்டளவில் ஒரு நகரமாக வளர்ச்சியடைந்தது.

உலக வரலாற்றில் 'நகர உருவாக்கம்' என்பது வேறுபட்ட காலப் பகுதிகளை உள்ளடக்கிய படிநிலை வளர்ச்சியைக் குறிப்பிடு கிறது. தொல்பழங்கால நகர உருவாக்கம், பண்டைய நகர உருவாக்கம், மத்தியகால (Medieval) நகர உருவாக்கம், நவீன கால நகர உருவாக்கம் என நான்கு வேறுபட்ட காலங்களுக் குரிய பண்பாட்டு நிலைகளை இங்கே காண்கிறோம்.

தொல்பழங்கால நகர உருவாக்கம் வெண்கலக்கால யுகத்தைச் சேர்ந்தது. இது கி.மு. 6000 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்ப மாகி, கி.மு. 1500 வாக்கில் முடிவு பெறுகிறது. உதாரணமாக சுமேரிய, எகிப்திய, சிந்துவெளி நாகரிகங்களைச் சொல்லலாம்.

அடுத்த இரண்டாவது கட்ட நகர உருவாக்கம் ஆதி இரும்புக் காலத்திற்குரியது. இது கி.மு. எட்டாம் நூற்றாண்டுக் காலத்தில் ஆரம்பமாகி, கி.பி. 5 ஆம் நூற்றாண்டு வாக்கில் நிறைவு பெறு கிறது. இலங்கையில் கந்தரோடை, அநுராதபுரம், மகாகமம் ஆகிய மையங்களின் நகரமயமாக்கம் இக்காலகட்டத்திற்கு உரியன.

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்



கந்தரோடையின் நகர அமைப்பு

Image Source - Barbara Helwing

www.sangathamil.com

கியூபாவை அடிபணிய வைக்கும் அமெரிக்கா!

போரா இராஜதந்திரமா இன்றைய தேவை?

ஜங்கரன் விக்கினேஸ்வரா-

23.05.2026

வரலாற்றில் அமெரிக்காவிற்கும் கியூபாவிற்கும் இடையிலான உறவு பல தசாப்தங்களாக பதட்டமாகவே இருந்து வருகிறது. கியூபப் புரட்சி மற்றும் பிடல் காஸ்ட்ரோவின் எழுச்சிக்குப் பிறகு, அரசியல் கருத்து வேறுபாடுகள், பொருளாதாரத் தடைகள் மற்றும் இராணுவ அழுத்தங்கள் ஆகியவை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் சிக்கலாக்கி உள்ளன. இந்த வரலாற்றின் காரணமாக, நவீன உலகில் கியூபா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவது சாத்தியமா என்று பலர் வியக்கின்றனர்.

வரலாற்று ரீதியாக, இராணுவ மோதல் நெருங்கிவிட்டதாகத் தோன்றிய பலதருணங்கள் இருந்துள்ளன. இதற்கு ஒரு முக்கிய உதாரணம் பே ஆஃப் பிக்ஸ் (Bay of Pigs) படையெடுப்பு ஆகும், அப்போது அமெரிக்காவின் ஆதரவுடன் நாடுகடத்தப்பட்ட கியூபர்கள் காஸ்ட்ரோவின் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றனர். மற்றொரு பெரிய நெருக்கடி கியூப ஏவுகணை நெருக்கடி ஆகும். அப்போது சோவியத் யூனியன் கியூபாவில் அணு ஏவுகணை-களை நிறுவி, உலகை அணு ஆயுதப் போருக்கு அருகில் கொண்டு வந்தது. இந்த நிகழ்வுகள் பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையே அச்சத்தையும் அவநம்பிக்கையையும் உருவாக்கியது.

ஆனாலும் தற்போது கியூபா மீது ஒரு நேரடி அமெரிக்க இராணுவத் தாக்குதல் சாத்தியமற்றதாகவே கருதப்படுகிறது.

போரா இராஜதந்திரமா?

நவீன சர்வதேச அரசியல், வெளிப்படையான போரை விட இராஜதந்திரம், பொருளாதார அழுத்தம் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துகிறது. அமெரிக்கா ஏற்கனவே இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதை விட, பொருளாதாரத் தடைகளையும் அரசியல் பேச்சுவார்த்தைகளையும் கியூபா மீது செல்வாக்கு செலுத்தப் பயன்படுத்துகிறது. மேலும், ஒரு தாக்குதல் நடத்தப்பட்டால், ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புகள் உட்பட சர்வதேச சமூகத்திடமிருந்து விமர்சனங்களை எதிர்கொள்ள நேரிடும்.

ஒரு தாக்குதல் நடப்பதற்கான வாய்ப்பு குறைவு என்பதற்கு மற்றொரு காரணம், பனிப்போர் காலத்தில் இருந்தது போன்ற இராணுவ அச்சுறுத்தலை கியூபா இப்போது கொண்டிருக்கவில்லை. அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான போட்டி நிலவிய காலத்தில், சோவியத் யூனியனுடனான அதன் நெருங்கிய உறவின் காரணமாக கியூபா ஒரு மூலோபாய முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. 1991இல் சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்த பிறகு, பதட்டங்கள் கணிசமாகக் குறைந்தன. அரசியல், மனித உரிமைகள் மற்றும் பொருளாதார அமைப்புகள் தொடர்பாக இன்னும் கருத்து வேறுபாடுகள் நிலவினாலும், பராக் ஒபாமாவின் ஜனாதிபதி பதவிக் காலத்தில் இராஜதந்திர உறவுகள் மீண்டும் திறக்கப்பட்டது உட்பட, இரு நாடுகளும் உறவுகள் மேம்பட்ட காலகட்டங்களையும் அனுபவித்துள்ளன.

இருப்பினும், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பதட்டங்கள் அதிகரிக்கக்கூடும் என்று சில வல்லுநர்கள் நம்புகிறார்கள். உதாரணமாக, அரசியல் ஸ்திரமின்மை, வெளிநாட்டு இராணுவ ஈடுபாடு அல்லது கரீபியன் பிராந்தியத்தில் ஏற்படும் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மோதலை உருவாக்கக்கூடும். ஆயினும், இதுபோன்ற சூழ்நிலைகளில்கூட, பெரும்பாலான அரசாங்கங்கள் பேச்சுவார்த்தையையே விரும்புகின்றன, ஏனெனில் போர் கடுமையான பொருளாதார மற்றும் மனிதாபிமான விளைவுகளை ஏற்படுத்தும்.

அமெரிக்காவிற்கும் கியூபாவிற்கும் இடையே மோதல்கள் இருந்துள்ளன என்பதை வரலாறு காட்டினாலும், கியூபா மீதான ஒரு நவீன அமெரிக்கத் தாக்குதல் நடப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. இன்றைய உலகம் மிகவும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளது, மேலும் இராணுவ நடவடிக்கை பெரும்பாலும் தீர்வுகளை விட பெரிய சிக்கல்களையே உருவாக்குகிறது. நாடுகள் தங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு, இராஜதந்திரம், வர்த்தகம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவை மிகவும் நடைமுறைக்கு உகந்த வழிகளாகத் திகழ்கின்றன.

1959 கியூபா புரட்சி

1959 ஆம் ஆண்டு நடைபெற்ற கியூபா புரட்சி உலக வரலாற்றில் மிக முக்கியமான அரசியல் மாற்றங்களுள் ஒன்றாகும். இந்தப் புரட்சியின் மூலம் கியூபாவில் இருந்த அடக்குமுறை ஆட்சி முடிவுக்கு வந்து, சமூகவாத அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தப் புரட்சியை முன்னின்று வழிநடத்தியவர் பிடல் காஸ்ரோ (Fidel Castro) ஆவார். அவருடன் சேகுவேரா, ராவுல் காஸ்ரோ போன்றோர் இணைந்து போராடினர்.

அந்த காலத்தில் கியூபாவை பட்டிஸ்டா (Fulgencio Batista) என்ற ஆட்சியாளர் ஆட்சி செய்தார். அவரது ஆட்சி ஊழல், ஏழை மக்களின் சுரண்டல் மற்றும் அரசியல் அடக்குமுறையால் நிரம்பியிருந்தது. அமெரிக்காவின் ஆதரவுடன் நடந்த அவரது ஆட்சி பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால் மாணவர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் புரட்சியை ஆதரிக்கத் தொடங்கினர்.

1953 ஆம் ஆண்டு (Moncada Barracks Attack) புரட்சிப் போராட்டம் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்த முயற்சி தோல்வியடைந்தாலும், பின்னர் ஃபிடல் காஸ்ட்ரோ மெக்சிகோவில் இருந்து திரும்பி 26 ஜூலை (26th July Movement) என்ற இயக்கத்தை உருவாக்கினார். சியாரா மாஸ்திரா மலைப்பகுதிகளில் கெரில்லா போர் நடத்தி, மக்களின் ஆதரவைப் பெற்றார்.

1959 ஜனவரி 1ஆம் தேதி பட்டிஸ்டா நாடு விட்டு தப்பிச் சென்றார். இதன் மூலம் கியூபா புரட்சி வெற்றி பெற்றது. பின்னர் பிடல் காஸ்ட்ரோ தலைமையில் புதிய அரசு அமைக்கப்பட்டது. இந்த அரசு நில சீர்திருத்தம், இலவச கல்வி, இலவச மருத்துவ சேவை போன்ற பல சமூக நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

ஆனால் இந்தப் புரட்சி அமெரிக்கா மற்றும் கியூபா இடையிலான உறவை மோசமாக மாற்றியது. கியூபா பின்னர் சோவியத் ஒன்றியத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. இதனால் ஏவுகணை பிரச்சனை (Cuban Missile Crisis) போன்ற முக்கிய உலக அரசியல் பதற்றங்களும் உருவானது.

1959இல் ஏற்பட்ட கியூபா புரட்சி என்பது ஒரு சாதாரண அரசியல் மாற்றம் அல்ல; அது சமூக சமத்துவம், தேசிய சுயாட்சி மற்றும் மக்கள் உரிமைக்கான போராட்டத்தின் சின்னமாகும். இந்த இயக்கம் புரட்சி உலக அரசியல் வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வாகக் கருதப்படுகிறது.

"அமெரிக்கா கியூபா மீது தாக்குதல் நடத்தும் இராணுவ திறன் கொண்ட நாடாக இருந்தாலும், தற்போதைய உலக அரசியல் சூழலில் அது மிகவும் குறைந்த சாத்தியமுடைய ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. சர்வதேச அழுத்தம், அரசியல் விளைவுகள், பொருளாதாரச் சுமைகள் மற்றும் உலக நாடுகளின் எதிர்வினைகள் ஆகியவை இப்படிப்பட்ட நடவடிக்கையைத் தடுக்கின்ற முக்கிய காரணிகளாக உள்ளன"

அமெரிக்கா கியூபா மீது தாக்குதல்

ஆயினும் இரு நாடுகளுக்கிடையேயான உறவு பல தசாப்தங்களாக அரசியல் பதற்றம், பொருளாதாரத் தடைகள், மற்றும் பாதுகாப்பு சார்ந்த கவலைகளால் நிரம்பியுள்ளது. இதனால் "அமெரிக்கா கியூபா மீது நேரடி தாக்குதல் நடத்துமா?" என்ற கேள்வி பலரிடமும் எழுகிறது. இக்கட்டுரையில் அந்த சாத்தியத்தை அரசியல், இராணுவ, பொருளாதார மற்றும் சர்வதேச உறவுகள் என்ற கோணங்களில் ஆய்வு செய்வோம்.

1959ஆம் ஆண்டு கியூபாவில் நடைபெற்ற புரட்சிக்குப் பிறகு, காஸ்ரோ தலைமையிலான அரசு அமெரிக்காவுக்கு எதிரான கொள்கைகளை ஏற்றுக்கொண்டது. இதன் விளைவாக இரு நாடுகளுக்கும் இடையே உறவு மோசமடைந்தது. இதன் பின்னர் உலகத்தை அணு போரின் விளிம்பிற்கு கொண்டு சென்றன. அதன் பின்னர் அமெரிக்கா கியூபாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை நீண்ட காலமாகப் பேணிவருகிறது.

இன்றைய சூழலில் அமெரிக்கா நேரடி இராணுவத் தாக்குதல் நடத்துவது மிகவும் குறைந்த சாத்தியமுள்ளதாக பல அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். காரணங்கள் பல உள்ளன. சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐ.நா. அழுத்தம், எந்த நாட்டின் மீதும் காரணமின்றி தாக்குதல் நடத்துவது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானதாக கருதப்படும். இதனால் உலக நாடுகளின் கண்டனம் உருவாகலாம்.

அரசியல் விளைவுகள்:

அரசியல் விளைவுகளாக கியூபா மீது தாக்குதல் நடத்துவது லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்காவின் செல்வாக்கை பாதிக்கக்கூடும். பல நாடுகள் இதை ஆதிக்க அரசியலாக பார்க்கலாம். பொருளாதார செலவுகள் ஒரு போர் மிகப்பெரிய நிதிச் சுமையை ஏற்படுத்தும். அமெரிக்கா ஏற்கனவே பல உலகளாவிய பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதால் புதிய போரைத் தொடங்குவது கடினமாக இருக்கலாம்.

உள்நாட்டு அரசியல் குழப்பம் ஏற்படும் சாத்தியம் உள்ளது. அமெரிக்க மக்களிடையே தேவையற்ற வெளிநாட்டு போர்களுக்கு எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. எனவே அரசியல் ஆதரவு இல்லாமல் தாக்குதல் நடத்துவது சிரமமானது.

இராணுவ ரீதியாக சாத்தியமா?

இராணுவ திறனின் அடிப்படையில் பார்க்கும்போது, அமெரிக்காவுக்கு உலகின் மிகப்பெரிய மற்றும் நவீன இராணுவ அமைப்பு உள்ளது. அதனால் கியூபா மீது தாக்குதல் நடத்தும் திறன் தொழில்நுட்ப ரீதியாக இருக்கிறது. ஆனால் "சாத்தியம்" மற்றும் "நடைமுறை" என்பது வேறு விஷயங்கள். ஒரு நடவடிக்கையின் விளைவுகள் மற்றும் உலகளாவிய எதிர்வினைகள் முக்கியமாக கருதப்படுகின்றன.

கியூபா ஏதேனும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு நேரடி அச்சுறுத்தலாக மாறினால், அல்லது பெரிய இராணுவ கூட்டணிகளில் ஈடுபட்டால், பதற்றம் அதிகரிக்கலாம். இருப்பினும் தற்போதைய சூழலில் பொருளாதாரத் தடைகள், தூதரக அழுத்தங்கள், மற்றும் அரசியல் பேச்சுவார்த்தைகள் போன்ற வழிகளே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

அமெரிக்கா கியூபா மீது தாக்குதல் நடத்தும் இராணுவ திறன் கொண்ட நாடாக இருந்தாலும், தற்போதைய உலக அரசியல் சூழலில் அது மிகவும் குறைந்த சாத்தியமுடைய ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. சர்வதேச சட்டம், அரசியல் விளைவுகள், பொருளாதாரச் சுமைகள் மற்றும் உலக நாடுகளின் எதிர்வினைகள் ஆகியவை இப்படிப்பட்ட நடவடிக்கையைத் தடுக்கின்ற முக்கிய காரணிகளாக உள்ளன. எனவே, எதிர்காலத்தில் பதற்றங்கள் தொடர்ந்தாலும், நேரடி போர் நிகழ்வதைவிட தூதரக மற்றும் அரசியல் முறைகள் முன்னிலையாக இருக்கும் என்பதே அதிக வாய்ப்புள்ள நிலைப்பாடாகும்.

மீட்பு

உக்கிரமாகப் பெய்து கொண்டிருந்த பனியையும் பொருட்படுத் தாமல் காற்றோ, வெளிச்சமோ வராத அந்தச் சின்னஞ் சிறிய சமையல் அறைக்குள், ஈரவிறகுகள் எழுப்பிய புகை மண்டலத் திற்குள் மூழ்கி, இடிந்து போயிருந்த மண் அடுப்பின் எதிரே அமர்ந்து கொண்டு, தண்ணீரைக் கொதிக்க வைத்துக் கொண் டிருந்தாள் பரமேஸ்வரி.

–ச. முருகானந்தன், தமிழீழம்

செல்லையரின் குறட்டை ஒலி அதிகாலை நிசப்தத்தில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

அடுப்புப் புகட்டில் குப்பி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதி காலையின் வரவைச் சேவல் அறிவித்துவிட்ட பின்னரும், இருள் இன்னமும் முற்றாக விலகவில்லை.

எரிய மறுத்து அடம்பிடித்த ஈர விறகுகளைக் குனித்து ஊதிவிட்டு நிமிர்ந்த பரமேஸ்வரியைச் சாம்பல் நிறத்தில் படை படையாக வந்த புகைச்சுருள் திணற வைக்கவே, மூச்சு முட்டுவது போலி ருந்தது அவளுக்கு.

“மாரிகாலம் வந்திட்டால் இந்த ஆய்க்கினைதான். காய்ந்த விற காய்ப் பார்த்து ஒத்தாப்புக்குள்ளை எடுத்து வைச்சிருக்கலாம்” என்று அங்கலாய்த்துக் கொண்ட பரமேஸ்வரி, மறுபடியும் அடுப்பை ஊதினாள். இம்முறை அடுப்பு விளாசி எரிய ஆரம் பித்தது.

செல்லையர் அறை மூலையில் சேலையைப் போர்த்திக் கொண்டு முடங்கிப் போயிருந்தார். அந்தச் சின்னஞ் சிறு வீட்டில் ஓர் அறையும், சமையல் கட்டும், தாவாரமும் மட்டுமே இருந் தது. வாழ்க்கைப் போராட்டத்தில் வறுமையைத் தோற்கடித்து, வளமான வீடு கட்ட அவர்களால் முடியவில்லை.

“இது ஒரு இயக்கத்தின்ர போராட்டமில்லை...! இனத்தின்ர போராட்டம்... இந்த மக்கள் போராட்–டத்திலை மக்கள் எல்லாம் பார்வையாளராக நில்லாமல், பங்காளராக வரவேணும்...”

பரமேஸ்வரி எழுந்து கணவரருகே வந்து அவரை எழுப் பினாள். “இஞ்சாருங்கோ, விடிஞ்சு போச்சு... கிளிநொச்சிக்குப் போகவேணுமெல்லே...”

மனைவியின் முகத்தில் மகிழ்வோடு விழித்தார் செல்லையர்.

காலையில் மண்மீட்பு நிதி மீளளிப்பு வைபவம் கிளிநொச்சி

முதல்ல ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற இந்த மண்ணைத்தான் மீட்கவேணும். நான் மண்மீட்பு நிதியை மீளப் பெறப் போறதில்லை. அது அவங்களட்ட இருந்தால் எவ்வளவோ பிரயோசனப்படும்....

நகரில் நடைபெற இருந்தது, போகவேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் செல்லையர் செலுத்திய மண்மீட்பு நிதி, இன்று அவருக்கு மீளளிக்கப்பட இருந்தது. அதைப் பெறுவதற்கு இன்று அவர் கிளிநொச்சிக்குப் போக வேண்டும். செல்லையர் சுறுசுறுப்படைந்தார்.

வன்னேரிக்குளம், கிளிநொச்சி நகரிலிருந்து முப்பது கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தாலும், பொருண்மியத் தடை ஏற்பட்ட பின்னர் போக்குவரத்துச் சேவை நின்றுபோய்விட்டது. மிதி வண்டியில்தான் போகவேண்டும்.

செல்லையரிடம் நல்ல மிதிவண்டி கூட இல்லை. நாட்டு நிலைமை அமைதியாக இருந்த காலத்திலேயே சராசரி வாழ்க்கை வாழ்ந்தவர்தான். வயலிலும் தோட்டத்திலும் அய ராது உழைத்தும் கூட, பற்றாக்குறை தொடரவே செய்தது. கடந்த நாலாண்டுகளுக்கு மேலாக அமுலிலிருக்கும் பொருண் மியத் தடை அவர்களது நிலையைப் பின்னடைய வைத்தன.

மண்ணெண்ணை விலை அதிகரிப்பு, உரத் தட்டுப்பாடு என விவசாயிகள் திண்டாடுகையில், செல்லையரும் அதற்கு விதி விலக்கல்ல. செல்லையரின் வருவாய் வீழ்ச்சியடைந்த அதே வேளையில், கடன் சுமை அதிகரித்தது. ஒவ்வொன்றாக விலைப்பட்டன. செல்லையர் அல்லும், பகலும் மண்ணைக் கிண்டி அயராது உழைத்தும், சிறந்த அறுவடை கிடைத்தும் கூட, இலாபமீட்ட முடியவில்லை. பொருட்கள் குதிரை விலை, யானை விலை என்றாகிவிட்ட நிலையில் அரை வயிறும், கால் வயிறுமாக அவர்களது வாழ்வு நகர்ந்தது. பிள்ளைகள் நால் வரும் மெலிந்து வாடிப்போயிருந்தார்கள். செல்லையரையும் அடிக்கடி மலேரியா போட்டு உலைத்தது. கொஞ்சம் கடுமையாக வேலை செய்தால், காய்ச்சல் மறுபடியும் வந்துவிடும். இரண்டு மூன்று கிழமைகள் வேலைவெட்டி செய்ய முடியாது.

இந்த நிலையில், குடும்ப நிலை தாழ்ந்து கொண்டிருந்தது. பர மேஸ்வரியின் தாலிக்கொடியும் அடைவில் போனது. வட்டியும் முதலுமாகப் பெறுமதி குறைந்து விட்டதாகவும், தாலிக் கொடியை விற்கப் போவதாகவும் சுந்தரம் முதலாளி தெரி வித்தார். பின்னர் செல்லையரும் பரமேஸ்வரியும் மனம் நொந்து போயினர்.

எப்படியும் தாலிக் கொடியை மீட்டு, தாலியைக் கொழுவி கழுத் தில் அணிய வேண்டும் என்ற பரமேஸ்வரியின் எண்ணம் நிறைவேறாமலே போய்விடுமோ என்று தவியாய்த் தவித்தார் செல்லையர்.

அவர்கள் திண்டாடிக் கொண்டிருந்த போதுதான், மண்மீட்பு நிதி மீளளிப்புப் பட்டியல் செய்தித்தாள்களில் வெளியானது. தமது பெயரைக் கண்டதும் செல்லையரும் பரமேஸ்வரியும் மகிழ்ச்சி யில் பூரித்தனர்.

மண் மீட்புநிதியைச் செலுத்திய காலத்தில் செல்லையர் அரை மனதோடுதான் செலுத்தினார். ஆனால் இன்று இக்கட்டான ஒரு நேரத்தில் அந்தப் பணம் கிடைக்கப்போவதையிட்டு மகிழ்ந்தார்.

"உவங்கள் இந்தப் பணத்தைத் திருப்பித் தரமாட்டாங்கள். ஆக்களை ஏமாத்திக் காசு சேர்க்கிறாங்கள்" என்று அடித்துப் பேசியவர்தான் செல்லையர். ஆனால் அடுத்த ஆண்டே ஒரு தொகுதியினருக்கு மீளளிப்புச் செய்யப்பட்டபோது. இவரைப் போன்றவர்களின் வாயடைத்துப் போய்விட்டது. இதோ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் செலுத்திய இவருக்கே இம்முறை மீளளிக்கப்படப்போகின்றது.

வன்னேரியிலிருந்து மீளளிப்புப் பெறத் தெரிவான இன்னொரு வரான செல்லக்குட்டியும், செல்லையரும் சேர்ந்து அதிகாலை யில் புறப்பட்ட வேண்டும் என்பது நேற்றே போடப்பட்ட திட்டம்.

செல்லக்குட்டியை எதிர்பார்த்த வண்ணம் தேநீர் பருகினார் செல்லையர். பிள்ளைகளும் எழுந்து தேநீர் பருகினார்கள்.

"இஞ்சாருங்கோ...,! காசு எடுத்துக் கொண்டு வரயுக்கையே சுந்தரம் முதலாளியிட்டை தாலிக்கொடியை மீட்டுக் கொண்டு வாங்கோ... தாலி இல்லாமல் திரிய எனக்கு ஒருமாதிரி இருக்கு" என்று ஆவலுடன் கூறினாள் பரமேஸ்வரி. அவளது தவிப்பு அவருக்குப் புரிந்தது.

"சரியப்பா..." என்று கூறிய செல்லையர், செல்லக்குட்டி வரு கிறாரா என ஒழுங்கையை நோக்கினார். வெள்ளை வேட்டியும் சேட்டுமாகத் தூரத்தே மிதிவண்டியில் செல்லக்குட்டி வருவது தெரிந்தது.

"போட்டு வாறன்... மாடுகளைப் பிணைச்சுப் போட்டு அவிழ்த்து விடு..." என்று கூறியபடி மிதிவண்டியில் ஏறினார் செல்லையர்.

"நேரம் போட்டுதோ?" என்றபடி செல்லக்குட்டியும் இணைந்து கொண்டார்.

செல்லையரும், செல்லக்குட்டியும் ஆரம்ப நாட்களில் போராட் டத்தையும், போராளிகளையும் கேலியோடு பார்த்தவர்கள் தான்.

"போராட்டம் எண்ணுறது சிறுபிள்ளை விளையாட்டே? மோட் டுப் பெடியள், அரசாங்கத்தோட, ஆமியோட மோதி வெல்ல முடியுமே...? எல்லாம் இரண்டொரு வருசத்திலை பிசுபிசுத்துப் போகும் பாருங்கோ...." என்று கூறியதுமுண்டு.

ஆனால் இன்றைய நிலையில் செல்லையர் போன்றவர்களும் மாறித்தான் போனார்கள். "என்னெண்டாலும் எங்கட பொடிய ளின்ர தியாகத்துக்கும், வீரத்துக்கும் முன்னால வருமோ?" செல்லக்குட்டி ஒருபடி மேலே போய் துணைப் படையிலேயும் இணைந்து விட்டார். "இது ஒரு இயக்கத்தின்ர போராட்ட மில்லை...! இனத்தின்ர போராட்டம்... இந்த மக்கள் போராட் டத்திலை மக்கள் எல்லாம் பார்வையாளராக நில்லாமல், பங் காளராக வரவேணும்..." எனப் பிரசாரம் செய்து ஏனைய முதியவர்களையும் தூண்டினார்.

பனி மூட்டம் விலகி, சூரியக்கதிர்கள் உடலை எரிக்க ஆரம்பித்தது. "நேரம் பத்து மணியாகுது... கெதியாக மிதி யுங்கோ..." என்று நெற்றியில் வடியும் வியர்வையைக் கை விரலால் துடைத்தபடி வேகமாக மிதித்தார் செல்லையர்.

அவர்கள் கிளிநொச்சியை அடைந்தபோது ஆஸ்ப்பத்திரியடியில் பரபரப்பாக இருந்தது. காயம் பட்ட பலரையும், இறந்த சிலரது உடல்களையும் ஏற்றிக் கொண்டு வாகனங்கள் வண்ண மிருந்தன.

"பரந்தன் பக்கமாக ஆமிக்காரர் முன்னேறப் பார்தவங்களாம், பொடியள் விடவில்லை. பொம்பரும், கெலியும் உதவிக்கு வந் தும் கூட, பொடியள் எதிர்த்து நின்று போராடி ஆமிக்காரரைப் பின்வாங்கச் செய்து போட்டங்கள். எட்டு ஆமிக்காரரின்ர உடல் களையும், பெருமளவு ஆயுதங்களையும் மீட்டிருக் கிறாங்கள்..."

செல்லையரும், செல்லக்குட்டியும் கூட்டத்தோடு நின்று புதினம் பார்த்தனர். கேட்கக் கேட்க மெய்சிலிர்த்தது.

"விமானத்திலையிருந்து கண்டபடி குண்டுகள் போட்டநிலை பத்துச்சனம் செத்துப் போச்சு. முப்பது பேருக்கு மேல காயம் பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்திருக்கு. பொடியள் அடிச்சு விரட் டியிருக்காட்டில் இப்ப "ரவுண்" எல்லாம் எரிஞ்சு கொண்டிருந் திருக்கும்..."

கதைகளைக் கேட்ட செல்லையருக்குப் புல்லரித்தது.

ஏதோ ஒரு உள்ளுணர்வு ஊந்தித் தள்ளவே இருவரும் ஒரு முடிவுக்கு வந்தவர்களாய், பரந்தன் சென்று சிதைவுகளை அப் புறப்படுத்தி இறந்தவர்களின் உடல்களை எடுப்பதில் உதவி புரி யப் புறப்பட்டனர்.

"பங்கர் வெட்டி வைச்சிருந்தால் இந்தச் சனம் தப்பியிரக்கலாம்..." என்று அங்கலாய்த்தார் செல்லக்குட்டி.

"பாவம்... மோதலில் ஐஞ்சு பொடியங்கள் செத்துப் போனாங்கள்... ஆறேழு பேருக்குக் காயம்... வாழுற வயதில இந்த மண்ணுக்காகத் தங்கட உயிரைக் கொடுத்திருக் கிறாங்கள்...ம் நாங்களும் இருந்து என்ன பிரயோசனம்..." என்றார் செல்லையர்.

"ஓமோம்... பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில் லாமல், ஓர் இலட்சியத்திற்காகத் தமது சுகபோக வாழ்க்கை யைத் துறந்து, இந்த மண்ணின் விடுதலைக்காக இறந்து போன இந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் ஆர்த்த முள்ள வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள்..." செல்லக்குட்டியும் அவரது கூற்றை ஆமோதித்தார்.

சிதைந்து போன பங்கர்களையும், காப்பரண்களையும் மீள அமைப்பதற்காகக சிலர் இளைஞர்களோடு சென்றபோது இவர்கள் இருவரும் இணைந்து கொண்டனர். இராணுவத்தின ரின் காப்பரண்களுக்குச் சற்றே தொலைவில் சென்று வேலை செய்தபோது செல்லையருக்குப் பயம் சிறிதும் இருக்கவில்லை.

மறுநாள் மாலையில்தான் வன்னேரிக்குளத்திற்குத் திரும்ப முடிந்தது. "உங்களைக் காணயில்லை எண்டு பயந்து போனன்" என்று மகிழ்வோடு அவரை வரவேற்றாள் பர மேஸ்வரி.

தேநீரை அவரிடம் கொடுத்துவிட்டு, "மீட்பு நிதி எடுத்தனீங் களோ? தாலிக்கொடியை மீட்டாச்சோ?" என்று கேட்ட பரமேஸ் வரி மீது எரிந்து விழுந்தார் செல்லையர்.

"அதுக்கென்ன இப்ப அவசரம்? முதல்ல ஆக்கிரமிக்கப்பட் டிருக்கிற இந்த மண்ணைத்தான் மீட்கவேணும், நான் மண் மீட்பு நிதியை மீளப் பெறப்போறதில்லை. அது அவங்களட்ட இரந்தால் எவ்வளவோ பிரயோசனப்படும்... உனக்குத் தாலி வேணுமெண்டால் மஞ்சள் கயிற்றிலை கோர்த்துக்கட்டு..."

செல்லையரை ஆச்சரியத்தோடு பார்த்தாள், பரமேஸ்வரி. அவர் கூற்றில் ஆழமான அர்த்தமிருப்பதை அவள் புரிய வெகுநேரம் எடுக்கவில்லை.

- களத்தில் 12.06.1996

எந்தப் பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும். அதனைத் தேடிக் கண்டு பிடித்து, அதற்கேற்ற விதத்தில் துணிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்தான் எங்களுடைய வெற்றியே தங்கியிருக்கிறது. அசுர பலங்கொண்ட "கோலியாத்" தை ஒரு சிறுவன் வெற்றிகொண்டது இவ்விதம்தான்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

இஸ்ரேலியத் தூதரை நிராகரித்த குரோசியா: காசாப் போருக்கு எதிரான பால்கன் தேசம்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

24.05.2026

குரொசிய ஜனாதிபதியின் கருத்து காசா போருக்கான உலகளாவிய எதிர்ப்பில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. மேற்கத்திய நாடுகளின் வழக்கமான அரசியல் மொழியிலிருந்து விலகி, அவர் வெளிப்படையாக இஸ்ரேலின் நடவடிக்கைகளை விமர்சித்துள்ளார்.

சில ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலுக்கு முழுமையான ஆதரவைத் தொடரும் நிலையில், மற்ற நாடுகள் மனித உரிமை மற்றும் சர்வதேச சட்ட அடிப்படையில் கடுமையான கேள்விகளை எழுப்பி வருகின்றன.

மத்திய கிழக்கில் நடைபெற்று வரும் காசா போர் உலக அரசியலின் முக்கியமான விடயமாக இன்னமும் தொடர்கிறது. அமெரிக்கா மற்றும் மேற்கத்திய கூட்டணிகளின் ஆதரவுடன் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ள நிலையில், பல நாடுகள் அதற்கு எதிராக தங்களது அரசியல் மற்றும் மனிதாபிமான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றன. அந்த வகையில், பால்கன் (Balkan) பிராந்தியத்தைச் சேர்ந்த சிறிய ஐரோப்பிய நாடான குரோசியா அண்மைக் காலத்தில் கவனிக்கத்தக்க அரசியல் குரலாக உருவெடுத்துள்ளது.

கிழக்கு ஐரோப்பாவில் சோரான் மிலானோவிச் (Zoran Milanović) தலைமையிலான குரோசியா (Croatia) அரசியல் வட்டாரத்தில் புதிய சர்ச்சை உருவாகியுள்ளது. காசா போரில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை தொடர்ந்து கடுமையாக விமர்சித்து வந்த ஜனாதிபதி மிலானோவிச், புதிய இஸ்ரேலிய தூதரின் நியமனத்தை நிராகரித்துள்ளார். இது சாதாரண இராஜதந்திர முரண்பாடு அல்ல. மாறாக, காசா போரின் பின்னணியில் ஐரோப்பிய அரசியலில் உருவாகி வரும் கருத்து வேறுபாடுகளின் வெளிப்பாடாக இது பார்க்கப்படுகிறது.

குரோசியாவின் தற்போதைய அரசியல் சூழல், குறிப்பாக ஜனாதிபதி சோரான் மிலானோவிச் அவர்களின் கருத்துகள், காசா போருக்கான உலகளாவிய எதிர்ப்பில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. மேற்கத்திய நாடுகளின் வழக்கமான அரசியல் மொழியிலிருந்து விலகி, அவர் வெளிப்படையாக இஸ்ரேலின் நடவடிக்கைகளை விமர்சித்துள்ளார். மனித உரிமைகள், சர்வதேச சட்டம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு ஆகியவை அரசியலின் மையமாக இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதி மிலானோவிச் கூறியதாவது, புதிய தூதரின் பெயரை அதிகாரப்பூர்வ ஒப்புதல் கிடைக்கும் முன்பே இஸ்ரேல் அறிவித்தது “எழுதப்படாத இராஜதந்திர விதிமுறையை” மீறுவதாகும். பொதுவாக, எந்த நாட்டும் தனது புதிய தூதரை அறிவிப்பதற்கு முன், அந்த நாட்டு அரசின் மறைமுக ஒப்புதலைப் பெறுவது சர்வதேச இராஜதந்திர மரபாகக் கருதப்படுகிறது.

ஆனால் இந்த விவகாரம் வெறும் நடைமுறை மீறலாக மட்டும் இல்லை. காசா போரில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் குறித்து மிலானோவிச் முன்பே கடுமையான கருத்துகளை வெளியிட்டிருந்தார். அவர், பாலஸ்தீன பொதுமக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் மனிதாபிமான நெறிமுறைகளுக்கு எதிரானவை என்றும், மேற்கத்திய நாடுகள் இஸ்ரேலை விமர்சிக்கத் தயங்குகின்றன என்றும் கூறியிருந்தார்.

குரோசியா இனமோதல்:

முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசான குரோசியா வரலாற்றாகவே போர், இனஅழிப்பு மற்றும் அகதிப் பிரச்சினைகளை அனுபவித்த நாடாகும். 1990களில் முன்னாள் யூகோஸ்லாவியாவின் சிதைவுக்குப் பின்னர் ஏற்பட்ட பால்கன் போர்கள், அந்த நாட்டின் அரசியல் நினைவகத்தில் இன்னும் ஆழமாக பதிந்துள்ளன. பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், நகரங்களின் அழிவுகள், அகதி முகாம்கள் போன்ற அனுபவங்கள் குரோசிய மக்களிடம் போரின் விலையை நன்கு உணர வைத்துள்ளன. இதனால் தான் காசாவில் நடைபெறும் மனிதாபிமான நெருக்கடியைப் பற்றிய அக்கறை அந்நாட்டில் அதிகமாக வெளிப்படுகிறது.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு உருவான யூகோஸ்லாவியா, பல இனங்களையும் மொழிகளையும் கொண்ட கூட்டாட்சி நாடாக இருந்தது. இதில் செர்பியர்கள், குரோசியர்கள், போஸ்னியர்கள், ஸ்லோவேனியர்கள் உள்ளிட்ட பல இனத்தவர்கள் இணைந்து வாழ்ந்தனர். ஆனால் கம்யூனிச ஆட்சியின் வீழ்ச்சியுடன் தேசியவாத அரசியல் தீவிரமடைந்தது.

1991ஆம் ஆண்டு குரோசியா சுதந்திரம் அறிவித்தபோது, அந்நாட்டில் வாழ்ந்த செர்பிய இன மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களுக்கு ஆதரவாக செர்பியா அரசியல் மற்றும் இராணுவ ஆதரவை வழங்கியது. இதுவே ஆயுத மோதலாக மாறியது.

1991 முதல் 1995 வரை நீடித்த இந்தப் போர் குரோசிய இராணுவத்துக்கும் செர்பிய ஆதரவு பெற்ற படைகளுக்கும் இடையே கடுமையான மோதல்கள் நடந்தன. இந்த மோதல்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்தனர். பல நகரங்கள் அழிக்கப்பட்டன. குறிப்பாக வுகோவார் (Vukovar) நகரம் கடுமையாக சேதமடைந்தது. அத்துடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். இன அடிப்படையிலான வெளியேற்றங்கள் இடம்பெற்றன. இந்தப் போர் வெறும் நிலப்பிரச்சினை அல்ல. அது தேசிய அடையாளம், மத வேறுபாடு, வரலாற்றுக் காயங்கள் மற்றும் அரசியல் ஆதிக்கப் போட்டிகளின் வெளிப்பாடாக இருந்தது.

2023இல் இருந்து காசா பகுதியில் மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் அகதி முகாம்கள் மீது தாக்குதல்கள் நடை பெறுவதாக வெளிவரும் தகவல்கள் உலக மனசாட்சியை உலுக்கியுள்ளன. ஆயிரக்கணக்கான குழந்தைகள் மற்றும் பெண்கள் உயிரிழந்துள்ளதாக மனித உரிமை அமைப்புகள் எச்சரிக்கின்றன. இந்த சூழலில், குரோசிய அரசியல் வட்டாரங்களில் இருந்து எழும் விமர்சனங்கள், “பாதுகாப்பு” என்ற பெயரில் பொதுமக்கள் மீது அளவுக்கு மீறிய இராணுவ வன் முறை நடத்தப்படக்கூடாது என்ற கோணத்தில் அமைந் துள்ளன.

பால்கன் நாடுகளின் அரசியல் நிலைப்பாடுகள் பெரும்பாலும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ கூட்டணிகளின் தாக்கத்துக்குள் அமைகின்றன. ஆனால் குரோசியாவின் சில அரசியல் குரல்கள், மேற்கத்திய இரட்டை நிலைப்பாடுகளை கேள்விக்குட் படுத்துகின்றன. பல சந்தர்ப்பங்களில் “சர்வதேச சட்டம் அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்” எனக் குரோசிய தலைவர் குறிப்பிட்டுள்ளார். இது உலகில் உள்ள பல நாடுகளின் கருத்துகளோடும் ஒத்துப்போகிறது.

சிறிய நாடுகளுக்கு குரல் இல்லையா?

குரோசியாவின் இந்த நிலைப்பாடு முழுமையாக அரசு கொள் கையாக இல்லாவிட்டாலும், அந்நாட்டின் அரசியல் விவாதங் களில் மனிதாபிமான அணுகுமுறை வலுப்பெற்று வருவதை காட்டுகிறது. குறிப்பாக இளைஞர்கள், மனித உரிமை இயக் கங்கள் மற்றும் இடதுசாரி அரசியல் வட்டாரங்கள் காசா மக்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்தி வருகின்றன.

இன்றைய உலக அரசியலில் சிறிய நாடுகளின் குரல்கள் கூட முக்கியத்துவம் பெறுகின்றன. குரோசியா போன்ற நாடுகள் வெளிப்படுத்தும் எதிர்ப்புகள், காசா போரின் மீதான உலக மன நிலையை பிரதிபலிக்கின்றன. இராணுவ சக்தி மட்டுமல்ல, மனிதாபிமான பொறுப்பும் சர்வதேச அரசியலின் அஸ்திவாரமாக இருக்க வேண்டும் என்பதையே இந்தக் குரல்கள் நினைவூட்டுகின்றன.

காசா போரின் முடிவு எப்போது என்பது இன்னும் தெளிவாக தெரியவில்லை. ஆனால் அந்தப் போருக்கு எதிராக உலகின் பல மூலைகளிலிருந்து எழும் குரல்கள், மனித இனத்தின் மனசாட்சி இன்னும் உயிருடன் இருப்பதை உணர்த்துகின்றன. அந்தக் குரல்களில் பால்கன் தேசமான குரோசியாவின் குரலும் இன்று கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக மாறியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய வேறுபாடு:

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் (European Union) உட்பகுதியில் கூட இஸ்ரேல் குறித்து ஒரே மாதிரியான நிலைப்பாடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலுக்கு முழுமையான ஆதரவைத் தொடரும் நிலையில், மற்ற நாடுகள் மனித உரிமை மற்றும் சர்வதேச சட்ட அடிப்படையில் கடுமையான கேள்விகளை எழுப்பி வருகின்றன.

இந்நிலையில், இந்த விவகாரம் இஸ்ரேல் - குரோசிய உறவுகளில் தற்காலிக பதற்றத்தை உருவாக்கக்கூடும் என்பதோடு,



ஐரோப்பாவில் இஸ்ரேலின் அரசியல் ஆதரவு மெதுவாக மாறி வருகிறதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

அதேவேளை குரோஷியாவின் இந்த நடவடிக்கை, சிறிய நாடுகளும் உலக அரசியலில் தனித்துவமான குரலை வெளிப்படுத்த முடியும் என்பதை நினைவூட்டுகிறது. குறிப்பாக காசா போரின் பின்னணியில், உலக நாடுகளின் இராஜதந்திர உறவுகள் புதிய சோதனைகளை எதிர்கொண்டு வருகின்றன.

பதினேழாவது மே 18: மறதிக்கு எதிராக நினைவுகள்

20.05.2026

கடந்த 17 ஆண்டுகளாக மாணவர்களும் உட்பட, போராடும் தரப்புகளையும் போராட வேண்டிய தரப்புகளையும் கட்சிகள் ஒருங்கிணைத்ததை விடவும் சிவில் சமூகங்களும் புலம் பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்களும்தான் அதிகமாக ஒருங் கிணைந்திருக்கிறார்கள். "எழுக தமிழில்", "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான" ஆர்ப்பாட்டங்கள் போன்ற எல்லாவற்றிலும் அப்படித்தான். கட்சிகளும் சிவில் சமூ கங்களும் இணைந்த அரசியல் செயற்பாடுகள்தான். கடந்த 17 ஆண்டுகளிலும் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அளவுக்கு தமிழ் அரசியலைக் கொந்தளிக்க, நொதிக்கச் செய்திருக்கின்றன. பொது வேட்பாளர் உட்பட.....

முள்ளிவாய்க்கால் என்பது ஓர் இடத்தின் பெயரல்ல. அதனால் அது ஒரு புவியியல் பதம் மட்டும் அல்ல. அது ஓர் அரசியல் பதம். உலகம் முழுவதும் ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தோடு, இன அழிப்போடு, தொடர்புபட்டு மேலெழுந்த வார்த்தைகளில், இடப் பெயர்களில் அதுவும் ஒன்று. ஏற்கனவே நான்கு ஈழப் போர்களின் போதும் பல்வேறு கிராமங்களின் பெயர்கள் வரலாற்றில் நிரந்தரமாகப் பொறிக்கப்பட்டு விட்டன. வல்வெட்டித்துறை, கொக்கட்டிச்சோலை, ஒதிய மலை, செம்மணி, நவாலி.. என்று ஒரு நீண்ட கொலைக் களங்களின் பட்டியல் உண்டு.

முழுத் தமிழினத்தினதும் நவீன வரலாற்றில் மிகக்குறுகிய காலத்துக்குள் மிகக் குறுகிய நிலப்பரப்பு ஒன்றிற்குள் அதிக தொகை மக்கள் கொல்லப்பட்ட ஒரு யுத்த களத்தின் பெயர் முள்ளிவாய்க்கால். தமிழ் மக்களின் மூன்று தசாப்தங்களுக்கு மேலான ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட கிராமத்தின் பெயர் அது. எனவே இப்பொழுது முள்ளிவாய்க்கால் என்பது ஈழத் தமிழ் இன அழிப்போடு தொடர்புடைய ஒரு குறியீட்டு வார்த்தை. ஈழத் தமிழர்களின் நவீன வரலாற்றில் என்றென்றும் நிரந்தரமாகப் பொறிக்கப்பட்டிருக்கும் ஒரு வார்த்தை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 17 ஆவது மே பதினெட்டிலன்று ஆயிரக்கணக்கானவர்கள் முள்ளிவாய்க்காலுக்கு வந்தார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும் அதாவது "ஜென்சி"கள் கிட்டத்தட்ட ஏழு பேருந்துகளில் வந்தார்கள்.

இதற்கு முன்னரும் நினைவு நாட்களில், நினைவு கூரும் களங்களில், குறிப்பாக முள்ளிவாய்க்காலில், மாவீரர் துயிலும் இல்லங்களில், ஜென்சிகளைக் காணமுடிகிறது. கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த ஹெபர்ட் மார்க்யூஸ் "மாணவர்களே போராட்டத்தின் கூர்முனை " என்று சொன்னார்.

தமிழ்த் தேசிய அரசியலில் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த அடுத்தடுத்த ஆண்டுகளில், பல்கலைக்கழக மாணவர்கள் அதிகம் ஆர்வத்தோடு துடிப்பாகப் போராடினார்கள். அரசியல் கைதிகளுக்காக, நினைவு கூரும் உரிமைகளுக்காக, நில மீட்புக்காக, சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக... போன்ற பல காரணங்களுக்காகத் தீவிரமாகப் போராடினார்கள். கைது செய்யப்பட்டார்கள்.

எனினும் அவர்கள் போராட்டத்தின் கூர் முனைகளாக இல்லை. அவர்களை அவ்வாறு போராட்டத்தின் கூர்முனைகளாக அல்லது மாற்றத்தின் முகவர்களாக அல்லது மாற்றத்தின் நொதியங்களாக மாற்றுவதற்கு தேவையான அரசியல் வழிவரைபடம் கட்சிகளிடம் இல்லை. இப்போது அரங்கிலுள்ள கட்சிகள் அதனைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பதை விடவும், புதிய தலைமைகள் புதிய மக்கள் அமைப்புக்கள் அதைச் செய்வது பொருத்தமாக இருக்காதா? என்று ஒரு மூத்த அரசியல்வாதி கேட்டார்.

கடந்த 17 ஆண்டுகளாக மாணவர்களும் உட்பட, போராடும் தரப்புகளையும் போராட வேண்டிய தரப்புகளையும் கட்சிகள் ஒருங்கிணைத்ததை விடவும் சிவில் சமூகங்களும் புலம் பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் தான் அதிகமாக ஒருங்கிணைந்திருக்கிறார்கள். "எழுக தமிழில்", "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான" ஆர்ப்பாட்டங்கள் போன்ற எல்லாவற்றிலும் அப்படித்தான். கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்த அரசியல் செயற்பாடுகள்தான். கடந்த 17 ஆண்டுகளிலும் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அளவுக்கு தமிழ் அரசியலைக் கொந்தளிக்க,நொதிக்கச் செய்திருக்கின்றன. பொது வேட்பாளர் உட்பட.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்காலில் திரண்ட மக்கள் கூட்டம் இன அழிப்புக்கு எதிரானது. இன அழிப்புக்கு எதிரான நீதியைக் கேட்பது. ஆனால் அங்கே சிந்தப்பட்ட கண்ணீரும் துக்கமும் அந்த நாளோடு வடிந்துபோய் விடக்கூடாது. அது அரசியல் ஆக்க சக்தியாக மாற்றப்பட வேண்டும். அதற்குரிய வழி வரைபடம் என்ன?

முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் காய்ச்சிக் கொடுப்பதுகூட பெருமளவுக்கு ஒரு பொது நிகழ்வாகத்தான் பயிலப்பட்டு வருகிறது. பல்கலைக்கழக மாணவர்கள்,பொது அமைப்புகள், கட்சிகள், சிவில் சமூகங்கள்... என்று பரவலாக மக்கள் கஞ்சி காய்ச்சினார்கள். மக்களிடமே அரிசி சேமிக்கப்பட்டு கஞ்சி காய்ச்சப்பட்டது. ஆனால் இவை யாவும் பொது இடங்களில் கஞ்சி பகிரப்பட்ட உதாரணங்கள். மாறாக எத்தனை பேர் தங்களுடைய வீடுகளில் கஞ்சியைக் காய்ச்சினார்கள்?

பெரு நாட்களில், விரத காலங்களில், விசேஷ உணவைச் சமைத்து அருந்துவது போல எத்தனை பேர் அந்த நாளை தங்கள் வீடுகளில் விரத நாளாக அனுஷ்டிக்கிறார்கள்? சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமியில் இறந்தவர்களுக்காகக் காய்ச்சப்படும் சித்திரைக் கஞ்சி ஆலயங்களில்தான் காய்ச்சப்படும். ஆனால் ஆடிக் கூழ் வீடுகள் தோறும் காய்ச்சப்படும். அது ஒரு பண்பாட்டுப் பெருவிழா. தமிழ் மக்கள் மகிழ்ச்சியைப் பகிரும் ஒரு மாதப் பிறப்பு.

ஆனால் முள்ளிவாய்க்கால் கஞ்சி அப்படியல்ல. அது ஒரு வகை விரத உணவு. துயர உணவு. இன அழிப்பின் நினைவு உணவு. அதை வீடுகளில் சமைத்து, அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கும்போது ஏன் அந்தக் கஞ்சி காய்ச்சப்படுகிறது? அதற்கு பின்னால் இருக்கும் அரசியல் என்ன? போன்றவைகளை மூத்த தலைமுறை இளைய தலைமுறைக்கு எடுத்துக்கூற வேண்டும்.

யூதர்கள் தமது "பாஸ் ஓவர்" பெருநாளை அப்படித்தான் அனுஷ்டிக்கிறார்கள். புளிக்க வைக்கப்படாத மாவில் தட்டிய ரொட்டியைத் தயாரித்து, அதைப் பகிரும் போது, மூத்தவர்கள் இளைய தலைமுறைக்குத் தமது இனம் கடந்து வந்த கொடுமையான அனுபவங்களைப் பகிர்கிறார்கள்.

அவ்வாறு முள்ளிவாய்க்கால் கஞ்சியை வீடுகள் தோறும் பகிர்ந்து மூத்த தலைமுறை அடுத்த தலைமுறைக்கு கஞ்சியின் கதைகளை பரிமாறும் ஒரு நடைமுறை பரந்த அளவில் இல்லை என்று தெரிகிறது. முள்ளிவாய்க்கால் கஞ்சி பொது இடங்களில் காய்ச்சப்படுகின்ற ஒரு குறியீட்டு உணவாகத்தான் காணப்படுகிறது. அது வீடுகளில் சமைக்கப்படும் ஒரு விரத உணவாக இல்லை. அரசியல் உணவாக. இல்லை.. ஒரு வழமையாக இல்லை. அதாவது முள்ளிவாய்க்கால் கஞ்சி முழுமையாக வீடுகளில் குசினிகளுக்குள் இன்னமும் வரவில்லை. அதன் பொருள் முள்ளிவாய்க்கால் கதைகளும் இன அழிப்பின் கதைகளும் வீடுகளில் முழுமையாகப் பகிரப்படுவதில்லை என்பதுதான்.

தமது வீடுகளில் அந்தக் கதைகளைக் கூறுவதற்குப் பெற்றோர் பயப்படுகிறார்கள். அந்த நினைவுகளை மீட்பதால் வரக்கூடிய சட்டரீதியான ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காக ஒரு பகுதி பெற்றோர் அந்தக் கதைகளை தங்கள் பிள்ளைகளுக்குக் கூறுவதில்லை. இன்னொரு பகுதி அவ்வாறு அந்தக் கதைகளைக் கூறினால் அதனால் தங்கள் பிள்ளைகள் மீண்டும் ரத்தம் சிந்தும் அரசியலைத் தெரிந்தெடுத்து விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையோடு அந்த கதைகளை வீடுகளில் சொல்வதில்லை. இவற்றைவிட, இளைய தலைமுறையின் உள்ளங் கைகளுக்குள் காணப்படும் சமூக வலைத்தளங்களிலும் அந்தக் கதைகளை முழுமையாகப் பகிர்வதற்குச் சட்டத் தடைகள் உண்டு. சமூக வலைத்தளச் சூழலில் அதுபோன்ற கதைகளில் ஒரு பகுதியை முழுமையாகவும் பகிரங்கமாகவும் பகிர்வதற்குத் தடை உண்டு.

இப்படிப்பட்டதோர் அரசியல், சமூக, தொழில்நுட்பச் சூழலுக்குள், மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டத்தை முன்னெடுப்பதற் கான புதிய அரசியல் பண்பாட்டுச் சமூகப் பொறி முறை-களை ஈழத் தமிழர்கள் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. "அதிகாரத்திற்கெதிரான மனிதனின் போராட்டம் என்பது மறதிக்கெதிரான நினைவின் போராட்டமாகும்." என்று, மிலன் குந்தேரா கூறியுள்ளார்.

மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம் என்பது பழைய காயங்களைக் கிண்டி ரத்தம் வரவைக்கும் ஒரு செய்முறையா? அல்லது காயங்களை ஆறவிடாமல் அப்படியே பேணும் ஒரு பொறிமுறையா?அதாவது அது காயங்களைச் சுகப்படுத்தும் செய்முறைக்கு எதிரானதா?

அண்மையில் அவ்வாறு கடந்த காலத்தை இரை மீட்கும் சில படங்களை முகநூலில் பகிர்த்தபொழுது முகநூலில் ஒருவர் கேட்டார், திரும்பத்திரும்ப காயங்களைக் கிளறிக் கொண்டிருப்பது சரியா? கொடுமையான ஒரு காலத்தை மறக்கவிடாமல் திரும்பத் திரும்ப இவற்றைப் பகிர்ந்து கொண்டிருக்க வேண்டுமா? என்று.

இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் காயங்கள் ஆறவில்லை என்பதுதான். "சுகப்படுத்தவியலாத ஒரு காயமாக உனது நினைவை" இதயத்தில் வைத்திருப்போம் என்று ஒரு பலஸ்தீனக் கவிஞர் என் பாடவேண்டி வந்தது? அங்கே இன ஒடுக்குமுறை தொடர்ந்து மிருப்பதால் தான். தமிழ் மக்களுடைய கூட்டுக் காயங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அதனால், கூட்டுக் காயங்கள் ஆறாது. இனப்பிரச்சினை எப்பொழுது தீர்க்கப்படுமோ அப்பொழுதுதான் கூட்டுக் காயங்கள் ஆறும். தீர்க்கப்படாத இனப்பிரச்சினை என்பது ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை ஆறாத கூட்டுக் காயந்தான்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாதவரை ஈழத் தமிழர்களின் எல்லா கூட்டுக் காயங்களும் எல்லா மனவடுக்களும் ஆறாதவைதான். இன அழிப்புக்கு எதிரான நீதி கிடைக்காதவரை ஈழத் தமிழர்களின் எல்லாக் கூட்டுக் காயங்களும் ஆறாதவைதான். அவற்றை ஆற்றுவதற்காகத்தான் மறதிக்கு எதிராகப் போராட வேண்டியிருக்கிறது. மறதிக்கு எதிரான நினைவுகளின் போராடம் என்பதே ஒரு கூட்டுக் குணமாக்கல்தான்.இன அழிப்புக்கு எதிரான நீதிதான் இனப்பிரச்சினைகான பொருத்தமான தீர்வாக அமைய முடியும்.

காயங்களைப் பாடுவது; காயங்களை வரைவது; காயங்களை எழுதுவது; காயங்களை வாசிப்பது; காயங்களை நடித்துக் காட்டுவது; காயங்களை நிகழ்த்திக் காட்டுவது; காயங்களை திரைப் படமாக்குவது. அவ்வாறு காயங்களை எழுதி எழுதி காயங்களை வாசித்து; காயங்களைப் பாடி; காயங்களைக் கடந்து செல்வது. அது ஒரு கூட்டுக் குணமாக்கல்.

இன அழிப்பின் விளைவாக ஏற்பட்ட ஒரு சமூகத்தின் கூட்டுக் காயங்களையும் கூட்டு மனவடுக்களையும் கூட்டு அவமானத்தையும், வலியையும் கூட்டுத் துக்கத்தையும் கூட்டு ஆக்கசக்தியாக மாற்றுவது, நீதிக்கு எதிரான போராட்டத்தின் உந்து விசையாக மாற்றுவது.

நன்றி: நிலாந்தன்

இஸ்ரேல் முற்றுகையில் காசாவின் துயரம்: பேரிடரில் மனிதநேய உதவி தடுப்பு!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா.-

21.05.2026

காசா மீதான நீண்டகால முற்றுகையும் தொடர்ச்சியான போர் தாக்குதல்களும் உலக மனசாட்சியை ஆழமாக உலுக்கியுள்ளன. உணவு, மருந்து, குடிநீர், எரிபொருள் போன்ற அடிப்படை தேவைகளுக்கே மக்கள் போராடும் சூழலில், உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சமாதான செயற்பாட்டாளர்கள் காசாவிற்கு உதவிப் பொருட்களை கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், இந்த மனிதாபிமான முயற்சிகளையே இஸ்ரேல் பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து தடுத்து நிறுத்தி, கப்பலில் சென்ற செயற்பாட்டாளர்களைக் கைது செய்த சம்பவம் உலகளவில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

காசா மீது நீடித்து வரும் போரின் பின்னணியில், மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்ல முயன்ற "குளோபல் சுமுத்" (Global Sumud) கப்பலை இஸ்ரேலிய கடற்படை சர்வதேச கடற்பரப்பில் வழிமறித்து, அதிலிருந்த 400-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களை கைது செய்த சம்பவம் உலகளாவிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் பதினொரு அவுஸ்திரேலியர்கள் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள், மருத்துவர்கள், மாணவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவம் ஒரு சாதாரண கடற்படை நடவடிக்கையாக மட்டும் பார்க்கப்படவில்லை. மாறாக, இது சர்வதேச சட்டம், மனித உரிமைகள், கடல் சுதந்திரம் மற்றும் காசா முற்றுகை ஆகியவற்றை மையமாகக் கொண்ட புதிய உலகளாவிய விவாதமாக மாறியுள்ளது.

பேரிடரில் மனிதநேயம்:

காசாவிற்கான கடற்படை தடை பல ஆண்டுகளாக இஸ்ரேலால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இந்த தடை ஆயுத கடத்தலைத் தடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை என்று இஸ்ரேல் விளக்கமளித்தாலும், பல சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இதை "கூட்டு தண்டனை" (Collective Punishment) எனக் கண்டித்து வருகின்றன. ஏற்கனவே உணவு பற்றாக்குறை, மருத்துவ வசதியின்மை மற்றும் இடம்பெயர்வு போன்ற பேரிடர்களால் அவதிப்படும் மக்களுக்கு வெளிநாட்டு உதவிகளும் சீராக சென்றடைய முடியாத நிலை உருவாகியுள்ளது.

இந்தச் சூழலில், மனிதாபிமான உதவிகளை ஏற்றிச் சென்ற கப்பல் குழுவினர், நாங்கள் ஆயுதங்களோ அரசியல் நோக்கங்களோ கொண்டு செல்லவில்லை; பட்டினியால் தவிக்கும் மக்களுக்கு உதவ விரும்புகிறோம் என்று தெரிவித்திருந்தனர். அவர்களில் மருத்துவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பொதுமக்களும் இருந்தனர். ஆனால் கப்பல் காசாவை அணுகும் முன்பே இஸ்ரேலிய கடற்படை அதனை முற்றுகையிட்டு, செயற்பாட்டாளர்களை கைது செய்தது.

இந்த நடவடிக்கை பல கேள்விகளை எழுப்புகிறது. மனிதாபிமான உதவியை வழங்கும் முயற்சிகளும் பாதுகாப்பு அச்சுறுத்தல் எனக் கருதப்படுமாயின், சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் நிலை என்ன? போரின்போது பொதுமக்களுக்கு உதவி வழங்குவதற்கு ஜெனீவா ஒப்பந்தங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில், அரசியல் மற்றும் இராணுவ நலன்கள் மனிதாபிமான கோட்பாடுகளை மிஞ்சிச் செல்கின்றன என்பதற்கான எடுத்துக்காட்டாக இந்த சம்பவம் பார்க்கப்படுகிறது.

பாலஸ்தீன போரில் இதுபோன்ற சம்பவங்கள் புதிதல்ல. 2010 ஆம் ஆண்டு "மாவி மர்மரா" கப்பல் சம்பவமும் உலகளவில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது. அப்போது காசாவிற்கு உதவி கொண்டு சென்ற கப்பலை இஸ்ரேலிய படைகள் தாக்கியதில் பலர் உயிரிழந்தனர். அந்த நிகழ்விற்குப் பிறகும், காசா முற்றுகை குறித்து சர்வதேச அளவில் விவாதங்கள் நடந்தாலும், நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. தற்போது மீண்டும் மனிதாபிமானக் கப்பல் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டிருப்பது, காசா தொடர்பான உலக அரசியலின் சிக்கலான தன்மையை வெளிப்படுத்துகிறது.

சைப்ரஸிலிருந்து காசா வந்த கப்பல்

இதற்கு முன்பாகவும் கொடும் பஞ்சத்தின் விளிம்பில் பாலஸ்தீனத்தில் இருக்கும் காசாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்காக, 2024 மார்ச்சில் சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து கப்பல் காசாவை நோக்கி புறப்பட்டுள்ளது.

காசாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்கான புதிய கடல் பாதை ஒன்றை ஏற்படுத்தும் முன்னோடித் திட்டமாக, சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து இருநூறு தொன் உணவு பொருட்களை ஏற்றிய கப்பல் ஒன்று மார்ச் 12 காசாவை நோக்கி புறப்பட்டது. காசாவின் வட மேற்காக 320 கிலோமீற்றர் தொலைவிலேயே சைப்ரஸ் நாடு உள்ளது.

போரால் பாதிக்கப்பட்டு, பஞ்சத்தின் விளிம்பில் இருக்கும் காசா நகருக்கு உணவுப் பொருட்கள் மற்றும் குடிநீர், மருந்துப் பொருட்கள் ஆகியவை சைப்ரஸ் நாட்டின் துறைமுகத்திலிருந்து கடல் வழியாக தற்போது அனுப்பி வைக்கப்பட்டது. ஆனாலும் அதனையும் இஸ்ரேலிய அரசு தடுத்து நிறுத்தியது.

மேலும் காசா மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொருட்களைச் சேகரித்த ஸ்பெயின் நாட்டின் "ஓப்பன் ஆர்ம்ஸ்" (Open Arms) என்ற அமைப்புக்குச் சொந்தமான கப்பல் காசாவுக்கு 2024 ஏப்ரலில் அனுப்பப்பட்டது. 'ஓபன் ஆர்ம்' என்ற ஸ்பெயின் தொண்டு நிறுவனத்தின் இந்தக் கப்பல் அரிசி, மாவு மற்றும் உணவு பொருட்களை ஏற்றி சைப்ரஸின் லர்னாகா துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது.

கடந்த 2005ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐரோப்பாவிலிருந்து காசாவுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது இதுவே முதல்முறையாகும். இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய அரபு இராச்சியமே அதிக நிதி உதவி அளித்திருப்பதோடு, ஸ்பெயின் தொண்டு நிறுவனம் இறகப்பலை

வழங்கியது. ஆனாலும் இந்த கப்பலையும் இஸ்ரேல் அரசு தடை செய்து நடுக்கடலில் திருப்பி அனுப்பியது அறிந்ததே.

காசாவில் குறிப்பாக வடக்கு காசாவுக்கான உதவிப் பொருட்கள் செல்வதை இஸ்ரேல் தொடர்ந்து தடுத்து வரும் சூழலில் அங்கு ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக மக்கள் உயிரிழந்து வருகின்றனர். காசாவில் பஞ்சம் ஏற்படுவது பற்றி ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உதவி அமைப்புகள் எச்சரித்து வருகின்றன.

இஸ்ரேலின் கடல்வழி முற்றுகை:

காசாவில் 2023 ஒக்டோபர் ஏழாம் திகதி போர் வெடித்தது தொடக்கம் அந்தப் பகுதியை வெளியுலகில் இருந்து இஸ்ரேல் முடக்கி இருக்கும் நிலையிலேயே அங்கு நேரடி உதவி விநியோகத்திற்கு தொண்டு நிறுவனங்கள் முயன்றுள்ளன.

இஸ்ரேல் இராணுவத்தினரின் தொடர் தாக்குதலால் நிலை குலைந்து போயுள்ள காசா நகரில் மக்கள் கடும் நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றனர்.

உணவு, குடிநீர், மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசியமான பொருட்கள் எதுவுமின்றியும், மின்சாரம் இல்லாமலும் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

உணவு இல்லாததால் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ள அந்த மக்களுக்கு தற்போது தரை வழியாகவும், வான் வழியாகவும் அளிக்கப்பட்டு வரும் நிவாரணப் பொருள்கள் போதுமான அளவில் இல்லை.

இதனாலேயே வெளிநாடுகளில் இருந்து உதவிகள் திரட்டப்பட்டு காசாவுக்கு அனுப்ப பல தடவைகள் முயற்சி செய்யப்பட்டன. 2007 ஆம் ஆண்டு காசாவில் ஹமாஸ் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் இஸ்ரேல் அந்தப் பகுதி மீது கொண்டுவந்த கடல்வழி முற்றுகை முடிவுக்கு வரவில்லை.

மேற்குலக இரட்டை நிலைப்பாடு:

மேற்கத்திய நாடுகளின் இரட்டை நிலைப்பாடுகளும் இங்கு விமர்சிக்கப்படுகின்றன. உலகின் சில பகுதிகளில் மனித உரிமை மீறல்களை கடுமையாக கண்டிக்கும் சக்திவாய்ந்த நாடுகள், காசா விவகாரத்தில் மௌனமாக இருப்பதாக பலர் குற்றஞ்சாட்டுகின்றனர். குறிப்பாக பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், மருத்துவமனைகள் மற்றும் அகதி முகாம்கள் மீது நடத்தப்படும் குண்டுவீச்சுகள் போன்றவை உலக மனசாட்சியை கேள்விக்கு உள்ளாக்கியுள்ளன.

இஸ்ரேல் தனது பாதுகாப்பு உரிமையை முன்வைத்தாலும், மனிதாபிமான உதவியைத் தடுக்கிற நடவடிக்கைகள் உலகளவில் அதன் அரசியல் மற்றும் நெறிமுறைப் புகழை பாதிக்கின்றன. காசாவில் வாழும் மக்கள் ஆயுதப்படையினரல்ல. அவர்கள் அனைவரும் அப்பாவி பொதுமக்கள். பட்டினி, நோய், இடம்பெயர்வு ஆகியவற்றின் நடுவே வாழ்வதற்காக போராடும்

காசா மீது நீடித்து வரும் போரின் பின்னணியில், மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்ல முயன்ற "குளோபல் சுமுத்" [Global Sumud] கப்பலை இஸ்ரேலிய கடற்படை சர்வதேச கடற்பரப்பில் வழிமறித்து, அதிலிருந்த 400–க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களை கைது செய்த சம்பவம் உலகளாவிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மனிதர்கள். அவர்களிடம் உதவி கொண்டு செல்ல முயன்றவர்களை கைது செய்வது, மனிதாபிமான உணர்வுகளுக்கே எதிரான செயல் எனப் பார்க்கப்படுகிறது.

இந்த சம்பவம் உலக சமூகத்திற்கு ஒரு முக்கியமான சவாலாகும். மனிதாபிமான உதவி அரசியல் எல்லைகளைக் கடந்து செல்ல வேண்டியது அவசியம். போரிலும் மனிதநேயம் உயிருடன் இருக்க வேண்டும். காசா மக்களின் துயரத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு வெறும் இராணுவ தீர்வுகள் போதாது; நீதி, உரிமை, மனிதாபிமான அணுகுமுறை மற்றும் நிலையான அரசியல் தீர்வே தேவைப்படுகிறது.

17ஆவது மே 18: கூட்டுத் துக்கத்தை அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவது

24.05.2026

நண்பர் ஒருவர் சொன்னார் "கடந்த ஞாயிற்றுக்கிழமை, முள்ளிவாய்க்காலில், நினைவு கூரும் மைதானத்தில், ஒரு தாய் நிலத்தில் விழுந்து கதறி அழுகிறார். அவருடைய முகத்தை கண்ணீரோடு படம்பிடிப்பதற்காக ஒரு கமராக்காரர் தானும் நிலத்தில் தவழ்கிறார். அந்த நேரத்தில் இந்த மைதானத்தில் பெருகிய துக்கம் கண்ணீர் என்பவற்றின் பின்னணியில் அவர் படப்பிடிப்பில் காட்டிய ஆர்வம் நெருடலாக இருந்தது" என்று. கண்ணீரைப் படம்பிடிக்க வேண்டும். துக்கத்தை ஆவணப்படுத்த வேண்டும். ஆனால் இங்கு கண்ணீரும் துக்கமும் தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தில் நினைவுகளைத் தலைமுறைகள் தோறும் கடத்தும் நோக்கத்தோடு சேகரிக்கப்படுகின்றனவா? அல்லது கண்ணீரையும் துக்கத்தையும் நினைவுகளையும் எப்படி கவர்ச்சியான "கொண்டென்ட்" - காணொளிக் கருவாக - அல்லது ஒளிப்படமாக மாற்றலாம் என்று சிந்தித்துப் படம் பிடிக்கப்படுகிறதா? என்ற பொருளில் அவர் கேள்வி எழுப்பினார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் துயிலும் இல்லங்கள் இருந்த காலங்களில், மாவீரர் நாளில் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மட்டும் படம் பிடிக்கலாம். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் கைபேசிப் பயன்பாடு பெருமளவுக்கு இருக்கவில்லை. இந்தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைப் போன்ற பெரிய இந்து கோவில்களுக்குள் கமராக்கள், கைபேசிகள் அனுமதிக்கப்படுவதில்லை. வத்திக்கானிலும் சில தேவாலயங்களில் அப்படித்தான். தாஜ்மஹால் போன்ற பல நினைவுச் சின்னங்கள் அமைந்திருக்கும் வளாகங்களில் படம் எடுப்பதற்கு வரையறைகள் உண்டு. அமெரிக்காவின் செப்டம்பர் 11 நினைவு வளாகத்தில் படம்பிடிக்க வரையறைகள் உண்டு. உலகின் ஒரு பகுதி நினைவிடங்கள், நினைவு வளாகங்கள், நினைவு நிகழ்வுகளில் தனிப்பட்ட தேவைகளுக்காகப் படம் எடுக்க அனுமதி உண்டு. வணிக நோக்கத்தோடு படம் எடுக்க முடியாது .

இந்தக் கட்டுப்பாடுகள் பாரம்பரிய கமராக்களுக்கு பொருந்தலாம். கைபேசிகளுக்கு முழுமையாகப் பொருந்துமா? பல ஆண்டுகளுக்கு முன் "கொழும்பு டெலிகிராபில்" ஒரு சிங்கள விமர்சகர் எழுதியிருந்தார் "மனிதன் இப்பொழுது நடமாடும் கமராவாக மாறிவிட்டான்" என்று. கைபேசிப் பயன்பாடு குறித்த ஒரு கட்டுரையில்தான் அவர் அவ்வாறு எழுதியிருந்தார். இதே முள்ளிவாய்க்காலில் 17 ஆண்டுகளுக்கு முன்பு சிறீலங்காவின் படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கைபேசிகளில் எடுத்த படங்கள்தான் இப்பொழுது உலக அரங்கில் அவர்களுக்கு எதிரான சான்றுகளாக மாறியிருக்கின்றன.

இன அழிப்பு, போர்க் குற்றம் தொடர்பான பல சான்றுகளில் அவ்வாறு படைத்தரப்பு எடுத்த படங்கள்தான் மேசையில் வைக்கப்படுகின்றன. போரின் இறுதிக் கட்டத்தில், மிகக்குறிப்பாக போர்க்களத்தில் இருந்து முழு மக்கள் தொகையும் வழித்து அகற்றப்பட்ட நாட்களில், தமிழ் கமராக்கள் இயங்கவில்லை. பலம் பொருந்திய நாடுகளில் செய்மதிக் கமராக்கள் இயங்கின. இவற்றுடன் களத்தில் நின்ற படை ஆட்களின் கமராக்கள் இயங்கின. வெற்றிக் களிப்பில் தன்னிலை மறந்த படைத்தரப்பினர் தமது சாகசச் செயல்கள் என்று கருதி படம்பிடித்த விடயங்கள்தான் இப்பொழுது குற்றச்செயல்களாக முன்வைக்கப்படுகின்றன. கைபேசியால் தன்னைத்தானே காட்டிக் கொடுத்த ஒரு நாடு.

மனிதர்கள் நடமாடும் கமராக்களாக மாறிவிட்ட ஒரு சூழலில், முள்ளிவாய்க்கால் நினைவு நாள் போன்ற பொது நிகழ்வுகளில், எதை எடுக்கலாம்? எதை எடுக்கக்கூடாது? என்ற கேள்வி நடைமுறைச் சாத்தியமானதா? அந்த நிகழ்வை ஒழுங்குபடுத்தும் ஏற்பாட்டுக் குழு அதனை ஏதோ ஓர் ஒழுங்கிற்குள் கொண்டு வர முடியுமா? பாரம்பரிய கமராக்களை அவர்கள் ஒழுங்குபடுத்தலாம். ஆனால் கைபேசிக் கமராக்களை ஒழுங்குபடுத்தலாமா? ஏனென்றால் இதுபோன்ற நிகழ்வுகளில் "கைபேசிகளைப் பயன்படுத்த வேண்டாம், தன் படம் எடுக்க வேண்டாம், அந்த நிகழ்வின் புனிதத்தை, உளவியல் கனதியைக் குறைக்க வேண்டாம்".. என்று எவ்வளவுதான் வலியுறுத்தினாலும் அதைக் கட்டுப்படுத்த முடியாது. அதை கட்டுப்படுத்தும் ஆட்பலமும் சக்தியும் முள்ளிவாய்க்கால் ஏற்பாட்டுக் குழுவுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

துயிலும் இல்லங்களில், முள்ளிவாய்க்காலில், ஏனைய நினைவு கூரும் களங்களில் ஒரு பகுதியினர் துக்கத்தைக் கொட்டி தீர்க்கிறார்கள். இன்னொரு பகுதியினர் அந்த கண்ணீரையும் துக்கத்தையும் ஆவணமாக்குகிறார்கள். அதில் ஒரு பகுதி அதனை காசு புரளும் காணொளிக் கருவாகப் பார்க்கிறது.

தனது சமூகத்தின் கண்ணீரை, காயங்களை அடுத்த தலைமுறைக்கு கடத்துவது என்பது அதனை காசாக்குவது அல்ல என்று விளங்கப்படுத்த முடியாத ஒரு தொழில்நுட்பச் சூழல் இது. நினைவு நாட்களுக்கு வரும் எல்லாருமே, குறிப்பாக இளைய தலைமுறை பெருமளவுக்கு இதுபோன்ற நிகழ்வுகளில் அந்த நிகழ்வின் அரசியல் அடர்த்தியை, கனதியை பண்பாட்டுப் புனிதத்தை விளங்கி அதில் சீரியஸாக கலந்து கொள்கிறது என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. அங்கு சிந்தப்படும் கண்ணீரையும் துக்கத்தையும் நீதிக்கான போராட்டத்தைச் செலுத்தும் விசையாக மாற்றவேண்டும் என்று, அங்கே கமராக்களோடு கைபேசிகளோடு காணப்படும் எல்லாருமே சிந்திப்பார்கள் என்றும் எடுத்துக் கொள்ளமுடியாது.

எனது நண்பராகிய ஒரு யூடியூப்பர் சொன்னார், இதுபோன்ற நிகழ்வுகளில் பலரும் படம் பிடிப்பார்கள். யார் அதனை டொலர்களை உழைக்கும் கொண்டெண்டாக பார்க்கிறார்கள்? யார் அதனை தலைமுறைகள் தோறும் நினைவுகளைக் கடத்தும் தேசியக் கடமையாகப் பார்க்கிறார்கள்? என்று பிரித்தறிவது கடினம் என்று. அங்கே வணிக நோக்கங்கள் இருந்தாலும், நினைவுகள் கடத்தப்படுகின்றன என்று கூறினார். மேலும் அவர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். கடந்த ஞாயிற்றுக் கிழமை முள்ளிவாய்க்காலை நோக்கிச் செல்லும்போது, பரந்தன் புதுக்குடியிருப்புச் சாலையில் இளையோரின் மோட்டார் சைக்கிள் வாகன அணியை அவர் கடந்து சென்றிருக்கிறார், அந்த மோட்டார் சைக்கிள்களின் வரிசையைக் கடப்பதற்கு தனக்கு கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் எடுத்ததாகவும் சொன்னார்.

அந்த மோட்டார் சைக்கிள் அணியில் காணப்பட்ட இளையோர் கறுப்பு ஆடைகளை அணிந்திருந்தார்கள். தலைகளில் கறுப்புப் பட்டிகளைக் கட்டியிருந்தார்கள். மோட்டார் சைக்கிள்களை அவர்கள் செலுத்திய விதத்தில் ஒருவித சாகச உணர்வு வெளிப்பட்டதைப் பலரும் சுட்டிக்காட்டுகிறார்கள். அந்தச் சாகச உணர்வு எங்கிருந்து வருகிறது? தமிழ் மக்களின் ஆயுத எதிர்ப்பு தோற்கடிக்கப்பட்ட ஒரு நாளை நினைவுகூரும் நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்லும்போது, தாங்கள் தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை என்று காட்டுவதற்கு அவ்வாறு ஒரு சாகச உணர்வை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கலாம்.

ஆனால் அது சாகச உணவை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வு அல்ல. அதைவிட ஆழமான பொருளில் நினைவுகளை, கூட்டுக் காயங்களை, கூட்டுத் துக்கத்தை எப்படி கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவது என்று சிந்திக்கும் ஓர் அரசியல் செய்முறையின் பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதிதான் அந்த நிகழ்வு.

ஆனால் இளைய தலைமுறைக்கு யார் அதனை அவர்களுக்கு விளங்கும் மொழியில், அவர்களின் கைகளுக்குள் சுருக்கப்பட்டிருக்கும் ஒரு தொழில்நுட்பப் பரப்பிற்குள் எடுத்துக் கூறுவது?

இம்முறை முள்ளிவாய்க்காலில் கடந்த ஆண்டை விட மக்கள் தொகை அதிகம். நினைவு கூரும் மைதானத்தை நோக்கிச் செல்லும் பெருஞ் சாலையில் வாகனங்களின் நெரிசல் காரணமாக போக்குவரத்துத் தேங்கி நின்றது. வாகனங்களின் நீண்ட வரிசை. இது 17 ஆண்டுகளுக்கு முன் 2009 ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களில், அந்த வீதியில் காணப்பட்ட காட்சிகளை இரை மீட்க உதவும். அப்பொழுது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஆயிரக்கணக்கானவர்கள் அந்த வழியூடாக இறுதிக் கட்ட யுத்த களத்தை நோக்கி வந்தார்கள். வாகனங்களும் மனிதர்களுமாக மணித்தியாலக் கணக்காக போக்குவரத்து இறுகிப்போய் நின்றது. 17 ஆண்டுகளின் பின் அந்த நினைவுகளை இரைமீட்கும் நிகழ்வுக்காக அதே காலப்பகுதியில், அதே வீதியில், வாகனங்கள் வரிசையில் இறுகி நின்றன.

இம்முறை பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும் ஏழு பேருந்துகளில் சென்றிருந்தார்கள். அவர்களைப் போன்று இளையவர்கள் அதிகமாக வந்திருந்தார்கள். முன் சொன்னதுபோல மோட்டார் சைக்கிள் பேரணியும் வந்தது. அந்த நிகழ்வில், அந்த இடத்தில் தாங்கள் நிற்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அந்த விருப்பத்தை, அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற வேண்டியது கட்சிகளுடைய வேலை. முள்ளிவாய்க்காலுக்கு வரும் இளையோர் அல்லது மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு வரும் இளையோர் அல்லது ஏனைய நினைவு கூரும் களங்களை நோக்கி வரும் இளையோர் அந்த நினைவுகளின் அரசியல் பெறுமதியை, கனதியை உணர்ந்து வருவார்கள் என்று எதிர்பார்க்கத் தேவை இல்லை. அவர்களுக்கு அந்த நினைவுகளின் பின்னால் இருக்கும் அரசியலை எடுத்துக்கூற வேண்டியது மூத்த தலைமுறையின் வேலை. கூட்டுத் துக்கத்தையும் கூட்டுக் காயங்களையும் தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தைச் செலுத்தும் உந்துவிசையாக மாற்ற வேண்டும் என்று எடுத்துக்கூற வேண்டியது கட்சிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களின் கடமை. ஆனால் எத்தனை தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் பலமான இளையோர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உண்டு?

நினைவுகளும் காயங்களும் அடுத்தகட்ட அரசியலைச் செலுத்தும் உணர்ச்சிகரமான, உணர்வுபூர்வமான உந்து விசையாக மாற்றப்பட வேண்டும் என்பது எல்லா அரசியல் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் தெரிகிறது. ஆனால் அதற்குரிய பொறிமுறை யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வெற்றிடம் உள்ளவரை நினைவு கூர்தலை ஒரு சடங்காக, சாகச அரசியலாகப் பார்க்கும் ஒரு போக்கும் இருக்கும். அந்தக் களத்தில் நிற்பதை நினைவுச் சுடரின் முன் மலர்களை வைப்பதைத் தன் படம் எடுத்து அல்லது படம் எடுத்து அதை ஒரு சான்றாக முன்வைக்கும் ஒரு தரப்பும் அங்கே வரும். அங்கு சிந்தப்படும் கண்ணீரை எப்படி கொண்டென்ட் ஆக மாற்றலாம் என்று சிந்திக்கும் யூடியூப்பர்களும் அங்கே வருவர். அவர்கள் அதனை வியாபாரமாகச் செய்தாலும் அதன் வழியே நினைவுகள் தலைமுறைகள் தோறும் கடத்தப்படும் என்பதுதான் இப்போதுள்ள யதார்த்தம். நினைவுகளை, கூட்டுத் துக்கத்தை, கூட்டுக் காயங்களை, கூட்டு அவமானத்தை, கூட்டு வலியை நீதிக்கான போராட்டத்தைச் செலுத்தும் உணர்ச்சிகரமான உந்துவிசையாக மாற்றத் தேவையான பொருத்தமான அரசியல் தரிசனமும் கட்டமைப்பும் பொறிமுறையும் இல்லாதவரை நிலைமை இப்படித்தான் இருக்கும்.

நன்றி: நிலாந்தன்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில்

‘முள்ளிவாய்க்கால் பிரகடனம் – 2026’

18.05.2026

நினைவேந்தலில் நிகழ்த்தப்பட்ட “முள்ளிவாய்க்கால் பிரகடனம் - 2026” உரை...

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஈழத் தமிழ் உறவுகளே!

தமிழ் இன அழிப்பு முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்டு இன்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைகின்றன. தமிழ் இன அழிப்புச் செயன்முறை ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்று பரிணாமத்தைக் கொண்டது. பேரரசுக் கட்டமைப்பின் புவிசார் நலன்களுக்காகவும், சிங்கள-பௌத்த பேரினவாத ஏகாதிபத்தியத்தை தக்க வைப்பதற்காகவும், கூட்டு தமிழ் இன அரசியல் வேணவாவை, அதன் ஆயுத பரிமாணத்தை தமிழ்ழின அழிப்பிற்கூடாக முடிவுக்கு கொண்டு வந்ததன் மாயையை முள்ளிவாய்க்காலில் நிகழும் தமிழ்ழின அழிப்பு நினைவு கூரல் தகர்த்து எறிகின்றது. 17 ஆண்டுகள் கடந்தும் இம்மண்ணிலே கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்ட இரத்தச் சொந்தங்களுக்கு நினைவு நடுகற்கள் இன்றி, ஆகாயமே எல்லையாக, அவர்களின் கனவுகளை சுமந்து வரும் காற்றே சாட்சியாக, இரத்தம் தோய்ந்த மண்ணில் தேசத்திற்கான கனவுகளை சுமந்து, அடக்கு முறையை எதிர்த்து, விடுதலைப் பயணத்தை கூட்டாகத் தொடர ஒரு தேசமாக முள்ளிவாய்க்கால் திடலில் ஒன்று கூடியுள்ளோம். எமது கூட்டு அரசியல் கோரிக்கைகள் நியாயமானவை, அறத்தாற்பரியம் கொண்டவை. இவை இன்னொரு கூட்டு குழுமத்தின் கூட்டுத்தனி இருப்பை அச்சத்திற்கு உள்ளாக்கவில்லை என்பதையும் மீள வலியுறுத்துகின்றோம்.

பேரரசுக் கட்டமைப்பின் வல்லாதிக்கப் போட்டியில் ஏக துருவ உலக ஒழுங்கை தக்க வைப்பதற்காக ஐக்கிய அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும், பல்துருவ பூகோள ஒழுங்கை கட்டமைப்பதற்காக சீனா, ரஸ்யா போன்ற ஏனைய நாடுகளும் தத்தமது புவிசார் நலன்களை முன்னிறுத்தி போரினை முன்னெடுத்து வருகின்றன. புதிய புதிய உலக ஒழுங்குக் கட்டமைப்பு, நவதாராளவாத ஏகாதிபத்தியச் சட்டகத்திற்குள்ளிருந்தே கட்ட கட்டமைக்கப்படுமாக இருந்தால், பூர்வீகக் குடிகளின் இருப்பு தொடர்ந்தும் கேள்விக்குட்பட்டதே. ஏக துருவத்திலிருந்து பல் துருவ உலக ஒழுங்கிற்கு மாறினாலும் அது பேரரசுக் கட்டமைப்புச் சட்டத்தில் இருந்து மாறுபடப் போவதில்லை. இவ்வாறு மாறுபடுகின்ற உலக ஒழுங்கிற்கு ஏற்ப நமது கூட்டு விடுதலை வழித்தடத்தின் தந்திரோபாய உத்திகளை மாற்ற வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. ஈழத் தமிழ் மக்களின் கூட்டு அரசியல் வேணவாவின் கோரிக்கைகள் விட்டுக்கொடுப்பின்றி, தந்துரோபாய உத்திகள் மீளமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வரலாறு இன்று எங்கள் முன் வைத்துள்ளது.

தமிழ்த் தேசிய விழுமிய அடிப்படைகள், மாற்று உலக ஒழுங்கிற்கான முன் மொழிதல்கள் என்பதனையும் பேரரசுக் கட்டமைப்பிற்கு அப்பாற்பட்டது என்பதையும், தமிழ் தேசிய வரலாற்றுப் பட்டறிதலுக்குட்பட்டு நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நவ தாராளவாத, தாராளவாத சட்டக அடிப்படைகளுக்கு உட்பட்டு கட்டமைக்கப்படும் துருவப் பேரரசு கட்டமைப்பு பூர்வீக குடிகளின் இருப்பையும், அவர்களின் நிலத்தினுடனான உறவையும் துண்டாடிக் கொண்டிருக்கிறது என்பதை வரலாறு கோடிட்டு காட்டியுள்ளது. பூர்வீக மக்களின் நில மீட்பிற்கான எழுச்சி பூகோளம் முழுவதும் ஆங்காங்கே எதிரொலித்துக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். தமிழினம் உலகத்தின் மூத்த பூர்வீகக் குடி. தமிழினத்திற்கும் நிலத்திற்குமான உறவையும் அதனுடைய கூட்டுச் சார்புத் தன்மையையும் சங்ககால திணைக்கோட்பாடு தொல்காப்பியத்தில்லிருந்து எமக்கு தந்துள்ளது. திணை வாழ்க்கை முறை, வாழ்தலை, பிளவுகளாக கட்புலனுணர்ந்ததாக தெரியவில்லை. வாழ்தல், தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவிட உறவுமுறையில் தங்கி இருந்தது என்பதை அரச கட்டமைப்பிற்கு முன்னிருந்த திணை முறைமை தெளிவு படுத்துகின்றது.

ஆயுதப் போராட்ட மௌனிப்பின் பின்னர், ஈழத் தமிழ்த் தேசம் என்றுமில்லாதவாறு சிங்கள-பௌத்த தேசிய பேரினவாதத்தாலும், ஏக-பல்துருவ பேரரசுக் கட்டமைப்பினாலும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அடக்கு முறையின் பல்வேறு வடிவங்கள் நாளாந்த வாழ்வியலாக சாதாரண மயப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் தேசத்தின் நிலம் தொடர் அபகரிப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளது. இராணுவமயமாக்கத்தின், சிங்கள-பௌத்த மயமாக்கத்தின் செறிவு அதிகரித்துள்ளது. மத அடையாளங்கள் குறிப்பாக சைவ சமய தலங்கள் தொடர் இலக்குகளாக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. ஈழத் தமிழரின் பண்பாடு தேசிய தற்காலத்திற்கு பொருத்தபாடற்றதாகச் சித்தரிக்கப்பட்டு அழிவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஈழத்தமிழரின் அடையாளங்கள் இல்லாமலாக்கப்படுகின்றன. தமிழ் தேசிய பூர்வீக வரலாறு சிதைக்கப்பட்டு, சிங்கள இனத்தை பூர்வீகக் குடிக குடிகளாக மாற்றும் வரலாறு உருவாக்கப்படுகிறது. உதாரணமாக திராவிடனாக இருந்த தந்த இராவண மன்னன் தற்போது சிங்கள ஆரியனாக மாற்றப்படுவதற்குரிய ஆய்வுகள் முன்வைக்கப்படுகின்றன. முன்னொரு காலத்தில் கல்வியில் பெருமை பாராட்டிய தேசம் இன்று கல்வியை தொலைத்து விட்டிருக்கின்றது. போதைப் பொருள் பாவனையை சிங்கள-பௌத்த பேரினவாத அரசு ஒரு போர் முறையாகக் கட்டமைத்து,

இளைய தலைமுறையை திட்டமிட்டு அழித்து வருகின்றது, வளரும் தலைமுறையை போதைப்பொருளுக்கு அடிமைப்படுத்துவதின் ஊடாக தமிழின எழுச்சியை தொடர்ந்து தடுப்பதற்கான முயற்சிகளை ஏற்கனவே சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது. போதைப் பொருளுக்கு எதிரான எதிர்ப்பும் ஓர் அரசியல் யுத்தமே.

பருத்து தமிழ் இன அழிப்பிற்கான பொறுப்புக் கூறலின் நீதிப் பொறிமுறைகளை சிங்கள அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றது. இனவாதத்திற்கு எதிராக பேசுகின்ற அரசு, பொறுப்பு கூறல் பொறிமுறை அனைத்தையும் சிங்கள-பௌத்த பேரினவாதத்தை தக்க வைப்பதற்காக திரிபுபடுத்தி உள்ளது. தமிழ் இன அழிப்பிற்கான நீதிவேண்டிய நீண்ட போராட்டத்தை, சிங்கள அரசும் அதன் அடி வருடிகளும் மலினப்படுத்தியும், சிதைத்தும் வருகின்றன. நிலமீட்புக்கான போராட்டங்களையும், தமிழ் இன வரலாற்றுத்தடய அடையாளங்களின் மீட்புப் போராட்டங்களையும், வலிந்து காணாலாக்கப்பட்ட சொந்தங்களின் நீதி வேண்டிய போராட்டங்களையும் சிங்கள அரசு திட்டமிட்டு வன்முறையை பிரயோகித்து அடக்கி வருகின்றது. ஒட்டுமொத்தத்தில் சிங்கள-பௌத்த பேரினவாத அரசும் பேரரசுக் கட்டமைப்பும் இணைந்து ஈழத் தமிழினத்தின் மீது என்றுமில்லாதவாறு மிகப்பெரும் போரை வெவ்வேறு வீயூகங்களுக்கு ஊடாக கட்டமைத்துள்ளது. இப்போரை ஈழத்தமிழரின் கூட்டு உள் கூட்டு உளவியலின் மீதான போராக வடிவமைத்துள்ளதை மறுக்க முடியாது.

ஈழத் தமிழ்ச் சொந்தங்களே!

சிங்கள பௌத்த பேரினவாதமும், துருவப் பேரரசுக் கட்டமைப்பும் என்றுமில்லாதவாறு ஈழத் தமிழ்த் தேசத்தின் மீது பெரும் போரை கட்டவிழ்த்துள்ளது. இப்பெரும் போர், ஈழத் தமிழ்த் தேசத்தின் நிலம், கடல் சார் கேந்திரத்தன்மையின் முக்கியத்துவத்தை இல்லாமல் செய்கிறது. ஈழத் தமிழ்த் தேசத்தின் புவிசார் அரசியலில் நிலம்-கடல் சார்ந்த கேந்திரத் தன்மை மிகவும் முக்கியமானது. ஈழத் தமிழ் தேச நிலம்-கடல் சார்ந்த கேந்திர தன்மையை சிங்கள-பௌத்த ஒற்றையாட்சிக்குட்பட்ட அலகிற்குள் உள்வாங்குவதனூடாகவும், ஈழத்தமிழ் தனித்தன்மையையும், தமிழ் தேசமாவதற்குரிய அலகுகளை இல்லாமல் செய்வதன் ஊடாகவும், சிங்கள பௌத்த பேரினவாதம் தனது ஒற்றை ஆட்சி அலகை திடப்படுத்தி வருகின்றது.

தமிழ்த் தாயகத்தின் நீட்சியே புலம்பெயர் ஈழத்தமிழினக் கூட்டு அலகு என்பதை கண்காணித்து வருகின்ற சிங்கள அரசு, புலம்பெயர் ஈழத் தமிழினத்தின் மீதும் பெரும் போரை கட்டவிழ்த்துள்ளது. குறிப்பாக தொப்புள்க்கொடி உறவுகளுக்குள் பிரிவுகளை ஏற்படுத்தி, தொப்புளக்கொடி உறவுகளை கத்தரிக்க முனைந்து வருகின்றது. இச்சூழலில் என்றுமில்லாதவாறு உறவுகை உறவுகளை ஆழப்படுத்த வேண்டிய வரலாற்றுத் தேவை எழுகின்றது. எழுகின்றது. தற்போது ஈழத் ஈழத் தமிழினத்தின் மீது தொடுக்கப்பட்டுள்ள போர் ஈழத் தமிழினம் முள்ளிவாய்க்காலில் சந்தித்ததை விட மிகக் கொடூரமான போர். ஒட்டுமொத்த தமிழினத்தின் மீதும், அதன் இருப்பின் மீதும், கூட்டு உளவியலின் மீதும், தமிழ் தேசிய அடிப்படை விழுமியங்கள் மீதும் தொடுக்கப்படும் போர்.

பெருமதிப்பிற்குரிய ஈழத் தமிழ் உறவுகளே!

ஒட்டுமொத்தத்தில் தமிழ் தேசிய நம்பிக்கை மீதான போரை சிங்கள அரசும் துருவப் பேரரசுக் கட்டமைப்பும் கட்டவிழ்த்துள்ளது. தமிழ் தேசிய நம்பிக்கை தான் ஈழத் தமிழினத்தின் ஆத்மா. தமிழ் தேசிய கூட்டு உளவியலின் ஆத்மா தான் எங்களுடைய கூட்டுத்திராணி. இதை வலுப்படுத்த வேண்டிய வரலாற்றுத் தேவை என்றுமில்லாதவாறு இன்று எம்முன் வைக்கப்படுகின்றது.

நமக்குள்ள மிகப்பெரும் ஆயுதமாக விரிந்து கிடப்பது தமிழ் தேசிய நினைவுத்தினம். நாங்கள் நினைவு கூரும் வரைக்கும் எங்களை யாராலும் அழிக்க முடியாது. கழிந்த காலம் எமக்கான எதிர்காலத்தை வடிவமைக்க உதவி செய்கின்றது. தற்போதைய வரலாற்றுக் காலம் பண்பாட்டு மீள் எழுச்சிகான காலம். ஈழத் தமிழினம் எமக்கான வரலாற்று வேர்களைத் தேடிப் பயணிக்க வேண்டிய காலம். பண்பாட்டு மீள்எழுச்சி ஈழத் தமிழினத்திற்கான பண்பாட்டு அடையாளத்தை வலுப்படுத்துகின்றது.

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஈழத் தமிழர் உறவுகளே!

முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழின எழுச்சியின் அடையாளம். தமிழ் இன அழிப்பை முள்ளிவாய்க்கால் திடலி திடலில் நினைவு கூருவது மீண்டும் எமதினத்தின் எழுச்சியை சுட்டி நிற்கின்றது. ஈழத்தமிழ் இனமாக சிங்கள அரச அடக்குமுறைக்கு எதிராகவும், சிங்கள-பௌத்த ஒற்றையாட்சி அரசியல் அலகை தனது புவிசார் நலன்களுக்காக தக்கவைத்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்பின் அடக்குமுறைக்கு எதிராகவும் போராட அணி திரள்வதைத் தவிர வேறு எவ்வித தெரிவும் எமக்கு முன் வைக்கப்படவில்லை.

இவ் வருடம் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் 50ஆவது ஆண்டு நினைவு. சுதந்திரமும் இறைமையுமுடைய ஈழத் தமிழ்த் தனியரசே ஈழத் தமிழினத்தின் கூட்டு இருப்பையும், தமிழர் தேசத்தின் இருத்தலையும் உறுதிப்படுத்தி பாதுகாக்கும் என்று உரக்கக் கூறிய வரலாற்று நிகழ்வு. தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றின் முக்கிய திருப்புமுனையாக கருதப்படும் இத் தீர்மானத்தின் அடிப்படைகளையே முள்ளிவாய்க்கால் பிரகடனம் ஆண்டு தோறும் வலியுறுத்தி வருகின்றது.

இரத்தம் தோய்ந்த தோய்ந்த இம்மண்ணிலி இம்மண்ணிலிருந்து போராட, கனத்த காற்று சுமந்து வரும் அவர்களின் நினைவுகளின் மீதும் நாம் கொண்டிருக்கும் தமிழ் இன விடுதலை நம்பிக்கை மீதும் சபதம் செய்வோம்.

01. சிங்கள-பௌத்தமயமாக்கப்படும் தமிழ் தாயகத்தை தடுக்கவும் தமிழ் தேசியத்தை நாளாந்த வாழ்வியலாக்கவும்.

02. தமிழ் இன அழிப்பிற்கு சர்வதேச நீதி வேண்டி அரச பொறுப்பையும் மேற்குலக நாடுகளின் உடந்தைத்தன்மையையும் வலியுறுத்தி குற்றவாளிகளை குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவும்.

03. தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்திற்கு உரியவர்கள் என்பதையும், தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒருபோதும் பாரதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தவும்.

04. கூட்டு ஈழத் தமிழர் இருப்பின் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட தமிழின அழிப்பை தடுக்கவும்.

05. தமிழ் தேசிய நம்பிக்கையின் மீது உறுதி கொண்டு ஒரு குடையின் கீழ் தமிழின அடக்குமுறைக்கு எதிராக தமிழின விடுதலையை நோக்கி முனைப்புடன் தொடர்ந்து போராட எமது மக்கள் பலத்தை நம்பி தொடர்ந்து அடிபணியாது போராடுவோம்.

இவ்வாறு இந்த முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

1958ஆம் ஆண்டு இனப்படுகொலை இன்று 68ஆவது ஆண்டு நினைவு – 22.05.2026

– பா. அரியநேத்திரன்–

17.05.2026

இனப்படுகொலையானது 1958 மே 22, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட நாடு தழுவிய இனப் படுகொலை இதுவாகும்.

இந்த வன்முறையானது 1958 மே 22இல் தொடங்கி 1958 யூன் 08ஆம் திகதி வரை நீடித்தது சிங்கள குண்டர்களை அப் போது ஆட்சியில் இருந்த சிறீலங்கா சுதந்திர கட்சியின் பிரதம ரான எஷ்.டவிலியூ ஆர்.டி. பண்டாரநாயக்கா அரசினால் ஏவி விடப்பட்டு நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டனர், பெண்களின் மீதான பாலியல் வன்முறைகள் நிகழ்த் தப்பட்டன,

தமிழர்களின் சொத்துக்கள் மற்றும் வணிக நிலையங்கள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன.

இலங்கையில் கொண்டுவரப்பட்ட "சிங்களம் மட்டும்" சட்டத் திற்கு எதிராக தமிழர்கள் நடத்திய போராட்டங்களை அடுத்து, இனவாதக் குழுக்களால் இந்த வன்முறை திட்டமிட்டுத் தூண் டப்பட்டது.

வவுனியாவில் நடைபெற்ற 6ஆவது இலங்கை தமிழரசுக்கட்சி மகாநாட்டுக்கு 1958 மே 22ஆம் திகதி மட்டக்களப்பு மற்றும் அம்பாறையிலிருந்து ரயிலில் சென்ற தமிழர்கள், பொலன்ன - றுவை பகுதியில் சிங்களக் காடையர்களால் கொடூரமான முறை யில் தாக்கப்பட்டு சிலர் கொல்லப்பட்டனர்.

1958 மே 22 - இனக்கலவரம் ஆரம்பம் சிங்களவரால் தமிழர்கள் கொலைசெய்யப்பட்டனர்.

1958 மே 23 - மட்டக்களப்பில் தொடருந்து ஒன்று தடம் புரண்டது.

1958 மே 24 - இலங்கையில் பொலன்னறுவைத் தொடருந்து நிலையத்தில் தொடருந்தில் வந்த தமிழ்ப் பயணிகள் தாக்கப் பட்டுக் கொல்லப்பட்டனர். பல இடங்களிலும் இனக்கலவரம் பரவியது.

1958 மே 25 - பொலன்னறுவைவையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

1958 மே 27 - இலங்கை முழுவதற்கும் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டு, ஊடகத் தணிக்கை அமுல்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிரப்பிக்கப்பட்டது.

1958 மே 27 - இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுன ஆகிய கட்சிகள் தடை செய்யப்பட்டன.

1958 மே 27 - இலங்கையின் தெற்கே பாணந்துறையில் சிங்களக் காடையர்களால் இந்துக் கோவில் ஒன்று எரிக்கப்பட்டு, கோவில் பூசகர் சுந்தரராஜக் குருக்கள் சித்திரவதை செய்யப்பட்டு உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார். இவரது 25 வயது இளம் மனைவியும் அவரது 4 வயதுக் குழந்தையும் பின்னர் அகதிக ளாக யாழ்ப்பாணம் சென்றனர்.

1958,மே,28 – கல்கிசையில் தமிழருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட ஆயிரத்திற்கும் அதிகமானோர் இராணுவத்தினரால் கலைக்கப்பட்டனர்.

1958 மே 28 - கல்கிசை, ஓட்டல் வீதியில் தமிழர் ஒருவர் உயிருடன் எரிக்கப்பட்டார்.

1958 மே 29 - யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு சிங்களவரும் கொல்லப்படவில்லை என அங்கு பயணம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் குணசேன டி சொய்சா பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கு அறிவித்தார். யாழ்ப்பாணம் நாக விகாரை தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

1958 மே 30 - இலங்கையின் தெற்கே கலவரங்களால் பாதிக் கப்பட்ட தமிழர்கள் அகதிகளாக கொழும்பு றோயல் கல்லூரி, புனித பீட்டர் கல்லூரி ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டனர்.

1958 யூன் 01 - கலவரங்களில் பாதிக்கப்பட்ட 4,397 தமிழ் அகதிகள் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல் லப்பட்டனர். அங்கிருந்து 2,100 சிங்களவர்கள் கொழும்பு கொண்டு வரப்பட்டனர்.

1958 யூன் 05 - இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10 உறுப் பினர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

1958 யூன் 06 - மேலும் 5,029 தமிழர் கப்பல் மூலம் யாழ்ப் பாணம் அனுப்பப்பட்டனர்.

1958 யூன் 08 - ஜாதிக விமுக்தி பெரமுன கட்சித் தலைவர் கே. எம். பி. ராஜரத்தினா வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து, கொழும்பு, பதுளை மற் றும் மலையகப் பகுதிகளிலும் தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பாணந்துறை போன்ற இடங்களில் தமிழ் மக் களின் வழிபாட்டுத் தலங்கள் எரிக்கப்பட்டன.

வன்முறை தீவிரமடைந்து பல நாட்கள் ஆகும் வரை அர சாங்கம் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. 1958 மே 27இல் நாட்டில் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத் தப்பட்டது.

இலங்கையின் 1958, இனப்படுகொலைக்கு முன்னம் முத லாவது தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையானது கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் கல்லோயாவில் 1956 யூன் 11இல் நடந்தது. இந்த இனப்படுகொலைதான் இலங்கை பிரித்தானியரிடம் இருந்து 1948 பெப்ரவரி 04இல் விடுதலை பெற்றபின்னர் இலங்கையில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதி ராக இடம்பெற்ற முதலாவது பெரும் இனவெறித்தாக்குதலும் இனப்படுகொலை ஆரம்பமும் ஆகும். இது 1956 யூன் 11இல் ஆரம்பித்து 1956 யூன் 16 வரை தொடர்ந்து ஐந்து நாட்கள் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

1956இல் தொடங்கிய இனப்படுகொலை 2026 வரை 70 ஆண்டுகளாக தொடர்கிறது…!

வரலாறுகளை மறந்து வாழ்பவன் மரக்கட்டைகளுக்கு சமன்!

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

நீதிக்கான நீண்ட பயணம் மற்றும் சர்வதேச அரங்கில் ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டம்

26.05.2026

– சு.லோஜிதன் –

முகவுரை

உலக வரலாற்றில் தங்களின் சொந்த மண்ணில் தன்னாட்சி உரிமைக்காகவும், உயிர் வாழும் உரிமைக்காகவும் ஒரு தேசிய இனம் நடத்திய மிக நீண்ட, நெடிய, தியாகங்கள் நிறைந்த போராட்டம் ஈழத் தமிழர்களின் உரிமைப்போராட்டமாகும். இந்துப் பெருங்கடலின் கண்ணீர் துளியாக வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு பகுதிகளைத் தங்களின் பூர்வீகத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வரும் தமிழர்கள், கடந்த முக்கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தங்களின் அடையாளத்தையும் உரிமைகளையும் காக்கப் போராடி வருகின்றனர்.

மண்ணில் தொடங்கிய இப்போராட்டம், கால ஓட்டத்தில் உலகளாவிய ரீதியில் பரவி, இன்று சர்வதேச அரங்கில் நீதிக்கான பெரும் இராஜதந்திரப் போராட்டமாக உருவெடுத்துள்ளது. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரும், தமிழினத்தின் நீதிக்கான குரல் சர்வதேச மேடைகளிலும், உலக நாடுகளின் நாடாளுமன்றங்களிலும் இன்னும் ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

1. வரலாற்றுப் பின்னணி: அமைதி வழி முதல் ஆயுத வழி வரை

1948 ஆம் ஆண்டு பிரித்தானியர்களிடமிருந்து இலங்கை (அன்றைய சிலோன்) சுதந்திரம் பெற்ற உடனே, பெரும் பான்மை சிங்கள பௌத்த பேரினவாதம் ஆட்சிக்கட்டிலில் ஏறி யது. ஜனநாயகம் என்ற போர்வையில் சிறுபான்மைத் தமிழர் களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் திட்டமிட்ட செயல் பாடுகள் தொடங்கின.

உரிமைப் பறிப்புகள்: 1948 இல் மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'சிங்களம் மட்டும்' (Sinhala Only Act) சட்டம் தமிழர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை முற்றாக முடக்கியது.

அகிம்சை வழியிலான போராட்டங்கள்: தந்தை செல்வா (எஸ்.ஜே.வி. செல்வநாயகம்) தலைமையிலான தமிழ் தலைவர்கள் நாடாளுமன்ற ரீதியாகவும், அமைதியான அறப்போராட்டங்கள் (சத்தியாக்கிரகம்) மூலமும் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுக்க முயன்றனர். ஆனால், அமைதி வழியிலான போராட்டங்கள் அனைத்தும் சிங்கள அரசுகளாலும் காடையர்களாலும் வன்முறை கொண்டு நசுக்கப்பட்டன. பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்ற உடன்படிக்கைகள் சிங்கள ஆட்சியாளர்களால் ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறியப்பட்டன.

ஆயுதப் போராட்டத்தின் தோற்றம்: 1976 ஆம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க 'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' நிறைவேற்றப்பட்டு, தனித்தமிழீழமே தமிழர்களின் ஒரே தீர்வு எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. அமைதி வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்ட நிலையில், 1970களின் பிற்பகுதியில் தமிழ்ப் இளைஞர்கள் ஆயுதமேந்த நேரிட்டது. அதுவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தலைமையிலான முப்படை கொண்ட பலமிக்க விடுதலைப் போராட்டமாக உருவெடுத்தது.

2. முள்ளிவாய்க்கால் பேரவலம்: திருப்புமுனை

2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் அரங்கேறிய கொடூரங்கள், ஈழ வரலாற்றின் மிக இருண்ட பக்கமும், உலக அரசியலின் ஆகச்சிறந்த திருப்புமுனையும் ஆகும்.

உலக நாடுகள் பலவற்றின் மறைமுக மற்றும் நேரடி இராணுவ உதவிகளுடன் சிறீலங்கா அரசு நடத்திய இறுதிப் போரில், இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். சர்வதேச சமூகத்தால் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளும் (Cluster bombs), இரசாயனக் குண்டுகளும் பொதுமக்களின் பாதுகாப்பு வலையங்கள் (No Fire Zones) மீது வீசப்பட்டன. மருத்துவமனைகளும் உணவு விநியோகப் பிரிவுகளும் திட்டமிட்டுத் தாக்கப்பட்டன.

மே 2009 இல் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட அந்தப் புள்ளியிலிருந்து, ஈழப்போராட்டம் முற்றிலும் ஒரு புதிய வடிவத்தைப் பெற்றது. அதுவரை தாயக மண்ணில் நிலப்பரப்பைக் காக்க நடந்த இராணுவ ரீதியிலான போராட்டம், அன்றோடு முடிவுக்கு வந்து, உலக அரங்கில் சட்ட ரீதியிலான, மனித உரிமை சார் நாடாளுமன்றப் போராட்டமாக, அதாவது இராஜதந்திரப் போராக (Diplomatic Warfare) உருமாறியது.

3. ஐக்கிய நாடுகள் சபையும் ஜெனீவா தீர்மானங்களும்

முள்ளிவாய்க்கால் போரின் போது சர்வதேச சமூகம் காட்டிய மௌனம், போருக்குப் பின்பு உலகத் தமிழர்களின் இடைவிடாத அழுத்தங்களால் உடையத் தொடங்கியது. உலக நாடுகளின் உச்சபட்ச நடுவர் மன்றமான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் (UNHRC) ஈழ விவகாரம் முதன்மைப் பேசுபொருளானது.

சர்வதேச நிபுணர் குழு அறிக்கை: ஐ.நா பொதுச்செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு (Darusman Report), இறுதிப் போரில் மிகக் கொடூரமான போர்க்குற்றங்களும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்களும் நடந்துள்ளன என்றும், போரின் இறுதி நாட்களில் மட்டும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும் ஆவணப்படுத்தியது.

ஜெனீவா தீர்மானங்கள்: அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளின் முன்முயற்சியில் சிறீலங்கா அரசுக்கு எதிராக ஐ.நா மனித உரிமைப் பேரவையில் பல தீர்மானங்கள் (தீர்மானம் 30/1 போன்றவை) நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்கள் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கவும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்குத் தீர்வு காணவும் சிறீலங்கா அரசை வற்புறுத்தின.

உள்நாட்டு விசாரணையின் தோல்வியும் சர்வதேச விசாரணையின் தேடலும்: சிறீலங்கா அரசு அமைத்த 'கற்றந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு' (LLRC) போன்ற உள்நாட்டு அமைப்புகள் குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கம் கொண்டவை என்பதைத் தமிழர்கள் நிரூபித்தனர். இதனால், சர்வதேசப் பங்களிப்புடன் கூடிய சுதந்திரமான பன்னாட்டு விசாரணையே (International Investigation) தங்களுக்கு நீதி வழங்கும் எனத் தமிழர்கள் ஐ.நா தளத்தில் இன்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

4. புலம்பெயர் தமிழர்களின் இராஜதந்திரப் பங்கு (Diaspora Diplomacy)

ஈழப் போராட்ட வரலாற்றில் 'புலம்பெயர் தமிழர்கள்' (Tamil Diaspora) வகிக்கும் பங்கு அளப்பரியது. போரின் காரணமாகவும், இனக்கலவரங்களாலும் தாயகத்தை விட்டு வெளியேறி கனடா, லண்டன், பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் குடியேறிய மில்லியன் கணக்கான தமிழர்கள், இன்று ஈழத்தின் குரலாக உலகெங்கும் ஒலிக்கிறார்கள்.

அரசியல் மற்றும் பொருளாதார செல்வாக்கு: புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் தங்களின் கடின உழைப்பால் கல்வி, பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளில் உயரிய நிலையை எட்டியுள்ளனர். கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளின் நாடாளுமன்றங்களில் தமிழர்கள் மக்கள் பிரதிநிதிகளாகவும், அமைச்சர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் மூலம் சிறீலங்கா அரசுக்கு அழுத்தங்களை வழங்கி வருகின்றனர்.

தமிழினப்படுகொலை அங்கீகாரம் (Genocide Recognition): உலக வரலாற்றில் ஈழத்தில் நடந்தது வெறும் உள்நாட்டுப் போர் அல்ல, அது ஒரு திட்டமிட்ட "இனப்படுகொலை" (Genocide) என்பதை சர்வதேச சமூகத்திற்குப் புரியவைப்பதில் புலம்பெயர் தமிழர்கள் பெரும் வெற்றி பெற்றுள்ளனர். குறிப்பாக, கனடா நாடாளுமன்றம் மே 18 ஆம் நாளை "தமிழினப்படுகொலை நினைவு நாள்" (Tamil Genocide Remembrance Day) என அதிகாரப்பூர்வமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. உலகத் தலைவர்கள் பலரும் இன்று முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் தங்களின் இரங்கலையும் நீதிக்கான ஆதரவையும் தெரிவித்து வருகின்றனர்.

5. அடுத்த தலைமுறைக்கான சவால்களும் கடமைகளும்

காலங்கள் உருண்டோடி, இறுதிப்போர் நடந்து பல ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், ஈழ வரலாற்றையும் அதன் தற்போதைய தேடலையும் அடுத்த தலைமுறையினருக்குக் (Next Generation) கொண்டு சேர்ப்பது மிக முக்கியமான சவாலாகும்.

வரலாற்றுத் திரிபுகளை முறியடித்தல்: சிறீலங்கா அரசு தனது சர்வதேச பரப்புரைகள் மூலம் ஈழப் போராட்டத்தைக் "பயங்கரவாதம்" என்றும், தமிழர்களின் உரிமைகளை "சிறுபான்மையினர் பிரச்சினை" என்றும் உலகிற்குத் தவறாகக் காட்ட முயல்கிறது. இந்த வரலாற்றுத் திரிபுகளை முறியடிக்க, அடுத்த தலைமுறையினர் ஈழத்தின் உண்மையான வரலாற்றையும் அதன் புவியியல், பண்பாட்டு அடையாளங்களையும் ஆவணப்பூர்வமாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

மொழித் தடையை உடைத்தல்: ஈழத்துத் துயரங்களும், கோரிக்கைகளும் தமிழ் மொழிக்குள் மட்டுமே முடங்கிவிடக் கூடாது. சர்வதேசச் சமூகத்திற்கும், உலக நாடுகளின் நீதிமன்றங்களுக்கும் புரியும் வகையில் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் போன்ற உலகளாவிய மொழிகளில் ஆவணப் படங்களாகவும், புத்தகங்களாகவும், ஆய்வுக் கட்டுரைகளாகவும் நமது வரலாற்றைக் கொண்டு சேர்க்க வேண்டும்.

டிஜிட்டல் தளங்களை ஆக்கிரமித்தல்: இன்றைய டிஜிட்டல் யுகத்தில், சமூக ஊடகங்கள் (Social Media), இணையக் கலைக்களஞ்சியங்கள் (Wikipedia), மற்றும் நவீன தொழில்நுட்பத் தளங்களைப் பயன்படுத்தி உலகளாவிய அளவில் ஈழத்தமிழர் விவகாரத்திற்கான ஆதரவுத் தளத்தை உருவாக்க வேண்டும்.

முடிவுரை

ஈழத்தமிழர்களின் நீதிக்கான நீண்ட பயணம் என்பது வெறும் தங்களின் கடந்த கால இழப்புகளுக்கான அழுங்குரல் மட்டுமல்ல அது தங்களின் எதிர்காலப் பாதுகாப்பிற்கான, இறையாண்மைக்கான சட்டப் போராட்டம். தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் இன்னும் இராணுவ மயமாக்கல், நில ஆக்கிரமிப்பு, மற்றும் கலாச்சாரச் சிதைவு போன்ற மறைமுக நெருக்கடிகளைச் சந்தித்து வரும் வேளையில், சர்வதேச அரங்கில் தமிழர்கள் நடத்தும் இந்த இராஜதந்திரப் போரே அவர்களுக்கான பாதுகாப்பு அரணாகும்.

"நீதி தாமதிக்கப்படலாம், ஆனால் ஒருபோதும் மறுக்கப்பட முடியாது" என்ற தார்மீகக் கோட்பாட்டின் அடிப்படையில், உலகெங்கும் வாழும் தமிழர்களின் ஒருங்கிணைந்த செயல்பாடும், அடுத்த தலைமுறையின் கூர்மையான அறிவுசார்ந்த நகர்வுகளும் ஈழத்தமிழர்களுக்கான விடியலை நிச்சயம் ஒரு நாள் பெற்றுத் தரும். தாயக மண்ணில் தமிழர்கள் தன்னாட்சியுடனும், சுதந்திரத்துடனும், சுயமரியாதையுடனும் வாழும் அந்த நாளை நோக்கியே இந்த நீண்ட பயணம் ஓயாமல் தொடர்கிறது.

வரலாற்றின் வலியைச் சொல்லும்: “One Nation - One Heart; One Heart - One Nation” ஆங்கில நாவல்!

– ரேணுகா இன்பகுமார் –

29.05.2026

”குடும்பத்திற்கும் இனத்திற்கும் இடையே முடிவெடுக்கும் முயற்சியில், இனமே வென்று முதலிடம் பிடித்தது. நான் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தேன்” என்ற மேற்கோளுடன் நான் ஆரம்பிக்க விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தின் 80ஆம் பக்கத்தில் உள்ள அந்த வாக்கியம், வெறுமனே காகிதத்தில் எழுதப்பட்ட ஒரு வாக்கியம் மட்டுமல்ல; அது, பாதுகாப்பை விட தியாகத்தையும், வசதியை விட போராட்டத்தையும், மௌனத்தை விட எதிர்ப்பையும் தேர்ந்தெடுக்க நிர்பந்திக்கப்பட்ட ஒரு முழுத் தலைமுறையின் உணர்ச்சிச் சுமையாகும். தமிழ் மக்களின் உயிர் வாழ்வே தங்கள் உயிரை விட முக்கியம் என்று நம்பியதால், தங்கள் குடும்பங்களையும், இளமையையும், தங்களுக்குத் தகுதியான எதிர்காலத்தையும் துறந்து சென்ற எண்ணற்ற மாவீரர்கள் சுமந்த வலியை அது பிரதிபலிக்கிறது. மௌனமே தாங்க முடியாத அளவுக்குக் கொடூரமான, இடைவிடாத, மனிதாபிமானமற்ற ஒடுக்குமுறையை நேரில் கண்டாலன்றி, எந்தவொரு மனிதனும் மனமுவந்து அனைத்தையும் தியாகம் செய்யமாட்டான். அந்த வாக்கியம் துயரத்தைத் தன்னுள்ளே கொண்டிருந்தாலும், அது ஒரு அசாதாரணமான தைரியத்தையும் கொண்டுள்ளது. ஏனெனில், ஒருநாள் தமிழீழம் சுதந்திரமாக மலரும் என்ற நம்பிக்கையைத் தக்கவைத்துக்கொண்டே, ஒரு தேசம் முழுவதின் துயரத்தைத் தங்கள் தோள்களில் சுமந்த ஒரு தலைமுறையை அது பிரதிபலிக்கிறது.

தீபவர்ணன் ஆனந்தமயில் எழுதிய குறுநாவலைப் படித்தது, எனக்கு ஒரு வரலாற்றுப் புத்தகத்தைப் படிப்பது போல் தோன்றவில்லை. உலகம் அழிக்க முயன்ற ஒரு தேசத்தின் காயங்களுடன் அமர்ந்திருப்பது போல் உணர்ந்தேன். வரலாறு அடக்க முயன்ற குரல்களைக் கேட்பது போல் உணர்ந்தேன். தமிழீழத்திற்கு ஒருபோதும் நேரில் சென்றிராத ஒருவராக, இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது, புலம்பெயர் இளைஞர்கள் ஒரு விசித்திரமான துயரத்தைச் சுமக்கிறார்கள் என்பதை நான் உணர்ந்தேன். ஏனென்றால், நாங்கள் ஒருபோதும் பார்த்திராத ஒரு தாய் நாட்டுடன் உணர்வுப்பூர்வமாகப் பிணைந்து வளர்கிறோம் அதே சமயம், எங்கள் குடும்பங்கள் வழியாகக் கடத்தப்பட்ட வரலாறு, நினைவுகள் மற்றும் மனவேதனையையும் சுமந்து கொண்டு இருக்கிறோம்.

ஆஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்த நம்மில் பலருக்கு, தமிழ் ஈழம் என்பது துண்டு துண்டாகவே இருக்கிறது: சில இடங்களைப் பற்றிப் பேசும்போது பெற்றோர்கள் உணர்ச்சிவசப்படுவதன் வழியாக, அலுமாரிகளில் மறைத்து வைக்கப்பட்ட பழைய புகைப்படங்கள் வழியாக, துக்கம் மண்டபங்கள் முழுவதையும் நிரப்பும் நினைவு நாட்கள் வழியாக, வலி தாங்க முடியாத அளவுக்குக் கடினமாகி பாதியிலேயே நிறுத்தப்படும் கதைகள் வழியாக, மற்றும் வார்த்தைகளை விட அதிகமாகப் பேசும் மௌனம் வழியாக.

இந்தக் குறுநாவலைப் படிக்கும்போது என்னை மிகவும் ஆழமாகப் பாதித்தது என்னவென்றால், இனப்படுகொலையின் உச்சக்கட்டத்தில் வாழ்ந்த இளைஞர்கள் வரலாற்றில் தொலைதூரத்தில் உள்ள உருவங்கள் அல்ல, மாறாக நம் வயதினர், நம்மைப் போலவே கனவுகள், அச்சங்கள், நட்புகள், லட்சியங்கள் மற்றும் குடும்பங்களைக் கொண்டவர்கள் என்ற உணர்தல் தான்.

ஆஸ்திரேலியாவில் நம்மில் பலர் நமது பதின்பருவத்தை தேர்வுகள், பல்கலைக்கழகம், சமூக வாழ்க்கை மற்றும் எதிர்காலம் பற்றிக் கவலைப்பட்டுக் கழித்த வேளையில், முள்ளிவாய்க்கால் தமிழ் இளைஞர்கள் எல்லா திசைகளிலிருந்தும் தங்களைச் சூழ்ந்திருந்த குண்டுவீச்சு, பட்டினி, இடம்பெயர்வு மற்றும் மரணத்திலிருந்து தப்பிப் பிழைக்கப் போராடிக் கொண்டிருந்தனர். சில குழந்தைகளுக்குப் பெரியவர்களாகும் வாய்ப்பே கிடைக்கவில்லை. சில குடும்பங்கள் முற்றிலுமாக மறைந்து போயின. சிலர் அமைதியை அறியாமலேயே இறந்தனர். அந்தப் பகுதிகளைப் படித்தபோது, 2009 என்பது வெறும் ஒரு அரசியல் நிகழ்வோ அல்லது வரலாற்றுத் தேதியோ அல்ல, மாறாக அது எண்ணற்ற மனித உயிர்கள், நினைவுகள் மற்றும் எதிர்காலங்களின் அழிவு என்ற கோரமான உண்மையை நான் உணர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அது தொலைவில் இருப்பது போன்ற உணர்வை விடுத்து, திடீரென்று வேதனையளிக்கும் வகையில் தனிப்பட்டதாக மாறியது.

மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறும் ஒரு வார்த்தை உண்டு, **“ஒரு தேசத்தின் சுதந்திரம் மலிவாகக் கிடைப்பதில்லை; அது தியாகத்தாலும் இரத்தத்தாலும் வாங்கப்படுகிறது.”** இந்தப் புத்தகத்தைப் படிப்பதற்கு முன்பு, அந்த வார்த்தைகளை நான் அறிவுப்பூர்வமாகப் புரிந்துகொண்டிருந்தேன்.

அதைப் படித்த பிறகு, அவற்றுக்குப் பின்னால் இருந்த உணர்வுப்பூர்வமான அர்த்தத்தை நான் புரிந்துகொண்டேன். ஒவ்வொரு பக்கமும், வன்முறையையோ துன்பத்தையோ விரும்பியதால் அல்ல, மாறாகத் தமிழ் மக்கள் அச்சம், ஆக்கிரமிப்பு, அல்லது ஒடுக்குமுறையின்றித் தங்கள் சொந்தத் தாயகத்தில் சுதந்திரமாக வாழும் உரிமைக்குத் தகுதியானவர்கள் என்று நம்பியதால் தங்களைத் தியாகம் செய்த மக்களைப் பிரதிபலிக்கிறது.

உலகம் அதை ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, நம் மக்கள் அனுபவித்த அளவற்ற துன்பத்தையோ அல்லது கற்பனை செய்ய முடியாத சூழ்நிலைகளில் அவர்கள் கொண்டிருந்த மனவுறுதியையோ மறுக்க முடியாது.

இந்தப் புத்தகத்தின் மிகவும் மனதை நொறுக்கும் அம்சங்களில் ஒன்று, அகதிகள் மற்றும் மன அதிர்ச்சிக்குப் பிந்தைய மன உளைச்சல் (PTSD) மீது அது கவனம் செலுத்தியதுதான். ஏனென்றால், ஒருவர் தாயகத்திலிருந்து தப்பிச் சென்றவுடன் இனப்படுகொலை முடிந்துவிடுவதில்லை என்பதை அது எனக்கு நினைவூட்டியது. மன அதிர்ச்சி கடல்களைக் கடந்து மக்களைப் பின்தொடர்கிறது. ஆஸ்திரேலியாவுக்கு வந்த பல ஈழத் தமிழர்கள், எந்தவொரு மனிதனும் சுமக்கவே கூடாத நினைவுகளுடன் வந்தனர் குண்டுவீச்சு, இடம்பெயர்வு முகாம்கள், காணாமல் போதல், பட்டினி, இராணுவ ஆக்கிரமிப்பு, தடுப்புக் காவல், மற்றும் தாங்கள் நேசித்தவர்களை இழந்தது போன்ற நினைவுகள் அவை.

ஆயினும், அவர்கள் இங்கு வந்தவுடன், உடனடியாக மீண்டும் வாழ்க்கையை புதிதாகத் தொடங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர். வேலை செய்ய. பிழைக்க. குழந்தைகளை வளர்க்க. முழுமையாக ஆறாத உணர்ச்சிப்பூர்வமான காயங்களை மௌனமாகச் சுமந்துகொண்டு, முற்றிலும் அறிமுகமில்லாத ஒரு நாட்டிற்குத் தங்களை மாற்றியமைத்துக்கொள்வது. ஆஸ்திரேலியாவில் PTSD-யால் (மன அதிர்ச்சிக்குப் பிந்தைய மன அழுத்தம்) அவதிப்பட்டு, மெதுவாகத் தனது அடையாளத்திலிருந்து அந்நியப்பட்டுப் போவதை உணர்ந்த ஒரு அகதியைப் பற்றி விவரிக்கும் புத்தகத்தின் இறுதிப் பகுதிகள், மிகவும் வேதனையளிப்பதாக இருந்தன. ஏனெனில், அவை நமது சொந்த சமூகத்திற்குள்ளேயே ஒவ்வொரு நாளும் அமைதியாக பயணிக்கும் ஒரு யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றன. இன்றும் கூட, நமது சமூகத்திற்குள்ளேயே இருக்கும் அரசியல் வேறுபாடுகள், நமது சொந்த மக்களையே தனிமைப்படுத்தப்பட்டவர்களாக உணர வைக்கின்றன.

நமது புலம்பெயர் சமூகத்தில் உள்ள மிகவும் சோகமான யதார்த்தங்களில் ஒன்று, உயிர் பிழைத்ததன் அடியில் மறைந்திருக்கும் வலியை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல், நாம் அதை அடிக்கடி கொண்டாடுகிறோம் என்பதுதான் என்று நான் நினைக்கிறேன். நாம் தொழில், வணிகங்கள், பட்டங்கள் மற்றும் வெற்றிக் கதைகளைப் பற்றிப் பெருமையுடன் பேசுகிறோம், ஆனால் தமிழ்ஈழத்திலிருந்து வந்த மக்கள் சுமக்கும் உணர்ச்சிச் சுமைகளை உண்மையாகக் கேட்பதற்குப் போதுமான நேரத்தை நாம் செலவிடுவதில்லை.

உயிர் பிழைத்தவர்களில் சிலரால் 2009-ஐப் பற்றிப் பேசும் போது உணர்ச்சிவசப்பட்டு அழாமல் இருக்க முடிவதில்லை. சிலர் தங்கள் பிள்ளைகளுக்கு ஆஸ்திரேலியாவில் ஒரு எதிர் காலம் அமைய வேண்டும் என்பதற்காகவே தங்கள் மனவேதனைகளைப் புதைத்துவிட்டனர். அகதி சமூகங்களுக்குள் PTSD எப்போதும் வெளிப்படையாகத் தெரிவதில்லை.

சில சமயங்களில் அது மௌனம், பயம், உணர்வுரீதியான விலகல், அதீத எச்சரிக்கை உணர்வு, பதட்டம் ஆகியவற்றில் வெளிப்படுகிறது; அல்லது இனப்படுகொலையிலிருந்து உடல்ரீதியாகத் தப்பிப் பிழைத்தாலும், உணர்வுரீதியாக அதன் நினைவு களுக்குள் சிக்கிக்கொண்டிருக்கும் பெற்றோர்களிடமும் அது வெளிப்படுகிறது. நாம் நம் மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டிருந்தால், நம் சமூகத்தைப் பாதுகாப்பது என்பது வரலாற்றைப் பாதுகாப்பது மட்டுமல்ல, தாங்க முடியாத வலியைச் சுமந்துகொண்டு புலம்பெயர்ந்து சென்ற உயிர் பிழைத்தவர்களின் மனிதநேயம், கண்ணியம் மற்றும் உணர்வுப்பூர்வமான நல்வாழ்வைப் பாதுகாப்பதும் ஆகும் என்பதை இந்தப் புத்தகம் எனக்கு நினைவூட்டியது.



அதேசமயம், இந்தப் புத்தகம் என்னை நம்பிக்கையற்றவளாக உணரவைக்கவில்லை. அது என்னை ஒரு பொறுப்புள்ளவளாக உணரவைத்தது. ஒரு தமிழ் யுவதியாக, நமது இருப்பை வடிவமைத்த தியாகங்களிலிருந்து ஒருபோதும் துண்டிக்கப்படாமல் இருப்பதற்கான பொறுப்பு அது. நமது மக்களின் உண்மையைத் தீவிரத்துடனும் ஒழுக்கத்துடனும் தொடர்ந்து வாசிப்பதற்கும், கற்றுக்கொள்வதற்கும், ஆவணப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் ஆன பொறுப்பு அது.

ஏனென்றால், இனப்படுகொலை என்பது மக்களை உடல்ரீதியாக அழிக்க முயற்சிப்பது மட்டுமல்ல, அது நினைவுகள், அடையாளம், மொழி, கலாச்சாரம், வரலாறு மற்றும் பிணைப்புகளை அழிக்கவும் முயற்சிக்கிறது. அதன் மூலம் எதிர்கால சந்ததியினர் தாங்கள் யார் என்பதையும், தங்கள் மக்கள் என்னென்ன துன்பங்களை அனுபவித்தார்கள் என்பதையும் மெதுவாக மறந்துவிடுவார்கள். அதனால்தான் இது போன்ற புத்தகங்கள் மிகவும் ஆழமான முக்கியத்துவம் பெறுகின்றன. பாதுகாக்கப்படும் ஒவ்வொரு சாட்சியமும், ஆவணப்படுத்தப்படும் ஒவ்வொரு கதையும், பேசும் ஒவ்வொரு உயிர் பிழைத்தவரும், நமது வரலாற்றைக் கற்கத் விரும்பும் ஒவ்வொரு இளம் தமிழரும், இனஅழிப்பையே எதிர்க்கிறார்கள்.

இந்தப் புத்தகம் தமிழ் இளைஞர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருப்பதற்குக் காரணம், நமது மக்கள் மீதான இனப் படுகொலையை மௌனத்தின் பின்னாலோ, அரைகுறையாகச்

சொல்லப்பட்ட கதைகளின் பின்னாலோ, அல்லது "இனப்படு கொலையின் உச்சக்கட்டம்" பற்றிய மேலோட்டமான குறிப்புகளின் பின்னாலோ மறைத்து வைக்காததுதான்.

இனப்படுகொலையால் வாழ்க்கை நிரந்தரமாக மாற்றப்பட்ட சாதாரண தமிழ் மக்களின் துன்பம், இடம்பெயர்வு, தியாகங்கள், அச்சம் மற்றும் மீள்திறன் ஆகிய உண்மைகளை வாசகர்களை நேரடியாக உணரச் செய்வதன் மூலம், இந்தப் புத்தகம் அந்த மௌனத்தை உடைக்கிறது. அவ்வாறு செய்வதன் மூலம், இது ஒரு நினைவுக் குறிப்பு அல்லது வரலாற்றுப் பிரதிபலிப்பு என் பதைத் தாண்டி, தலைமுறைகளுக்கு இடையேயான ஒரு பால மாக மாறுகிறது. நமது மக்களுக்கு என்ன நடந்தது என்பதை மட்டுமல்லாமல், அதை நேர்மை, இரக்கம் மற்றும் அரசியல் விழிப்புணர்வுடன் நினைவுகூருவது இன்று ஏன் இவ்வளவு ஆழமான முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் தமிழ் இளைஞர்கள் புரிந்துகொள்ள இது உதவுகிறது.

தமிழ் இளைஞர்களாகிய நாம், இப்போது ஒரு முக்கியமான திருப்புமுனையில் நிற்கிறோம். நாம் ஒன்று, தமிழ் ஈழத்திலிருந்து மெதுவாக விலகிச் சென்று, அது நினைவு மாதங்களில் பேசப்படும் ஒரு அடையாள நினைவாக மட்டுமே மாறும் ஒரு தலைமுறையாக ஆகலாம்; அல்லது, துக்கத்தைப் பொறுப்பாகவும், நினைவை எதிர்ப்பாகவும், வரலாற்றைச் செயலாகவும் மாற்றும் ஒரு தலைமுறையாக ஆகலாம்.

நம் மக்களின் வரலாற்றில் இருந்து நாம் துண்டிக்கப்பட்டு வளர்வதற்காக, நம் பெற்றோரும் பெரியோர்களும் தங்கள் வாழ்வின் உடைந்த துண்டுகளைச் சுமந்துகொண்டு கடல்களைக் கடந்து வரவில்லை. இன்று நமக்குக் கிடைத்திருக்கும் ஒவ்வொரு வாய்ப்பும், அவர்களை உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் அழிக்க வடிவமைக்கப்பட்ட சூழ்நிலைகளில் இருந்து தப்பிப் பிழைத்த மக்களின் மனவுறுதியின் மீதுதான் கட்டமைக்கப்பட்டது. அதன் காரணமாக, நம் மக்களுக்கு நாம் தற்காலிக உணர்ச்சிகளை விட மேலான ஒன்றை செய்ய கடன்பட்டிருக்கிறோம்.

ஒரு நாள், முள்ளிவாய்க்கால் எப்படி இருந்தது என்று நமக்குச் சொல்ல, தப்பிப் பிழைத்தவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். தாங்கள் இழந்த பிள்ளைகளைப் பற்றி விவரிக்க, தாய்மார்கள் யாரும் இருக்க மாட்டார்கள். வாழ்நாள் முழுவதும் இனப்படுகொலையை நினைவில் சுமப்பதன் அர்த்தத்தை விளக்க, சாட்சிகள் யாரும் இருக்க மாட்டார்கள். அந்த நாள் வரும்போது, நம் தலைமுறை எதைப் பாதுகாக்கத் தேர்ந்தெடுக்கிறதோ, அதன் மூலமாக மட்டுமே வரலாறு நிலைத்திருக்கும். அதனால்தான் இது போன்ற புத்தகங்களைப் படிப்பது முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், மறப்பது நடுநிலைமை அல்ல. மறப்பது என்பது அழித்தொழிப்பின் இறுதிக் கட்டம்.

அதனால்தான் இந்தப் புத்தகத்தைப் படிப்பது முக்கியத்துவம் பெறுகிறது. அது ஒரு பொறுப்பு. அது மறதிக்கு எதிரான ஒரு எதிர்ப்பு வடிவம். ஏனெனில், ஒரு தேசத்தின் இளைஞர்கள் அதன் உண்மை மரித்துப்போக அனுமதிக்க மறுக்கும் போது தான் அந்த தேசம் நிலைத்து நிற்கிறது.

மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒருமுறை கூறியதை இங்கு தருவது பொருத்தமானது அதாவது,

"தங்கள் சுதந்திரத்தை மீட்டெடுக்க உறுதியுடன் இருக்கும் மக்களை, இவ்வுலகில் எந்த சக்தியாலும் அடக்க முடியாது."

ரேணுகா இன்பகுமார் சமீபத்தில் நியூ சவுத் வேல்ஸில் வழக் கறிஞராகப் பதிவு செய்யப்பட்டுள்ளார். மேலும் அவர் தமிழ் அகதிகள் கழகத்தின் செய்தித் தொடர்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். அவர் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தில் சட்ட இளங்கலைப்பட்டத்தையும், கலை இளங் கலைப் பட்டத்தையும் பெற்றவர். சர்வதேச உறவுகள் மற்றும் ஆசிய ஆய்வுகளை முதன்மைப் பாடங்களாகவும், வரலாறு மற்றும் அரசியல் சிந்தனையைத் துணைப் பாடங்களாகவும் பயின்றவர். தனது சட்டத் தொழிலுடன், ரேணுகா சிறு வயதிலிருந்தே, குறிப்பாக அகதிகள் உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் இனப்படுகொலையை எதிர்கொள்ளும் சமூகங்களுக்கான நீதி ஆகிய துறைகளில், சமூக ஆதரவுப் பணிகளிலும் சமூக அமைப்பாக்கத்திலும் தீவிர மாக ஈடுபட்டு வருகிறார்.

முள்ளிவாய்க்கால் மண்



வார்த்தைகள் தோற்றுப்போன
பெரு மௌனத்தின் சாட்சி நீ!
ஈழத்து வரலாற்றின்
ஈரமான இறுதிப் பக்கம் நீ!
முல்லைப் பூக்கள் பூத்த தரையெல்லாம்
இன்று முட்களும் கண்ணீரும் தானா?
வைகாசி மாதத்து வெயிலில் மட்டுமல்ல,
எங்கள் விழியோரத்திலும்
இன்னமும் காயவில்லை உப்புக் குரதி.
பேரினவாதம் விதைத்த தீயில்
வெந்து மடிந்து உயிர்களின் சாம்பல் நீ,
சொந்த மண்ணில் அகதிகளாய்
சுருண்டு விழுந்தவர்களின் இறுதித் தழுவல் நீ.
நெல் விளைய வேண்டிய வயல்களில்
நெருப்புத் துண்டுகள் விழுந்தன,
பிள்ளைகள் விளையாடிய மணலில்
பிணங்களின் நிழல்கள் படிந்தன.
அலறல் சத்தங்களை விழுங்கிவிட்டு
இன்றும் அமைதியாய் இருக்கிறாயே...
உனக்குள் எத்தனை கதைகள்?
காற்றோடு போனது கவிதைகள் மட்டுமல்ல,
எம் தொப்புள்கொடி உறவுகளின் மூச்சும் தான்.
ஆயுதங்கள் மௌனித்திருக்கலாம்,
ஆனால்...
உன் மடியில் சிந்திய குரதியின் நியாயம்
இன்னும் மௌனிக்கவில்லை!
கடல் அலைகள் வந்து
உன் கரையைத் தொட்டுச் செல்லலாம்,
ஆனால் காலங்கள் கடந்தாலும்
உன் கறை படிந்த துயரத்தை
எந்த அலையாலும் கழுவ முடியாது!
நீ வெறும் மண்ணல்ல...
எம் இனத்தின் கண்ணீர்,
மறக்க முடியாத வடு,
மீண்டெழும் எங்களின் வேர்!

– சு.லோஜிதன் –

தோல்வியின் விளிம்பில் ரஷ்யா? போரில் உக்ரைன் மேலோங்குகிறதா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

29.05.2026

2022 ஆம் ஆண்டு ஆரம்பித்த உக்கிரமான உக்ரைன் போர் இன்று உலக அரசியலின் மிகப்பெரிய புவிசார் மோதலாக மாறியுள்ளது. ஆரம்பத்தில் சில வாரங்களில் உக்ரைன் அரசை வீழ்த்தி, தலைநகர் கீவை கைப்பற்றலாம் என ரஷ்யா கருதியதாக மேற்கத்திய ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் நான்கு ஆண்டுகளைத் தாண்டியும் போர் முடிவுக்கு வரவில்லை. இதனால் ரஷ்யா தோல்வியடைந்து வருகிறதா என்ற கேள்வி உலகளவில் அதிகமாக எழுகிறது.

ஆனாலும் இந்தக் கேள்விக்கு நேரடியான “ஆம்” அல்லது “இல்லை” என்று பதில் அளிப்பது எளிதல்ல. ஏனெனில் இந்தப் போர் வெறும் நிலப்பரப்பு கைப்பற்றும் போராக மட்டுமல்ல. அது பொருளாதாரம், தொழில்நுட்பம், தகவல் போர், உலக கூட்டணிகள், ஆற்றல் அரசியல் மற்றும் நீண்டகால தாங்கும் திறன் ஆகியவற்றின் மோதலாக மாறியுள்ளது.

கீவ் மீது ஏவுகணை தாக்குதல்:

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், சமீபத்திய வாரங்களில் இல்லாத அளவுக்கு ரஷ்ய இராணுவம் கடந்த வாரம் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது. ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள லுகான்ஷ்க் பகுதியில் அப்பாவி விடுதி மாணவிகள் மீது உக்ரைன் நடத்திய தாக்குதலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இது அரங்கேற்றப்பட்டுள்ளது. நள்ளிரவு முழுவதும் கீவ், செர்காசி, கார்கிவ், ஒடெசா உள்ளிட்ட பல பிராந்தியங்களில் சுமார் 600 ட்ரோன்களும், 90 அதிநவீன ஏவுகணைகளும் மழை போலப் பொழிந்தன.

கீவ் நகர மக்கள் வழக்கம்போல் உறக்கத்தில் இருந்த நேரத்தில், வானில் ஒலித்த எச்சரிக்கை சைரன்கள் அச்சத்தை ஏற்படுத்தின. அதனைத் தொடர்ந்து ரஷ்ய ஏவுகணைகளும் ட்ரோன்களும் நகரின் பல பகுதிகளை குறிவைத்து தாக்கின. பல அடுக்குமாடி குடியிருப்புகள் தீப்பற்றியதுடன், அரச கட்டிடங்களின் சுவர்கள் இடிந்தன. அலுவலக வளாகங்கள் சேதமடைந்ததால் நகரின் சில பகுதிகளில் மின்சாரம் மற்றும் தொடர்பு சேவைகளும் பாதிக்கப்பட்டன. உக்ரைனிய வான்பாதுகாப்பு அமைப்புகள் பல ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் இடைமறித்ததாகக் கூறினாலும், அனைத்தையும் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இத்தாக்குதலில் ரஷ்யா தங்களின் மிக நவீனமயமான ‘ஒரேஷ்னிக்’ (Oreshnik) ஹைப்பர்சோனிக் பாலிஸ்டிக் ஏவுகணையைப் பயன்படுத்தி உள்ளதாக உக்ரைன் அதிபர் வொலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். ஒலியின் வேகத்தைப் போல 10 மடங்கு வேகத்தில் (Mach 10) செல்லக்கூடிய இந்த ஏவுகணை, பூமிக்கு அடியில் மூன்று அல்லது நான்கு தளங்களுக்குக் கீழே உள்ள பங்கர்களைக் கூடத் துல்லியமாக அழிக்கக்கூடிய வல்லமை பெற்றது.

ஏற்கனவே 2024 நவம்பரில் டினிப்ரோ நகரிலும், கடந்த ஜனவரியில் எல்விவ் பிராந்தியத்திலும் பயன்படுத்தப்பட்ட இந்த ஏவுகணை, தற்போது மூன்றாவது முறையாகக் கீவ் பிராந்தியத்தில் உள்ள பிலா த்செர்கவா நகரை குறிவைத்து ஏவப்பட்டுள்ளது. இந்த அதிநவீன ஏவுகணைகளின் பயன்பாடு உக்ரைன் தரப்பில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இரு நாடுகளும் அடுத்தடுத்து தாக்குவதால் அமைதி என்பது எட்டாக்கனியாகி, இந்த போர் மீண்டும் தீவிரமடைந்து வரும் நிலையில், தற்போது யாரின் படைவலு மோலோங்கி இருக்கிறது என்பதை இலகுவாக உணர முடியாதுள்ளது. தற்போதைய உக்ரைன் கள நிலவரத்தின் அரசியல் – இராணுவப் பார்வையில் ரஷ்யா முழுமையாக தோல்வியடைந்து விட்டது என்றும் கூற முடியாத நிலையே உள்ளது

ஆரம்பக் கட்ட பின்னடைவு

இந்த போர் மீண்டும் தீவிரமடைந்து வரும் நிலையில், தற்போது யாரின் படைவலு மோலோங்கி இருக்கிறது என்பதை இலகுவாக உணர முடியாதுள்ளது. ஏனெனில் போரின் 2022 பெப்ரவரி மாதத்தில் ரஷ்யா எதிர்பார்த்த வேகத்தில் முன்னேறவில்லை. கீவ் மீது நடத்திய விரைவு இராணுவ நடவடிக்கை தோல்வியடைந்தது. குறிப்பாக உக்ரைனின் கடுமையான எதிர்ப்பும், மேற்கத்திய நாடுகளின் உளவுத்தகவல் ஆதரவும் ரஷ்ய முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தின.

அதன் பின்னர் கார்கிவ் மற்றும் கெர்சோன் பகுதிகளில் ரஷ்ய படைகள் பின்வாங்கியமை உலக ஊடகங்களில் ரஷ்ய இராணுவத்தின் பின்னடைவு என விவரிக்கப்பட்டது. மேலும் ரஷ்ய இராணுவத்தின் ஒருங்கிணைப்பு குறைபாடுகள், பழைய ஆயுதங்கள், விநியோக சிக்கல்கள் போன்றவை வெளிச்சத்துக்கு வந்தன.

ஆனால் 2023 இறுதி மற்றும் 2024–2025 காலப்பகுதிக்குள் போரின் தன்மை முற்றிலும் மாறியது. ரஷ்யா தன்னுடைய போர் பொருளாதாரத்தை முழுமையாக மாற்றிக் கொண்டது. ஆயுத உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. ட்ரோன் தொழில்நுட்பம், ஏவுகணை தாக்குதல்கள் மற்றும் நீண்டகால கலப்பு போர் (War of Attrition) என்ற அணுகுமுறையை ரஷ்யா பின்பற்றத் தொடங்கியது.

அத்துடன் மேற்கத்திய நாடுகள் வழங்கிய ஆயுத உதவிகள் இருந்தபோதிலும், உக்ரைனுக்கு மனிதவள பற்றாக்குறை பெரும் சவாலாக மாறியுள்ளது. நீண்டகாலப் போரால் உக்ரைன் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதேவேளை ரஷ்யா, சீனா, ஈரான், வடகொரியா போன்ற நாடுகளுடன் மாற்று கூட்டுறவுகளை விரிவுபடுத்தியுள்ளது.

தற்போதைய உக்ரைன் கள நிலவரத்தின் அரசியல் - இராணுவப் பார்வையில் ரஷ்யா உண்மையில் தோல்வியடைந்ததா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால் அதற்கு உக்ரைன் எதிர்ப்பு திறன் கூடியுள்ளமையே முக்கிய காரணமாக இருக்கிறது. ஒரு போரை மதிப்பிடும்போது மூன்று அம்சங்கள் முக்கியமாக பார்க்கப்படுகிறது.

முதலாவது அரசியல் இலக்கு அடைந்ததா, அடுத்தது நிலப்பரப்பு கட்டுப்பாடு என்ன நிலையில் உள்ளது என்பது முக்கிய கேள்வியாகும். இறுதியாக நீண்டகால தாங்கும் திறன் யாருக்கு அதிகம் உள்ளது என்பதை அறிய வேண்டும்.

இந்த அளவுகோல்களில் பார்க்கும் போது, உக்ரைன் கள நிலவரத்தின் அரசியல் - இராணுவப் பார்வையில் ரஷ்யா முழுமையாக தோல்வியடைந்து விட்டது என்று கூற முடியாத நிலையே உள்ளது. முதன்மையாக நேட்டோவை தடுக்க முயன்ற ரஷ்யா தனது வளங்களை பயன்படுத்தி வருகிறது.
ரஷ்யாவின் முக்கிய நோக்கங்களில் ஒன்று நேட்டோ விரிவைத் தடுக்க வேண்டும் என்பதாகும். ஆனால் இந்த போருக்குப் பிறகு பின்லாந்து, சுவீடன் நேட்டோவில் இணைந்தன. இந்த அளவில் பார்க்கும்போது ரஷ்யா அரசியல் பின்னடைவை சந்தித்துள்ளதாக மேற்குலக ஊடகங்களால் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நிலப்பரப்பு கட்டுப்பாடு குறித்து பார்க்கும் போது, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் முக்கிய பகுதிகளில் ரஷ்யா இன்னும் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறது. டொன்பாஸ் பிராந்தியத்தின் பெரும் பகுதி ரஷ்ய செல்வாக்குக்குள் உள்ளது. கருங்கடல் பாதுகாப்பு மற்றும் நிலப் பாதை இணைப்பில் ரஷ்யா தனது நிலையை கடுமையாக உறுதிப்படுத்தியுள்ளது.

மறுபுறம் ஐரோப்பிய பொருளாதாரத் தடைகள் எதிர்பார்த்த பலனை கொடுத்ததா என்பது குறித்து முழுமையான பதில்கள் இதுவரை வழங்கப்படவில்லை. ஏனெனில் மேற்கத்திய பொருளாதாரத் தடைகள் ரஷ்யாவை முற்றிலும் சிதைக்கவில்லை. மாறாக ரஷ்யா எண்ணெய் ஏற்றுமதியை ஆசிய சந்தைகளுக்கு மாற்றியது. ரூபிள் நாணயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும், ரஷ்ய போர் இயந்திரம் தொடர்ந்து முன்னேறி செயல்பட்டு வருகிறது.

இந்தப் போர் நீளுவதால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் அரசியல் சோர்வு தோன்றியுள்ளது. ஆயுத உதவி, நிதி ஆதரவு, அகதி பிரச்சினை ஆகியவை உள்நாட்டு அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் மேற்கத்திய நாடுகளின் பொருளாதார சிக்கல் மேலும் வளர்ச்சி பெறுகிறது.

அதேவேளை டொனால்ட் ட்ரம்ப் போன்ற அரசியல் தலைவர்கள் “இந்தப் போரை முடிக்க வேண்டும்” என்று வலியுறுத்துவது, மேற்கத்திய ஒற்றுமையில் பாரிய மாற்றங்களை காட்டுகிறது.

தகவல் போரின் தாக்கம்

இந்தப் போரில் உண்மை நிலவரத்தை மதிப்பிடுவது கடினம். மேற்கத்திய ஊடகங்களும் ரஷ்ய ஊடகங்களும் தங்களுக்கான தகவல் போரில் ஈடுபட்டுள்ளன. ஒரு தரப்பு ரஷ்யா சரிந்து வருகிறது என கூற, மற்றொரு தரப்பு உக்ரைன் முற்றிலும் உயர்ந்து வருகிறது என கூறுகிறது. உண்மையில், இரு தரப்பும் மிகப் பெரிய இழப்புகளை சந்தித்துள்ளன.

தற்போதைய கள நிலவரப்படி ரஷ்யா முழுமையான வெற்றி யைப் பெற்றுவிட்டது என்றும் கூற முடியாது. அதேபோல் அது தோல்வியடைந்து விட்டது என்றும் கூறவும் முடியாது. ஆனால் ஆரம்பத்தில் எதிர்பார்த்த விரைவு வெற்றியை ரஷ்யா பெற வில்லை என்பதும் உண்மையே.

அதே நேரத்தில், மேற்கத்திய நாடுகள் எதிர்பார்த்தபடி ரஷ்ய அரசும் பொருளாதாரமும் சரிந்து போகவில்லை என்பதும் உண்மை.

இன்று இந்தப் போர் யார் வெல்வார்கள் என்ற கேள்வியைத் தாண்டி, யார் அதிக காலம் தாங்குவார்கள் என்ற நிலைக்கு மாறியுள்ளது. அதனால் உக்ரைன் போர் 21ஆம் நூற்றாண்டின் நீண்டகால கலப்பு போரின் முக்கிய எடுத்துக்காட்டாக உலக வரலாற்றில் பதிவாகி வருகிறது.

முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்கு நீதியாக தமிழீழத் தனியரசை வரலாறு வழங்கும்!

விசுவநாதன் ருத்ரகுமாரன், பிரதமர், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

18.05.2026

மே18 – தமிழீழத் தேசிய துக்க நாள்.

ஈழத் தமிழ் மக்களதும் உலகத் தமிழ் மக்களதும் கூட்டு நினைவுகளில் நிலைத்து நிலைபெறும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள்.

சிறீலங்காத்தீவில் வட-கிழக்குப் பகுதியில் தமது பாரம்பரியத் தாயகத்தில் காலாதி காலம் வாழந்து வரும் ஈழத் தமிழ் மக்களை சிறீலங்கா அரசும் அதன் சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தமும் இணைந்து இனவழிப்புக்கு உள்ளாக்கிய நினைவு நாள்.

ஈழத் தமிழர் தேசத்தின் தேசிய ஆன்மாவில் வடுவாய்ப் பதிந்து விட்ட தேசிய துக்க நாள்.

சிங்களத்தின் தமிழினவழிப்புப் போரின் இறுதிக்கட்டத்தில், குறிப்பாக 2009 ஆம் ஆண்டில் ஈழத் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பேரழிவின் நினைவு நாள்.

சிங்களம் நடத்திய தமிழினவழிப்புப் போர் நகரிக உலகம் வெட்கித் தலைகுனியும் வகையிலேயே நடத்தப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக என்று கூறி அமைக்கப்பட்ட “போர் இல்லா பாதுகாப்பு வலயம்” (No Fire Zone) என அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்லுமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டனர். ஆனால் அந்தப் பகுதிகள் கூட இடைவிடாது குண்டு வீச்சுக்களுக்கும் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டன.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களின்படி பொதுமக்கள் வாழும் பகுதிகளில் பயன்படுத்தத் தடைசெய்யப்பட்ட கனரக ஆயுதங்கள் சிறீலங்கா அரசால் பயன்படுத்தப்பட்டன. விமானத் தாக்குதல்கள், பல்துறை ராக்கெட் தாக்குதல்கள், மருத்துவமனைகள் மற்றும் தஞ்சமடைந்த இடங்கள் மீதான தாக்குதல்கள் நடைபெற்றன.

உணவு, மருந்து, குடிநீர் போன்ற அடிப்படை மனிதாபிமான உதவிகள் மறுக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எண்ணற்றோர் காயமடைந்தனர் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பில் கொல்லப்பட்ட மக்களுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தலைதாழ்த்தி மரியாதை வணக்கம் செய்கிறது…

அன்பான மக்களே,

எம் மக்கள் மீது இழைக்கபட்ட கொடுமைகள் அனைத்தும் தமிழினவழிப்பு நோக்கம் கொண்டு செய்யப்பட்ட இனவழிப்புக் குற்றங்களின் பாற்பட்டவையாகும்.

முள்ளிவாய்க்காலில் நடந்தது வெறும் போர்க்குற்றம் அல்ல; அது திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட தமிழின அழிப்பு. ஓர் இனக் கருவறுப்பு.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட செயல்கள் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளின் கூறுகளை வெளிப்படுத்துகின்றன.

ஒரு இன மக்களின் அரசியல், சமூக மற்றும் பௌதிக இருப்பையே அழிக்க முனைந்த செயலாக இதை உலக தமிழர்கள் பார்க்கின்றனர்.

அதனால், முள்ளிவாய்க்கால் என்பது ஒரு சாதாரண இராணுவ நடவடிக்கை அல்ல; அது ஈழத் தமிழர் தேசத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இனவழிப்பாப் பிரகடனப்படுத்தி அனைத்துலக அரங்கில் நீதி கோரும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

ஆனால் இந்த உண்மை இன்னும் உலக அரசுகளால் இது வரை அங்கீகரிக்கப்படவில்லை என்பது வருத்தம் தரும் யதார்த்தமாக உள்ளது.

இன்று வரை ஆயிரக்கணக்கான தமிழ் தாய்மார்கள் வீதியோரங்களில் நின்று, தங்கள் மகன்கள், மகள்கள், கணவர்கள், தந்தையர்கள், சகோதர சகோதரிகள் எங்கே? என்ன ஆனார்கள்? என்று நீதி கேட்டு போராடி வருகின்றனர்.

அவர்கள் 5000 நாட்களுக்கு மேலாக நடத்திவரும் இந்தப் போராட்டம் வெறும் அரசியல் போராட்டமல்ல; அது மனித கண்ணியத்திற்கான போராட்டம். நீதியை நிலை நிறுத்துவதற்கான போராட்டம்.

இந்தத் தாய்மார்கள் கோரும் உண்மையை அறியும் உரிமை, தங்கள் அன்புக்குரியோரின் நிலையை அறியும் உரிமை ஆகியன அனைத்துலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளாகும்.

முள்ளிவாய்க்காலில் நடந்தது இனவழிப்பு என ஏற்றுக்கொணடால், அதற்கு இணையான அரசியல் மற்றும் சட்டப்பூர்வ விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது அனைத்துலக அரசுகள் இவ் விடயத்தில் கள்ள மௌனம் சாதிக்கக் காரணமாக அமைகின்றன.

இனவழிப்பு என்பதனை ஏற்றுக் கொண்டால் ஈழத் தமிழர்களின் தனிநாட்டு கோரிக்கைக்கு ஆதரவு அளிக்க வேண்டிய நிலை உருவாகலாம்.

மேலும், இனவழிப்புப் பிரகடனத்தின் படி இனவழிப்பைத் தடுக்கவும், குற்றவாளிகளை தண்டிக்கவும் தவறிய நாடுகளும் பொறுப்புக்கூற வேண்டிய சூழ்நிலை உருவாகலாம்.

இதனால் பல நாடுகள் அரசியல் மற்றும் புவிசார் நலன்களின் காரணமாக மௌனமாக இருக்கின்றன.

அனைத்துலக நாடுகள் ஆதரவு தராவிடினும் நீதி கோரும் போராட்டத்தில் நாம் மெல்ல மெல்ல முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறோம்.

ஸ்காட்லாந்து பாராளுமன்றத்தில் சமீபத்தில் முன்வைக்கப்பட்ட வரைவு தீர்மானம் இவ் விடயத்தில் முக்கியமான முன்னேற்றமாகும்.

அந்த தீர்மானம், இனவழிப்புப் பிரகடனத்தின் அடிப்படையில் சிறீலங்காவுக்கு எதிராக அனைத்துலக நீதிமன்றத்தில் (ICJ) வழக்கு தொடர பிரித்தானிய அரசை வலியுறுத்துகிறது.

இது ஈழத் தமிழ் மக்கள் சிங்களத்தின் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்ற உண்மையை உலகம் மெதுவாக ஏற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கு கட்டியம் கூறுகிறது.

இன்னும் சிறீலங்காஅரசும் அதன் இராணுவ/அரசியல் தலைவர்களும் தாம் தடத்திய இனவழிப்புப் போருக்கு முழுமையாக பொறுப்புக்கூறவில்லை.

இதற்கு வாய்ப்பளிக்கும் முக்கிய காரணமாக அமைவது தற்போதைய அனைத்துலக அரசியல் மற்றும் நீதித்துறை அமைப்புகள் அரசுகளை மையமாகக் கொண்டவையாக இருப்பதாகும். இந்த அரசுகள் தமது புவிசார் அரசியல் நலன்கள், வர்த்தக உறவுகள் விடயத்தில் கூட்டாக இயங்குகின்றன. இந்த அரசுகளுக்கு எதிர்காலத்தில் இதேபோன்ற குற்றச்சாட்டுகளும் அவற்றுக்கெதிரான நடவடிக்கைளுக்கான கோரிக்கைகள் தமக்கு எதிராகவும் எதிர்காலத்தில் வரலாம் என்ற அச்சமும் உண்டு.

இவற்றின் காரணமாக பல நாடுகள் சிறீலங்காவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயங்குகின்றன.இருந்தபோதும் தற்போதைய உலக ஒழுங்கு மாற்றமடைந்து வருவதனை நாம் நம்பிக்கையுடன் அவதானித்து வருகிறோம்.

புதிய அனைத்துலக அரசியல் சூழலில், “அரசற்ற தேசிய இனங்கள்” (Nations without States) தாங்களே தமக்கான அனைத்துலக நீதியை நாட்டும் வாய்ப்பு உருவாகும் என்று நாங்கள் நம்புகிறோம். அதற்காக, நாம் ஏனைய அரசற்ற தேசிய இனங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். அனைத்துலக சிவில் அமைப்புகளுடன் கூட்டாண்மை அமைக்க வேண்டும். கல்வியாளர்கள் மற்றும் சட்ட நிபுணர்களுடன் படைப்பாற்றலுடன் செயல்பட வேண்டும்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே கல்வியாளர்கள் மற்றும் அனைத்துலக சிவில் அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆண்டு முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தல் உரையை திரு. டோபி கேட்மன் வழங்குகிறார்.

அவர் அனைத்துலக நீதிமன்றம் (ICJ) மற்றும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் (ICC) ஆகியவற்றில் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் வாதாடியவர்.

தற்போது நெதர்லாந்து அரசின் சார்பில், சிரிய மக்களுக்கு ஆதரவாக அனைத்துலக நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் சட்ட ஆலோசகராக செயல்பட்டு வருகிறார்.

இன்னும் முழுமையான நீதியைப் பெற முடியவில்லை என்றாலும், முக்கியமான மாற்றம் ஏற்பட்டு வருகிறது என்பதனை அவதானிக்க முடிகிறது.

முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்புடன் தொடர்புடைய சிறீலங்கா இராணுவ, மற்றும் அரசியல் தலைவர்கள் இன்று உலக நாடுகளுக்கு சுதந்திரமாக பயணம் செய்ய அஞ்சுகின்றனர்.

ஏனெனில், குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் “Universal Jurisdiction” அடிப்படையில் அவர்கள் மீது வழக்குகள் தொடரப்படலாம் என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது.

இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான ஓர் ஆரம்பப்

படியாக பார்க்கப்படக் கூடியது. இதில் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பு மிகப்பெரியது.

நீதிமன்றத் தீர்ப்புகள் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வாகாது. “இனிமேல் ஒருபோதும் இல்லை” (Never Again) என்பதை உறுதி செய்ய அரசியல் தீர்வும் அவசியம்.

தமிழ் மக்களின் அரசியல் பாதுகாப்பு மற்றும் தன்னாட்சி உறுதி செய்யப்படாமல் நீதியுணர்வு முழுமையடையாது.

அன்பான மக்களே,

இந்த ஆண்டு இரண்டு முக்கியமான 50ஆவது ஆண்டு நினைவுகளை ஏந்த நிற்கிறது. முதலாவது, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு. இரண்டாவது, புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயரில் இயங்கிய விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயர் மாற்றம் செய்யப் பட்டு 50ஆவது ஆண்டுகள் நிறைவடைவது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் “தமிழ் தேசத்தின் இருப்பை பாதுகாக்க, ஒவ்வொரு தேசத்திற்கும் உள்ள தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறையாண்மை கொண்ட, மதச்சார்பற்ற தமிழீழத் தனிநாடு அவசியமாகியுள்ளது.” எனக் கூறப்பட்டுள்ளமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் அறிவிப்பாகும்.

1976இல் தீர்மானிக்கப்பட்டவாறு தமிழீழத் தனியரசு உருவாகியிருந்தால், முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பு நிகழ்ந்திராது.

தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கான அனைத்துலாக அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட அரச அமைப்பு இல்லாமையே இந்த பேரழிவுக்கான முக்கிய காரணமாக இருந்தது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் மிகவும் தீர்க்கதரிசனமானது. அந்த தீர்மானம் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ள வேண்டிய அபாயத்தை முன்னரே எச்சரித்திருந்தது.

தமிழீழம், ஈழத் தமிழர் தேசத்தின் உயிர்வாழ்வுக்கும் பாதுகாப்பிற்கும் தேவையானது என்ற காரணத்தினால்தான் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் உருவானது.

ஈழத் தமிழ் மக்களின் இருப்பையும் அரசியல் உரிமைகளையும் பாதுகாக்க தனித்த அரச கட்டமைப்பு அவசியம் என்ற கருத்தே அந்தப் போராட்டத்தின் அடிப்படையாக அமைந்தது.

புதிய நாடு ஒன்றின் உருவாக்கம் என்பது மக்களுக்கான நியாயம் என்பதனால் மட்டும் புதிய நாடுகளை உருவாக்குவதில்லை.

அனைத்துலக அரசியலில் புவிசார் நலன்களும் வல்லரசுகளின் சக்தி சமநிலைகளும் புதிய அரசின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அதனால் நமது அரசியல் போராட்டம் நியாயத்தையும் அரசுகளின் நலன்கள் குறித்த நடைமுறையையும் இணைத்ததாக இருக்க வேண்டும்.

ஆகவே நமது போராட்டம் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

நாம், இனவழிப்புக்கான நீதியை கோர வேண்டும் அரசியல் தீர்வை கோர வேண்டும் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் பொதுவாக்கெடுப்பை கோர வேண்டும். உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் பொருளாதார சக்தியை ஒருங்கிணைக்க வேண்டும் இந்தியப் பெருங்கடலில் உள்ள நமது புவியியல் முக்கியத்துவத்தை அரசியல் பலமாக மாற்ற வேண்டும். ஒட்டு மொத்தமாக, தமிழர்கள் உலக அரசியலில் ஒரு தாக்கம் செலுத்தும் சக்தியாக உருவாக வேண்டும்.

இந்த நிலை உருவாக தமிழ்நாட்டின் புதிய அரசு முக்கிய பங்கு வகிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

தமிழர்களின் அரசியல் உரிமைகள் மற்றும் நீதிக்கான போராட்டத்தில் தமிழ்நாடு தொடர்ந்தும் ஒரு முக்கிய ஆதரவுத் தளமாக இருக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு, இருக்கும் என்பது எமது நம்பிக்கை.

அன்பான மக்களே,

முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பு சுதந்திரமும், இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசு அமைய வேண்டிய வரலாற்றுத் தேவையை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது.

இதன் நடைமுறைச் சாத்தியத்தை வரலாற்றின் காலவோட்டம்

உருவாக்கும் என உறுதியாக நம்புவோம்.

நடைமுறைச் சாத்தியமற்றவை என வருங்காலத்தில் நம்பப்பட்ட அரசியல் மாற்றங்களை வரலாறு சிறீலங்காத் தீவிலும் உலகப்பரப்பிலும் காலவோட்டத்தில் நிகழ்த்தியுள்ளது.

இவ் வரலாற்றோட்டத்திலும் எமது போராட்டத்தின் தார்மீக நியாயத்திலும் நம்பிக்கை வைத்து நமது காலடிகளை நாம் தொடர்ந்து முன்னோக்கி வைப்போம்.

நம்புங்கள்! தமிழீழம் நாளை பிறக்கும்!

தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

பாரிசில் VP வாசுகனின் ஓவிய, சிற்பக் கண்காட்சி!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

28.05.2026

ஈழத்தின் யாழ்ப்பாணம் அளவெட்டியை பிறப்பிடமாக கொண்ட VP. வாசுகனின் ஓவிய சிற்ப கண்காட்சி பிரான்ஸ், **பாரிசில் மே 20 முதல் யூன் 13 வரை நடைபெறுகிறது**. பிரெஞ்சு மொழியில் “Petite Famille” எனும் குட்டிக் குடும்பம் என்ற தலைப்பில் இக் கண்காட்சி குடும்பங்களின் ஆணிவேர்களை தேடுகின்றன. இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ள படைப்புகள், நம்மை வளர்க்கும் இயற்கைப் பொருட்களால் ஆனவை. பல்வேறு நிலப்பரப்புகளில் மேற்கொண்ட பயணங்களின் சேகரிக்கப்பட்ட மண், கல், நிறமிகள் (Pigments), காய்ந்த மரத்துண்டுகள், செய்தித் தாள்கள், சிப்பிகள், வர்ணங்கள் போன்ற பொருட்கள் சேகரிக்கப்பட்டு படைப்புகளில் பின்னிப் பிணைக்கப்பட்டு உயிப்படைகின்றன.

மண்ணை ஒத்த நிறங்களைத் தேர்ந்தெடுத்தது தற்செயலான செயல் அல்ல, அது நம் தோலின் நிறம், நம் மண்ணின் நிறம். எம் பழக்க வழக்கங்கள், நிறம், உடலமைப்பு - நிலத்தின் தாதுக்கள், காலநிலை அல்லது உணவைப் பொறுத்து மாறினாலும், நாம் அனைவரும் ஒரே பூமியிலிருந்து வந்தவர்கள் என்பதை இது நினைவூட்டுகிறது. நம் முன்னோர்கள் ஒரு பொதுவான மரபணுவை பகிர்ந்து கொண்டனர் - அது ஒரு புள்ளியில் தொடங்குகிறது - வியாபித்து உலகமெங்கும் வேர் விடுகிறது - நகர வாழ்வில் சிறுமித்து - “சிறிய குடும்பம்” - உணர்வுகள் வேரறாது பயணிக்கிறது.

நாம் கதைகளின் மூட்டையைச் சுமந்து கொண்டிருக்கிறோம். சில மறைக்கப்பட்டவை, சில மறுக்கப்பட்டவை, மற்றவை ஆழ்ந்த ஏக்கத்தால் நிறைந்தவை. படைப்பாளிக்கும் பார்வையாளருக்கும் குடும்பக் கதை - உணர்வின் உரையாடலாக உள்ளது.

இந்த கண்காட்சி ஓர் தொடர் சங்கிலித் தொடராக 2024இல் “நாங்கள் ஒரு குடும்பம்” என்ற தலைப்பில் கரேபியத்தீவன - குவாடலூப் தீவிலும், பின்னர் 2025இல் “கூட்டு குடும்பம்” என்ற தலைப்பில் பிரான்ஸின் மத்தியில் புர்கோஞ் (Bourgogne) என்ற நகர சபையிலும், தொடர்ந்து பாரிஸ் தலைநகரில் 2026இல் “குட்டி குடும்பம்” என்ற தலைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புக்களின் காண்பியம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வாழ்வின் நிலப்பரப்புகள் மாறினாலும், நாம் தொலைதூரங்களுக்கு இடம்பெயர்ந்தாலும், பிணைப்பின் ஆன்மா நிலைக்கிறது குடும்பம் எனும் பந்தத்தில், நாம் வெறும் தனிநபர்கள் அல்ல, நாம் ஒரு குடும்பம் என்பதை இந்த காண்பியம் காட்சிப்படுத்தி இருக்கிறது.

ஈரான் போரும் உக்ரைன் போரும்: அமெரிக்க டிரம்ப் அரசின் முரண்நிலை

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

27.05.2026

உலக அரசியலின் தற்போதைய மிகப்பெரிய இரு மோதல்களாக ஈரான் தொடர்பான மத்திய கிழக்கு பதற்றமும், ரஷ்யா - உக்ரைன் போரும் உருவெடுத்துள்ளன. இந்த இரு மோதல்களும் தனித்தனியான பிராந்தியப் பிரச்சினைகளாக மட்டும் இல்லாமல், புதிய உலக அதிகார சமநிலையை நிர்ணயிக்கும் சக்திப் போட்டிகளாக மாறியுள்ளன. இந்த சூழலில் அமெரிக்காவின் ஜனாதிபதியின் தற்போதைய அரசியல் மையப் பாத்திரமுமான டொனால்ட் டிரம்பின் அரசியல் அணுகுமுறை உலகளாவிய விவாதமாகியுள்ளது.

தற்போதய டிரம்ப் அரசு அரசியல் நடைமுறை, பாரம்பரிய அமெரிக்க வெளியுறவுக் கொள்கையிலிருந்து மாறுபட்டது. அமெரிக்காவே முதலில் ("America First") என்ற கோஷத்தை முன்வைத்த அவர், உலக காவலாளி என்ற அமெரிக்காவின் பாத்திரத்தை குறைத்து, நேரடி அமெரிக்க நலன்களை முன்னிறுத்தும் அணுகுமுறையை கடைப்பிடித்தார். இதன் தாக்கம் ஈரான் மற்றும் உக்ரைன் தொடர்பான அவரது நிலைப்பாடுகளில் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

ஈரானில் டிரம்பின் அணுகுமுறை

டிரம்ப் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா, ஈரானுடன் மேற்கொள்ளப்பட்ட அணு ஒப்பந்தமான JCPOA-வில் இருந்து விலகியது. அந்த ஒப்பந்தம் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தலைமையில் முதலில் உருவாக்கப்பட்டிருந்தது. டிரம்ப் அதனை "அமெரிக்காவுக்கு தீங்கு விளைவிக்கும் பலவீனமான ஒப்பந்தம்" என விமர்சித்தார்.

அதன் பின்னர், ஈரானுக்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி கட்டுப்படுத்தப்பட்டது. ஈரானிய இராணுவத் தளபதி காசிம் சுலைமானி அமெரிக்கத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம், இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றத்தை மேலும் உச்சக்கட்டத்துக்கு கொண்டு சென்றது.

டிரம்பின் ஆதரவாளர்கள், இந்த அணுகுமுறை ஈரானின் பிராந்திய செல்வாக்கை கட்டுப்படுத்த உதவியதாகக் கூறுகின்றனர். ஆனால் விமர்சகர்கள், அது மேற்கு ஆசியத்தை மேலும் நிலையற்றதாக்கியதோடு, ஈரானை சீனா மற்றும் ரஷ்யாவுக்கு மேலும் நெருக்கமாக தள்ளியதாகக் கருதுகின்றனர்.

ஈரானை அழுத்தத்தின் மூலம் கட்டுப்படுத்துதல்

மத்திய கிழக்கு அரசியலில் "ஈரான்" என்ற பெயர் ஒலிக்கும் ஒவ்வொரு தருணத்திலும், உலக அரசியல் அச்சத்துடனும் எதிர்பார்ப்புடனும் அதனை நோக்கி கவனம் செலுத்துகிறது. குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான நிர்வாகம், ஈரானை எதிர்கொண்ட விதம் உலக அரசியலின் முக்கிய திருப்பமாக அமைந்தது. "அழுத்தத்தின் மூலம் கட்டுப்படுத்துதல்" என்ற அணுகுமுறையுடன் செயல்பட்ட டிரம்ப் அரசு, ஈரானை தனிமைப்படுத்தும் தீவிர அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

டிரம்பின் முதலாவது ஆட்சியின் ஆரம்பத்திலிருந்தே, முன்னாள் ஒபாமா நிர்வாகம் உருவாக்கிய அணு ஒப்பந்தம் குறித்து கடுமையான எதிர்ப்பை அவர் வெளிப்படுத்தினார். 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "Joint Comprehensive Plan of Action (JCPOA)" எனப்படும் அணு ஒப்பந்தம், ஈரானின் அணு ஆயுதத் திட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றின் பங்கேற்பில் உருவானது. ஆனால் டிரம்ப் இதனை "அமெரிக்காவுக்கு மோசமான ஒப்பந்தம்" எனக் குறிப்பிட்டார்.

2018ஆம் ஆண்டு அமெரிக்கா அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகியபோது, உலக நாடுகள் அதிர்ச்சியடைந்தன. அதன் பின்னர் அழுத்தத்தின் மூலம் கட்டுப்படுத்துதல் ("Maximum Pressure Campaign") என்ற பெயரில் ஈரானுக்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. எண்ணெய் ஏற்றுமதி, வங்கி பரிவர்த்தனை, வெளிநாட்டு முதலீடு போன்ற துறைகள் நேரடியாக பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக ஈரான் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

இன்று உலகம் பலதுருவ அரசியல் அமைப்பை நோக்கி நகர்கிறது. சீனா – ரஷ்யா அணியும், அமெரிக்கா – நேட்டோ அணியும் புதிய அதிகார மையங்களாக உருவாகின்றன. இந்த மாற்றத்தின் மையத்தில் ஈரான் மற்றும் உக்ரைன் போர்கள் உள்ளன. ஈரான் போரும் உக்ரைன் போரும் வெறும் பிராந்திய மோதல்கள் அல்ல. அவை உலக அதிகார மறுசீரமைப்பின் அறிகுறிகள். இந்த சூழலில் டிரம்பின் அரசியல் அணுகுமுறை, அமெரிக்காவின் எதிர்கால வெளியுறவுக் கொள்கையை மட்டுமல்லாது, உலக அரசியலின் எதிர்கால திசையையும் தீர்மானிக்கக்கூடியதாக உள்ளது.

டிரம்ப் நிர்வாகத்தின் பார்வையில், ஈரான் என்பது வெறும் ஒரு நாடாக அல்ல, மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதிக்கத்திற்கும், இஸ்ரேலின் பாதுகாப்பிற்கும் எதிரான முக்கிய சக்தியாகவே கருதப்பட்டது. குறிப்பாக லெபனானில் ஹெஸ்பொல்லா, யேமனில் ஹூதி இயக்கம், ஈராக் மற்றும் சிரியாவில் செயல்பட்ட ஷியா ஆயுதக் குழுக்கள் ஆகியவற்றிற்கு ஈரான் வழங்கிய ஆதரவு, அமெரிக்காவை கடுமையாக எச்சரிக்க வைத்தது.

உக்ரைன் போரில் டிரம்பின் நிலை

ரஷ்யா - உக்ரைன் போர் தொடங்கியபோது டிரம்ப் அதிகாரத்தில் இல்லை என்றாலும், அவரது அரசியல் செல்வாக்கு அமெரிக்கக் கொள்கையில் தொடர்ந்து காணப்படுகிறது. டிரம்ப் பலமுறை, "நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் இந்தப் போர் நடந்திருக்காது" என்று கூறியுள்ளார்.

உக்ரைனுக்கு அளிக்கப்படும் பெரும் இராணுவ மற்றும் நிதி உதவிகளை அவர் சந்தேகத்துடன் அணுகியுள்ளார். அமெரிக்க வரிப்பணத்தை முடிவில்லாத வெளிநாட்டு போர்களில் செலவிட வேண்டாம் என்பதே அவரது அரசியல் வாதமாகும். இந்த அணுகுமுறை, அமெரிக்க மக்களிடையே அதிகரித்து வரும் "போர் சோர்வு" மனநிலையுடன் தொடர்புடையதாகும்.

அதேசமயம், டிரம்பின் கருத்துக்கள் நேட்டோ கூட்டணிக்குள் பதற்றத்தையும் உருவாக்கின. ஐரோப்பிய நாடுகள் தங்களது பாதுகாப்புச் செலவுகளை அதிகரிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இதனால் அமெரிக்கா - ஐரோப்பா உறவுகளில் புதிய கேள்விகளும் விவாதங்களும் எழுந்தன.

24 மணிக்குள் போரை முடிப்பேன்!

உக்ரேன் போரைப் பற்றிப் பேசும் ஒவ்வொரு தருணத்திலும் டிரம்ப் வலியுறுத்தும் முக்கிய கருத்து - "நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் இந்தப் போர் நடந்திருக்காது" என்பதாகும். மேலும், மீண்டும் ஆட்சிக்கு வந்தால் "24 மணிநேரத்தில் போருக்கு முடிவு காண்பேன்" என்றும் அவர் பலமுறை கூறியுள்ளார்.

இந்தக் கருத்து வெறும் தேர்தல் அரசியலுக்கான வாசகமா அல்லது உண்மையான வெளியுறவு கொள்கை நோக்கமா என்பது விவாதத்திற்குரியது. இருப்பினும், டிரம்பின் அணுகுமுறையில் ஒரு முக்கிய அம்சம் தெளிவாகத் தெரிகிறது. அமெரிக்கா நீண்டகால வெளிநாட்டு போர்களில் சிக்கிக்கொள்ளக் கூடாது என்ற தேசியவாத அரசியல்.

உக்ரேனுக்கு போரில் அமெரிக்கா வழங்கி வரும் பில்லியன் கணக்கான டொலர் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை டிரம்ப் அணியினர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். "அமெரிக்க வரிப்பணத்தை வெளிநாட்டு போரில் வீணடிக்கக் கூடாது" என்பது அவர்களின் வாதமாகும்.

இரு போரும் உலக அரசியலும்

ஈரான் மற்றும் உக்ரைன் மோதல்கள் வெவ்வேறு புவியியல் பகுதிகளில் நடந்தாலும், அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, நேட்டோ, மத்திய கிழக்கு கூட்டணிகள் போன்ற சக்திகள் அனைத்தும் இந்தப் போர்களின் பின்னணியில் உள்ளன.

டிரம்பின் அணுகுமுறை, பாரம்பரிய அமெரிக்க உலக ஆதிக்க அரசியலை மாற்றும் முயற்சியாக சிலரால் பார்க்கப்படுகிறது. ஆனால் மற்றவர்கள், அது அமெரிக்காவின் உலகளாவிய செல்வாக்கை பலவீனப்படுத்தும் அபாயகரமான தேசியவாதமாக கருதுகின்றனர்.

இன்று உலகம் பலதுருவ அரசியல் அமைப்பை நோக்கி நகர்கிறது. சீனா - ரஷ்யா அணியும், அமெரிக்கா - நேட்டோ அணியும் புதிய அதிகார மையங்களாக உருவாகின்றன. இந்த மாற்றத்தின் மையத்தில் ஈரான் மற்றும் உக்ரைன் போர்கள் உள்ளன. டிரம்பின் அரசியல் மீளுருவாக்கம், இந்த உலக அரசியல் மாற்றங்களை மேலும் தீவிரப்படுத்தக்கூடியதாகும்.

ஈரான் போரும் உக்ரைன் போரும் வெறும் பிராந்திய மோதல்கள் அல்ல. அவை உலக அதிகார மறுசீரமைப்பின் அறிகுறிகள். இந்த சூழலில் டிரம்பின் அரசியல் அணுகுமுறை, அமெரிக்காவின் எதிர்கால வெளியுறவுக் கொள்கையை மட்டுமல்லாது, உலக அரசியலின் எதிர்கால திசையையும் தீர்மானிக்கக்கூடியதாக உள்ளது.

போரின் மூலம் அமைதி உருவாகாது. ஆனால் அதிகார அரசியலின் மூலம் உலகம் தொடர்ந்து புதிய மோதல்களுக்குள் தள்ளப்படுகிறது. இந்த உண்மையை உணராமல் உலக சக்திகள் முன்னேறினால், எதிர்கால மனித சமூகம் மேலும் ஆபத்தான நிலையினை எதிர்கொள்ள நேரிடலாம்.

தமிழீழத்தின் முதலாவது
தற்கொடையாளர்
ஈகியர் பொன். சிவகுமாரன்
பொன்னுத்துரை சிவகுமாரன்
(26.08.1950 - 05.06.1974)
உரும்பிராய், தமிழீழம்.

ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் நஞ்சு அருந்தி உயிர் நீத்தவர் பொன். சிவகுமாரன்!

ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒரு முன்னோடி ஆவார். யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியில் சிறீலங்காப் பொலிசாரின் சுற்றி வளைப்பில் நஞ்சருந்தி மரணமடைந்தார். ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் நஞ்சு அருந்தி உயிர் நீத்தவர் இவரே.

சிங்கள இனவாதத்தால் தமிழ் மக்களுக்கெதிரான கொடுமைகளும் படுகொலைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டு, தமிழ் மக்களின் சுதந்திர இருப்பு சிதைக்கப்பட்டது. இந்நிலையில் தான் அன்று மாணவனாகவிருந்த ஈகையர் பொன். சிவகுமாரன், தமிழ் மக்களின் உரிமைகள் மீட்கப்படுவதற்கும் சுதந்திர இருப்பை உறுதி செய்வதற்கும் ஆயுதப் போராட்டமே சரியான மார்க்கம் என்பதை உணர்ந்து சிங்கள இனவாதத்திற்கெதிராக ஆயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுத்தார்.

தமிழீழ மக்கள் மனங்களில் விடுதலைத் தீப்பொறியை இட்டுச் சென்ற அம் மாவீரனின் நினைவு நாள் இன்று யூன் 5.

யாழ். மண்ணின் உரும்பிராயில் பிறந்த சிவகுமாரன் அவர்கள் சிறு பராயத்திலிருந்தே அநீதிகளைக் கண்டு கொதித்தெழுகின்ற, அவற்றைத் தட்டிக்கேட்கின்ற இயல்புடையவர். மக்கள் மீதான சிங்கள ஆட்சியாயர்களின் கொடுமை நிறைந்த ஒடுக்குமுறைக்கெதிராக போராட வேண்டுமென்ற துடிப்புடன் சிவகுமாரனால் மேற்கொள்ளப்பட்ட போராட்டச்செயற்பாடுகள் சரியான அரசியல் அடித்தளத்தைக் கொண்டவை. தொலைநோக்கு அடிப்படையில் அமைந்தவை.

தியாகி பொன்.சிவகுமாரனின் போராட்டச் செயற்பாடுகள் சிலவற்றை மீட்டுப்பார்ப்பதன் மூலம், தமிழ் மக்கள் மனங்களில், குறிப்பாக இளைஞர்கள் மனங்களில் விடுதலைக்கான பேரெழுச்சியை ஏற்படுத்திய அம்மாவீரனின் வரலாற்றை உள்வாங்கிக்கொள்ள முடியும். அதன் மூலம் தமிழ் மக்களின் விடுதலை வென்றெடுக்கப்பட்டு, அடிமைத் தளைகள் நீங்கிய வாழ்வமைய வேண்டுமென்பதற்காக போராடிய சிவகுமாரனின் இலட்சியத்தாகத்தின் ஆழத்தை அறிந்து கொள்ள முடியும்.

புரட்சியும் எழுச்சியும் இளைஞர் சமூகத்திடமிருந்து தான் தோற்றம் பெறுகின்றது. எனவே, தமிழ் மாணவர்களின் கல்வியைச் சீரழிப்பதன் மூலம் மக்களை எளிதாக அடிமைப்படுத்த முடியும் என்ற மூலோபாயத்தை சிங்கள அரசுகள் திடமாக நம்பி செயற்பட்டு வந்திருக்கின்றன. கல்வியில் பின்னடைவை ஏற்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கலாம், போர்க்குணத்தை மழுங்கடிக்கலாம், சுதந்திர உணர்வைச் சிதைக்கலாம் என்ற நோக்கத்தில் காலங்காலமாக அவை செயற்பட்டு வந்திருக்கின்றன. (இன்றைய காலத்தில்கூட பல பாடசாலைகளும் பாடசாலைகளை அண்டிய பகுதிகளும் சிறீலங்கா இராணுவ முகாம்களாக இருப்பதைக் கூற முடியும்.)

தமிழ் மாணவர்களின் கல்வி மீது கத்தி வைக்கும் ஆரம்பக் கட்டம் ஆயிரத்துத் தொழாயிரத்து எழுபதுகளில், சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் தரப்படுத்தல் அமுல் படுத்தப்பட்டதோடு நிகழ்ந்தது. இது போன்ற அக்கிரமங்களை எதிர்த்துப் போராடும் இலக்கோடு உயர்கல்வி மாணவர்கள் ஒருங்கிணைந்த தமிழ் மாணவர் பேரவை தோற்றம் பெற்றது. 1971இல் தமிழ் மாணவர் பேரவையில் இணைந்த சிவகுமாரன் அவர்கள் சில தோழர்களை ஒருங்கிணைத்து சிங்கள அரசுக்கும் தமிழ்த் தேச விரோத சக்திகளுக்கும் எதிரான போராட்டத்தில் ஈடுபட்டார்.

கல்வித் தரப்படுத்தலை அமுல்படுத்திய சிறிமா அரசின் துணை அமைச்சராகவிருந்த சோமவீர சந்திரசிறி பயணம் செய்த வாகனத்திற்கு நேரக்கணிய வெடி வைப்பதோடு ஆரம்பமானது சிவகுமாரனது ஆயுதப்போராட்ட வரலாறு (செப் 1970). இச்சம்பவத்திலிருந்து சிங்கள அமைச்சர் உயிர்தப்பிய போதும், அச்சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டில் கைதான சிவகுமாரன் சிறையில் மோசமான சித்திரை வதைகளுக்குட்படுத்தப்பட்டார்.

தொடர்ந்து தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் துரோகத்தனத்தை புரிந்து வந்த யாழ்.நகரமேயர் அல்பிரட் துரையப்பா மீதும் தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டார் (பெப் 1971). அம்முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. துரையப்பா மீதான தாக்குதல் காரணமாக கொலை முயற்சிக் குற்றம் சுமத்தப்பட்டு, 3 ஆண்டுகள் கொடுமையான துன்றுத்தல்களுடன் கூடிய சிறை வாழ்க்கையின் பின்னர், தனது 23வது வயதில் விடுதலையானார். ஆனாலும் அவர் மனம் தளரவில்லை. மிகவும் உறுதியோடு போராட்டச் செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

மூன்று ஆண்டுச் சிறை வாழ்க்கையின் பட்டறிவு மூலம் போராட்டம் தொடர்பான பல நடைமுறை யதார்த்தங்களை சிவகுமாரன் உணர்ந்து கொண்டார். போராட்டச் செயற்பாடுகள் தொடர்பான இரகசியங்களை வரவழைப்பதற்காக சிங்களப் படைகளும் சிறீலங்கா பொலிசாரும் போராளிகள் மீது கோரமான சித்திரவதைகளை மேற்கொள்ளும் போது உண்மைகள் வெளிப்பட நேர்ந்தால் போராட்டத்திற்கு உதவுகின்ற மக்கள் இன்னல்களை எதிர்கொள்ள வேண்டிவரும், போராட்டத்தின் இலக்கு பாதிக்கப்பட்டு பின்னடைவு ஏற்படும், அத்தோடு போராட்டம் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டுவிடும் ஆகியனவே சிறை வாழ்க்கை மூலம் சிவகுமாரன் பட்டறிந்த யதார்த்தம். எனவே, எதிரிகளிடம் உயிருடன் பிடிபடும் சூழல் ஏற்படின் சயனைற் உட்கொண்டு உயிரைப் போக்கிக்கொள்வதன் மூலமே போராட்டத்தை முன்னகர்த்த முடியுமென்ற முடிவை எடுத்தார்.

போராட்ட முறைமையென்பது கொள்கைகளை முன்னிறுத்தி உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழியேயன்றி, போராட்ட முறைமையே கொள்கையாக வரித்துக்கொள்ள முடியாதென்பதில் உறுதியான கருத்தைக் கொண்டிருந்தார். எனவே, போராட்ட முறைமைகள் காலத்திற்கும் சூழலுக்குமேற்ப மாற்றமடைய வேண்டுமென்பதில் ஆழமானதும் தெளிவானதுமான கருத்தைக் கொண்டிருந்தார். தமிழ் மக்களின் அபிலாசைகளையும் உரிமைகளையும் நிலைநிறுத்தும் பொருட்டு அமைதி வழியில் மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டங்களையும் பெரிதும் மதித்து ஏற்றுக்கொண்டார். சிறையில் இருந்த காலங்களில் உணவு மறுப்புப் போராட்டங்களை முன்னெடுத்தார்.

அத்தோடு தமிழ் மக்களுக்கெதிரான சிங்களத்தின் கொடுமைகளுக்கும் அநீதிகளுக்குமாக மட்டும் சிவகுமாரன் போராடவில்லை. தமிழ்ச் சமூகத்திற்குள் புதைந்திருந்த சமூக அடுக்குகளைப் பொசுக்கும் முயற்சிகளிலும் அவர் பின்நிற்கவில்லை. சாதியம், பெண் அடக்குமுறைப்போக்கு, மணக்கொடை போன்ற சமத்துவ வாழ்வுக்குப் புறம்பான போக்குகளையும் துணிந்து நின்று எதிர்த்தார்.

சிறிமா அரசானது, 1974 ஜனவரியில் யாழப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட 4வது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைக் குழப்பும் கீழ்த்தனமான நோக்கில் பல இடையூறுகளை விளைவித்தது. ஆனாலும் மாநாட்டு ஒழுங்கமைப்பாளர்களின் உறுதியான செயற்பாட்டால் மாநாடு பெரும் மக்கள் எழுச்சியுடன் நடந்தேறியது. இவ் வெற்றியின் பின்னணியில் சிவகுமாரன் மிகவும் உத்வேகத்துடன் செயற்பட்டார் என்பதும் வரலாற்றில் பதிவான ஒன்று.

பின்னர் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்ச்சியில் பொதுமக்கள் மீது சிங்களக் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். சிறீலங்கா பொலிசாரின் இந்த மிலேச்சத்தனமான படுகொலையை நேரில் கண்ட சிவகுமாரன் கொதித்தெழுந்தார். அப்படுகொலைக்கு உடந்தையாகவிருந்த உதவிக் பொலிஜ் அதிகாரி சந்திரசேகராவைப் பழி வாங்குவதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார்.

சிவகுமாரன் விடுதலை என்ற உன்னத இலட்சியத்திற்காக உண்மையான அர்ப்பணிப்புடனும் தொலைநோக்குடனும் செயற்பட்டவர். தமிழ் மக்களின் விடியலுக்காக போராடிய ஈகையர் பொன். சிவகுமாரன் அவர்கள் களச்செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த தருணத்தில் எதிரிகளால் சுற்றிவளைக்கப்பட்ட போது, எதிரிகளிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற உயர்ந்த இலட்சியத்தைத் தாங்கி சயனைட் அருந்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் தற்கொடையாளனாய் 1974ஆம் ஆண்டு யூன் 5ஆம் நாள் ஈகையர் பொன். சிவகுமாரன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

சிவகுமாரனின் வீரச்சாவு இளைஞர்களிடத்திலே ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. சுடுகாட்டுக்குப் பெண்கள் முதன் முதலில் வந்த நிகழ்வாக அது அமைந்தது. ஜூன் 6 ஆம் நாள் சிவகுமாரன் நினைவாக தமிழீழ மாணவர் எழுச்சி நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சுற்றுச் சூழல் நாள் ஜூன் 5 ஆம் நாள் வருவதால் அதற்கடுத்த நாள் சிவகுமாரன் நினைவு நாளாக ஆக்கப்பட்டது.

தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது: சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள்,தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

மீள முடியாத ஈராக் பொருளாதாரம்: அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

17.05.2026

ஈராக் பொருளாதாரம் அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவால் முழுமையாக மீளாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. நீண்ட காலமாக எண்ணெய் செல்வம் ஈராக்கில் இருந்தும் பொதுமக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. காரணம் ஊழல் மற்றும் அரசியல் குழப்பம் என்று கூறப்படுகிறது.

எண்ணெய் வளமிருந்தும் ஏழை நாடா?

ஈராக் இன்று தினசரி மில்லியன் கணக்கான பீப்பா எண்ணெயை உற்பத்தி செய்கிறது. இருந்த போதிலும் அந்த எண்ணெயை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஈரான் போரால் கடந்த சில மாதங்களாக ஏற்பட்டுள்ளது. ஆனாலும் நீண்ட காலமாக எண்ணெய் செல்வம் ஈராக்கில் இருந்தும் பொதுமக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. காரணம் ஊழல் மற்றும் அரசியல் குழப்பம் என்று கூறப்படுகிறது.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்குப் பின்னர் உருவான அரசியல் அமைப்பு, தேசிய அடையாளத்தை விட இன மற்றும் மத அடிப்படையிலான அதிகாரப் பகிர்வை ஊக்குவித்தது. இதனால் அரசாங்கங்கள் பலவீனமடைந்தன. வெளிநாட்டு நிறுவனங்களும் உள்ளூர் அரசியல் வட்டாரங்களும் எண்ணெய் வருவாயின் பெரும்பகுதியை கட்டுப்படுத்தின.

மின்சார தட்டுப்பாடு, சுத்தமான குடிநீர் பற்றாக்குறை, வேலை வாய்ப்பு இல்லாமை போன்ற அடிப்படை பிரச்சினைகள் இன்னும் ஈராக்கில் தொடர்கின்றன. எண்ணெய் வளம் கொண்ட நாட்டில் கூட இளைஞர்கள் எதிர்கால நம்பிக்கையின்றி வாழும் நிலை உருவாகியுள்ளது.

ஆயினும் ஈராக் பொருளாதாரம் முழுமையாக மீளாமல் இருப்பதற்குக் காரணம் பலவாகும். அது அரசியல், பாதுகாப்பு, ஊழல், மற்றும் கட்டமைப்பு பிரச்சனைகள் ஒன்றோடொன்று இணைந்த ஒரு சிக்கலான நிலை.

ஈராக் பொருளாதாரம் ஏன் இன்னும் மீளவில்லை என்பதற்கு அரசியல் நிலையற்ற தன்மை முக்கிய காரணமாகும். சதாம் ஆட்சி முடிந்த பிறகு நாடு முற்றிலும் மாற்றம் கண்டது. ஒரே மைய ஆட்சி இல்லை. பல அரசியல் கட்சிகள் மற்றும் பிரிவுகள். அரசு அமைப்புகள் அடிக்கடி மாற்றம். முடிவெடுப்பில் தாமதம். நிலையான நீண்டகால பொருளாதார திட்டங்கள் செயல்பட வில்லை.

மீள முடியாத ஈராக் பொருளாதாரம்:

மத்திய கிழக்கின் எண்ணெய் செல்வம் மிகுந்த நாடுகளில் ஒன்றாக விளங்கிய ஈராக் இன்று வரை முழுமையான பொருளாதார மீட்சியை அடைய முடியாமல் தவித்து வருகிறது. உலகின் மிகப்பெரிய எண்ணெய் களஞ்சியங்களை கொண்டிருந்தும், வேலைவாய்ப்பு பற்றாக்குறை, ஊழல், அரசியல் நிலையற்ற தன்மை, அடிப்படை வசதிகளின் சீரழிவு போன்ற பல்வேறு நெருக்கடிகளால் ஈராக் மக்கள் இன்னும் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலைக்கு முக்கிய காரணம் என்ன என்ற கேள்வி எழும்போது, பல அரசியல் ஆய்வாளர்களும் பொருளாதார நிபுணர்களும் ஒரே விடையை சுட்டிக்காட்டுகின்றனர். 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஆக்கிரமிப்பு.

சதாமின் வலுவான அரசியல் பொருளாதாரம்:

சதாம் ஆட்சிக் காலத்தில் ஈராக் ஒரு சர்ச்சைக்குரிய அரசியல் அமைப்பாக இருந்தாலும், அதன் பொருளாதார அடித்தளம் உறுதியானதாகவே இருந்தது. கல்வி, மருத்துவம், குடிநீர், மின் சாரம் போன்ற அடிப்படை வசதிகள் மத்திய கிழக்கில் முன்னேற் றமான நிலையில் காணப்பட்டன. எண்ணெய் ஏற்றுமதி மூலம் கிடைத்த வருவாய் அரசின் கட்டுப்பாட்டில் இருந்ததால், மக்கள் நலத்திட்டங்கள் பலவும் செயல்படுத்தப்பட்டன.

ஆனால் 1991 வளைகுடா போருக்குப் பின்னர் விதிக்கப்பட்ட ஐ.நா. பொருளாதார தடைகள் ஈராக் பொருளாதாரத்தை பலவீனப்படுத்தத் தொடங்கின. இருந்தபோதிலும், அந்த அமைப்பு முற்றிலும் சிதைவடையவில்லை. 2003 அமெரிக்க படையெடுப்பே அந்த நாட்டின் நிர்வாக அமைப்பை முழுமையாக உடைத்தெறிந்த முக்கிய திருப்புமுனையாக பார்க்கப்படுகிறது.



அமெரிக்க ஆக்கிரமிப்பு

ஜனநாயகத்தை கொண்டு வருதல் என்ற பெயரில் அமெரிக்க படைகள் நடத்திய அழிவுகளின் விளைவாக இன்னும் ஈராக் மீள் எழவில்லை.

2003 இல் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் அணு ஆயுதங்கள் மற்றும் பயங்கரவாதத் தொடர்புகள் என்ற காரணங்களை முன்வைத்து ஈராக் மீது படையெடுத்தன. பின்னர் அவ்வாறு கூறப்பட்ட அணு ஆயுதங்கள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் அந்த போரின் விளைவாக ஒரு முழு நாடும் சிதைந்தது.

ஈராக் இராணுவம் கலைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். அரசின் நிர்வாக அனுபவம் கொண்டவர்களை அதிகார அமைப்பிலிருந்து நீக்கியது, நாட்டை நிர்வாக வெற்றிடத்திற்குள் தள்ளியது. இந்த வெற்றிடமே பின்னர் மத அடிப்படைவாத குழுக்கள், ஆயுதப்படைகள் மற்றும் தீவிரவாத இயக்கங்களுக்கு வளர்ச்சியளித்தது.

தேசிய பாதுகாப்பு பிரச்சனை

தொடரும் போர்களின் காரணமாகவும், 2003 க்கு பிந்தைய உள்நாட்டு கலவரங்கள் ISIS எழுச்சி (2014 - 2017) தொடர்ச்சியான பயங்கரவாத தாக்குதல்களால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெரும் அச்சத்தில் இருக்கிறார்கள். இதனால் தொழில் மற்றும் சுற்றுலா வளர்ச்சி குறைந்து வருகிறது.

ஊழல் (Corruption) இது இன்றைய ஈராக்கின் மிகப்பெரிய பிரச் சனை. அரச நிதிதவறாக பயன்படுத்தப் படுகிறது. வேலை வாய்ப்பு அரசியல் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. பல ஆயிரம் அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேறாமல் நிறுத்தப்பட்டன. எண்ணெய் வருமானம் இருந்தும் அது மக்களுக்குச் சரியாக செல்லவில்லை

எண்ணெய் சார்பு வர்த்தகம் அதிகம் என்பதால் ஈராக் பொருளா தாரம் இன்னும் பெரும்பாலும் எண்ணெய் மீது

சார்ந்ததாக இருக்கிறது. விவசாயம், தொழில்துறை வளர்ச்சி குறைவாகும். எண்ணெய் விலை குறைந்தால் பொருளாதாரம் உடனே பாதிக் கப்படுகிறது. மேலும் உள்கட்டமைப்பு (Infrastructure) சேதம் அடைந்து வருகிறது. போர்களால் சாலைகள், மின்சாரம், தண் ணீர் அமைப்புகள் சேதமடைந்தன. பல பகுதிகளில் இன்னும் மின்சாரம் முறையாக இல்லை. தொழிற்சாலைகள் குறைவாக உள்ளதால் உற்பத்தி திறன் குறைவாக உள்ளது.

இதனால் வேலைவாய்ப்பு பிரச்சனை இளைஞர்களை அதிகம் பாதித்துள்ளது. வேலை வாய்ப்பு குறைவால் அரசு வேலை களுக்கு மட்டுமே அதிக போட்டி நிலவுகிறது. சமூக அதிருப்தி மற்றும் பொருளாதார அழுத்தம் அதிகரிக்கிறது. வெளிநாட்டு முதலீடு குறைவால் பாதுகாப்பு அபாயமும், சட்ட மற்றும் நிர்வாக குழப்பமும் ஊழல் அபாயம் உள்ளது. இதனால் மேற்குலக பெரிய நிறுவனங்கள் முழுமையாக ஈராக் சந்தையில் நுழைய தயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

போரும் பொருளாதார வீழ்ச்சியும்:

அமெரிக்க ஆக்கிரமிப்புக்குப் பின்னர் உருவான அரசியல் குழப் பம், பின்னாளில் ISIS போன்ற தீவிரவாத இயக்கங்களுக்கு வழி வகுத்தது. 2014 ஆம் ஆண்டு மோசுல் உள்ளிட்ட பல பகுதி - களை ISIS கைப்பற்றியபோது, ஈராக் மீண்டும் ஒரு பேரழிவை சந்தித்தது.

போர் காரணமாக சாலைகள், பாலங்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், பள்ளிகள் என பல்வேறு கட்டமைப்புகள் அழிந்தன. மீள்கட்டமைப்பிற்காக பில்லியன் கணக்கில் டாலர்கள் செலவிடப்பட்டாலும், ஊழல் மற்றும் அரசியல் சண் டைகள் காரணமாக பல திட்டங்கள் முழுமை பெறவில்லை.

ஈராக் பொருளாதார நெருக்கடிக்கான முழுப் பொறுப்பையும் அமெரிக்காவுக்கு மட்டும் சுமத்த முடியாது என சிலர் வாதிடு கின்றனர். ஈராக் அரசியல் தலைவர்களின் ஊழல், பிராந்திய சக்திகளின் தலையீடு, மத அரசியல், நிர்வாக திறனின்மை ஆகியவையும் பெரும் காரணிகளாக உள்ளன.

அமெரிக்கா மட்டும் காரணமா?

ஆனால் இக்கட்டான சூழ்நிலைக்கு அடித்தளத்தை உருவாக் கியது அமெரிக்க ஆக்கிரமிப்பே என்பதில் பெரும்பாலான ஆய் வாளர்கள் ஒருமித்த கருத்தில் உள்ளனர். ஒரு நாட்டின் அர சியல் மற்றும் நிர்வாக அமைப்பை ஒரே நேரத்தில் முற்றிலும் அகற்றியதன் விளைவாக ஏற்பட்ட குழப்பம், இன்னும் ஈராக்கை துரத்திக் கொண்டிருக்கிறது.

ஈராக்கில் இன்னும் அமைதி முழுமையாக மீளாத காரணங் களால் அரசியல் குழப்பம் நிலவுகிறது. பாதுகாப்பு பிரச்சனை களுடன் ஊழல், எண்ணெய் சார்பு, கட்டமைப்பு சேதம், வேலை வாய்ப்பு குறைவும் தொடர்கிறது. ஈராக் இன்று ஒரு முக்கியமான வரலாற்றுப் பாடமாக நிற்கிறது. வெளிநாட்டு தலையீடு மற்றும் போர், ஒரு நாட்டின் அரசியல் அமைப்பை மட்டும் அல்ல; அதன் பொருளாதாரம், சமூக ஒற்றுமை, மக்களின் எதிர்கால நம் பிக்கை ஆகிய அனைத்தையும் சிதைக்கக்கூடும் என்பதை ஈராக் நிரூபித்துள்ளது.

அமெரிக்க ஆக்கிரமிப்பு “ஜனநாயகத்தை” கொண்டு வந்ததா என்பது இன்னும் விவாதமாக இருக்கலாம். ஆனால் அது ஈராக் பொருளாதாரத்தை பல தசாப்தங்களுக்கு பின்னுக்கு தள்ளி யதோ மறுக்க முடியாத உண்மையாகவே உள்ளது. ஈராக்கின் இன்றைய முக்கிய பிரச்சனை பொருளாதாரம் மட்டும் அல்ல. அது அரசியல், பாதுகாப்பு, நிர்வாக அமைப்பு மூன்றும் இணைந்த ஒரு சிக்கலாகவே இன்னமும் தொடர்கிறது.

நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

காசா சென்ற அவுஸ்திரேலியத் தொண்டர்கள்
இஸ்ரேலியப் படையால் கடலில் துஷ்பிரயோகம்

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

26.05.2026

பாலஸ்தீனத்தில் காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்ல முயன்ற சர்வதேச தொண்டர் குழுக்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மீண்டும் உலக கவனத்தை ஈர்த்துள்ளன. குறிப்பாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் தொண்டர்கள் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் சர்வதேச அளவில் கண்டனங்களை ஏற்படுத்தியுள்ளன.

அவுஸ்திரேலிய தொண்டர்கள் கைது:

காசாவிற்கு மனிதாபிமான உதவிகளை வழங்கக் கடலில் சென்ற “குளோபல் சுமுத்” (Global Sumud) மிதவைக் கப்பல் குழுவில் பயணித்த அவுஸ்திரேலியர்கள், சர்வதேச கடற்பகுதியில் இஸ்ரேலிய படையினரால் இடைமடைந்து கைது செய்யப்பட்டனர். இந்தியா திரும்புவதற்கு முன்னர் இஸ்ரேலிய படைகளால் தாங்கள் கடலில் கடுமையான துன்புறுத்தல்களுக்கும் பாலியல் வன்முறைக்கும் ஆளானதாக அவுஸ்திரேலிய தொண்டர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். முக்கிய காசாவின் கடல்வழி முற்றுகையை மீறி உதவிப் பொருட்களை ஏற்றிச் சென்ற 40 நாடுகளைச் சேர்ந்த 430 தொண்டர்களை (11 அவுஸ்திரேலியர்கள் உட்பட) இஸ்ரேலிய கடற்படையினர் தடுத்து நிறுத்தினர்.

பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டு அவுஸ்திரேலியாவிற்கு சிட்னி, மெல்போர்ன், பிரிஸ்பேன் போன்ற பகுதிகளுக்கு திரும்பிய தொண்டர்கள், தங்களை இஸ்ரேலிய படைகள் சிறைப் படகில் வைத்து அடித்ததுடன், பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தியதாக அதிர்ச்சிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளனர். இதற்கு அரசியல் ரீதியான பலத்த கண்டனம் எழுந்துள்ளது.

மிகக் கொடூரமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தொண்டர்களை இஸ்ரேலின் தீவிர வலதுசாரி பாதுகாப்பு அமைச்சர் “இத்தாமர் பென்-ஜிவிர்” (Itamar Ben-Gvir) தரையில் அமர வைத்து அவமதித்த காணொளி வெளியாகி பெரும் சர்வதேச கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்த அநாகரிகமான செயல் இஸ்ரேலின் விழுமியங்களுக்கு எதிரானது என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகுவும், இந்த நடவடிக்கை “அதிர்ச்சியளிக்கிறது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாதது” என அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் “பென்னி வோங்” (Penny Wong) ஆகியோரும் கடுமையாகக் கண்டித்துள்ளனர்

குளோபல் சுமுத் கப்பல் வழிமறிப்பு:

மனிதாபிமான உதவியை தடுத்து சர்வதேச தன்னார்வ தொண்டர்கள் இஸ்ரேலிய படைகளால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது. அத்துடன் மனிதாபிமான உதவிகளும் அரசியல் முற்றுகைகளும் மோதிக் கொள்ளும் இடமாக காசா பகுதி கடந்த பல ஆண்டுகளாக மாறியுள்ளது. போரால் சிதைந்த மக்களுக்கு உணவு, மருந்து, குடிநீர் மற்றும் அவசர மருத்துவ உதவிகள் தேவைப்படும் நேரங்களில், அவற்றை கொண்டு செல்லும் மனிதாபிமான முயற்சிகளுக்குக் கூட பல்வேறு தடைகள் விதிக்கப்படுகின்றன. அந்த வகையில், “குளோபல் சுமுத்” எனப்படும் உதவிக் கப்பல் வழிமறிக்கப்பட்ட சம்பவம் சர்வதேச அளவில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

“சுமத்” என்பது அரபு மொழியில் “உறுதியான நிலைத்தன்மை” அல்லது “எதிர்ப்பை தாங்கும் மனவலிமை” என்பதைக் குறிக்கும் சொல். இந்தக் கப்பலின் பெயரே அதன் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்லும் நோக்கில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொண்டர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மருத்துவர்கள் மற்றும் மனித உரிமை ஆதரவாளர்கள் இணைந்து இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால், சர்வதேச கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த இந்தக் கப்பலை இஸ்ரேலிய கடற்படை தடுத்து நிறுத்தியதாக தகவல்கள் வெளியாகின. உதவிப் பொருட்கள் சோதனை செய்யப்படும் என்ற பெயரில் கப்பல் வழிமறிக்கப்பட்டதோடு, அதில் இருந்த தொண்டர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. சிலர் கைது செய்யப்பட்டதாகவும், சிலர் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் வைக்கப்பட்டதாகவும் தகவல்கள் பரவின.

காசாவில் உணவு மருத்துவ நெருக்கடி:

காசா பகுதி பல மாதங்களாக கடுமையான போர், உணவுத் தட்டுப்பாடு, மருத்துவ நெருக்கடி மற்றும் மனிதாபிமான பேரழிவை எதிர்கொண்டு வருகிறது. இந்த நிலையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அமைதித் தொண்டர்கள், மருத்துவ உதவி குழுக்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கடல் மற்றும் நில வழிகளால் உதவிப் பொருட்களை கொண்டு செல்ல முயற்சித்து வருகின்றனர். அவற்றில் அவுஸ்திரேலியர்களும் இடம்பெற்றிருந்தனர்.

காசாவின் கடல்வழி முற்றுகையை மீறி உதவிப் பொருட்களை ஏற்றிச் சென்ற 40 நாடுகளைச் சேர்ந்த 430 தொண்டர்களை இஸ்ரேலிய படைகள் சிறைப்பிடித்து, படகில் வைத்து அடித்ததுடன், பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தியதாக அதிர்ச்சிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளனர். மிகக் கொடூரமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தொண்டர்களை இஸ்ரேலின் அமைச்சர் "இத்தாமர் பென்–ஜிவிர்" தரையில் அமர வைத்து அவமதித்த காணொளி வெளியாகி பெரும் சர்வதேச கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், காசாவை நோக்கிச் சென்ற சில உதவிக் கப்பல்கள் மற்றும் செயற்பாட்டாளர் குழுக்கள் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினரால் தடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. கைது செய்யப்பட்ட தொண்டர்கள் மீது விசாரணை என்ற பெயரில் மன அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும், சிலர் உடல் ரீதியான அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டதாகவும் மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

இந்தச் சம்பவம் அவுஸ்திரேலிய சமூகத்திலும் எதிரொலியை உருவாக்கியுள்ளது. மனிதாபிமான உதவியை குற்றமாக பார்க்க முடியாது என்றும், போர் பாதித்த மக்களுக்கு உதவ முயற்சித்தவர்களை அவமதிப்பது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது என்றும் பல சமூக அமைப்புகள் வலியுறுத்துகின்றன. சில அரசியல் செயற்பாட்டாளர்கள், “காசா மக்களுக்கு உணவு மற்றும் மருந்து கொண்டு செல்ல முயற்சித்தவர்களை கைது செய்வது மனிதாபிமான பணிகளையே அச்சுறுத்தும் செயல்” என்று கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் படி, போரின்போது பொதுமக்களுக்கு உதவி வழங்கும் மனிதாபிமான அணுகலைத் தடுக்கக் கூடாது என்பது அடிப்படை கோட்பாடாகும். எனினும், காசா முற்றுகை மற்றும் உதவிக் கப்பல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இந்தக் கோட்பாடுகள் நடைமுறையில் மதிக்கப்படுகிறதா என்ற கேள்வியை எழுப்புகின்றன.

அத்துடன் இந்தச் சம்பவம் வெறும் கடற்படை நடவடிக்கையாக மட்டும் பார்க்கப்படவில்லை. மாறாக, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முனையும் சர்வதேச மனிதாபிமான முயற்சிகளை அரசியல் மற்றும் இராணுவ அதிகாரத்தின் மூலம் கட்டுப்படுத்தும் செயலாக பலரும் இதைப் பார்க்கின்றனர். குறிப்பாக, குழந்தைகள் பட்டினியிலும் மருத்துவ பற்றாக்குறையிலும் தவிக்கும் சூழலில் உதவி அனுப்பும் முயற்சிகள் தடுக்கப்படுவது மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரானது என்ற விமர்சனங்கள் எழுகின்றன.

சர்வதேச மனித உரிமை சட்டங்களும் ஜெனீவா ஒப்பந்தங்களும் பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை மறுப்பதை கடுமையாக எதிர்க்கின்றன. ஆயினும், காசா முற்றுகை தொடர்பான விவகாரங்களில் இத்தகைய சட்டங்கள் நடைமுறையில் எவ்வளவு மதிக்கப்படுகின்றன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. “குளோபல் சுமுத்” கப்பல் சம்பவம் இந்த முரண்பாட்டை மீண்டும் உலகின் முன் கொண்டுவந்துள்ளது.

பல மனித உரிமை அமைப்புகளும் அரசியல் விமர்சகர்களும், மனிதாபிமான உதவிகளை “பாதுகாப்பு அச்சுறுத்தல்” எனக் கூறி தடுக்க முயல்வது ஒரு அபாயகரமான முன்னுதாரணம் என எச்சரிக்கின்றனர். இது எதிர்காலத்தில் உலகின் பிற மோதல் பகுதிகளிலும் உதவி அமைப்புகள் செயல்பட முடியாத சூழலை உருவாக்கும் என்ற அச்சமும் உள்ளது.

மற்றொரு பக்கம், இஸ்ரேல் தனது பாதுகாப்பு தேவைகளை முன்வைத்து கடற்படை நடவடிக்கைகளை நியாயப்படுத்துகிறது. காசாவுக்கு செல்லும் பொருட்கள் ஆயுதக் குழுக்களிடம் சென்று சேரக்கூடும் என்பதே அதன் முக்கிய வாதமாகும். ஆனால், சர்வதேச பார்வையாளர்கள் பலர், மருத்துவப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களை கூட இவ்வாறு தடுக்குவது அளவுக்கு மீறிய நடவடிக்கை எனக் கருதுகின்றனர். “குளோபல் சுமுத்” சம்பவம் உலக அரசியலில் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. போரின்போதும் மனிதாபிமான உதவிக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டாமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஒரு சமூகத்தின் குழந்தைகள் பசியால் தவிக்கும் வேளையில், அவர்களுக்கு உதவி செய்ய முனையும் தொண்டர்களைத் தடுத்து நிறுத்துவது மனிதநேயத்தின் தோல்வியாகவே பார்க்கப்படுகிறது. அரசியல் மோதல்களும் பாதுகாப்பு அச்சங்களும் இருந்தாலும், மனித உயிர்களின் மதிப்பே அனைத்திற்கும் மேலானதாக இருக்க வேண்டும் என்பதே உலக மனிதாபிமானத்தின் அடிப்படை கொள்கையாகும்.

சர்வதேச விசாரணை தேவை:

அதனால், “குளோபல் சுமுத்” கப்பல் வழிமறிப்பு சம்பவம் ஒரு தனிப்பட்ட கடற்படை நடவடிக்கை அல்ல; அது மனித உரிமைகள், சர்வதேச சட்டம், அரசியல் அதிகாரம் மற்றும் மனித நேய பொறுப்பு ஆகியவற்றுக்கிடையிலான மோதலின் வெளிப்பாடாகும். உலக நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் இத்தகைய சம்பவங்களில் அமைதியாக இருப்பதை விட, மனிதாபிமான உதவிகளுக்கான பாதுகாப்பான வழிகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

இந்த விவகாரம் மேலும் ஒரு உண்மையை வெளிப்படுத்தி இருக்கிறது. காசா போர் என்பது வெறும் இராணுவ மோதல் மட்டுமல்ல. அது உலக மனசாட்சியை சோதிக்கும் மனிதாபிமான நெருக்கடியும் ஆகும். ஆயுதங்களுக்கும் அரசியல் கூட்டணிகளுக்கும் அப்பால், மனித உயிர்களின் மதிப்பு முக்கியமா என்ற கேள்வி இன்று உலக நாடுகளின் முன் நிற்கிறது.

காசாவுக்குச் செல்லும் உதவிப் பயணங்களில் பங்கேற்கும் தொண்டர்கள், அரசியல் இலாபத்திற்காக அல்ல, உயிர்களை காப்பாற்ற வேண்டும் என்ற மனித நேய உணர்வுடன் செயல்படுகின்றனர். அவர்கள் மீது நடைபெறும் துஷ்பிரயோகங்கள் குறித்து வெளிப்படையான சர்வதேச விசாரணை தற்போது அவசியமாகியுள்ளது.

சிட்னியில் தமிழர் இனவழிப்பு நினைவுத் தூபி திறப்பு!

- நவீனன் -

16.05.2026

நினைவின் வழியே இனத்தின் வரலாற்றை காக்கும் ஒரு சின்னம், சிட்னியில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி சனிக்கிழமை திறக்கப்பட்டது.

இனப்படுகொலைக்கு இலக்கான தாயகத் தமிழ் மக்களின் நினைவாகவும், அவர்களின் நினைவு நாட்களில் மலர் தூவி வணக்கம் செலுத்துவதற்கும் சிட்னி நகரில் நிரந்தர “தமிழர் நினைவுத் தூபி“ ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

தமிழர் இனவழிப்பு நினைவுத் தூபி திறப்பு நிகழ்வு மே16 சனிக்கிழமை காலை 9:45 மணிக்கு நடைபெற்றது.

Cumberland நகர சபை முதல்வர் பங்கேற்று, நினைவுத் தூபியை திறந்து வைத்தார். சிட்னியில் உள்ள Pendle Hill Civic Park பொது இடத்தில், Cumberland நகர சபையின் பேராதரவுடன் இந்த நினைவுத் தூபி நிறுவப்பட்டுள்ளது.

“தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - சிட்னி” அமைப்பின் முன்னெடுப்பில், சிட்னியிலுள்ள அனைத்துத் தமிழர் அமைப்புகளின் ஆதரவோடும் நினைவுத்தூபி நிறுவப்பட்டுள்ளது.

அவஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உருவாக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி, வெறும் கற்களாலும் சிலைகளாலும் ஆன ஒரு கட்டமைப்பு அல்ல. அது தமிழர் இனத்தின் துயர வரலாறு, போராட்ட நினைவு, இனஅழிப்பு வேதனை மற்றும் நீதிக்கான தொடர்ச்சியான அழைப்பின் அடையாளமாக திகழ்கிறது. உலகம் முழுவதும் பரவி வாழும் ஈழத் தமிழர்களுக்கு, முள்ளிவாய்க்கால் என்பது ஒரு புவியியல் இடம் மட்டுமல்ல. அது அழிக்கப்பட்ட உயிர்களின் சாட்சியமும், மறக்க முடியாத வரலாற்றுக் காயமும் ஆகும்.

2009 ஆம் ஆண்டு இலங்கையின் வடகிழக்கில் அமைந்திருந்த முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதாக உலக மனித உரிமை அமைப்புகள் பதிவு செய்துள்ளன. குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என பொதுமக்கள் பாதுகாப்பற்ற சூழலில் உயிரிழந்த அந்த நாட்கள், தமிழர்களின் என்றும் அழியாத கருப்பு அத்தியாயமாகவே உள்ளது. இந்த நினைவுகளை அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் பல நாடுகளில் நினைவுத்தூபிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் சிட்னி நினைவுத்தூபி தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

சிட்னியில் அமைக்கப்பட்ட இந்த நினைவுத்தூபி, தமிழர் சமூகத்தின் ஒற்றுமையையும் அரசியல் நினைவாற்றலையும் பிரதிபலிக்கிறது. தாயகத்திலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தொலைவில் வாழ்ந்தாலும், தமது வரலாற்றை மறக்காமல் காக்கும் மனப்பாங்கை இது வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் நடைபெறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளில், நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஒன்று கூடி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர். மெழுகுவர்த்தி ஏற்றுதல், மலர்வணக்கம், மவுன அஞ்சலி, கவிதை மற்றும் உரைகள் மூலம் நினைவு அரசியல் தொடர்கிறது.

இந்த நினைவுத்தூபி ஒரு துயரச் சின்னமாக மட்டும் இல்லை; அது எதிர்கால தலைமுறைக்கு ஒரு அரசியல் பாடமாகவும் அமைகிறது. “ஏன் இது நடந்தது?”, “இனஅழிப்பை உலகம் ஏன் தடுக்கவில்லை?”, “நீதிக்கான போராட்டம் இன்னும் ஏன் தொடர்கிறது?” போன்ற கேள்விகளை இளம் தலைமுறையிடம் எழுப்புகிறது. குறிப்பாக அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்த தமிழ் இளைஞர்களுக்கு, தமது இனத்தின் வரலாற்றை அறிய இந்த நினைவிடங்கள் முக்கியமான கல்வி இடங்களாக மாறியுள்ளன.

மேலும், முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி உலக அரசியலுக்கும் ஒரு அமைதியான செய்தியை வழங்குகிறது. ஒரு இனத்தின் துயரத்தை அழிக்க முடியாது. அதை நினைவுகளிலிருந்து நீக்கவும் முடியாது என்பதையே அது உணர்த்துகிறது. நீதியின்றி சமாதானம் இல்லை என்ற உண்மையை இந்த நினைவுத்தூபி அமைதியாக உலகிற்கு நினைவூட்டுகிறது.

இன்றைய உலகில் பல இனங்களும் சமூகங்களும் தமது வரலாற்று நினைவுகளை பாதுகாக்க நினைவுச் சின்னங்களை அமைத்து வருகின்றன. யூதர்களின் ஹாலோகாஸ்ட் நினைவிடங்கள் போலவே, தமிழர்களுக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுகள் இனஅழிப்பு வரலாற்றின் அடையாளங்களாக உருவாகி வருகின்றன. சிட்னியில் உருவான இந்த நினைவுத் தூபி, தமிழர் உலக நினைவியல் அரசியலின் ஒரு முக்கிய அத்தியாயமாக பார்க்கப்படுகிறது.

இனப்படுகொலைக்கு இலக்கான எமது தாயக மக்களின் நினைவாகவும், உயிரிழந்த நமது உறவுகளின் நினைவு நாட்களில் மலர் தூவி வணக்கம் செலுத்த வசதியாகவும் நிரந்தர தமிழர் நினைவு தூபி சிட்னி, பெண்டில் கில் சிவிக் பூங்காவில் (Pendle Hill Civic Park) உள்ள பொது இடத்தில் Cumberland நகர சபையின் ஆதரவுடன் மே 16 சனிக்கிழமை காலை 9:45 மணிக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது

சிட்னியில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி என்பது வெறும் கற்சிலை அல்ல. அது உயிரிழந்த ஆயிரங்களின் மௌனக் குரல். அது ஒரு இனத்தின் துயர நினைவு, நீதிக்கான அழைப்பு, மறக்காத மனசாட்சி. காலம் கடந்தாலும், முள்ளிவாய்க்கால் நினைவு தமிழர் இதயங்களில் என்றும் அணையாத தீபமாகவே நிலைத்திருக்கும்.

தமிழக எழுத்தாளுமைகளின்

ஈழப் போரிலக்கிய வகிபாகம்

– பொன்ராஜ் தங்கமணி (தமிழ் நாடு) –

17.05.2026

போர் இலக்கியத்தில் தமிழக உரிமைக் குரல்கள் எனும் இந்த நூல், ஆசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் பல கால கட்டங்களில் எழுதிய கட்டுரைகளை ஒருங்கிணைத்து தொகுத்து வழங்கும் ஒரு நூலாகும். தன் எழுத்துப் பயணத்தின் பல்வேறு தருணங்களில் உருவான சிந்தனைகள், விமர்சனங்கள், ஆய்வுகள் ஆகியவற்றை மறக்காமல் பதிவு செய்து, அவற்றை ஒரு ஆவணமாக மாற்ற வேண்டும் என்ற ஆசிரியரின் முயற்சி இந்த நூலில் தெரிகிறது.

இந்த கட்டுரைகளில், ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்திற்காக குரல் கொடுத்த கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு ஆசிரியர் சிறப்பு முக்கியத்துவம் அளித்துள்ளார். அவர்கள் எழுதிய படைப்புகள், அவர்கள் வெளிப்படுத்திய அரசியல் நிலைப்பாடுகள், ஈழத் தமிழருக்காக அவர்கள் குரல் கொடுத்த துணிச்சலான குரல்கள் ஆகியவற்றை இக்கட்டுரைகளில் விரிவாக மேற்கோள் காட்டியுள்ளார்.

இதன் மூலம் தமிழ் சினிமா உலகின் கலை இலக்கிய உலகம் ஈழப் போராட்டத்துடன் கொண்டிருந்த உறவை ஆசிரியர் தெளிவாக எடுத்துரைத்து ஆவணப்படுத்துகிறார்.

மேலும், இந்த நூலில் இடம்பெறும் ஒவ்வொரு கவிஞர்கள், கலைஞர்கள் பற்றிய பின்னணி தகவல்கள், அவர்களின் அரசியல் சார்புகள், அவர்களின் படைப்புகளின் வரலாற்றுப் பின்னணி போன்றவற்றை எடுத்துரைத்து வாசகர்களுக்கு ஒரு நல்ல தகவல் திரட்டாக அளிக்கிறார்.

இந்த கலை ஆளுமைகளைப் பற்றி அறியாத புதிய தலைமுறைக்கு, இந்நூல் ஒரு புதிய அறிமுகமாகவும் அமையும்.

இந்நூலில் இலக்கியக் கட்டுரைகளோடு மட்டுமல்லாமல், தமிழ் சினிமாவைச் சார்ந்த கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, 1970-1980களில் தமிழ் வாசகர்களின் மனதை கவர்ந்த முத்து காமிக்ஸ், ராணி காமிக்ஸ் போன்ற கிராபிக் நாவல்களைப் பற்றிய கட்டுரை, அந்தக் காலத்தை அனுபவித்தவர்களுக்கு இனிய நினைவுகளை மீட்டெடுக்கும். மேலும் வரலாற்றால் மறந்து கொண்டு வரப்படும் குயிலி, சுந்தரலிங்கம் போன்றவர்களின் வாழ்வையும் மீண்டும் நினைவுபடுத்துகிறார்.

ஐங்கரனின் எழுத்துக்களைப் பற்றி முன்பே அறிந்திருக்கும் வாசகர்களுக்கு, இந்த நூல் அவரது சிந்தனைகளின் தொடர்ச்சியைப் புரிந்துகொள்ளும் ஒரு வாய்ப்பாக இருக்கும். அதே சமயம், புதிய வாசகர்களுக்கு, அவரது எழுத்து உலகின் பல தரப்பட்ட பார்வையை அறிமுகப்படுத்தும் ஒரு சிறந்த தொடக்கமாகவும் அமையும்.

அவரது இந்த எழுத்து முயற்சி மூலம் தன்னுடைய சமூகப் பொறுப்பு, வரலாற்று உணர்வு, நல்ல விடயங்களை ஆவணப்படுத்த வேண்டும் என்கிற அக்கறையையும் அறியலாம்.

இந்த நூல், கலை, இலக்கியம், அரசியல், வரலாறு ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கும் தமிழ் சமூகத்தின் அனுபவங்களைப் பதிவு செய்யும் ஒரு ஆவணமாக திகழ்கிறது.

ஐங்கரன் அவர்களின் எழுத்து முயற்சிகள் பரந்துபட்ட வாசகர்களிடம் சென்றடைய இனிய வாழ்த்துகள்.

பொன்ராஜ் தங்கமணி
தமிழ்நாடு.

கஞ்சி கதைகளைக் கூறுவது

17.05.2026

ஆசிரியர் ஒருவர் பல்கலைக்கழக அனுமதி பெற்ற பிள்ளைகள் மத்தியில் உரையாற்றும்போது,அதில் ஒரு பிள்ளை கேட்டார், “இனப்பிரச்சினை என்றால் என்ன?” என்று. ஒரு மருத்துவர் கேட்டார், “எனது இருபது வயதுப் பிள்ளை அனுரவின் “ரீல்ஸ்” களைத்தான் அதிகமாகப் பார்க்கின்றது. அது யாரைக் கதாநாயகனாகக் கருதும்?” என்று.

21 வயதுப் பிள்ளை ஒன்று இனப்பிரச்சினை என்றால் என்ன ஒன்று கேட்கும் ஒரு சமூகத்தில்தான், முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் காய்ச்சிக் கொடுத்து, இறுதிக் கட்டப்போரின் கதைகளை எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது.“ஜெனரேஷன் ஸற்” அல்லது “ஜென்சி” என்று அழைக்கப்படுகின்ற இளையோரின் கவனக் குவி மையத்துக்குள் தமிழ்த் தேசிய உரையாடல் பெருமளவுக்கு இல்லை. அவர்களுக்கு பார்க்கக் கிடைக்கின்றகேட்கக் கிடைக்கின்றமிகக் குறைந்த அளவுக்கு வாசிக்க கிடைக்கின்ற விடயங்களில் அந்த உரையாடல் குறைவு. அவர்கள் ரசித்துப் பார்க்கின்ற சில நிமிட ரீல்ஸ்களில் அந்த உரையாடல் குறைவு.

ஒருபுறம் முள்ளிவாய்க்கால் கஞ்சியை பரவலாக எடுத்துச் செல்லும் பல்கலைக்கழக மாணவர்களும் ஜென்சிதான். அதே சமயம் எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சியிடமும் ஜென்சியை அமைப்பாக்கும் பொறிமுறையோ, அல்லது அதற்கு வேண்டிய அரசியல் தரிசனமோ இல்லை.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தொடர்பாக பகிரங்கமாக எடுத்துரைக்க முடியாத சட்டச் சூழல் ஒன்று தாயகத்தில் உண்டு. சமூக வலைத்தளங்களிலும் அவ்வாறான சட்டத் தடைகள் உண்டு. அதனால் அதனை அரசியல் வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் தான் துணிந்து பகிரங்கமாக எடுத்துரைக்கிறார்கள்.

சமூக மட்டத்தில் குறிப்பாக குடும்ப மட்டத்தில் அந்த உரையாடல் குறைவு என்று தெரிகிறது. அவ்வாறான உரையாடல்களை தங்கள் பிள்ளைகள் மத்தியில் ஊக்குவிப்பதற்கு ஒரு பகுதி பெற்றோர் அஞ்சுகிறார்கள். பிள்ளைகள் ரத்தம் சிந்தும் அரசியலின் பக்கம் போய்விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை ஒரு காரணம். அவ்வாறு தலைமுறைகள் தோறும் போரின் கதைகளை எடுத்துக் கூறத்தக்க ஏற்பாடுகள் தமிழ்க் கட்சிகள் மத்தியிலும் குடிமக்கள் சமூகங்கள் மத்தியிலும் குறைவு என்பது மற்றொரு காரணம். சமூக வலைத்தளச் சூழலுக்குள்ளும் அதுதொடர்பாக தடைகள் உண்டு என்பது மூன்றாவது காரணம். இதனால் ஈழத் தமிழர்களின் இறந்த காலத்தின் ஒரு பகுதி குறிப்பாக ஆயுதப் போராட்ட காலகட்டம் மறைக்கப்பட்ட ஒரு கதையாகவோ அல்லது மறக்கப்பட்ட ஒரு கதையாகவோ அல்லது நினைக்க விரும்பாத ஒரு கதையாகவோ மாறி வருகிறதா?

“கதை சொல்லிகள் சமூகத்தை ஆள்வார்கள்” என்று கிரேக்க தத்துவஞானி பிளாட்டோ கூறினார். நமது காலத்தின் கதை சொல்லிகள் பெருமளவுக்கு காணொளிக்காரர்கள்தான். இவர்கள் சொல்லும் கதைகளில் அதிகமானவை டொலர்களை மையமாகக் கொண்டவை. அங்கே வணிக நோக்கம்தான் அதிகமாக இருக்கும். கருத்துருவாக்கத்துக்கும் தேச நிர்மாணத்துக்குமான கதைகள், உரையாடல்கள் மிகக்குறைவு. அவ்வாறான உரையாடல்களை உள்ளடக்கமாகக் கொண்ட காணொளிகள் வணிக ரீதியாக வெற்றிபெறுவது குறைவு.

ஒரு தலைமுறை விரும்பிப் பார்க்கும் விடயங்களுக்குள், விரும்பிக் கேட்கும் விடயங்களுக்குள், விரும்பி ரசிக்கும் விடயங்களுக்குள், திரும்பத்திரும்ப கேட்கும் விடயங்களுக்குள், இனத்தின் கதையை எப்படிக் கொண்டு போய்ச் செருகுவது? என்ற வித்தையைத் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் போதிய அளவுக்கு கற்றுக் கொண்டிருக்கிறார்களா?

1970களில் முன்வைக்கப்பட்ட அதே தமிழ்த் தேசிய “நரேட்டிவ்களை” - எடுத்துரைப்புகளை கிட்டத்தட்ட அரை நூற்றாண்டின் பின் இப்பொழுதும் முன்வைக்க முடியாது. எம்ஜிஆரின் காலத்தில் முன்வைக்கப்பட்ட எடுத்துரைப்புகளை விஜயின் காலத்தில் முன்வைக்க முடியாது.

இதில் ஜெனரேஷன் ஸற் மட்டுமல்ல, அவர்களால் “பூமர்கள்” என்று அழைக்கப்படுகின்ற நடுத்தர வயது கடந்தவர்கள் நடுத்தர வயதுக்காரர்களுக்கும் கைபேசி ஆறாவது புலனாக மாறி விட்டது. கேபிள் தொலைக்காட்சி வரவேற்றையில் ஒரு நிரந்தர விருந்தினராக மாறிவிட்டது. இளைய தலைமுறை மட்டுமல்ல வயது போனவர்களும் கைபேசிகளில் மெனக்கெடுக்கிறார்கள்.

இப்படிப்பட்டதோர் அரசியல், சட்டச் சூழல் மற்றும் தொழில்நுட்பச் சூழலில் நினைவுகளை தலைமுறைகள் தோறும் கடத்துவது எப்படி? “வேர்ச்சுவலாக” - மெய்நிகர் நினைவுச் சின்னங்களை

உருவாக்கலாம். மெய்நிகர் ஆவணக் காப்பகங்களை உருவாக்கலாம். மெய் நிகர் தளத்தில் தலைமுறைகள் தோறும் நினைவுகளைக் கடத்தலாம். ஆனால் மெய் நிகராக முள்ளிவாய்க்கால் கஞ்சியைச் காய்ச்ச முடியாது; பகிர முடியாது. அது தூலமானது.

இளைய தலைமுறையினர் போன ஆண்டும் முள்ளிவாய்க்காலுக்கு வந்தார்கள். மாவீரர் நாளுக்கும் வந்தார்கள். இந்த ஆண்டும் வருவார்கள். இங்கே கேள்வி அவர்கள் என் வருகிறார்கள் என்பதல்ல, அவர்களை எப்படி அரசியல் ஆக்க சக்தியாக வார்த்து எடுப்பது? எப்படி நீதிக்கான போராட்டத்தின் கூர் முனையாகத் தீட்டி எடுப்பது? என்பதுதான்.

நடிகர் விஜய் பெற்ற வெற்றியானது பாரம்பரியமாக அரசியலில் நிலவி வந்த நம்பிக்கைகள் சிலவற்றைத் தகர்த்து விட்டது. மார்க்சிஸ்டுக்கள் கூறுவார்கள் “புரட்சிகரமான ஸ்தாபனம் இல்லாமல் புரட்சி இல்லை. புரட்சிகரமான சித்தாந்தம் இல்லாமல் புரட்சிகரமான ஸ்தாபனம் அல்லது கட்சி இல்லை” என்று. ஆனால் விஜய் அப்படிப்பட்ட தூலமான கட்டமைப்புகள் எவற்றையும் கொண்டிராமல் வெற்றி பெற்றிருக்கிறார். அவர் மட்டும் வெல்லவில்லை ஏற்கனவே ட்ரம்ப் வந்து விட்டார் எங்ளூரில் அர்ஜுனா வந்திருக்கிறார். இப்பொழுது அனுர ஒரு ரீல்ஸ் நாயகனாக வலம் வருகிறார்.

தவிர, இந்த தசாப்தம் முழுவதிலும் நடந்த ஜெனரேஷன் ஸற் உடைய பெரும்பாலான போராட்டங்கள் அவ்வாறான கட்டமைப்பு அடிப்படைகளோ அல்லது தத்துவார்த்த அடித்தளமோ இல்லாதவைதான். அவர்கள் “கலெக்டிவாக” - திரளாக இருக்கிறார்கள். ஆனால் அரசியல் ரீதியாக இலட்சியத்தால் வார்த்து எடுக்கப்படவில்லை.

இங்கேதான் தமிழ்த் தேசிய அரசியல் சமூகம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விடயம் இருக்கிறது. தமிழ்த் தேசியவாதம் என்பது ஈழத்தமிழ் நோக்கு நிலையில் இலட்சியவாதந்தான். இலட்சியவாதம் பெரும்பாலும் வணிகவாதத்தோடு சமரசம் செய்யாது. ஆனால் சமூக வலைத்தளச் சூழல் என்பது அதிகபட்சம் வணிக மயப்பட்டதாகவே மேல் எழுகிறது. இவ்வாறு அதிகமதிகம் வணிக மயப்படும் ஒரு சமூக வலைத்தளச் சூழலில் இலட்சிய வாத அரசியலை முன்னெடுப்பவர்கள் புதிய நரேடிவ்களை-எடுத்துரைப்புகளை கண்டுபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தங்களை விஜயின் வெற்றி அதிகப்படுத்தியிருக்கிறது.

தமிழில் ஏற்கனவே அறிவுபூர்வமானதற்கும் பொதுப்புத்திக்கும் இடையிலான இடைவெளி அல்லது அறிவாழம் மிக்கதற்கும் ஜனரஞ்சகமானதுக்கும் இடையிலான இடைவெளி அதிகம். யூடியூப்பர்களின் காலத்தில் அந்த இடைவெளி முன்னப்பொழுதையும் விட பாரதூரமான விதங்களில் அதிகரித்து வருகிறது. வணிக வேட்கை மிகுந்த மெய் நிகர் வெளிக்குள் தமிழ் மக்கள் தமது புதிய உரையாடல்களைச் செருக வேண்டும். ஜென்சியின் தலைக்குள் இதை எப்படிச் செலுத்துவது என்று புதிதாகச் சிந்திக்க வேண்டும்.

எல்லாவற்றையும் குளிசை வடிவத்தில் கொடுத்துவிட முடியாது. எல்லாவற்றையும் ரீல்ஸ்களாகக் கூறிவிட முடியாது. ஆனாலும் ரீல்ஸ்களை அதிகம் விரும்பிப் பார்க்கும் ஒரு தலைமுறைக்கு ரீல்ஸ்களில்தான் விடயங்களை எடுத்துரைக்க வேண்டியிருக்குமா?

அண்மையில் ஒரு தமிழ்த் தேசிய அரசியல்வாதி பிரபல்யமான ஒரு யூரிப்யூபருக்கு பேட்டி கொடுத்திருந்தார். அந்த வழியால் சென்றால் ஜென்சிக்களை சென்றடையலாம் என்று அவர் கருதியிருக்கலாம். ஆனால் ஒரு யுடியூப்பர் எதனால் அதிகம் பிரபல்யம் அடைகிறார்? அவர் எந்தளவுக்கு பொதுப் புத்தியை வசீகரிக்கிறார் என்பதில்தான் அது தங்கியிருக்கிறது. அதாவது பொதுப் புத்தியை வசீகரிப்பது என்றால் உள்ளடக்கம் லேசாக இருக்க வேண்டும் ஆழமற்றதாக, மேலோட்டமானதாக, சிக்கலற்றதாக இருக்க வேண்டும். அதனால் எவ்வளவுக்கு எவ்வளவு ஆழமற்றதாக இருக்கிறதோ அவ்வளவு அது ஜனரஞ்சகமாகிவிடும். மேலோட்டமானவைதான் பெரும்பாலும் உடனடிக்கு வைரல் ஆகும். ஒரு யூரியூப்பரின் பிரபல்யத்தை முதலீடாக வைத்து கனதியான அரசியல் உரையாடல்களை வைரல் ஆக்க முடியுமா? இப்படிப்பட்டதோர் மெய்நிகர் அரசியல் பின்னணிக்குள், தமிழ்த் தேசியவாதம் என்று கூறிக்கொண்டு எம்ஜிஆரின் காலத்து எடுத்துரைப்புகளை ஜென்சிகளின் தலைக்குள் செலுத்த முடியாது.

விஜய் பெற்ற வெற்றியை மகிமைப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல. அதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் இக்கட்டுரையின் நோக்கம். நினைவு கூர்தல் எனப்படுவது கூடித்துக்கிப்பது மட்டுமல்ல. கூட்டுத் துக்கத்தை எப்படி நீதிக்கான போராட்டத்தின் உந்து சக்தியாக மாற்றுவது என்பதுதான்.

நன்றி: நிலாந்தன்

உலகில் அழிக்கப்பட்ட நூலகங்களும்...
நெருப்பினில் கருகிய யாழ் நூலகமும்

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

31.05.2026

ஒரு இனத்தை அழிக்குமுன் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை அழி என்பார்கள். மனித நாகரிகத்தின் வளர்ச்சிப் பாதையில் நூலகங்கள் அறிவின் கோட்டைகளாக விளங்கியுள்ளன. ஒரு மக்களின் வரலாறு, பண்பாடு, மொழி, சிந்தனை, அறிவியல் முன்னேற்றம் ஆகியவற்றின் சேமிப்பிடங்களாக நூலகங்கள் திகழ்கின்றன. எனவே ஒரு நூலகத்தின் அழிவு என்பது வெறும் கட்டிடத்தின் அழிவு அல்ல. அது ஒரு சமூகத்தின் நினைவகத்தையும், அறிவுப் பாரம்பரியத்தையும் அழிக்கும் செயற்பாடாகும். உலக வரலாற்றில் பல புகழ்பெற்ற நூலகங்கள் போர்களாலும், மதவெறியாலும், அரசியல் மோதல்களாலும் அழிக்கப்பட்டுள்ளன. ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் புலமைச் சொத்தாக கருதப்பட்டு வந்த யாழ். நூலகம் எரித்துச் சாம்பலாக்கப்பட்ட சம்பவம் வரலாற்றில் என்றுமே துடைக்க முடியாத கறையாகி விட்டிருக்கிறது.

யாழ் நூலகம் எரிக்கப்பட்டதைப் போன்றே உலக வரலாற்றில் பல நூலகங்கள் எரிக்கப்பட்டுள்ளன. வரலாற்று ரீதியில் யுத்தங்கள் எவ்வகையான கொடுமைகளைக் கொண்டிருந்த போதும் அறிவு மையங்களின் அழிவு என்பது எப்போதுமே தவிர்க்கப்பட வேண்டிதொன்றாகும். இதனையே ஐ.நாவின் போர் விதிகளும் அழுத்தமாக வலியுறுத்துகின்றன.

ஆயினும் போர்க்களங்களில் உண்மை முதலாவது பலியாவது போல, எதிர்கால சந்ததியின் அறிவியல் வளத்தை அழிக்க எதிரிகள் முனைவர். ஒரு நூலகத்தின் அழிவானது மனிதகுல வளர்ச்சியை சில நூற்றாண்டுகளுக்கே பின்தள்ளி விடும் அபாயங் கொண்டவையாகும். எதிர்காலத் தலைமுறையினருக்கான பேரறிவுப் பெட்டகங்கள் அறிவியல நூலகங்களிலேயே பேணப்படுகின்றன. இதனாலேயே எதிரிகள் எப்போதும் நூலகங்களை அழிப்பதில் முனைப்பாயிருந்ததை வரலாற்று ரீதியாக நாம் காணலாம்.

ஆறு மாதங்கள் எரிந்த அலெக்ஸாண்டிரியா:

அலெக்ஸாண்டிரியாவின் பழமையான நூலகம் (Library of Alexandria) பல கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்களை உருவாக்கிய நகரமாக மிளிர்ந்து அலெக்ஸாண்டிரியாவின் நற்பெயர் வளர்ந்தது. உலக வரலாற்றின் ஆரம்பத்தில் இந்த நூலகத்தில் இருந்த அறிஞர்களிடமிருந்து பல முக்கியமான படைப்புகள் வெளிவந்தன. எகிப்தின் அலெக்ஸாண்டிரியாவில் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு பகுதியாக இருந்த இந்நூலகம் வரலாற்றில் மனித அறிவின் மிகப்பெரிய களஞ்சியமாக இருந்தது. இன்று உலக அறிஞர்கள் பயன்படுத்தும் பல கிரேக்க, ரோமானிய படைப்புகள் மற்றும் நூல்கள் அலெக்ஸாண்டிரியாவில் உருவாகின.

1,000 ஆண்டுகால வரலாற்றில், நூலகம் பலமுறை எரிக்கப்பட்டது. கிபி 640 இல் அலெக்ஸாண்டிரியா முஸ்லீம் ஆட்சியின் கீழ் வந்தபோது மீண்டும் எரிக்கப்பட்டது. முஸ்லீம் ஆட்சியாளர் கலிஃப் உமர், இஸ்லாமிய மதங்களுக்கு எதிரான, அல்லது மிதமிஞ்சிய நூல்கள் என்று வலியுறுத்தி பல நூல்கள் எரிக்கப்பட்டுள்ளன. நூலகத்தின் அனைத்து பொருட்களும் எரிவதற்கு ஆறு மாதங்கள் ஆனதாக கூறப்படுகிறது. தற்போதய நவீன அலெக்ஸாண்டிரியா ஒரு பரபரப்பான பெருநகரமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

அத்துடன் கடந்த 2,000 ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு சின்னங்களை பராமரித்து வருகிறது. அலெக்ஸாண்ட்ரியா நூலகத்தின் அழிவு, பண்டைய நாகரிக அழிவை வெளிப்படுத்துகிறது.

துருக்கி அழித்த நாலந்தா நூலகம்:

நாலந்தா (Nalanda University ibrary) இந்தியாவின் இரண்டாவது பழமையான பல்கலைக் கழகமாகும். 14 ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ள இந்த பல்கலைக் கழகம், ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து 1193 வரை, திபெத், சீனா, கிரேக்கம் மற்றும் ஈரான் போன்ற நாட்டு மாணவர்களின் முதன்மையான கற்றல் இடமாக இருந்தது. ஐந்தாம் நூற்றாண்டில் குப்தர்கள் பல்கலைக்கழக கல்வியை ஆதரித்து, நாலந்தா பல்கலைக் கழகத்தை நிறுவ வழிவகுத்தனர். நாலந்தா உட்பட பண்டைய இந்தியப் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் வேதக் கற்றலின் மிகவும் முறைப்படுத்தப்பட்ட முறைகளைப் பின்பற்றின.

அக்காலத்திலேயே உலகம் முழுவதிலுமிருந்து மாணவர்கள் மேற்படிப்புக்காக இங்கு சேர்ந்து கல்வி கற்றனர். நாலந்தா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கட்டிடங்களை கட்டுவதற்கு வெளிநாட்டு மன்னர்கள் நன்கொடை அளித்ததற்கான சான்றுகள் பலவும் உள்ளன. இந்தோனேசியாவின் ஷைலேந்திர மன்னன் ஒரு கட்டிடத்தை வளாகத்திற்குள் கட்டியதற்கான தொல்பொருள் சான்றுகள் உள்ளன. நாலந்தா பல்கலைக் கழகம் ஒரு குடியிருப்புக் கற்றல் இடமாக இருந்தது. இந்த வளாகத்தில் பத்து கோயில்கள், வகுப்பறைகள், தியான மண்டபங்கள், மடங்கள், தங்குமிடங்கள், ஏரிகள் மற்றும் பூங்காக்கள் என வளாகம் எங்கும் பரவி இருந்தது. இப்பல்கலைக்கழகம் 10,000 மாணவர்கள் மற்றும் 2,000 ஆசிரியர்களுக்கு இடமளித்தது.

கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த யாத்ரீக துறவிகள் மற்றும் பிற வரலாற்றாசிரியர்களின் தரவுகளின்படி, நாலந்தா பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் மகாயான பௌத்தம், வேதங்கள், தர்க்கம், சமஸ்கிருத இலக்கணம், மருத்துவம் ஆகிய துறைகளில் பல பாடங்கள் போதிக்கப்பட்டன. இவ்வாறு சிறந்து விளங்கிய நாலந்தா பல்கலைக்கழகத்தினை, 1193 ஆம் ஆண்டு பக்தியார் கில்ஜியின் கீழ் துருக்கிய படையெடுப்பாளர்களால் முழுமையாக சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டது. அத்துடன் நாலந்தா பல்கலைக்கழகத்தின் பெரிய நூலகம் அழிக்கப்பட்டது.

அந்நூலகத்தில் ஒன்பது மில்லியனுக்கும் அதிகமான கையெழுத்துப் பிரதிகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. பாரம்பரிய திபெத்திய ஆதாரங்களின்படி, நாலந்தா பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகம் மூன்று பெரிய பல மாடி கட்டிடங்களில் இருந்தது. இந்தக் கட்டிடங்களில் ஒன்று ஒன்பது மாடிகளைக் கொண்டிருந்தது என தரவுகள் தெரிவித்தன. நாலந்தா பல்கலைக்கழக நூலகத்தில் மிகவும் புனிதமான கையெழுத்துப் பிரதிகள் பலவும் இருந்தன. ஆக்கிரமிப்பாளர்கள் கட்டிடங்களுக்கு தீ வைத்த பிறகு நூலகம் மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து எரிந்தது எனவும் கூறப்படுகிறது. துருக்கிப் படையெடுப்பாளர்கள் பல ஆலய மடங்களைச் சூறையாடி அழித்து, துறவிகளை அந்த இடத்திலிருந்து விரட்டினர் எனவும் வரலாற்றுத் தரவுகள் தெரிவித்தன.

நாஜிகளின் நூல் எரிப்பு பிரச்சாரம்:

இரண்டாம் உலகப் போரில் போலந்து, ஆஸ்திரியா போன்ற ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் நாஜிகளால் நூலகங்கள், புத்தகங்கள் பலவும் எரிக்கப்பட்டன. நாஜி புத்தக எரிப்பினை கலாச்சார படுகொலை என்றே கருதலாம். ஜெர்மன் மாணவர் சங்கத்தால் (Deutsche Studentenschaft, DST) 1930 களில் ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியாவில் புத்தகங்களை சம்பிரதாயமாக எரிக்கும் பல நிகழ்வுகள் நடந்தன. நாசிசத்திற்கு எதிரான சித்தாந்தங்களை பிரதிநிதித்துவப்படுத்துவது அல்லது நாசிசத்திற்கு எதிரானது என்று கருதப்பட்ட இலக்கான புத்தகங்கள் பலவும் எரிக்கப்பட்டன. யூதர்கள், கம்யூனிஸ்ட்கள், சோசலிஸ்ட்கள், எழுதிய புத்தகங்கள் இதில் அடங்கும்.



எரிக்கப்பட்ட புத்தகங்களில் கார்ல் மார்க்ஸ் மற்றும் கார்ல் காட்ஸ்கியின் புத்தகங்கள், ஆனால் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஹெலன் கெல்லர், பிரஞ்சு மற்றும் ஆங்கிலத்தில் எழுத்தாளர்கள் மற்றும் நாஜி சித்தாந்தத்துடன் பொருந்தாத அனைத்து புத்தகங்களும் எரிக்கப்பட்டன. ஏப்ரல் 8, 1933 இல், ஜெர்மன் மாணவர் சங்கத்தின் (DST) பத்திரிகை மற்றும் பிரச்சாரத்திற்கான முதன்மை அலுவலகம் நாடு தழுவிய இலக்கிய சுத்திகரிப்பு இயக்கத்தை (“Säuberung”) நெருப்பாய் அமுல்படுத்தியது.

தூய்மையான தேசிய மொழி, ஜெர்மன் கலாச்சாரம், இலக்கியத்தை சுத்தப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, பல்கலைக் கழகங்கள் ஜெர்மன் தேசியவாதத்தின் மையங்களாக இருக்க வேண்டும் என்று கோரி வேற்று மொழி புத்தகங்கள் பல்லாயிரம் எரிக்கப்பட்டன. அக்காலத்தில் ஜேர்மனிய நூலகத்தில் ஆயிரக்கணக்கான ஆய்வுத் தொகுதிகள் இருந்தன. ஆராய்ச்சி, சுயசரிதைகள் மற்றும் நோயாளியின் பதிவுகள் உள்ளிட்ட புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களின் கணிசமான சேகரிப்பையும் இந்த நிறுவனம் கொண்டிருந்தது. 25, 000 க்கும் மேற்பட்ட ஜெர்மன் எதுர்ப்பு புத்தகங்கள் இவ்வாறு எரிக்கப்பட்டன.

லெபனான் திரிபோலி நூலக எரிப்பு:

லெபனானின் மிகப் பெரிய நூலகமான திரிபோலியின் (Burning Library in Tripoli) வரலாற்றுச் சிறப்புமிக்க அல் சயே நூலகம் 2014 ஜனவரி 4 அன்று எரிக்கப்பட்டது. அங்கிருந்த 80,000 புத்தகங்கள் மத்திய கிழக்கில் வன்முறையின் உச்சக்கட்டம்

அதிகரித்த காலத்தில் எரிந்தது.

லெபனானில், நூலகத்தின் தீவைப்பு மதத் தீவிரவாதத்தின் விளைவாகும் என்று நம்பப்படுகிறது. இப்பிராந்தியத்தில் நூலகங்கள், வரலாற்று கட்டிடங்கள் மற்றும் தொல்பொருள் இடங்களின் அழிப்பும் இழப்பும் அதிகரிக்கிறது. 2011 ஆம் ஆண்டில், கெய்ரோவில் எதிர்ப்பாளர்களுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையே நடந்த சண்டைகள் எகிப்தின் பெரிய நூலகங்களில் ஒன்றான எகிப்து கல்வி நிலைய நூலகமும் (Institute Of Egypt) டிசம்பர் 18, 2011 அன்று, தீப்பிடித்தது.

அரச எதிர்ப்பாளர்கள் நூலகத்திற்குள் நெருப்பை வீசியதாக அரசாங்கம் கூறியது. ஆயினும் போராட்டக்காரர்கள் இராணுவத்தின் மீது குற்றம் சாட்டினர். இறுதியில் பன்னிரண்டு மணி நேரம் எரிந்து அரிய புத்தகங்களை கரியாக மாறியது. எகிப்தின் ஒரு தேசிய புதையலான பாரிய நூலகம் இவ்வாறை அழிக்கப்பட்டது. அதேவேளை ஐஎஸ்ஐஎஸ் எனும் இஸ்லாமிய தீவீரவாத இயக்கம் ஈராக், சிரியாவில் பல நூலகங்களையும் கல்வி நிலையங்களையும் கடந்த 2014-16 காலங்களில் பெருமளவில் அழித்தது.

எரிந்த ஹாட்லி கல்லூரி நூலகம்:

இலங்கையில் இனவெறித்தனத்தை வெளிப்படுத்திய மற்றுமொரு நூலக அழிப்பின் அடையாளமாக இருப்பது, முற்றாக எரியூட்டப்பட்ட ஹாட்லிக் கல்லூரி நூலகம் நிகழ்வாகும். 1984 செப்ரெம்பர் 16ம் திகதி தமிழரது அறிவின் மீது தீரா வெறுப்புக் கொண்டிருந்த பேரினவாதம் ஹாட்லிக் கல்லூரி கட்டிடங்களுக்குத் தீ மூட்டியது. அவர்களது பிரதான இலக்கு நூலகமாகவே இருந்தது.

இத் தீ மூட்டலையடுத்து ஆயிரக்கணக்கான நூல்கள் எரியுண்டதுடன் பழமை வாய்ந்த ஹாட்லிக் கல்லூரியின் மீளப்பெறமுடியாத ஆவணங்கள் பலவும் எரிந்து போயிருந்தன. அவற்றுடன் பெறுமதியான அறிவியல் ஆய்வு கூடக் கருவிகளும் அழிந்து போயின. இன்னும் பல நூலகங்களும் கல்வி நிறுவனங்களும் போர்க் காலத்தில் ஈழத்தில் அழிக்கப்பட்டன.

2009 இல் வன்னிப் பகுதியில் சிறீலங்கா அரசு முன்னெடுத்த யுத்தம் முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற போது சிறியதும் பெரியதுமான பல நூலகங்கள் அழிவுற்றிருந்தன. அவற்றில் பேரழிவைச் சந்தித்தது கிளிநொச்சி பொதுசன நூலகமே. இந்நூலகம் இந்த யுத்தத்தின் போது பலவாயிரம் நூல்களை இழந்தது.

யாழ் நூலகம் தீக்கிரை:

தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ் நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ் நூலகம் விளங்கியது. தமிழர்மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே அரச பயங்கரவாதத்தால் இந்நூலகம் 1981 ஜூன் 1இல் தீக்கிரையானது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் பேரினவாதத்தின் உச்சக்கட்டம் என்றே குறிப்பிடுவர்.

யாழ் நூலக எரிப்பு ஒரு கட்டிடத்தின் அழிவாக மட்டுமல்லாமல், தமிழ் மக்களின் பண்பாட்டு நினைவகத்தின் மீதான தாக்குதலாகவும் பார்க்கப்படுகிறது. உலகின் பல பகுதிகளில் நூலகங்கள் அழிக்கப்பட்டிருந்தாலும், யாழ்ப்பாண நூலகத்தின் எரிப்பு ஒரு இனத்தின் அறிவுச் செல்வத்தை இலக்காகக் கொண்ட கலாச்சார வன்முறையின் அடையாளமாக இன்று வரை நினைவுகூரப்படுகிறது. நூலகங்கள் புத்தகங்களின் களஞ்சியம் மட்டுமல்ல் அவை மனிதகுலத்தின் கூட்டு நினைவுகளின் பாதுகாவலர்கள். அலெக்சாண்ட்ரியா முதல் யாழ்ப்பாணம் வரை எரிக்கப்பட்ட நூலகங்கள் நமக்கு ஒரு பாடத்தை கற்பிக்கின்றன: அறிவை அழிக்க முடியும், ஆனால் அறிவுக்கான தேடலை முற்றிலும் அழிக்க முடியாது. நெருப்பில் கருகிய நூலகங்களின் சாம்பலிலிருந்தே புதிய தலைமுறைகள் தங்கள் வரலாற்றையும் அடையாளத்தையும் மீண்டும் கட்டியெழுப்புகின்றன. யாழ் நூலகத்தின் நினைவும் அவ்வாறே தமிழர் பண்பாட்டு மீளெழுச்சியின் நிலையான சின்னமாகத் தொடர்கிறது.

பெரும்பான்மையான ஓர் இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு இலட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல்நிலையம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்ட இச்சம்பவம் தமிழ்இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகிற்கே வெளிப்படுத்தியது எனலாம்.

எமது போராட்டத்தில் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

2006 ஈழத்தில் செஞ்சோலை 2026 ரஷ்யாவில் ஸ்டாரோபில்ஸ்க் இளம் மாணவிகள் படுகொலை

– நவீனன் –

30.05.2026

2006 ஆம் ஆண்டு ஈழத்தில் செஞ்சோலைப் படுகொலையும், சமீபத்திய உக்ரைன் போரில் லுகான்ஷ்க் மாகாணத்தின் ஸ்டாரோபில்ஸ்க் மாணவர் விடுதியில் இடம்பெற்ற தாக்குதலும், உலகின் இரு வேறு நிலப்பரப்புகளில் நடந்திருந்தாலும், இளம் மாணவிகள் போரின் பலியாடுகளாக மாற்றப்பட்ட வேதனையான சம்பவங்களாக நினைவுகூரப்படுகின்றன. இரு நிகழ்வுகளும், “பாதுகாப்பு நடவடிக்கை” அல்லது “இராணுவ இலக்கு” என்ற பெயரில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் எவ்வாறு மனிதாபிமானச் சட்டங்களின் மீறலாக மாறுகின்றன என்பதைக் காட்டுகின்றன.

2006 ஆகஸ்ட் 14 அன்று தமிழ் ஈழத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகம் இலங்கை விமானப்படையினரால் குண்டுவீசப்பட்டது. அங்கு தங்கியிருந்தவர்கள் பெரும்பாலும் பாடசாலை மாணவிகள். முதலுதவி பயிற்சியில் ஈடுபட்டிருந்த இளம் மாணவிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 62 பள்ளி மாணவிகள் உயிரிழந்தனர். மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இலங்கை அரசு அப்போது அந்த இடம் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் எனக் கூறியிருந்தாலும், பல மனித உரிமை அமைப்புகளும் சர்வ தேச கண்காணிப்பாளர்களும் உயிரிழந்தவர்கள் மாணவிகள் என்பதைக் குறிப்பிட்டனர். அந்தத் தாக்குதல் தமிழ் மக்களின் நினைவில் “செஞ்சோலை மாணவிகளின் படுகொலை” என்ற பெயரில் ஆழமாக பதிந்துள்ளது.

அதேபோல், ரஷ்யா – உக்ரைன் போரின் சூழலில் லுகான்ஷ்க் பிராந்தியத்தின் ஸ்டாரோபில்ஸ்க் பகுதியில் அமைந்திருந்த ரஷ்ய மாணவிகள் விடுதி மீதான தாக்குதலும் சர்ச்சையை ஏற்படுத்தியது. போரின் மையத்தில் சிக்கியிருந்த பொதுமக்கள், குறிப்பாக கல்வி நிலையங்களும் மாணவர் தங்குமிடங்களும் பாதுகாப்பற்றவையாக மாறியுள்ளன என்பது இச்சம்பவத்தின் மூலம் வெளிப்பட்டது. உக்ரைன் படைகளின் ட்ரோன் தாக்குதலில் அப்பாவி 21 இளம் ரஷ்ய மாணவிகள் கொல்லப்பட்டனர். ஆனாலும் இந்த தாக்குதலின் பின்னர் இரு நாடுகளும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டினாலும், தாக்குதலின் விளைவாக மாணவர்களும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டமை மனிதாபிமான நெருக்கடியின் தீவிரத்தைக் காட்டியது. இந்த இரு சம்பவங்களும் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகின்றன.

போரில் குழந்தைகளும் மாணவர்களும் ஏன் மீண்டும் மீண்டும் பலியாகின்றனர் என்ற கேள்வியே.

2006 செஞ்சோலைப் படுகொலை:

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று ஈழத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்திருந்த “செஞ்சோலை” சிறுமிகள் கல்வி மற்றும் பராமரிப்பு நிலையம் மீது சிறீலங்கா வான்படை நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல், தமிழர் வரலாற்றில் ஆழமான காயத்தை ஏற்படுத்திய மனிதாபிமானப் பேரழிவாக நினைவு கூரப்படுகிறது. இந்த தாக்குதலில் பல பள்ளி மாணவிகள் உயிரிழந்ததோடு, நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நிரந்தர வேதனையில் தள்ளப்பட்டன.

இலங்கையில் தமிழர் மீதான போரின் இருண்ட அத்தியாயங்களில் ஒன்றாக 2006 ஆம் ஆண்டின் “செஞ்சோலை படுகொலை” குறிப்பிடப்படுகிறது. வடக்கு முல்லைத்தீவு பகுதியில் இயங்கிய செஞ்சோலை வளாகம், போரால் பாதிக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற தமிழ் மாணவிகளுக்கான கல்வி மற்றும் தங்குமிட மையமாக இருந்தது. அங்கு கல்வி பயின்ற மாணவிகள் பலரும் யுத்தத்தால் பெற்றோர்களை இழந்தவர்களாகவும், இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர்.

2006 ஆகஸ்ட் 14 ஆம் தேதி அதிகாலை, அந்த வளாகம் மீது சிறீலங்கா வான்படை திடீர் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது. அப்போது அங்கு இருந்த மாணவிகள் முதலுதவி மற்றும் அவசரகால உதவி தொடர்பான பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாக கூறப்பட்டது. சில நிமிடங்களுக்குள் நிகழ்ந்த அந்த தாக்குதல், முழு வளாகத்தையும் இரத்தக் களமாக மாற்றியது.

இந்த தாக்குதலில் அறுபதுக்கும் மேற்பட்ட மாணவிகள் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் கடுமையாகக் காயமடைந்தனர். பல மாணவிகள் உடல் உறுப்புகளை இழந்தனர். சம்பவத்திற்குப் பின்னர் வெளிவந்த புகைப்படங்களும் சாட்சியங்களும் உலகளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தின. புத்தகங்களும் பாடசாலை உடைகளும் சிதறிக்கிடந்த அந்த காட்சி, போரின் கொடூர முகத்தை உலகிற்கு வெளிப்படுத்தியது.

சிறீலங்கா அரசு, அந்த இடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி மையமாக இருந்ததாகக் கூறியது. ஆனால் மனித உரிமை அமைப்புகள் மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் பலர், அங்கு உயிரிழந்தவர்கள் பெரும்பாலும் மாணவிகள் எனக் குறிப்பிட்டனர். யுனிசெஃப் உள்ளிட்ட அமைப்புகள் குழந்தைகள் உயிரிழந்தமைக்கு ஆழ்ந்த கவலை வெளியிட்டன.

செஞ்சோலை தாக்குதல், தமிழ் மக்களிடையே பெரும் மன உளைச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. இது வெறும் இராணுவத் தாக்குதல் அல்ல. கல்வி, குழந்தைத்தனம் மற்றும் மனிதாபிமானத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகப் பார்க்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் வந்தாலே, செஞ்சோலையில் உயிரிழந்த மாணவிகள் தமிழர் தாயகத்தில் நினைவு கூரப்படுகின்றனர்.

இந்த சம்பவம், போரில் பொதுமக்கள் பாதுகாப்பு எவ்வளவு அவசியம் என்பதையும், ஆயுத மோதல்களில் குழந்தைகள் எவ்வாறு பலியாகின்றனர் என்பதையும் உலகிற்கு நினைவூட்டுகிறது. செஞ்சோலை இன்று ஒரு இடத்தின் பெயராக மட்டுமல்ல; அது தமிழ் மக்களின் கூட்டு நினைவிலும் துயரத்தின் சின்னமாகவும் வாழ்கிறது.

2026 ஸ்டாரோபில்ஸ்க் படுகொலை:

ரஷ்ய கட்டுப்பாட்டில் இருக்கும் லுகான்ஸ்க் பிராந்தியத்தின் ஸ்டாரோபில்ஸ்க் நகரில் உள்ள மாணவர் விடுதி மீது 2026 மே 21ஆம் தேதியன்று நடைபெற்ற தாக்குதல், ரஷ்யா-உக்ரைன் போரின் மிகுந்த சர்ச்சைக்குரிய மற்றும் மனிதாபிமான கவலையை எழுப்பிய சம்பவங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

2026 மே மாதம், ரஷ்யக் கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைனின் லுகான்ஸ்க் பிராந்திய நகரமான ஸ்டாரோபில்ஸ்க், உலகின் கவனத்தை ஈர்த்த துயரச் சம்பவத்தின் மையமாக மாறியது. அங்கிருந்த ஆசிரியர் பயிற்சி கல்லூரி மற்றும் அதன் மாணவர் விடுதி மீது நடத்தப்பட்ட தாக்குதல், பல இளம் மாணவர்களின் உயிர்களை காவுகொண்டது. ரஷ்ய அதிகாரிகளின் தகவலின் படி, இரவு நேரத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் மாணவர் விடுதி கடுமையாக சேதமடைந்தது. அந்த விடுதியில் 14 முதல் 18 வயதுக்குட்பட்ட பல மாணவர்கள் தங்கியிருந்ததாக கூறப்பட்டது. மீட்புப் பணிகள் நடைபெற்றபோது இடிபாடுகளுக்குள் இருந்து மாணவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. உயிரிழந்தோரில் பெரும்பாலானோர் இளம் பெண்கள் என தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலுக்குப் பின்னர் ரஷ்ய ஜனாதிபதி புட்டின், இது அப்பாவி பொதுமக்கள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட “கொடூரத் தாக்குதல்” என குற்றஞ்சாட்டினார். ரஷ்ய ஊடகங்கள் மற்றும் அதிகாரிகள், அப்பகுதியில் எந்த இராணுவ இலக்கும் இல்லை என்றும், மாணவர் விடுதி மட்டுமே தாக்கப்பட்டதாகவும் வலியுறுத்தினர்.

ஆனால் உக்ரைன் தரப்பு இந்த குற்றச்சாட்டுகளை மறுத்தது. தாங்கள் பொதுமக்களை இலக்காகக் கொள்ளவில்லை என்றும், அப்பகுதியில் செயல்பட்டதாகக் கூறப்படும் ரஷ்ய “Rubikon” ட்ரோன் கட்டளை மையத்தையே தாக்கியதாகவும் தெரிவித்தது. ஆனாலும் உக்ரைன் இராணுவத்தின் ட்ரோன் தாக்குதலில் மூலமே இந்த அப்பாவி மாணவிகள் கொல்லப்பட்டனர் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் யூனிசெஃப் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் இந்தச் சம்பவம் குறித்து கவலை வெளியிட்டன. குறிப்பாக குழந்தைகள் மற்றும் மாணவர்கள் உயிரிழந் திருக்கலாம் என்ற தகவல் உலகளாவிய அதிர்ச்சியை ஏற்படுத் தியது. ஆனால் அந்த பகுதி ரஷ்ய கட்டுப்பாட்டில் இருப்பதால், சுயாதீன சர்வதேச விசாரணை நடத்த முடியாத நிலை காணப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஸ்டாரோபில்ஸ்க் தாக்குதல், இன்றைய போரில் உண்மை மற்றும் பிரச்சாரத்தின் எல்லைகள் எவ்வாறு கலங்குகின்றன என்பதற்கும் ஒரு எடுத்துக்காட்டாக மாறியுள்ளது. ஒருபுறம் பொதுமக்கள் மீது தாக்குதல் நடந்ததாக குற்றச்சாட்டு மறுபுறம் இராணுவ இலக்கைத் தாக்கியதாக மறுப்பு. ஆனால் எந்த விளக்கமாக இருந்தாலும், இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் இளம் மாணவர்கள் என்பதே உலக மனசாட்சியை உலுக்கிய உண்மையாகும்.

கருகிய இளம் குருத்துக்கள்:

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின்படி பள்ளிகள், மருத்துவ மனைகள், மாணவர் விடுதிகள் போன்ற பொதுமக்கள் பயன்பாட்டு இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை. ஆனால் நடைமுறையில், போரிடும் அரசுகள் “எதிரி பதுங்குமிடம்”, “இராணுவ பயன்பாடு” போன்ற காரணங்களை முன்வைத்து தாக்குதல்களை நியாயப்படுத்த முயல்கின்றன. இதனால் உண்மையை நிரூபிப்பதும், நீதியை நிலைநாட்டுவதும் கடினமாகிறது.

செஞ்சோலை சம்பவம் தமிழ் மக்களின் இனஅழிப்பு நினைவகத்தில் ஒரு முக்கிய அத்தியாயமாக பார்க்கப்படுகிறது. அதே வேளை, ஸ்டாரோபில்ஸ்க் தாக்குதல் உக்ரைன் போரில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பின்மையின் சின்னமாகக் கருதப்படுகிறது. இரண்டிலும் ஒரே மாதிரியான வேதனை உள்ளது. ஏனெனில் புத்தகங்களைத் தாங்க வேண்டிய கைகள், போரின் சாம்பலாக மாறின.

போரின் அரசியல் காரணங்கள் வேறுபட்டிருந்தாலும், மனித இழப்பின் மொழி ஒன்றே. ஒரு குழந்தையின் உயிர் எந்த நாட்டைச் சேர்ந்ததாயினும் அதன் மதிப்பு ஒரே மாதிரியானதே. அதனால்தான் செஞ்சோலையும் ஸ்டாரோபில்ஸ்கும் உலக மனச்சாட்சிக்கு முன் ஒரு எச்சரிக்கையாக நிற்கின்றன.

போர் வெற்றியாளர்களை உருவாக்கலாம். ஆனால் அது குழந்தைகளின் எதிர்காலத்தை எப்போதும் அழித்துவிடுகிறது என்பதை மறுக்க முடியாது.

இந்த இரு துயர சம்பவங்களும் போரின் நடுவே சிக்கிக்கொள்ளும் குழந்தைகள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பு குறித்து மீண்டும் கேள்விகளை எழுப்புகிறது. கல்வி நிலையங்களும் மாணவர் விடுதிகளும் போர்க்களங்களாக மாறும் போது, மனிதகுலத்தின் எதிர்காலமே ஆபத்தில் தள்ளப்படுகிறது.

போரின் அரசியல் காரணங்கள் வேறுபட்டிருந்தாலும், மனித இழப்பின் மொழி ஒன்றே. ஒரு குழந்தையின் உயிர் எந்த நாட்டைச் சேர்ந்ததாயினும் அதன் மதிப்பு ஒரே மாதிரியானதே. அதனால்தான் செஞ்சோலையும் ஸ்டாரோபில்ஸ்கும் உலக மனச்சாட்சிக்கு முன் ஒரு எச்சரிக்கையாக நிற்கின்றன.

போர் வெற்றியாளர்களை உருவாக்கலாம். ஆனால் அது குழந்தைகளின் எதிர்காலத்தை எப்போதும் அழித்துவிடுகிறது என்பதை மறுக்க முடியாது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இலண்டன் நிகழ்வில் முக்கிய அரசியல் வரைவின் பின்னால் தமிழர் அணிதிரள்வு

16.05.2026

கட்சிப் பேதமற்ற நாடாளுமன்ற ஆதரவு, சர்வதேச சட்ட அதிகாரம், மற்றும் அனைத்து மக்களின் கருத்தொற்றுமை ஆகியவை தமிழர் அரசியல் போராட்டத்தில் ஒரு தீர்க்கமான தருணத்தைக் குறிக்கின்றன.

லண்டன் - 14 மே 2026, நேற்று, வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு அமர்வில், மூத்த பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள், புகழ்பெற்ற ஈழத்தமிழ் கல்வியாளர்கள், தாயகத்திலிருந்து வருகைதந்த மதகுரு, மற்றும் தமிழ் சமூக அமைப்புகளும், இளைஞர்களும் ஈழத்தமிழரின் அரசியல் போராட்டம் ஒரு புதிய மற்றும் தீர்க்கமான கட்டத்தில் நுழைந்திருக்கிறது என்பதை உலகுக்கு அறிவிப்பதற்காக ஒன்றுகூடினர்.

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் ஐம்பதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்வு, வெறுமனே ஒரு நினைவு விழாவாக மட்டும் அமையவில்லை. அது ஒரு உறுதிப் பிரகடனம். தமிழ் அரசியல் வரைவு - தமிழ் தேசிய கேள்விக்கு நீதியான, மற்றும் நிலையான தீர்வை வழங்கும் ஒரு ஒருமித்த கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட, சட்டரீதியாக வலுவான திட்டம் பிரித்தானிய அரசியல் அமைப்புக்கும் பரந்த சர்வதேச சமூகத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. அரங்கிலிருந்து வந்த செய்தி தெளிவானது - இந்த முன்னெடுப்புக்கு வெற்றி பெறுவதற்கான மக்கள் பலமும், அரசியல் ஆதரவும், சட்ட அடிப்படையும், வேகமும் இருக்கின்றன.

ஏன் இது வேறுபட்டது

தமிழ் அரசியல் முன்னெடுப்புகள் புதியவை அல்ல. ஆனால் இந்த முன்னெடுப்பு புதியது.

முதல் முறையாக, ஒரு ஒற்றை கட்டமைப்பு, அடிமட்டத்திலிருந்து மேல்நோக்கி உருவாக்கப்பட்டுள்ளது - எமது தாயகத்தில் இருபத்தி நான்கு சமூக கூட்டங்கள், இரண்டு பெரிய சிவில் சமூக மன்றங்கள், தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் தலைவர்களுடன் விரிவான ஆலோசனைகள், மற்றும் அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரை முப்பதுக்கும் மேற்பட்ட புலம்பெயர் சமூக கூட்டங்கள் என்று, வரலாற்று ரீதியாக தமிழர் அரசியல் நிலைப்பாடுகளைப் பிளவுபடுத்திய ஒவ்வொரு வேறுபாடுகளையும் தாண்டி, இது பரிசோதிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, செம்மைப் படுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக உருவாகியுள்ள இந்தக் வரைவு தமிழ் தேசத்திற்குச் சொந்தமானது.

ஆழமான மற்றும் அமைதியான தொடக்கம்

மாவீரர்களுக்கும், எமது மக்களுக்கு எதிராக இலங்கை பல தசாப்தங்களாக மேற்கொண்ட அடக்குமுறைகளில் உயிரிழந்தவர்களுக்கும் அனைவரும் தலைசாய்த்து அக வணக்கம் செலுத்தி இந்த ஒன்றுகூடல் தொடங்கியது. இந்தப் பணி ஏன் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற யதார்த்தத்தில், அதன் பின்னர் நடைபெற்ற அனைத்தையும் ஆழமாகப் பதியச் செய்யும் ஒரு தருணமாக அது அமைந்தது.

கட்சி வேறுபாடின்றி பாராளுமன்ற அங்கீகாரம்

அங்கு வெளிப்படுத்தப்பட்ட பரந்தளவிலான அரசியல் ஆதரவே ஒரு வலுவான செய்தியாக அமைந்தது.

தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் (APPG-T) தலைவருமான ஷிவோன் மெக்டொனா அம்மையார் (Dame Siobhain McDonagh DBE MP) நிகழ்வைத் தொடங்கிவைத்தார் - நாடாளுமன்றத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்ற அவர், இந்த முன்னெடுப்பிற்குத் தனது முழுமையான ஆதரவையும் தெரிவித்தார். தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இந்நிகழ்வைத்தொடங்கி வைத்தது தற்செயலானதல்ல. பிரித்தானிய அரச இயந்திரம் இப்போது எந்த அளவிற்கு தீவிரத்தன்மையுடன் இந்தக் கட்டமைப்பைக் கையாள்கிறது என்பதை இது பிரதிபலிக்கிறது.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய கன்சர்வேடிவ் கட்சியின் நாடாளுமன்றத் துணை ஒருங்கிணைப்பாளர்மதிப்பிற்குரிய ககன் மொஹிந்திரா (The Hon Gagan Mohindra MP), கன்சர்வேடிவ் கட்சியின் ஆதரவைவெளிப்படையாகத் தெரிவித்தார் - தமிழர் அரசியல் கட்டமைப்புக்கான ஆதரவு என்பது வெறும் தொழிற் கட்சி அல்லது லிபரல் கட்சியின் நிலைப்பாடு மட்டுமல்ல என்பதை தெளிவுபடுத்திய அவர், இது கட்சிப் பேதமற்ற ஒரு பிரித்தானிய நாடாளுமன்ற நிலைப்பாடாகும் என்று கூறினார்.

தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் துணைத் தலைவரும், தமிழர்களுக்கான நீதிக்காக நாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர்களில் ஒருவருமான மதிப்பிற்குரிய பாப் பிளாக்மன் (The Hon Bob Blackman MP), இந்தக் கட்டமைப்பு நடைமுறைக்குச் சாத்தியமானதும் கொள்கைப் பிடிப்புள்ளதும் என்று விவரித்தார். அவர் தனது முழுமையான ஆதரவை வழங்கியதோடு, பொறுப்புக்கூறலுக்கான தனது நீண்டகாலக் கோரிக்கைகளையும் மீண்டும் வலியுறுத்தினார் - நாடாளுமன்றத்திலிருந்து பலமுறை எழுப்பிய அந்தக்கோரிக்கைகளை தான் ஒருபோதும் தளர்த்திக் கொண்டதில்லை என்றும் கூறினார்.

மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள். இரண்டு கட்சிகள். ஒரே செய்தி.

மிக உயர்ந்த ஆளுமைகளைக் கொண்ட குழு

இலண்டன் சிட்டி பல்கலைக்கழகத்தில் ஒப்பீட்டு அரசியல் துறையின் இணைப் பேராசிரியரும் PEARL அமைப்பின் நிர்வாக இயக்குனருமான கலாநிதி மதுரா ராசரத்தினம், தமிழர் சுயநிர்ணய உரிமையின் அரசியல்வரலாற்றை ஆழமாக ஆராய்ந்து உரையாற்றினார் - இது ஒரு புதிய அல்லது சந்தர்ப்பவாதக் கோரிக்கை அல்ல, மாறாகப் பல தசாப்த கால ஜனநாயக வெளிப்பாட்டிலும் சட்டக் கோட்பாட்டிலும் வேரூன்றிய ஒன்று என்பதை அவர் நிரூபித்தார்.

திருகோணமலை கத்தோலிக்க மறைமாவட்டத்தின் ஆயரான பேரருட்தந்தை கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அவர்கள் இந்த ஒன்றுகூடலில் உரையாற்றுவதற்காகவே தாயகத்திலிருந்து வருகை தந்திருந்தார். அவரது பிரசன்னமே ஒரு பெரும் கனதியைக் கொண்டிருந்தது. அவரது வார்த்தைகள் அதைவிட அதிக ஆழத்தைக்கொண்டிருந்தன. வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்களின் வாழ்வாதார யதார்த்தம் - இராணுவமயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டோர், உடைமையிழப்பு, நாட்டை விட்டு வெளியேறித் திரும்பி வராத இளைஞர்கள் - குறித்துப்பேசிய அவர், இவற்றை நேரில் கண்ட ஒருவரின் அதிகாரத்தோடு சுயநிர்ணய உரிமைக்கான தார்மீக நியாயத்தைமுன்வைத்தார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஈழத்தமிழரும், வெளிவிவகாரத் தெரிவுக்குழு வின்உறுப்பினருமான உமா குமரன், மக்கள் தங்களது சொந்த எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை குறித்தும், அதை உறுதிப்படுத்தும் ஜனநாயக முன்னுதாரணங்கள் குறித்தும் உரையாற்றினார். 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்றசதுக்கத்தில் நடைபெற்ற போராட்டங்களை நினைவு கூர்வதற்காகவும் அவர் சற்று நேரம் எடுத்துக்கொண்டார் - புலம் பெயர் தமிழர்கள் கடும் குளிரிலும் நின்று, தங்களை ஓரங்கட்ட அனுமதிக்க மறுத்த ஒரு தருணம் அது - மேலும், அதன் பின்னரான ஆண்டுகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் சளைக்காத, ஆரவாரமற்ற பரப்புரைகளையும் அவர் பாராட்டினார். அந்தப் போராட்டங்களுக்குக் காரணமான அதே விடுதலைப் போராட்டமே இந்தக் கட்டமைப்பையும் உருவாக்கியுள்ளது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தகைசால் பேராசிரியரும், இலண்டன் பொருளியல் பல்கலைக் கழகத்தின் (LSE) பேராசிரியருமான பேராசிரியர் முத்துகுமார சுவாமி சொர்ணராஜா, சர்வதேச சட்டப்புலமையின் முழுமையான வலிமையை அங்கு வெளிப்படுத்தினார். 1958 கலவரங்கள் முதல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் வரை தமிழர் கோரிக்கையின் நிலைத்தன்மையை அவர் சுட்டிக்காட்டினார். தமிழீழ விடுதலைப்புலிகள்அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போது சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை (ISGA) முன்மொழிவுகளைஉருவாக்குவதில் தனது சொந்தப் பங்கு குறித்தும் அவர் பேசியதோடு, தற்போதைய கட்டமைப்பை அந்தப் பிரிக்கமுடியாத, சட்ட, மற்றும் அரசியல் பாரம் பரியத்திற்குள் நிலைநிறுத்தினார். சர்வதேச சட்டத்தில் உலகின் தலைசிறந்த அதிகாரபூர்வ நிபுணர்களில் ஒருவர் இக்கட்டமைப்பின் சட்ட அடிப்படையை அங்கீகரிக்கும் போது, அது வெறும் அடிக்குறிப்பு அல்ல. மாறாக, அது ஒரு அச்சாணி.

முன்னெடுப்புக் குழுவின் முக்கிய உறுப்பினரான கஜன் ராஜ், இதுவரையில் செய்யப்பட்ட பணிகள், கட்டமைப்பின்தன்மை மற்றும் எதிர்காலப் பாதை பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை தந்தார் - பல மாதங்களாகக் கடும் சிரமத்திற்கு மத்தியில் உருவாக்கப்பட்ட கருத்தொற்றுமையை, தமிழ் சமூகமும் சர்வதேச சமூகமும் இந்த முன்னெடுப்பைப் பொறுப்புக்கூறக் கோரக்கூடிய ஒரு பகிரங்கமான வழிவரைபடம் என அவர் தெரிவித்தார்.

அரங்கை நிரப்பியிருந்த சமூக அமைப்புகள், பரப்புரையாளர்கள் மற்றும் அடுத்த தலைமுறை இளம் தமிழ்செயற்பாட்டாளர்கள் எனப் பார்வையாளர் வரிசையிலிருந்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அனைத்துப்பேச்சாளர்களும் நேரடியாகப் பதிலளித்த ஒரு விரிவான கேள்வி-பதில் சுற்றுடன் இந்த அமர்வு நிறைவடைந்தது.

கட்டமைப்பு

தமிழ் அரசியல் வரைவு மூன்று அடிப்படைக் கொள்கைகளைத் தாங்கியுள்ளது: தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம்.

தமிழர் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு, நிலம், பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில், உண்மையான அதிகாரத்துடன் அதிகபட்ச சுயாட்சியை அது கோருகிறது. அமுலாக்கப்படாத ஒப்பந்தங்கள் மதிப்பற்றவை என்று வரலாறு நிரூபித்திருப்பதால், இறுக்கமான சர்வதேச உத்தரவாதங்களையும் அது கோருகிறது. மேலும், அது ஒரு ஜனநாயகப் பாதுகாப்புக் கவசத்தையும் கொண்டுள்ளது: ஐந்து ஆண்டுகளுக்குள் அர்த்தமுள்ள அரசியல் தீர்வு எட்டப்படாவிட்டால், தனி நாடொன்றுக்கான பொதுஜன வாக்கெடுப்பை நடத்தும் ஒருபோதும் இழக்க முடியாத தமது உரிமையைத் தமிழ் மக்கள் பயன்படுத்துவார்கள்.

இது ஒரு உச்சபட்ச ஆரம்ப நிலைப்பாடு அல்ல. இது கட்டமைக்கப்பட்ட, காலவரையறையுடன் கூடிய மற்றும் சர்வதேச ரீதியில் வேரூன்றிய, ஒரு பகிரப்பட்ட எதிர்காலத்துக்கான இறுதியான, தீவிரமான முன்மொழிவாகும். இது இலங்கைக்கு ஒரு தெளிவான வாய்ப்பை வழங்குகிறது. அடுத்து என்ன நடக்கும் என்பது இலங்கையின் தெரிவிலேயே உள்ளது.

அரங்கம்

இந்நிகழ்வுக்குத் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு ஆதரவளித்தது. பல தசாப்தங்களாகஇந்தப் போராட் டத்தைத் தாங்கி நிற்கும் சிவில் சமூகக் கட்டமைப்பாக விளங்கும் ஐக்கிய இராச்சியம் முழுவதிலுமிருந்து வந்திருந்த தமிழர் அரசியல் பரப்புரை அமைப்புகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். ஆனால், அரங்கில் கூடியிருந்த பெருமளவிலான இளம் தமிழர்களின் வருகையே அனைவரின்விசேட கவனத்தையும் ஈர்த்தது.

அடுத்த தலைமுறையினர் அங்கு பிரசன்னமாகியிருந்ததுடன், முழுமையான ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்புடனும் காணப்பட்டனர். இது எமது போராட்டம் எந்தத் திசையை நோக்கிப் பயணிக்கிறது என்பதற்கான ஒருசமிக்ஞையாகும்.

அடுத்த கட்டம்

இந்த நிகழ்வு ஒரு தொடக்கமே தவிர, முடிவல்ல.

2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள், உலகளாவிய தமிழ் தேசிய மாநாடு லண்டனில் கூட்டப்படும். தமிழ் தேசத்தின் ஒருங்கிணைந்த ஜனநாயக ஆணையாக இந்தக் கட்டமைப்பை முறைப்படி ஏற்றுக்கொள்வதற்காக - சர்வதேச சமூகத்தின் முன்னிலையில், பகிரங்கமாக, ஏகமனதாகப் பிரகடனப்படுத்துவதற்காக - தாயகத்தைச் சேர்ந்த தமிழ் சிவில் சமூகத் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளுடன், உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் சமூகத்தலைவர்களும் ஒன்றுகூடுவார்கள்.

நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு சமூகமும் இதே பாதையையே பின்பற்றியுள்ளன: தமக்குள் கருத்தொற்றுமையைக் கட்டியெழுப்புதல், ஒரே கட்டமைப்பின் பின்னால் ஒன்றிணைதல் மற்றும் அந்தக் கட்டமைப்பை ஒரே குரலில் உலகத்தின் முன் கொண்டு செல்லுதல். அதைத்தான் இந்த மாநாடும் செய்யவுள்ளது.

தமிழ் தேசம் ஐம்பது ஆண்டுகளாகக் காத்திருக்கிறது. கட்டமைப்பு தயாராக உள்ளது. கருத்தொற்றுமை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. உந்துசக்தி உண்மையானது.

ஆசிரியர்களுக்கான குறிப்புகள்

தமிழ் அரசியல் கட்டமைப்பு பற்றிய விபரம் www.tamil-mandate.org

நிகழ்வு தமிழருக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்றக் குழுவால் ஆதரிக்கப்பட்டது. உலகளாவிய தமிழ் தேசிய மாநாடு விரைவில் அறிவிக்கப்படும் வேண்டுகோளின் பேரில் செய்தியாளர் நேர்காணலுக்கு பேச்சாளர்கள் தயாராக உள்ளனர்.

வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு ஏற்பாட்டுக்குழு

VADDUKODDAI 50 UPRISING CONFERENCE ORGANIZING COMMITTEE

+94 76 925 2956 692. பருத்தித்துறை வீதி. நல்லூர். யாழ்ப்பாணம்

14.05.2026

வட்டுக்கோட்டை பிரகடனம் – 50 ஆவது ஆண்டு நினைவு

ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனையாகக் கருதப்படும் வட்டுக்கோட்டை பிரகடனம் வெளியிடப்பட்டு இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. 1976 ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தேசிய மாநாட்டில் இந்தப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம், சுயநிர்ணய உரிமை, வரலாற்று ரீதியான ஈழத்தமிழ் இனத்தின் அரசுரிமை, தனி அரசை நிறுவ வேண்டியதன் தார்மீக கடப்பாடு மற்றும் ஈழத்தமிழ் இனத்தின் தேசிய அடையாளம் குறித்து வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட முக்கிய அரசியல் ஆவணமாக இது வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

ஈழத்தமிழினத்தின் பிறப்புரிமையான அரசுரிமை, காலனித்துவ அரசுகளினால் பறிக்கப்பட்டு, எமது இறைமை பௌத்த சிங்கள வல்லாதிக்கத்திடம் மாற்றப்பட்ட பின், தமது சொந்த மண்ணிலேயே தமிழ் மக்கள் அடிமைகளாக ஆக்கப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட மொழி, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியல் உரிமை மறுப்பு போன்ற ஒடுக்குமுறைகள் தமிழர் அரசியலில் புதிய மாற்றத்தை உருவாக்கின. 1956 ஆம் ஆண்டு "சிங்களம் மட்டும்" சட்டம், கல்வித் தரப்படுத்தல், 1972 அரசியலமைப்பு மற்றும் தமிழர் தாயகப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் ஆகியவை தமிழ் மக்களிடையே ஆழமான அரசியல் விழிப்புணர்வையும், விடுதலை தாகத்தினையும் ஏற்படுத்தின.

இந்தச் சூழ்நிலையில், 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் கூடிய தமிழ் தலைவர்கள், ஈழத்தமிழர்கள் தனித்த தேசிய இனமாக இருப்பதையும், வடக்கு மற்றும் கிழக்கு தமிழர் பாரம்பரிய தாயகமாக இருப்பதையும் வலியுறுத்தினர். மேலும் தமிழ் மக்களுக்கு தன்னாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதையும், தமிழீழம் அமைப்பதற்கான அரசியல் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் வட்டுக்கோட்டை பிரகடனமாக வெளிப்படுத்தினர்.

இந்தப் பிரகடனம் வெறும் அரசியல் தீர்மானமாக மட்டுமல்லாது, தமிழ் மக்களின் அரசியல் உணர்வு, உரிமை கோரிக்கை மற்றும் தேசிய அடையாளத்தின் வெளிப்பாடாகவும் அமைந்தது. 1977 பொதுத்தேர்தலில் ஈழ தமிழ் மக்களிடமிருந்து இந்தக் கோரிக்கைக்கு பூரணமான மக்கள் ஆணையும் வழங்கப்பட்டது.

தந்தை செல்வா முன்மொழிந்த வட்டுக்கோட்டை பிரகடனத்தையும் மக்கள் ஆணையையும் சிரமேற்று கரிகாலன் தலைமையில் திரண்டெழுந்த தமிழினம் தனது அரசுரிமையை மீண்டும் நிலைநாட்டியது. ஆயினும் எமது பிறப்புரிமையை



வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு ஏற்பாட்டுக்குழு

VADDUKODDAI 50 UPRISING CONFERENCE ORGANIZING COMMITTEE

வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு ஏற்பாட்டுக்குழு

VADDUKODDAI 50 UPRISING CONFERENCE ORGANIZING COMMITTEE

பிரிவினைவாதமாக சித்தரித்த சிங்கள பேரினவாதம், அதே காலனித்துவ சக்திகளின் துணையுடன் எம்மை மீண்டும் வீழ்த்தியது.

50 ஆண்டுகள் கடந்த பின்னர், வட்டுக்கோட்டை பிரகடனம் முன்வைத்த அரசியல் வழித்தடம் இன்னமும் வலுவடைந்துள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, நில அபகரிப்பு, இராணுவ மயமாக்கல், பௌத்த மயமாக்கல், நீதியின்மை மற்றும் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையும் சுயநிர்ணயமும் தொடர்ந்தும் மறுக்கப்படும் நிலையில் வட்டுக்கோட்டை பிரகடனம் முன்வைத்த அரசியல் வழித்தடமே ஈழ தமிழினத்திற்கு ஒரு நிம்மதியானதும் நிலையானதுமான தீர்வினை கொண்டு வரும். இதுவே எமது எதிர்கால சந்ததி தனது தனித்துவமான இன, மொழி, கலாசார அடையாளத்துடன் இத்தீவில் நிலைபெற வழி செய்யும்.

இந்த 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு" எதிர்வரும் 20.06.2026 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. (குறிப்பு : முன்பு அறிவிக்கப்பட்ட 30.05.2026 திகதி மாற்றப்பட்டுள்ளது)

இந்த மாநாட்டின் நோக்கம், வட்டுக்கோட்டை பிரகடனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை புதிய தலைமுறைக்கு எடுத்துச் செல்லுதல், ஈழ தமிழர் அரசியல் பயணத்தை மீளாய்வு செய்தல், தற்போதைய அரசியல் சூழலில் தமிழ்த் தேசிய அரசியலின் திசையை வழிப்படுத்தல் மற்றும் தமிழ் மக்களிடையே அரசியல் விழிப்புணர்வையும் ஒற்றுமையையும் வலுப்படுத்தலாகும்.

இம்மாநாட்டில் தமிழ் தேசிய சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள், மாணவர்கள், இளைஞர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியாளர்கள், சர்வதேச பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த வரலாற்று நிகழ்வில் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு

ஏற்பாட்டுக்குழு

தமிழீழ விடுதலை வரலாற்றில் யூன்

அம்பாறைப் படுகொலை

அம்பாறையில் 1956 யூன் 10-11 ஆகிய இரு தினங்களில் 150 ற்கும் மேற்பட்ட தமிழர்கள் சிங்கள அரசினாலும், அதன் கைக்கூலிகளாலும் கொன்றொழிக்கப்பட்டார்கள்.

சிங்களம் மட்டும் தனிச்சட்டம்

05-06-1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில் சிங்களம் மட்டும் எனும் சட்டம் பிரகடனப்படுத் தப்பட்டு தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. இதன்மூலம் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டனர்.

விடுதலைப் பாதையின் முதல் விதை

கோப்பாய் பகுதியில் சிங்களப் பொலிசாரின் முற்றுகைக்குட்பட்டபோது, ஈகையர் சிவகுமாரன் அவர்கள் 05-06-1974 அன்று முதன் முதலாக தனது உயிரை தமிழீழ விடுதலைப் போரில் விதையாக்கிக்கொண்டார்.

ஆறாம்கட்டை,தம்பலகாமம், கட்டைபறிச்சான்படுகொலைகள்

26-06-86இல் திருகோமணலை மாவட்டத்தில் உள்ள 6ஆம் கட்டை என்னும் இடத்தில் 6 தமிழர்கள் சிங்கள இராணு வத்தினரால் வெட்டிக்கொல்லப்பட்டார்கள். அத்துடன் அங்கிருந்த 70ற்கும் மேற்பட்ட கடைகளும், வீடுகளும் சூறையாடப்பட்ட பின்னர் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன. தம்பலகாமம் என்னும் இடத்தில் 30 தமிழர்கள் சிங்கள ஊர்காவல் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு பின்னர் வில்ப்பத்து என்னும் இடத்தில் கொலைசெய்யப்பட்டார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் 30 பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் 6 பேர் பின்னர் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டார்கள்.

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பம்

சிறீலங்காவுக்கு எதிராக 10-06-1990இல் மீண்டும் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது.

வந்தாறுமூலைப் படுகொலைகள்

ஆர். பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் வந்தாறுமூலையில் சிறீலங்கா இராணுவத்தினரால் 25

இற்கும் மேற்பட்ட தமிழர்கள் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர். 08-06-1991 நடைபெற்ற இச் சம்பவத்தில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குப்பின் படுகொலை செய்யப்பட்டனர்.

கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள்

1991-06-12-13 ஆகிய இரு தினங்களில் வீடுகள், பாடசாலைகள், அரிசி ஆலைகளில் தங்கியிருந்த மக்களில் சுட்டும் வெட்டியும், பாலியல் வல்லுறவிற்குப்பின் படுகொலை செய்யப்பட்டுமென 185 தமிழர்கள் கொல்லப்பட்டனர். சிறீலங்கா விசேட அதிரடிப்படையின் இவ் வெறியாட்டத்தினால் கொல்லப்பட்டவர் தவிர 300 பேர் படுகாயப் படுத்தப்பட்டும், 1500 பேர்வரை காடுகளுக்கும் துரத்தப்பட்டனர்.

லெப். கேணல் சாள்ஸ் அவர்களின் 33ஆம் ஆண்டு வீரவணக்கம்

கடற்புலிகளின் தாக்குதற்படைத் தளபதியாகப் பணிபுரிந்தார். அதன் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஓயாது உழைத்த லெப். கேணல் சாள்ஸ் (ஆனந்தராஜா தவராஜா, பிறப்பு: 15.12.1960, திருக்கடலூர் - திருமலை) கிளாலிக் கடலில் மக்களின் பாதுகாப்புப் பணியின் போது சிறீலங்கா கடற்படையினருடனான கடற் சண்டையின் 11.06.1993 அன்று வீரச்சாவடைந்தார்.

மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களின் 32ஆம் ஆண்டு புகழ் வணக்கம்

தேசப்பற்றாளர் அழகையா துரைராசா (பிறப்பு: 10.11.1934 - மறைவு: 11.06.1994) அவர்கள் ஒரு ஆபூர்வமான மனிதர். நெஞ்சத்தில் தூய்மையும், நேர்மையும் கொண்டவர். தன்னலமற்றவர். பெஉ நலத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். எளிமை அவரது அழகான மாண்பு. இந்த மண் எமக்கு தந்த அறிவு ஜீவிகளில் அவர் அற்புதமானவர். இந்த மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தவர் அவர்.- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

சுதந்திரபுரப் படுகொலைகள்

வன்னியின் சுதந்திரபுரம் எனும் இடத்தில் சிறீலங்கா விமானப்படையினரின் கிபீர் குண்டுவீச்சு விமானங்களினாலும், ஆனையிறவு படைத்தளத்தில் இருந்து ஏலிய ஆட்லறி செல்களினாலும் 29 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 10-06-1998 இல் சந்திரிகா ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்ட இந்த மிலேச் சத்தனமான செயலினால், 60 பேருக்குமேல் படுகாயமடைந்ததுடன் பெறுமதிமிக்க சொத்துக்களும் வளங்களும் நாசமாகின.

காரைநகரில் விமானத் தகர்ப்பு

காரைநகர் பருத்தியடைப்பில் சிறீலங்கா கடற்படையினரின் விமானமொன்று 15-06-1984 இல் குண்டுவைத்துத் தகர்க் கப்பட்டது.

கொண்டச்சி இராணுவ முகாம் தகர்ப்பு

மன்னாரில் சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு பகுதியில் காவலாய் இருந்த கொண்டச்சி இராணுவ முகாம் 21-06-1990 இல் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் பவன் கவச வண்டியொன்று முதன்முதலில் கைப்பற்றப்பட்டது.

லெப். கேணல் டேவிட் அவர்களின் 35ஆம் ஆண்டு வீரவணக்கம்

விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு பரிமானங்களையும் தன் காலத்திலேயே நேரடியாகக் கண்ட விடுதலைப் புலி வீரர்களுள் ஒருவரான லெப். கேணல் டேவிட் (கிறிஸ்ரோபர் அன்ரனி மரியதாஸ், பிறப்பு: 29.01.1966, வல்வெட்டித்துறை), புலிகள் இயக்கத்தின் நீண்ட வரலாற்று ஓட்டத்தில் கடல்சார் செயற் பாடுகளில் முக்கிய பங்கேற்ற ஒரு போராளியாவார். பருத்தித் துறைக் கடலில் எதிர்பாராத படகு விபத்தில் இன்னும் சில தோழர்களுடன் வீரச்சாவை அணைத்துக் கொண்டார்.

மண்டைதீவு அதிரடித்தாக்குதல் – 26.06.1995



மண்டைதீவு சிங்களப் படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்ட நாள். கடலால் சூழப்பட்ட இத்தீவில், ஆச்சரியமூட்டும் வகையில் விடுதலைப் புலிகள் நடாத்திய பெரும் தாக்குதலில், இராணுவ படைத்தளத்தின் பொறுப்பதிகாரியான லெப். கேணல் உட் பட 110 க்கும் அதிகமான சிறீலங்காப் படையினர் கொல்லப்பட் டதுடன் 200 வரையான ஆயுதங்களும், இலட்சக்கணக்கான இரவைகளும் கைப்பற்றப்பட்டன. லெப். கேணல் சூட்டி உட்பட பத்துப் புலிவீரர்கள் இந்த வெற்றிக்காகக் களப் பலியானார்கள்.

லெப். கேணல் கில்மன் அவர்களின் 31ஆம் ஆண்டு வீரவணக்கம்

புலிகள் இயக்கத்தின் இளநிலைத் தளபதிகளில் ஒருவராக இருந்த லெப். கேணல் கில்மன் (வேலாயுதபிள்ளை சிவகுமார், பிறப்பு: 12.06.1970, கண்டாவளை - கிளிநொச்சி), 3வது ஈழப்போர் காலத்தில் சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணியின் சிறப்புத் தளபதியாக நியமிக்கப்பட்டார். திருமலை மாவட்டத்தில் பணியாற்ற அப்படையணி அனுப்பப்பட்ட பின்பு சிங்களப் படைமீதான ஒரு தாக்குதலுக்கு உரிய முன்னேற்பாட்டில் ஈடுபட்டிருந்தபோது 28.06.1995 அன்று எதிர்பாராத வெடிவிபத்தில் கில்மன் வீரச்சாவடைந்தார்.

காரைநகர் கடற்படைத் தளத்தின் இறங்கு துறைக்குள் ஊடுருவி மேற்கொண்ட கரும்புலித் தாக்குதல்

வடபிராந்திய பிரதான சிறீலங்கா கடற்படைத் தளமான காரைநகர் கடற்படைத் தளத்தின் இறங்கு துறைக்குள் ஊடுருவி 11.06.1996 அன்று மேற்கொண்ட கரும்புலித் தாக்குதலின் போது சவட்டல் ரக ரோந்து கலங்கள் இரண்டும், பேபி டோறா ஒன்றுமாக மூன்று கலங்கள் மூழ்கடிக்கப்பட்டன. போராட்டத்தின் தடைக்கல்லகற்றி மேஜர் இளங்கோ (பொன்னையா தமிழ்ச்செல்வன், பிறப்பு: 21.03.1974, ஓமந்தை - வவுனியா) வீரச்சாவடைந்தார்.

லெப். கேணல் சேரன் அவர்களின் 30ஆம் ஆண்டு வீரவணக்கம்

விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகளின் இராணுவ நடவடிக்கை மூலம் முல்லை மாவட்டத்தை மீட்டெடுத்த வரலாற்று சிறப்பு மிக்க தாக்குதலில் பங்கு கொண்டு அதன் வெற்றிக்கு வலுச்சேர்த்து லெப். கேணல் சேரன் (கதிரவேலு ஜெயராஜ், பிறப்பு: 03.09.1974, திருமலை) 19.07.1996 அன்று வீரச்சாவடைந்தார்.

தாண்டிக்குளம் பகுதியில் சிங்களப்படை கட்டளைத் தலைமைய நெஞ்சுப் பகுதியில் கரும்புலித் தாக்குதல்

ஜெயசிக்குறுப் படை நடவடிக்கையின் கட்டளைத் தலைமையகமும், சண்டைக்கான வெடிபொருட்களும், மருத்துவப் பொருட்களும் களஞ்சியப்படுத்தப்பட்ட ஜெயசிக்குறு களத்தின் நெஞ்சுப் பகுதியான தாண்டிக்குளப் பகுதியில் சிங்களப்படைகளுக்கு நெத்தியடி அதிர்ச்சித்

தாக்குதலை 10.06.1997 அன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். இத் தாக்குதலின் வெற்றிக்கு வலுச்சேர்த்த கரும்புலிகளான மேஜர் நிதன், மேஜர் யாழினி, கப்டன் சாதுரியன் ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

லெப். கேணல் முகுந்தா அவர்களின் 29ஆம் ஆண்டு வீரவணக்கம்

லெப். கேணல் முகுந்தா (முத்துக்குமாரு காங்கேஸ்வரி, பிறப்பு: 22.02.1977, யாழ்) 24.06.1997 அன்று ஜெயசிக்குறுய் களப்பகுதியில் ஒன்றான பெரியமடு பகுதியில் சிறீலங்கா படைகளுடன் ஏற்பட்ட மோதலின் போது வீரச்சாவடைந்தார்.

லெப். கேணல் அன்பு அவர்களின் 28ஆம் ஆண்டு வீரவணக்கம்

லெப். கேணல் அன்பு அல்லது அம்மா (வைத்தியலிங்கம் திருக்கேதீஸ்வரன், பிறப்பு: 03.09.1965, யாழ்) விடுதலைப் புலிகளின் நிதித் துறையில் வழங்கல் பிரிவுப் பொறுப்பாளராகப் பணியாற்றிய இவர், முன்னாள் யாழ் மாவட்ட தளபதியுமாவார். 10.06.1998 அன்று சிறீலங்கா விமானப்படையின் தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.

14.06.2003 அன்று சிறீலங்கா கடற்படையின் யுத்த நிறுத்த மீறலினால் 11 போராளிகள் வீரச்சாவு

சமாதான காலத்தில் சிறீலங்கா கடற்படையினரின் யுத்த நிறுத்த மீறலால் சர்வதேச கடற்பரப்பில் 14.06.2003 அன்று விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டது. லெப். கேணல் செந்தமிழ், லெப். கேணல் அன்புக்குமரன், லெப். கேணல் கஜேந்திரன், லெப். கேணல் கதிர், மேஜர் நிர்மலன், மேஜர் நிமால், மேஜர் வீரநாதன், மேஜர் கன்னியநாடன், மேஜர் மணியரசன், மேஜர் வள்ளுவன், கப்டன் செழியன் ஆகிய 11 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள். இவர்களுடன் நாட்டுப் பற்றாளர் மோகனும் வீரச் சாவடைந்தார்.

52ஆம் ஆண்டு

வீரவணக்கம்

ஈகியர் பொன். சிவகுமாரன்

'செய்து முடி, அல்லது செத்து மடி'

பொன்னுத்துரை சிவகுமாரன்

26-08-1950 ... 05-06-1974

"உயிர் தமிழுக்கு, உடல் மண்ணிற்கு"
"பாதையில் புரட்சியின் சுவடுகள் வாழும்,
தமிழீழ மண்ணில் என்றும் உன் ஓசை கேட்கும்."

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்